உ

சிவமயம்.

கணபதிதுணை.

# தொல்காப்பியம்.

திரணதூமாக்கினியென்னுமியற்பெயரையுடைய

## தொல்காப்பியமுனிவர்

அருளிச்செய்தது.

இதனுள்

## எழுத்ததிகாரம்

உரையாசிரியரென்னுஞ் சிறப்புப்பெயரையுடைய

இளம்பூரணருரையோடு

திரிசிரபுரம் மஹாவித்துவான்

**மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்**

மாணாக்கருளொருவராகிய

சென்னைக்கவர்ன்மெண்டு நார்மல்பாடசாலைத்

தமிழ்ப்புலவர்

திரிசிரபுரம்

சோடசாவதானம்

**சுப்பராயசெட்டியாரால்**

பலபிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கப்பட்டு,

பூவிருந்தவல்லி,

சுப்பராயமுதலியார் குமாரராகிய

**கன்னியப்பமுதலியாரால்**

சென்னை

சி. டிக்குரூஸது,

மலைச்சாலையிலிருக்கும் அத்திநீயம் அன்ட் டேலிநியூஸ் பிராஞ்ச்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

விபவஹூ கார்த்திகைமீ

*Registered Copyright.*

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

திரிசிரபுரம் மஹாவித்துவான்

## மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாமேவுபுகழ்த்தொண்டைமண்டலவேளாளர்குலம்வளத்தாலோங்கப்
பாமேவுகோட்டங்கள்பலவுளுமீதூர்க்கோட்டம்பண்புவாய்ப்பத்
தூமேவுபன்னாட்டுளெறமுறங்காநாடுவகைதுளும்பிவாழத்
தாமேவுசுகுணநிறைசுப்பராயர்குரிசிறந்தமைந்தன். (௧)

ஓங்குபெருங்கல்வியறிவொழுக்கமெலாமோருருக்கொண்டுற்றாற்போல்வான்
வீங்குதிரைக்கடலுலகிலிரவலர்க்கோர்குபேரனாவிளங்குமேலோ
னீங்குதவிறன்பெயராற்பெரும்புகழோன்சைவனெனநிலவச்செய்வோன்
பாங்குபெறுதமிழ்நயந்தேர்கன்னியப்பனெனும்பெரும்பேர்ப்பண்பின்மிக்
[கோன்.

குறுமுனிபாலியற்றமிழ்தேர்புலவருளோங்கியபுலமைக்குன்றமன்றே
னிறுவுதொல்காப்பியமுனிவன்றன்பெயராற்றருமியனூனிலவமண்மே
லறுதிபெறச்செயுமிளம்பூரணருரையுளமைதிபெறவலைவற்றோங்கு
மறுவுதவிரெழுத்துரையைப்புலவருளங்களிசிறக்கும்வகைமைதேர்ந்து. (௩)

சாற்றுதிரிசிரபுரம்வாழ்வீரராகவபுனிதன்றந்தமைந்தன்
றேற்றுதிறற்சோடசஞ்சாரவதானியென்னுமொருசிறப்புப்பேர்பூண்
டாற்றுபலகலையுமுணர்ந்தமைக்கேற்பநல்லொழுக்கத்தமைந்துநிற்போ
னீற்றுமுதற்சிவபெருமான்றிருவடிக்கேகசிந்துருகுமிதயமுள்ளோன். (௪)

துன்னுசிவனடியவரையவனெனக்கண்டடிபேணுந்துணிபேயுள்ளோன்
மன்னுநயகுணசீலன்சுப்பராயப்புலமைவல்லோன்றன்னாற்
பன்னுபலபிரதிகொடுவரைகுநர்செய்பிழையனைத்தும்பாறவாய்வித்
துன்னுமெழுதாவெழுத்தினியைவித்துப்பெருஞ்சீர்த்தியுற்றானன்றே. (௫)

## சிறப்புப்பாயிரம்.

கும்பகோணம் புரோவின்சியில்கல்லீஜ்

தமிழ்ப்புலவர்

# தியாகராசசெட்டியாரவர்கள்

இயற்றியது

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாமேவுமணிமன்றுணடநவிலும்புராணனருள்வாரிதோய்ந்து
நாமேவுகடல்பருகிவளையமுத்தியரியுருவைநயந்துபோற்றுந்
தூமேவுசிவக்குறியாப்புரிந்துமணங்கான்றுதென்றறோன்றுசந்தக்
காமேவுமலையமர்செந்தமிழாசிரியன்பாற்கற்றமேலோர். (க)

பன்னிருவர்தம்முளுயர்வளைபலவற்றினுமேன்மைபடைத்தபாஞ்ச
சன்னியமேயெனவிளங்குசால்புடையோனுயர்சமதக்கினிதன்மைந்தன்
றுன்னியபல்சீர்புனைதொல்காப்பியமாமுனிவர்பிரான்றொன்னூல்கண்டு
மன்னியதன்பெயர்தோற்றிவனைந்தருடொல்காப்பியமாம்வயங்குநூலில். (உ)

எழுத்ததிகாரத்தியலொன்பானுமிளம்பூரணொன்றியற்பேர்பெற்ற
வழுத்துமுரையாசிரியரியற்றுரையுங்கரலிகிதவழுக்களைந்து
பழுத்தவுணர்வினர்வியந்துகொண்டாடவுவந்தினிதுபடிப்போர்யாருங்
கொழுத்தவியல்வலராகவாய்ந்துதருகெனச்சில்லோர்கூறக்கேட்டு. (ங)

அனையவலர்மேற்குதிகொண்மணிப்படுகர்சுலாஞ்சிராப்பள்ளியமர்ந்துவாழுந்
தனையனையமீனாட்சிசுந்தரநாவலரேறுதன்பாற்கற்ற
வினையமலிமாணாக்கர்பலருள்ளுமிகுமேன்மைமேவிநின்றோன்
புனையுநாவலர்பல்லோர்புகன்றிடினுமுலவாதபுகழ்பூண்டுள்ளோன். (ச)

என்னினியநண்பனியல்வீரராகவப்பெயர்நன்கேய்ந்ததூயோன்
றன்னினியமைந்தனுயரிலக்கணமுமிலக்கியமுந்தடையற்றோர்ந்தோன்
பன்னினியகவிபாடும்பாவலனன்கவதானம்பண்ணும்வல்லோன்
றுன்னினியசிவநேயன்சுப்பராயப்பெரும்பேர்ச்சுகுணன்மாதோ. (ரு)

தீதுதவிரிவ்வள்ளல்வாசிப்போர்க்குபகாரஞ்செய்தலோர்ந்தே
யோதுமுறையிவரளவோநமக்குமிகுபுகழுறத்துமுறையாயிற்றா
லீதுமருதியற்றுதலேநந்தகுதிக்கியற்கையெனவினையவெண்ணிக்
கோதுதவிர்தரமிக்கவன்பொடுநன்காராய்ந்துகொடுத்தானாக. (சு)

## சிறப்புப்பாயிரம்.

அன்னதையேற்றவருளச்சிறப்பதிப்பித்தோன்யாரொன்னிலறையக்கேண்மோ
தன்னனேயராகவிரவலர்தம்மையாக்குவிக்குந்தகைமையாளன்
பொன்னனேயகுணசாவிபுரவலர்தங்காரியத்திற்புந்தியுள்ளோன்.
கன்னவிலுஞ்சிலேப்பெருமான்கழற்றுணேயேதுணேயாகக்கருதுமேலோன். (எ)

பூதவுடம்பிறுமிறுதலுரு துபுகழுடம்பென்றுபுலவோர்கூற
வேதமறத்தெளித்தாங்குப்பழையனூர்நீலியினலிறந்தநாய்கற்
கோதுமொழிபிழையாமலுடல்விடுத்துப்புகழடைந்தோருதிக்கப்பெற்ற
சாதமலிதருதொண்டைமண்டலவேளாளர்குலந்தழைவுற்றேங்க. (அ)

ஓங்குறுமீஞூர்க்கோட்டத்துயர்சுப்பராயமுகிலுவந்துசெய்த
தேங்குதவப்பயனகியவதரித்துக்கல்விநிறைசெல்வம்பெற்று
வாங்குதிரைக்கடற்புவிக்கோரிந்திரனச்சிறப்புற்றுவயங்குமேலோன்
வீங்குபுகழ்கலனகப்புனைந்துலவுகன்னியப்பவிபுலனன்றே. (கூ)

---

# திரிசிரபுரம்பெரியண்ணப்புலவர்

## இயற்றியது

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

---

கலேமணக்குந்தமிழ்மலேயந்தவன்பாற்கற்றுணர்ந்தவருட்கதிர்ப்புற்றேங்கு
நிலேமணக்குமுனிவரன்றன்பெயராலிந்நிலவனைப்பினிலவச்செய்த
தலேமணக்குமியற்றொல்காப்பியத்தினெழுத்ததிகாரந்தன்னேடிம்பர்த்
துலேமணக்குமதனுரையாய்விளங்குமிளம்பூரணத்தைத்துகளற்றேப்ந்து. (க)

துன்னுபெருங்கல்வியறிவொழுக்கமிருவாட்மையருமேய்மைமிக்கோன்
மன்னுசிவபத்தியொருவடிவாய்வந்தெனவுலகில்வயங்குநல்லோன்
மின்னுபுகழவதானிசுப்பராயப்புலவன்விரும்பிமேய
பன்னுபுலவோருவகைத்தேன்மடுத்துக்களிசிறப்பப்பரிவினல்க. (உ)

புண்ணியமேமலிதொண்டைமண்டலவேளாளர்குலம்பொலிவுமேவ
வண்ணியவீஞூர்க்கோட்டத்தவதரித்தகற்பகமேயனேயானேற்போ
ரெண்ணியவெலாங்கொடுக்குங்கரதலத்தான்கன்னியப்பவிசைவலாளன்
பண்ணியறன்புகழ்பரப்பல்போலச்சிறப்பதிப்பித்துப்பரப்பினனல். (ந)

---

உ

சிவமயம்.

கணபதி துணை.

# தொல்காப்பியம்

## எழுத்ததிகாரம்.

### சிறப்புப்பாயிரம்.

வடவேங்கடந்தென்குமரி— யாயிடைத்—தமிழ்கூறுநல்லுலகத்து—வழக்குஞ்செய்யுளுமாயிருமுதலி—னெழுத்துஞ்சொல்லும்பொருளுநாடிச்—செந்தமிழியற்கைசிவணியநிலத்தொடு—முந்துநூல்கண்டுமுறைப்படவெண்ணிப்—புலந்தொகுத்தோனேபோக்கறுபனுவ—னிலந்தருதிருவிற்பாண்டியனவையத்— தறங்கரைநாவினான்மறைமுற்றிய—வதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து—மயங்காமரபினெழுத்துமுறைகாட்டி—மல்குநீர்வரைப்பினைந்திரநிறைந்த -தொல்காப்பியனெனத்தன்பெயர்தோற்றிப்—பல்புகழ்நிறுத்தபடிமையோனே.

[என்பது—பாயிரம்.]

எந்நூலுரைப்பினுமந்நூற்குப்பாயிரமுரைத்துரைக்கவென்பது மரபு. என்னை; -"ஆயிரமுகத்தானகன்றதாயினும். பாயிரமில்லது பனுவலன்றே" என்பவாகலின். பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப்புற வுரையே லது கேட்டென்னைபயனெனின் ;—கற்றுவல்லகணவற்குக்கற்புடையாள்போல, இன்றியமையாச்சிறப்பிற்றாயும், திருவமைந்த மாநகரத்திற் குருவமைந்தவாயில் மாடம்போல, அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரங் கேளாதே நூல்கேட்குமேயெனில் ;— குறிச்சிபுக்கமான்போல மாணாக்கனிடர்ப்படுமாகலானும், பாயிரங்கேட்டல் பயனுடைத்தாயிற்று. அப்பாயிரம் பொதுவுஞ் சிறப்புமென விருவகைத்து எல்லா நூன்முகத்தும் பொதுவாக வுரைக்கப்படுதலிற் பொதுவெனப்பட்டது. ஈவோன்றன்மை முதலிய நூலுட்சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப்பாயிரம்போலாது, நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையேயன்றி, அந்நூலிற்சொல்லப்படுகின்ற பொருண்முதலிய வுணர்த்தலின், அணியிழைமகளிர்க் கவ்வணியிற் சிறந்தவாடைபோல, நூற்குச்சிறத்தலாற் சிறப்பெனப்பட்டது. அவற்றுள், பொதுநால்வகைத்து "ஈவோன்றன்மையீதலியற்கை - கொள்வோன்றன்மை கோடன் மரபென -வீரிரண்டென்பபொதுவின்றொகையே" இதனானறிக. ஈவோர் கற்கப்படுவோருங் கற்கப்படாதோரு மெனவிருவகையர். கற்கப்படுவோர் நான்குதிறத்தானுவமங் கூறப்படுவர். "மலைநிலம்பூவே துலாக்கோலென்றின்ன—ருலைவிலுணர்வுடையார்" இதனானறிக. இனிக்கற்கப் படாதார்க்கும் கூறுமுவமமு நால்வகைத்து. "கழற்பெய்குடமேமடற்பனை முடத்தெங்கு - குண்டிகைப் பருத்தியோடிவை யெனமொழிப" இதனானறிக. ஈதலியற்கை "ஈதலியல்பே யியல்புறக்கிளப்பிற் - பொழிப்பேயகலநுட்ப மெச்சமெனப் -

பழிப்பில் பல்லுரைபயின்ற நாவினன் - புகழ்ந்தமதியிற் * பொருந்துமோரை யிற் - றெளிந்தவறிவினன் றெய்வம்வாழ்த்திக் - கொள்வோனுணர் வகையறி ந்தவன் கொள்வரக் - கொடுத்தன்மரபெனக்கூறினர்புலவர்" இதனைறிக. கொள்வோர் கற்பிக்கப்படுவோருங் கற்பிக்கப்படாதோருமென விருவகையர். கற்பிக்கப்படுவோர் அறுவகையர். அவர்தாம் "தன்மகனுசான் மகனேமன்ம கன் - பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே - யுரைகோளாளனோடிவரெ னமொழிப - இதனுனறிக. இவர்தன்மை " அன்னங்கிளியே நன்னிறநெய்யரி யானையானே றென்றிவைபோலக்- கூறிக்கொள்ப குணமாண்டோரோ - இதனு னறிக. இனிக்கற்பிக்கப் படாதாரொண்வகையர். "மடிமானி பொச்சாப்பன காமுகன்கள்வ- னடுநோய்ப்பிணியாள னுருச்சினத்தன்-றடுமாறுநெஞ்சத் தவ னுள்ளிட்டெண்மர்-நெடுநூலைக் கற்கலாதார். இதனைறிக. இவர்தன்மை "கு ரங்கெறி விளங்காயெருமையாடே - தோணியென்றுங்கிவை யெனமொழிப" இதனுனறிக. கோடன்மரபு-கொள்வோன்முறைமைகூறுங்காலைப்-பொழுதொ டுசென்றுவழிபடன் முனியான்-முன்னும்பின்னு மிரவினும்பகலினு - மகலா னாகியன்பொடு புணர்ந்தாங் - காசறவுணர்ந்தான் வாவெனவந்தாங் - கிருவெ னவிருந்துசொல்லெனச் சொல்லிப்-போவெனப்போகி நெஞ்சுகளனுகச்- செ விவாயாகக் கேட்டவைகேட்டவை - வல்லனுகிப் - போற்றிக் கோடலவனது தொழிலே." "எத்திறத்தாசானுவக்குமத்திறம்-அறத்திற்றிரியாப்படர்ச்சிவழி பாடே". "செவ்வன்றெரிகிற்பான்மெய்ந் நோக்கிக்காண்கிற்பான்-பல்லுரையு ங் கேட்பான் மிகப்பெரிதுங்காதலான்-றெய்வத்தைப்போல மதிப்பான் றிரிபில் லான் - இவ்வாறுமாண்புமுடையாற் குரைப்பவே - செவ்விதி னூலைத்தெரிந் து." " வழக்கினிலக்கணமிழுக்கின்றறிதல் - பாடம்போற்றல் கேட்டவைநினை த்தல் - ஆசாற்சார்ந்தவையமைவரக்கேட்டல் - அம்மாண்புடையோர்தம மொடுபயிறல் - வினுதல்வினயவைவிடுத்தலென்றிவை - கடனுக்கொளினே ம டநனியிகக்கும்". "அனையனல்லோன்கொள்குவனுயின் - வினையினுழப்பொ டுபயன்றலைப்படாஅன - இவ்வாற்றானறிக - இவ்வாறு கோடன்மரபுடைய மாணுக்கனூன்முற்ற வறிந்தானுமாறு " ஆசானுரைத்தவையமைவரக்கொளி னுங்- காற்கூறல்லது பற்றலனுகும்." "அவ்வினையாளரொடுபயில்வகையொரு பால் - செவ்விதினுரைப்பவவ்விருபாலும் - மையறுபுலமைமாண்புநனியு டைத்தே." இதனுனறிக. சிறப்புப்பதிறெருவகைத்து "ஆக்கியோன் பெய ரேவழியேயெல்லை - நூற்பெயர்யாப்பேநுதலியபொருளே - கேட்போர்பய னோடா யெண்பொருளும - வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே." "காலங்க ளனே காரணமென்றிம் - மூவகை யேற்றிமொழிநருமுளரே." இவ்வாற்றானறிக. இனி, அச்சிறப்பிலக்கணஞ் செப்புமாறு- " பாயிரத்திலக்கணம் பகருங் காலை - நூனுதல் பொருளைத்தன்னகத்தடக்கி - யாசிரியத்தானும் வெண்பா வானு - மருவியவகையானுவறல் வேண்டும்." இதனுனறிக. நூல்செய்தான் பாயிரஞ்செய்வானல்லன் - " தோன்றுதோற்றித் துறைபல முடிப்பினுந் - தா ன்றற்புகழ்தறகு தியன்றே." என்பவாகலின் - பாயிரஞ்செய்வார் தன்னுசிரிய னுந் தன்னேடொருங்கு கற்றமாணுக்கனுந் தன்மாணுக்கனு மென மூவகை யர் - அவரு ளிந்நூற்குப் பாயிரஞ் செய்தார் தன்னேடொருங்கு கற்றபனம்பா ரனுர்.

வடவேங்கடம். படிமையோனே-என்பது வடக்கின் கண்ணுளதாகியவே ங்கடமும், தெற்கின்கண்ணுளதாகிய குமரியுமாகிய வவற்றை, எல்லையாகவு டையநிலத்துவழங்குந் தமிழ்மொழியினைக்கூறு நன்மக்களான், வழங்கும்வழக்

* புகழ்ந்தநாளினெனவும்பாடமுண்டு.

குஞ் செய்யுளுமாகிய விருகாரணத்தானும் எழுத்திலக்கணத்தினையும், சொல்லிலக்கணத்தினையும், பொருளிலக்கணத்தினையும், ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியிற் குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழினதியல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்துவழக்கோடு, முதனூல்களிற் சொன்னவற்றினைக்கண்டவ்விலக்கண முறைப்படவாராய்ந்து, அவ்விலக்கணங்களைத் தொகுத்துக் கூறினான். யாண்டெனின்;—நூற்குச்சொல்லப்பட்டகுற்றங்களற்றதன்னூலுள்ளே, யாரவையத்தோவெனின்;—மாற்றாரது நிலத்தினைத்தன்கீழ் வாழ்வார்க்குக் கொண்டுகொடுக்கும்பேரார்த்திருவினையுடைய பாண்டியன்மாகீர்த்தியதவைக்கண்ணே, அவ்வவையுள்ளார்க் கேற்பத்தெரிந்தே நின்றமெய்ச்சொல்லு நாவினையுடைய நான்கு வேதத்தினையு முற்றவுணர்ந்த வதங்கோடென்கின்ற ஆரிலாசானுக்குக் கடாவறத்தெரிந்துகூறி, அவ்வெழுத்துஞ் சொல்லுஞ்செய்கின்றுழி, முன்னைநூல்போல வெழுத்திலக்கணஞ் சொல்லுட்சென்று மயங்காதமுறைமையானே யெழுத்திலக்கணத்தினை வேறுதெரிவித் தவ்வாறுசெய்கின்றுழி, மிக்க நீரையுடைய கடலாகிய வெல்லையையுடைய வுலகின்கண்ணே, இந்திரனாற்செய்யப்பட்ட வைந்திரவியாகரணத்தினைநிறையவறிந்த பழையகாப்பியக் குடியினுள்ளோனென, தன்பெயரைத்தோற்றுவித்தவ்வாறு தொகுத்தான். அவன்யாரெனில்;—தவத்தான்வரும் பல்புகழ்களை யுலகிலேநிறுத்தினதவவொழுக்கத்தினையுடையான். எ - று.—

வழக்குஞ் செய்யுளுமாயிருமுதலி னெழுத்துஞ்சொல்லும் பொருளுநாடி, முறைப்படவெண்ணி, பாண்டியனவையத்ததங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து, எழுத்திலக்கணத்தைச் சொல்லுமுறைமை மயங்காமரபிற்காட்டி, தொல்காப்பிய னெனத்தன் பெயர்தோற்றி, பனுவலுட் புலந்தொகுத்தோன் படிமையோனெனக்கூட்டுக.—வடவேங்கடந் தென்குமரியெனவே, எல்லைபெறப்பட்டது. வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலினெனவே, நூனுதலியதூஉம் பயனும் பெறப்பட்டன. * முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணியெனவே, வழியும்யாப்புங்காரணமும் பெறப்பட்டன. பாண்டியனவையத்தெனவே, காலமுங்களனும்பெறப்பட்டன. † அதங்கோட்டாசாற்கரிறபத் தெரிந்தெனவே, கேட்டோர் பெறப்பட்டது. தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றியென

---

* "தொகுத்தல்முதலிய வகையினையாப்பென்று கூறினர். தொகுத்தன் முதலியன வழியுளடங்குதலானும் இயைபுமொருதலையானுணர்தற் பாலதாகலானும், அவருரைபோலி யுரையென்பது" தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

† "ஒருவராற்செய்யப்பட்டநூல் ஒரு வேந்தனவைக்களத்தில் ஒரு புலவனுக் கேற்பித்தரங்கேறின் அது சிறக்குமாகலின், பாண்டியனவையின் அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிவித்தானென்பதும் இக்கருத்தேபற்றி ஒரு சாரார் ஆக்கியோன்பெயர்முதலிய வெட்டனோடு களமும் அக்களத்தினரங்கேற்றிய காலமும் கூட்டியெண்ணிநூல்செய்தற்கேது வீஃதென்னுங்காரணமும், உடன்சேர்த்துப் பதினொருவகைத்துச் சிறப்புப்பாயிரமென்றொன்பதும், இக்கருத்தறியாத உரையாசிரியரை யுள்ளிட்டோரெல்லாம் நூலரங்கேறுமவைக்களத்துக்கேட்டானைக் கேட்போனென்று கூறினர். ஆக்கியோன்பெயர் முதலியபொருளென்பனபோல இறந்தகாலத்தாற் கூறாது கேட்போனென வெதிர்காலத்தாற்கூறியதே அஃதுரையன்மைக்குச் சான்றாகலானும், காலங்களத்துள்ளடங்குதலின் வேறுகூறவேண்டாமையானும், ஆக்கியோன்பெயர் முதலியனபோலு நூல்வழங்குங்காலத்து நிகழ்வதன்றாகலின் இவற்றோடொருங்குவைத் தெண்ணல்பொருந்தாமையானும், கேட்டற்குரிய அதிகாரிகளாவாரை யொருதலையாகவுணர்த்தல்வேண்டுமாகலானும் அவருரைபோலி யுரையென்பதும்" தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

வே, ஆக்கியோன்பெயரும் நூற்பெயரும், பெறப்பட்டன. *மங்கலத்திசையா கலின், வடக்கு முற்கூறப்பட்டது. கடல்கொள்வதன்முன்பு, பிறநாடு முண்மை யிற்றெற்கும் எல்லைகூறப்பட்டது. கிழக்குமேற்கும், பிறநாடின்மையிற் கூறப் படாவாயின. பிறவிரண்டெல்லைகூறுது இம்மலையுமாறுங்கூறியது அவைதீர்த் தமாகலானும், கேடிலவாதலானும், எல்லாரானுமறியப் படுதலானுமென் பது. இவை யகப்பாட்டெல்லை. ஆயிடைத்தமிழ்கூறு நல்லுலகத்தென்றது- அ வ்வெல்லைதமிழ்கூறுநல்லாசிரியரது. எ - று. நல்லாசிரியர் அகத்தியனார்மு தலாயினோர் - உலகமென்பது - ஆசிரியனை † அவ்வென்றதாகுபெயரான், அவ ற்றையெல்லையாகவுடைய நிலத்தினை. இடையென்பதேழாமுருபு. முறைப் படவெண்ணியென்றது அம்முந்நூல்களிலொன்றற்குரிய விலக்கணத்தினை யொன்றனிலக்கணத்தோடாராய்ந்தாற்போல, ஆராயாது முறைப்படவாராய் ந்து, எ - று. மற்றுநூல் செய்யுமிலக்கணமெல்லாமிந்நூலுட்படச் செய்தா னென்பது இம்முறைப்படவெண்ணியென்றதனாற்கொள்க. அவையாமாறு "ஓத்தேசூத்திரமெனவிருவகைய." "நேரினமணியை நிரல்படவைத்தாங் - கோரினப்பொருளை யொருவழிவைப்ப - தோத்தெனமொழிபவுயர் மொழிப்பு லவர்." "நுட்பமொட்பந்திட்பஞ் சொல்லிற்- சுருக்கங்கருத்துப் பகுதியொ டுதொகைஇ - வருத்தமில்பொருட்பயனிகழ்ச்சிசூத்திரம்." "பொதுவினுஞ் சிறப்பினும் போற்றுங்காலைப் - பெறுதல் பெற்றவைகாத்தல் காப்போடு - பி றிதுபெறநிகழ்த்தலதற்கருத்தாகும்." "அதுவே-பிண்டந்தொகைவகைகுறியே செய்கை -கொண்டியல்புறனடை யென்றதன்விகற்பமோ - டொன்றியகுறியே யொன்றுமென்ப." "ஆற்றொழுக்கேதேரைப்பாய்வே- சீயநோக்கேபருந்துவீ ழ்வென்-றுவகைநான்கே கிடக்கைப்பயனே." "பொழிப்பேயகலநுட்ப மெச்ச மெனப்-பழிப்பில்சூத்திரப்பயனான்கென்ப." "பாடங்கண்ணழிவுதாரணமென் றிவை-நாடிற்றிரிபிலவாகுதல் பொழிப்பே." "தன்னூன்மருங்கினும் பிறநூ ன்மருங்கினுந்-துன்னியகடாவின் புறந்தோன்றுவிகற்பம்-பன்னியவகலமென் மனார்புலவர்." "ஏதுவினுங்கவை துடைத்தனுட்பம்." "துடைத்துக்கொள்பொ ருளையெச்சமென்ப." இவ்வாற்றானும் பிறவாற்றானுமறிக. இனி, நூல்செய்த ற்குரியானையும், நூல்செய்யுமாறுஞ் சொல்லுதும். "அப்புலமரிறபவறிந்துமு தனூற் - பக்கம்போற்றும் பயந்தெரிந்துலகத்-திட்பமுடைய தெளிவரவுடை யோ - னப்புலம்படைத்தற்கமையுமென்ப". "சூத்திரமுரையென்றுயிருதிற னும் -பாற்படப்போற்றல் படைத்தலென்ப- நூற்பயனுணர்ந்த நுண்ணியோ ரே." இவ்வாற்றானறிக. போக்கறுதல். நூற்குக்கூறுங் குற்றங்களற்று நன் மைபுளவாதல் - அவை "ஈரைங்குற்றமுமின்றிநேரிதி னெண்வகைப் புணர்ப் பின தென்மனார்புலவர்." இதனானறிக. எழுத்துஞ்சொல்லும் பொருளுமெ னவைத்துப் பின்னுமயங்காமரபினெழுத்துமுறைகாட்டியென்றது பிறநூல் போலச் சொல்லுள், எழுத்தினைமயக்கிக்கூறுது, வேறுசேரக்கூறினனென் ற தெனபது.—

## சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

* "தமிழ்நாட்டிற்கு வடக்கட்பிறவெல்லையு முளவாக வேங்கடத்தை யெல் லையாகக்கூறினார். அகத்தியனார்க்குச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசா ரியனாகிய அறுமுகக்கடவுள் வரைப்பென்னு மியைபுபற்றியென்பது" தொல் காப்பியச்சூத்திரவிருத்தி.

†"வடவேங்கடம் தென்குமரியென்பன அன்மொழித்தொகையாய் அவற் றையெல்லையாகவுடைய நிலத்தையுணர்த்தின. இஃதறியாதார் ஆயிடையென் புழித்தனித்துநின்று பொருளுணர்த்தலாற்றாத அகரச்சுட்டினை ஆகுபெயரொன் றாம், அவற்றுக்குள்ளென உருபுவிரித்து மிடர்ப்படுப" என்பது தொல்காப்பிய ச்சூத்திரவிருத்தி.

# எழுத்ததிகாரம்.

இளம்பூரணருரை.

முதலாவது

## நூன்மரபு.

**எழுத்தெனப்படுப - வகரமுதனகரவிறுவாய்முப்பஃதென்ப**
**சார்ந்துவரன்மரபின்மூன்றலங்கடையே.**

என்பதுசூத்திரம்.—இவ்வதிகாரமென்னுதலி யெடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின் ;—அதிகாரநுதலியநூஉம், அதிகாரத்தினது பெயருரைப்பவேயடங்கும். அதிகாரமென்ன பெயர்த்தோவெனின் ;—எழுத்ததிகாரமென்னும் பெயர்த்து. எழுத்துணர்த்தினமைக் காரணத்திற்பெற்ற பெயரெனவுணர்க. எழுத்தெனைத்து வகையானுணர்த்திற்றோவெனின்;—எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும், உணர்த்திற்றென்பது. அவற்றுள், எட்டுவகையாவன எழுத்தினைத்தென்றலும், இன்னபெயரவென்றலும், இன்னமுறைமையவென்றலும், இன்னவளவினவென்றலும், இன்னபிறப்பினவென்றலும், இன்னபுணர்ச்சியவென்றலும், இன்னவடிவினவென்றலும், இன்னதன்மையவென்றலும், எனவே, அவற்றுட்டன்மையும், வடிவும், ஆசிரியன்றானுணருமெனினமக்குணர்த்தலருமையின், ஒழிந்தவாறுமே இதனுணுணர்த்திற்றெனவுணர்க.. இனி, எட்டிறந்த பலவகையாவன உண்மைத்தன்மையும், குறைவும், கூட்டமும், பிரிவும், மயக்கமும், மொழியாக்கமும், நிலையும், இனமும், ஒன்றுபலவாதலும், திரிந்ததன்றிரிபது வென்றலும், பிறிதென்றலும், அதுவும்பிறிதுமென்றலும், நிலையிற்றென்றலும், நிலையாதென்றலும், நிலையிற்றுநிலையாதென்றலும், இன்னோரன்னவுமெனவிவை. இவையெல்லாமாமாறு மேல்வந்தவழிக்கண்டுகொள்க. இவ்வதிகாரத்திலக்கணம் கருவியுஞ்செய்கையுமென விருவகைத்து. அவற்றுட்கருவி புறப்புறக்கருவியும், புறக்கருவியும், அகப்புறக்கருவியும், அகக்கருவியுமென நான்குவகைப்படும். செய்கை புறப்புறச்செய்கையும், புறச்செய்கையும் அகப்புறச்செய்கையும் அகச்செய்கையுமென நான்குவகைப்படும். நூன்மரபும், பிறப்பியலும், புறப்புறக்கருவி. மொழிமரபு புறக்கருவி-புணரியல் அகப்புறக்கருவி. "எகரவொகரம் பெயர்க்கீறாகா - முன்னிலைமொழிய வென்மனார்புலவர்." என்றாற்போல்வன அகக்கருவி. "எல்லாமொழிக்குமுயிர்வரும்வழியே - யுடம்படுமெய்யினுருபுகொளல் வரையார்." என்றாற்போல்வன புறப்புறச்செய்கை. "லனவெனவரூஉம் புள்ளிமுன்னர்த்-தநவெனவரிற் றனவாகும்மே." என்றாற்போல்வன புறச்செய்கை. "உகரமொடுபுணரும் புள்ளியிறுதி-யகரமுமுயிரும்வரும் வழியியற்கை." என்றாற்போல்வன அகப்புறச்செய்கை. தொகைமரபுமுதலியவோத்தினுள் இன்னவீற்றினவாறு முடியுமெனச்செய்கை கூறுவனவெல்லாமகச்செய்கை - இவ்வோத்தென்னுதலிற்றோவெனின்;—அதுவு மதன்பெயருரைப்பவேயடங்கும். இவ்வதிகாரத்தாற் சொல்லப்படுமெழுத்திலக்கணத்தினை, * ஓராற்றாற்றொகுத்து

---

* "இப்பெற்றியறியாத வுரையாசிரியர் முதலியோர் இவ்வதிகாரத்தாற்சொல்லப்படுமெழுத்திலக்கணத்தை யோராற்றாற்றொகுத்துணர்த்துதலின் நூன்மரபாயிற்றென்பாரும் இவ்வோத்துட்கூறப்படும்விதிகள் மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகலின் நூன்மரபென்னும் பெயராயிற்றென்பாருமாயினர். இவ்வதிகாரத்துட் கூறுமெழுத்திலக்கணத்தினைத் தொகுத்துணர்த்துதலாற் பெற்ற பெயராயின் அதிகாரமரபெனப்படுவதன்றி நூன்மரபெனப்படாமையானும், இவ்வோத்துட்கூறப்படுவன செய்கையோத்திற்கும் பொருளதிகாரத்துட் செய்யுளியலொன்றற்குமே கருவியாவதன்றி மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகாமையானும் அவருரைபோலியுரையாதலறிக என்பது" தொல்காப்பியச்சூத்திரவிருத்தி.

ணர்த்துதலி னூன்மரபென்னும்பெயர்த்து. இதனுட் கூறுகின்றவிலக்கணம் மொழியிடையெழுத்திற்கன்றி, தனிநின்றவெழுத்திற்கெனவுணர்க.

இத்தலைச்சூத்திரமென்னுதலிற்றோவெனின்; * எழுத்துக்களதுபெயருமுறையுந் தொகையுமுணர்த்துதனுதலிற்று. எழுத்தென்று சிறப்பித்துச்சொல்லப்படுவன அகரமாகியமுதலையுடைய னகரமாகிய விறுவாயினையுடையனவாகியமுப்பதென்றுசொல்லுப வாசிரியர். சார்ந்துவருதலாகிய விலக்கணத்தினையுடையமூன்றுமல்லாவிடத்து, மூன்றுமானவிடத்து முப்பத்துமூன்றென்று சொல்லுப. எ - று. உ - ம். அ-ஆ-இ-ஈ-உ-ஊ - எ - ஏ - ஐ - ஒ - ஓ - ஔ- க் - ங் - ச் - ஞ் - ட் - ண் - த் - ந் - ப் - ம் - ய் - ர் - ல் -வ் - ழ் - ள் - ற் - ன் - எனவரும். எனப்படுபவென்ற சிறப்பான், அளபெடையும், உயிர்மெய்யும், வரிவடிவுஞ் சிறப்பில்லா வெழுத்தாகக்கொள்ளப்பட்டன. அ - ஆ - என்பனபெயர், முறை அம்முறை. தொகை முப்பது. அவற்றுள், அகரம்தானுமியங்கித் தனிமெய்களையு மியக்குதற்சிறப்பான், முன்வைக்கப்பட்டது. னகாரம் வீடுபேற்றிற்குரிய வாண்பாலை யுணர்த்துதற் சிறப்பால், பின்னர்வைக்கப்பட்டது. தொகை தொகையுட்டொகையும், தொகையுள்வகையும், தொகையுள்விரியும், வகையுட்டொகையும், வகையுள்வகையும், வகையுள்விரியும், விரியுட்டொகையும், விரியுள்வகையும், விரியுள்விரியுமென வொன்பதுவகைப்படும். எழுத்து என்பது தொகையுட்டொகை. முப்பதென்பது அதன்வகை. முப்பத்துமூன்றென்பது அதன்விரி. முப்பதென்பது வகையுட்டொகை. முப்பத்துமூன்றென்பது அதன்வகை. அளபெடை தலைப்பெய்து நாற்பதென்பது அதன்விரி. முப்பத்துமூன்றென்பதுவிரியுட்டொகை - நாற்பதென்பது அதன்வகை. உயிர்மெய்தலைப்பெய் திருநூற்றைம்பத்தாறென்பது அதன்விரி. செய்யுளின்பநோக்கி வகரநீக்கிப் பகரமிடப்பட்டது .அகரமுத னகரவிறுவாயென, இருபெயரொட்டாகுபெயரான் முப்பதன்மேனின்றன. [௧]

அவைதாம் - குற்றியலிகரங்குற்றியலுகரம். ஆய்தமென்ற -
முப்பாற்புள்ளியுமெழுத்தோரன்ன. ௨

என்னின். மேற்சார்ந்துவருமென்னப்பட்ட மூன்றற்கும், பெயருமுறையுமுணரற்று. மேற்சார்ந்து வருமெனப்பட்டவைதாம் குற்றியலிகரமுங் குற்றியலுகரமு மாய்தமுமென்று சொல்லப்பட்டமூன்றுகூற்றதாகியவுமெனவிவை. அவை மேற்சொல்லப்பட்ட முப்பதெழுத்தோ டொருதன்மைய. எ-று. அப்பெயர் பெயர். அம்முறை .முறை. எழுத்தொரன்னவெனவேண்டாகூறியவதனான், முன் எனப்படுபவென்றசிறப்பு அம்மூன்றற்குங் கொள்ளக்கிடந்தமைபின், அதுவிலக்குதல் பெறுதுமென்பது. குற்றியலிகரமுங் குற்றியலுகரமுமென்னு மெண்ணும்மை விகாரத்தாற்றொக்கன. சந்தனக்கோல் கு

* "இனியுரையாசிரியரும் நச்சினார்க்கினியாரும் இச்சூத்திரம் பெயருமுறையுந் தொகையுமுணர்த்திற்றென்றும், அ - ஆ - முதலியனவே பெயரொன்றும், அம்முறையேமுறையென்றும், முப்பஃதெனத்தொகை விதிக்கப்பட்டதென்று முரைத்தாராலெனின் ;—அற்றன்று அஃதாசிரியர் கருத்தாயின், அ - ஆ - இ - ஈ- எனமுழுதுமெடுத்தோதி முறைக்கேதுவுங்கூறுவார். அவ்வாறுகூறாது அகரமுத னகரவிறுவாயென அநுவதித்தே யொழிந்தமையானும், எழுத்தென்பதொருபொருள் அதற்கு அ - ஆ - முதலியன பெயரொன்றல் பொருந்தாமையானும், அ - ஆ - முதலியன அ - ஆ - முதலியவற்றிற்குப் பெயராதல்கூறவேண்டாமையானும், வேண்டுமெனிற்சொற்களும் பொருளையுணர்த்தாது அவை தம்மையே யுணர்த்தும்வழி அவற்றிற்கவை பெயராதல் கூறாமைகுன்றக் கூறலாமாகலானும், முறையுந்தொகையும் செய்கைமுதலியவற்றிற்குக் கருவியன்மையின் அவற்றைவிதித்தலாற் பயனின்மையானும் அவருரைபோலியுரையெனவறிக என்பதும் அகரமுதலியவற்றிற்குப் பொதுப்பெயர்கூறுத னுதலிற்றென்பதும்" தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

றுகினவிடத்துப் பிரப்பங்கோலாகாது, அதுபோல, இகர உகரங்கள்குறுகினவிடத்தும், அவைபெயராகற்பாலன. அவற்றைப்புணர்ச்சிவேற்றுமையும், பொருள்வேற்றுமையும்நோக்கி வேறெழுத்தென்று வேண்டினானெனவுணர்க. [உ]

**அவற்றுள். அ - இ - உ; எ - ஒ - வென்னுமப்பாலைந்து -**
**மோரளபிசைக்குங்குற்றெழுத்தென்ப.**

என்னின். மேற்கூறப்பட்டனவற்றிற் களபுங்குறியு முணரற்று. மேற்கூறப்பட்டவெழுத்தினுள், அ - இ - உ - எ - ஒ - என்றுசொல்லப்படுகின்ற வக்கூற்றைந்தும், ஓரோவொன்றோரளபாக விசைக்கும். அவைதாம் குற்றெழுத்தென்னுங் குறியவென்றுசொல்லுப. எ - று. இவன்காரணம்பற்றி யன்றிக்குறியிடான். ஆகலின், இதுதன்குறுமையானிக்குறிபெற்றது. இக்குறியாண்டவாறு மேல்வந்தவழிக்கண்டுகொள்க. [ங]

**ஆ - ஈ - ஊ - ஏ - ஐ, ஓ - ஔ வென்னுமப்பாலேழு -**
**மீரளபிசைக்குநெட்டெழுத்தென்ப.**

என்னின். இதுவுமது. ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ என்றுசொல்லப்படுகின்ற வக்கூற்றேழும் ஓரோவொன்று இரண்டு மாத்திரையாகவொலிக்கும். அவைதாம் நெட்டெழுத்தென்னுங் குறியவென்றுசொல்லுவர். எ - று. ஐகார ஔகாரங்கள் தமக்கினமில்லையெனினும், மாத்திரையொப்புமையா னெட்டெழுத்தெனப்பட்டன. [ச]

**மூவளபிசைத்தலோரெழுத்தின்றே.**

என்னின். உயிரளபெடையெழுத்திற்கு மாத்திரைகூறுதனுதலிற்று. மூன்றுமாத்திரையாகவொலித்தல் இயல்பாகிய வோரெழுத்திற்கில்லை. விகாரமாகியவிரண்டுகூடியதற்குண்டு. எ - று. [ரு]

**நீட்டம்வேண்டினவ்வளபுடைய -**
**கூட்டியெழூஉதலென்மனார்புலவர்.**

என்னின். உயிரளபெடையாமாறுணரற்று. நீண்டமாத்திரையையுடையவளபெடை எழுத்துப்பெறவேண்டின், மேற்கூறியவோரளபும் இரண்டளபுமுடைய குறிலையுநெடிலையும் பிளவுபடாமற் கூட்டியெழூஉகவென்று சொல்லுவர். எ - று. [சு]

**கண்ணிமைநொடியெனவவ்வேமாத்திரை**
**நுண்ணிதினுணர்ந்தோர்கண்டவாறே.**

என்னின். அம்மாத்திரையிலக்கணங்கூறுதனுதலிற்று. கண்ணிமையுநொடியுமாகியவவை மாத்திரைக்களபு. இதுநுண்ணிதாக நூலிலக்கணத்தினையுணர்ந்த வாசிரியர் கண்டநெறி. எ - று. இமையென்றது இமைத்தற்றொழிலை * நொடியென்றது நொடியிற்பிறந்தவோசையை. தன்குறிப்பின்றி நிகழ்தலின், இமை முன்கூறப்பட்டது. நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல் சார்த்தியளத்தல், எண்ணியளத்தலென வெழுவகைய வென்னுமளவினுள், இதுசார்த்தியளத்தல். நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறென்றதனான், நாலுழக்குக்கொண்டது நாழியென்றாற்போல, அவ்வளவைக்களவைபெருமையறிக. [எ]

**ஔகாரவிறுவாய்ப் - பன்னீரெழுத்துமுயிரெனமொழிப.**

என்னின். மேற்கூறிய குறிலையுநெடிலையுந்தொகுத்து வேறோர்குறியிடுதனுதலிற்று. ஔகாரமாகிய விறுதியையுடைய பன்னிரண்டெழுத்தினையுமுயிரென்னுங்குறியினையுடையவென்று சொல்லுவர். எ - று. [அ]

---

* நொடியென்றது நொடித்தற்றொழிலையென்பது நன்னூல்விருத்தி சூ. ௱.

னகாரவிறுவாய்ப் - பதினெண்ணெழுத்துமெய்யெனமொழிப.

என்னின். மேற்கூறியவுயிரல்லாவெழுத்திற் கோர்குறியிடுதனுதலிற்று. னகரமாகிய விறுதியையுடையபதினெட்டெழுத்தினையு மெய்யென்னுங் குறியினையுடையவென்று சொல்லுவர். எ - று. [க]

மெய்யோடியையினுமுயிரியறிரியா.

என்னின். உயிர்மெய்க்களபுகூறுதனுதலிற்று. உயிர்மெய்யாவன மெய்களோடுயிரியையப் பிறந்தநிலைமையவாயினும், அவ்வுயிர்மெய்களவ்வியைபின்கண்ணே வேறோரெழுத்தாய் நின்றமையின், மெய்யோடியையின்றிநின்றவுயிர்களதியல்பிற்றிரியா. எ - று. உயிருமெய்யுங்கூடுகின்ற வுயிர்மெய்க்கூட்டத்தினை, மெய்யோடியையினும் என, உயிர்மேல்வைத்துக்கூறியது அவ்வுயிரின்மாத்திரையே யிதற்குமாத்திரையாகக் கூறுகின்றமைநோக்கிப்போலும். இயலென்றது பெரும்பான்மைமாத்திரையினை. சிறுபான்மைகுறியுமெண்ணுங் கொள்க. க - எனவும், கா - எனவும், அவ்வாறுநின்றமையறிக. [க0]

மெய்யினளபேயரையெனமொழிப.

என்னின். தனிமெய்க்களபுகூறுதனுதலிற்று. மெய்யதுமாத்திரையினையோரொன்று அரைமாத்திரையுடையவென்று சொல்லுவர். எ - று. காக்கை, கொங்கு, எனக்கண்டுகொள்க. ஈண்டுவேற்றுமை நயமின்றியொற்றுமை நயங்கருதப்பட்டது. [கக]

அவ்வியனிலையுமேனைமூன்றே.

என்னின். சார்பிற்றோற்றத்து மூன்றற்குமளபு கூறுதனுதலிற்று. மேற்கூறியவரைமாத்திரையாகிய வவ்வியல்பின்கண்ணேநிற்கும். ஒழிந்த சார்பிற்றோற்றத்துமூன்றும். எ - று. கேண்மியா, நாகு, எஃகு, எனக்கண்டுகொள்க. [கஉ]

அரையளபுகுறுகன்மகரமுடைத்தே -
யிசையிடனருகுந்தெரியுங்காலை.

என்னின். மெய்களுளொன்றற்கு மாத்திரைச் சுருக்கங்கூறுதனுதலிற்று. அரையளபாகிய வெல்லையிற்குறுகி, கான்மாத்திரை யாதலைமகரமெய்யுடைத்து. அஃதுயாண்டோவெனின்;—வேறோரெழுத்தின தொலியின்கண், அதுசிறுபான்மையாகிவரும். ஆராயுங்காலத்து எ - று. உ - ம். போன்ம், வரும் வண்ணக்கன் எனவரும். கான்மாத்திரையென்பது உரையிற்கோடல். []

உட்பெறுபுள்ளியுருவாகும்மே.

என்னின். பகரத்தின் மகரத்திடைவரிவடிவு வேற்றுமைசெய்தனுதலிற்று. புறத்துப்பெறும்புள்ளியோடு உள்ளாற்பெறும்புள்ளி மகரத்திற்குவடிவாம் அஃதின்மை பகரத்திற்குவடிவாம். எ - று. உ - ம். பீ - ப் - எனக்கண்டுகொள்க. [கச]

மெய்யினியற்கைபுள்ளியொடுநிலையல்.

என்னின். உயிர்மெய்யோடு தனிமெய்யிடை வடிவுவேற்றுமைசெய்தனுதலிற்று. தனிமெய்யினதியல்பு புள்ளியொடுநிற்றல். உயிர்மெய்யினதியல்பு புள்ளியின்றிநிற்றல் எ - று. க் - ங் - ச் - ஞ் - ட் - ண் - த் - ந் - ப் - ம் - ய் ர் - ல் - வ் - ழ் - ள் - ற் - ன் - எனக்கண்டுகொள்க. [கரு]

எகரஒகரத்தியற்கையுமற்றே.

என்னின். எகர ஒகரங்கட்கு ஏகார ஓகாரங்களோடு வடிவுவேற்றுமை செய்தனுதலிற்று. எகர ஒகரங்களதியல்பும் அவ்வாறு புள்ளிபெறுமியல்பிற்று. ஏகார ஓகாரங்களதியல்பு, அப்புள்ளிபெறாவியல்பிற்று. எ-று. உ-ம் எ் - ஒ்

**புள்ளியில்லாவெல்லாமெய்யு - முருவுருவாகியகரமோடுயிர்த்தலு மேனையுயிரோடுருவுதிரிந்துயிர்த்தலு - மாயீரியலவுயிர்த்தலாறே.**

என்னின். உயிருமெய்யுங்கூடு மாறுணரற்று. எல்லாமெய்களும் புள்ளியில்லையாம்படியாக, தத்தமுன்னைவடிவேயின்னுமவடிவாக, அகரத்தோடுகூடியொலித்தலும், ஒழிந்தவுயிர்களோடு வடிவுவேறுபட்டொலித்தலுமாகிய, அவ்விரண்டியல் பினையுடைய. அவையொலிக்கு முறைமை. எ - று.

தன்னினமுடித்தலென்பதனான், அளபெடை உயிரோடுஞ் சார்பிற்றோற்றத்துயிரோடுங்கூடுமுயிர்மெய்யுங்கொள்க. உ-ம. உரு வுருவாகியுயிர்த்தல் க - ங - எனக்கண்டுகொள்க. உரு வுதிரிந்துயிர்த்தல் கா - ஙா - எனக்கண்டுகொள்க. ஈண்டு உயிருமெய்யுங்கூடுகின்ற வுயிர்மெய்க்கூட்டத்தினை, எல்லாமெய்யுமென்று, மெய்மேல்வைத்துக் கூறியது அதுமுன்கூறிக் கூறப்படுதலானோக்கிப் போலும். உயிர்மெய்யென்பதனை, ஒற்றுமைகொள்வுழி உம்மைத்தொகைப்புறத்துப்பிறந்தவன் மொழித்தொகை யெனவும், வேற்றுமைகொள் வுழி உம்மைத்தொகையாகவுங் கொள்க. இல்லாதவென்பது இல்லாவென நின்றது. உருவு திரிந்துயிர்த்தல் மேலுங் கீழும் விலங்கு பெறுவன விலங்குபெற்று யிர்த்தலும், கோடுபெறுவன கோடுபெற் றுயிர்த்தலும், புள்ளிபெறுவன புள்ளிபெற்றுயிர்த்தலும், புள்ளியுங் கோடுமுடனே பெறுவன உடனபெற்றுயிர்த்தலு மெனக்கொள்க. [கஎ]

**மெய்யின் வழியதுயிர்தோன்று நிலையே.**

எனனின். உயிர்மெய்யுள், உயிருமெய்யுநிற்கு மாறுணாற்று. உயிர், மெய்களின் பினனவாம். உயிர்கடோன்று நிலைமைக்கண் எ-று. தோன்றுநிலையென்றதனன், உயிர்மெய்களைப் பிரிக்குமிடத்துங்கூட்டுமிடத்தும், அவ்வாறே முன்னும பின்னுமாதலைக்கொள்க. மெய்யுமுயிருமுன்னும பினனும் பெறநிற்கு மென்றமையால் அககூட்டம் பாலுநீரும்போல வுடனகலந்ததன்றி விரனுனி கள் தலைப்பெய்தாற்போல வேறுநின்று கலந்தன வல்லவென்பது பெறுதும். ஈண்டுவேற்றுமை நயங்கருதப்பட்டது. [கஅ]

**வல்லெழுத்தென்ப க ச ட த ப ற.**

என்னின். தனிமெய்களுட் சிலவற்றிற்கு வேறோர் குறியிடுதனுதலிற்று. வல்லெழுத்தென்னுங் குறியவென்று சொல்லுவர். கசடதபற வெனனுந் தனிமெயகளை எ - று. வல்லென்றிசைத்தலானும, வல்லென்றதலைவளியாற் பிறத்தலானும், வல்லெழுத்தெனப்பட்டது. மொழிக்குமுதலாமெழுத்து நானகுளவாகலானும், அவற்றுவழக்குப் பயிற்சி பெரிதாகலானும், முன்கூறப்பட்டது. [ககூ]

**மெல்லெழுத்தென்ப ங ஞ ண ந ம ன.**

என்னின். இதுவுமது. மெல்லெழுத்தென்னுங் குறியவென்று சொல்லுவர் - ஙஞணநமனவென்னுந் தனிமெய்களை எ - று. மெல்லென்றிசைத்தலானும, மெல்லென்ற மூக்கின்வளியாற் பிறத்தலானும், மெல்லெழுத்தெனப்பட்டன. மொழிக்கு முதலாமெழுத்து மூன்றுளவாகலானும், அவற்றின்வழக்குப்பயிற்சியானும், முதலாமெழுத்து சிறுபான்மைவழக்கினவாயிரண்டாகியவிடையினத்தின் முன்வைக்கப்பட்டது. வன்மை மென்மைகூறலின், எழுத்து அருவன்றி யுருவாதல் பெறப்பட்டது. உயிருக்கும், குறுமை நெடுமைகூறலினுருவென்பது பெறுதும். [உ0]

**இடையெழுத்தென்ப ய ர ல வ ழ ள.**

என்னின். இதுவுமது. இடையெழுத்தென்னுங் குறியவென்று சொல்லுவர். ய - ர - ல - வ - ழ - ள - என்னுந் தனிமெய்களை எ - று. இடைநிகரவாகி யொலித்தலானும், இடைநிகர்த்தாய மிடற்றுவளியாற் பிறத்தலானும் இடையெழுத்தெனப்பட்டது. [உக]

**அம்மூவாறும்வழங்கியல் மருங்கின்,**
**மெய்ம்மயங்குடனிலை தெரியுங்காலை.**

என்னின். தனிமெய்ம்மயக்கத்திற்குப்பெயரும் முறையும் தொகையுமுணர ற்று. மேற்சொல்லப்பட்ட மூவாறு பதினெட்டு மெய்யும் தம்மை மொழிப்ப டுத்தி வழங்குதலுளதாமிடத்து, மெய்ம்மயக்கமென்றும், உடனிலைமயக்கமென்று மிருவகைய. அவைமயங்கு முறைமை யாராயுங்காலத்து எ - று. உயிர். மெ ய். உயிர்மெய்யென்னு மூன்றனையும், உறழ்ச்சிவகையா னுறழவொன்ப துளவா மன்றே, அவற்றுட்டனிமெய்யோடு தனிமெய்ம்மயக்கம் மெய்யாற்கூறிய தென் னெனின;-அஃற்றிற்கு வரையறையின்மையின், வரையறையுடையது தனிமெய் மயக்கமேகூறியொழிந்தா னெனவுணர்க. மெய்யென்றதனால், தனிமெய்யோ டுயிர்மெய்ம்மயக்கமன்றி, தனிமெய்யோடு தனிமெய்ம்மயக்க மாதல்கொள்க. உஉ

**டறலள வென்னும்புள்ளிமுன்னர்க்- கசபவென்னுமூவெழுத்துரிய.**

என்னின். மெய்ம்மயக்கமாமாறுணரற்று. டறலளவென்று சொல்லப்படு ம்புள்ளிகளின முன்னர், கசபவென று சொல்லப்படுமூனறெழுத்தும் மயங்குத ற்குரிய. எ - று. உ-ம். கடக. கற்க. செல்க. கொள்க.எனவும. கட்சிறார். கற் சிறார்-செல்கிறார்-கொள்கிறார் எனவும்-கட்ப- கற்ப- செல்ப- கொள்ப- எனவும வரும். மேற்றெரியுங்காலையென்றதனான், இம்மெய்ம்மயக்கங்கூறுகின்றசூத்திர மெல்லாம் பலபடியால் மயக்கங்கொள்ளச் சொன்னோக்குடைய வெனினும், வழக்கினோடு பொருந்தவொன்றனோடொன்றன்றி மயங்காதென்பதுகொள்க. மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின், மேற்கூ றும் புணர்மொழிச்செய்கையெல்லாம் தலைபூாயவறிவினோனைநோக்க வொரு வாற்றாற்கூறியவாறுயிற்று. [உங]

**அவற்றுள் - லளஃகான்முன்னர்யவவுந்தோன்றும்.**

எனனின். இதுவுமது. மேற்கூறிய நான்கனுள்ளும, லகாரளகாரங்களின் முனனர், கசபக்களேயன்றி யகரவகாரங்களும் தோன்றிமயங்கும். எ - று. உ-ம். கொல்யானை. வெளயானை. கோல்வளை. வெள்வளை. எனவரும். [உச]

**ஙஞணநமனவெனும்புள்ளிமுன்னர்த்**
**தத்தமிசைகளொத்தனநிலையே.**

என்னின். இதுவுமது. ங - ஞ - ண - ந - ம - ன - என்று சொல்லப்படு ம் புள்ளிகளின்முன்னர், நெடுங்கணக்கினுட்டத்தமக்கு மேனிற்குமெழுத்தா கிய, கசடதபறக்கள் பொருந்தின. மயங்கிநிற்றற்கண் எ - று. உ - ம். தெங் கு. மஞ்சு. வண்டு. பந்து. கம்பு. கன்று. எனவரும். [உரு]

**அவற்றுள் - ணனஃகான்முன்னர்க்-கசஞபமயவவ்வேழுமுரிய.**

என்னின். இதுவுமது. மேற்கூறப்பட்ட மெல்லெழுத்தாறனுள், ணகார னகாரங்களின்முன்னர், டறக்களேயன்றி, க - ச - ஞ - ப - ம - ய - வ - என்று சொல்லப்படுமேழும் மயங்குதற்குரிய. எ- று. உ - ம். வெண்கலம். புன்கண் வெண்சாந்து. புன்செய். வெண்ஞாண். பொன்ஞாண். வெண்பலி. பொன் பெரிது. வெண்மாலை. பொன்மாலை. மண்யாது. பொன்யாது. மண்வலிது. பொ ன்வலிது. எனவரும். [உசு]

**ஞநமவவென்னும்புள்ளிமுன்னர்- யஃகானிற்றன்மெய்பெற்றன்றே.**

என்னின். இதுவுமது. ஞ - ந - ம - வ - என்று சொல்லப்படுகின்றபுள் ளிகளின்முன்னர், யகரமயங்கிநிற்றல் பொருண்மைபெற்றது. எ — று. உ-ம். உரிஞ் யாது. பொருந்யாது. திரும்யாது. தெவ்யாது. எனவரும். [உஎ]

**மஃகான்புள்ளிமுன்வவ்வுந்தோன்றும்.**

என்னின். இதுவுமது. மகரமாகியபுள்ளி முன்னர், பகரயகரங்களே யன்றி வகரமுந்தோன்றி மயங்கும். எ - று. உ - ம். நிலம் வலிது.எனவரும. [உஅ]

**யரழவென்னும் புள்ளிமுன்னர்**
**முதலாகெழுத்துஙகரமொடுதோன்றும்.**

என்னின். யரழவென்று சொல்லப்படுகின்றபுள்ளிகளின்முன்னர், மொழிக்கு முதலாமென்னப்பட்ட வொன்பதுமெய்யும் முதலாகாஙகரத்தோடு தோன்றிமயங்கும். எ - று. உ - ம். வேய்கடிது. வேர்கடிது. வீழ்கடிது. சிறிது. தீது. பெரிது. ஞான்றது. நீண்டது. மாண்டது. யாது. வலிது. எனவரும். வேயஙனம். வேர்ஙனம். வீழ்ஙனம். எனவுமொட்டுக, வேய்யாதென்புழி, உடனிலையாதலான்யகரமொழித்தொட்டுக. [உகூ]

**மெய்ந்நிலைச்சுட்டினெல்லாவெழுத்துந்**
**தம்முற்றாம்வரூஉம் ரழவலங்கடையே.**

என்னின். நிறுத்தமுறையானே யுடனிலைமயக்கமா மாறுணரற்று. பொருணிலைமைக்கருத்தின்கண், எல்லாமெய்யெழுத்தும் தம்முன்னேதாம்வந்து மயங்கும். ரகாரழகாரங்களல்லாத விடத்து எ - று. உ - ம். காக்கை. எங்ஙனம். பச்சை. மஞ்ஞை. பட்டை. மண்ணை. தத்தை. வெந்நோய். அப்பை. அம்மி. வெய்யர். எல்லி. எவ்வி. கொள்ளி. கொற்றி. கன்னி. எனவரும். மெய்ந்நிலைச்சுட்டினென்றதனால், தம்முற்றாம் வரூஉமென்றது மெய்ம்முன்னர்மெய்யென்னுமாத்திரையன்றி யுடனிலை மெய்மேலதாமென்பதுகொள்க. எல்லாமென்றது மேல்யரழவென்ற வதிகாரமாற்றி வந்துநின்றது. [ஙய]

**அ - இ - உ - அம்மூன்றுஞ்சுட்டு.**

என்னின். குற்றெழுத்தென்னப்பட்டவம் மூன்றும் சுட்டென்னுங்குறியவென்றவாறு. உ-ம. அங்ஙனம். இங்ஙனம். உங்ஙனம். எனவரும் [ஙக]

**ஆ - ஏ - ஓ - அம்மூன்றும்வினா.**

என்னின். மேல் நெட்டெழுத்தென்னப்பட்டவம்மூன்றும் வினாவென்னுங்குறியவாம். எ - று. உ - ம். உண்கா. உண்கே. உண்கோ. சாத்தா. எனவரும். தன்னினமுடித்தலென்பதனால், ஏகாரமும் யகரஆகாரமும்வினாப்பெறுமெனக்கொள்க. இக்குறிகளையும், முன்குறிலென்றும் நெடிலென்றுங்கூறியவழியே கூறுகவெனின்;—இவைசொன்னிலைமையிற் பெறுங்குறியாகலினாண்டுவையாது, மொழிமரபினைச் சாரவைத்தானென்க. இக்குறி மொழிநிலைமைக்கேலெழுத்தின்மேல்வைத்துக்கூறியதென்னையெனின்;— இவ்வதிகாரத்து, பெயர்வினையல்லனவற்றிற்குக் கருவிசெய்யாமையினென்க. [ஙஉ]

**அளபிறந்துயிர்த்தலுமொற்றிசைநீடலு**
**முளவெனமொழிபவிசையொடுசிவணிய**
**நரம்பின்மறையவென்மனார்புலவர்.**

என்னின். எழுத்துக்கள்முற்கூறியமாத்திரையினீண்டுநிற்கும் இடம் இதுவென்பதுணரற்று. உயிரெழுத்துக்களெல்லாம் தமக்குச்சொன்ன வளவினைக்கடந்தொலித்தலையும், ஒற்றெழுத்துக்கடம்மொலி முன்கூறியவளபினீட்டலையும், இந்நூலுட்கூறும் விளியின்கண்ணேயன்றிக் குரன்முதலிய வேழிசையோடு பொருந்திய நரம்பினையுடையயாழினதிசைநூற்கண்ணுமுளவென்று சொல்லுவர் அவ்விசைநூலாசிரியரொன்று சொல்லுவர் புலவர். எ - று. ஒற்றிசைநீடலுமென்றது, அளபிறந்துயிர்த்தலென்றது அதிகாரத்தானின்றவுயிர்மேற்சே

றலினென்பது. உளவென்றது அந்நீட்டிப் பொருதலையன்றென்பது விளக்கிற்று இசைநூலாசிரியரும் முதனூலாசிரியர்தாமேயெனினும், மொழிபவென, வேறொருவர்போலக்கூறியது அதுவும் வேறொருநூலாகச் செய்யப்படுநிலைமை நோக்கிப்போலும். மறையுமென்னுமும்மைவிகாரத்தாற்றொக்கது. அகரம் செய்யுள்விகாரம். [௩௩]

முதலாவது நூன்மரபு முற்றிற்று.

---

## இரண்டாவது மொழிமரபு.

**குற்றியலிகரநிற்றல்வேண்டும்-யாவென்சினைமிசை**
**யுரையசைக்கிளவிக்-காவயின்வரூஉமகரமூர்ந்தே.**

என்பது. சூத்திரம். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின்;—*மொழிகளுக்கெழுத்தானவருமரபுணர்த்தினமையின் மொழிமரபெனப்பட்டது. இதனுட்கூறுகின்றது தனிநின்றவெழுத்திற்கன்றிமொழியிடையெழுத்திற்கெனவுணர்க. இத்தலைச்சூத்திரமென்னுதலிற்றோ வெனின்;—சார்பிற்றோற்றத் தெழுத்துக்களிற் குற்றியலிகரத்தில், ஒருமொழிக்குற்றியலிகரத்திற்கிடமும் பற்றுக்கோடு முணராற்று. ஒருமொழிக் குற்றியலிகரம் உரையசைச்சொல்லாகிய மியாவென்முதற்கு, சினையாகவச்சொற்றன்னிடத்துவருகின்ற யாவென்சினைமிசைமகரவொற்றினையூர்ந்துநிற்றலைவேண்டும் ஆசிரியன். எ - று. உ - ம். கேண்மியா. எனவரும். மியாவென்னுஞ்சொல். இடம். மகரம். பற்றுக்கோடு. யாவென்சினையும் மகரம்போலக்குறுகுதற்கொருசார்பு. [க]

**புணரியனிலையிடைக்குறுகலுமுரித்தே**
**யுணரக்கூறின்முன்னர்த்தோன்றும்.**

என்னின். குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும்வருமென்பதுணராற்று. இருமொழி தம்மிற் புணர்தலியன்றநிலைமைக் கண்ணும் அவ்விகரம் குறுகுதலுடைத்து. ஆண்டையிடத்தினையும் பற்றுக்கோட்டினையு மீண்டுக்கூறப்புகின், அதுவேண்டுவதில்லை. குற்றியலுகரப்புணரியலு ளவ்விடனும் பற்றுக்கோடுந்தோன்றும். எ - று. புணரியனிலையிடையு மெனமொழிமாற்றியுரைக்க. முன்னர்த்தோன்றுமாறு. "யகரம்வரும்வழியிகரங்குறுகுமுகரக்கிளவிதுவரத்தோன்றாது "என்பதனுளறிக. உகரஞ்சார்ந்த வல்லெழுத்து பற்றுக்கோடு. உ-ம். நாகியாது. வரகியாது. தெள்கியாது. எஃகியாது. கொக்கியாது குரங்கியாது எனவரும். [உ]

**நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழியீற்றுங்**
**குற்றியலுகரம்வல்லாறூர்ந்தே.**

என்னின். ஒருமொழிக் குற்றியலுகரத்திற் கிடமும் பற்றுக்கோடு முணராற்று. நெட்டெழுத்தினதுபின்னுந் தொடர்மொழியதிறுதியினுங்குற்றியலுகரம் வல்லெழுத்தாறினையுமூர்ந்துநிற்றல் வேண்டும் ஆசிரியன். எ - று. தந்துபு

---

* "குற்றியலுகரநிற்றல்வேண்டும்" என்பதுமுதல் "உருவினுமிசையினும்" என்னும் சூத்திரங்காறும். அவைதாம், என்பதனொழிபு. "குன்றிசை" "ஐ ஔ" இரண்டும் "நீட்டமென்பதனொழிபு" "நெட்டெழுத்தேழே" என்பது "அவற்றுள் அ-இ-உ-எ" "ஆ-ஈ-ஊ-ஏ" என்பவற்றினொழிபு. மொழியாக்கம் அதிகாரப்பட்டமையின் ஓரெழுத்தொரு மொழியென்பது முடன்கூறினார். "மெய்யினியக்கம்" என்பது "னகரவிறுவாய்" என்பதனொழிபு. "தம்மியல்கிளப்பின்" என்பதுமுதல் "மகரத்தொடர்மொழி" என்னுஞ் சூத்திரங்காறும் மயக்கச்சூத்திரவொழிபு எனவிதந்துநூன்மரபினொழிபே மொழிமரபு. என்றது தொல்காப்பியச்சூத்திர விருத்தி.

ணர்ந்துணர்த்தலென்னுந் தந்திரவுத்தியான் முன்னின்றநிற்றலென்பது ஈண்டு
ம்புணர்க்கப்பட்டது. உ-ம. நாகு-வரகு-எனவரும். நெட்டெழுத்திம் பருந்தொ
டர்மொழியீறும், இடம். வல்லெழுத்து, பற்றுக்கோடு. இவ்வாறிடமும் பற்றுக்
கோடுங்கூறவே மொழிக்கிறுதலுங் கூறியவாறாயிற்று. [௩]

**இடைப்படிற்குறுகுமிடனுமாருண்டே
கடப்பாடறிந்தபுணரியலான.**

என்னின. குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும்வருமென்பதுணரற்று.
அவ்வுகரம் புணர்மொழியிடைப்படினுங் குறுகுமிடமுண்டு. அதனிடமும் பற்று
க்கோடும்யாண்டோ பெறுவதெனின்;- அதன்புணர்ச்சிமுறைமையறியுங் குற்றி
யலுகரப்புணரியலின் கண்ணே எ - று. இடைப்படினுங் குறுகுமெனமொழி
மாற்றியுரைக்க. அக்குற்றியலுகரப்புணரியலுள் "வல்லொற்றுத் தொடர்மொ
ழி வல்லெழுத்து வருவழித், தொல்லை யியற்கைநிலையலுமுரித்தே "என்பதனு
ள் வல்லொற்றுத் தொடர்மொழியும் வல்லெழுத்துவருவழியும் இடம். அவ்வல்
லொற்றுத் தொடர்மொழியீற்று வல்லெழுத்து பற்றுக்கோடு. உ-ம். செக்குக்
கணை. சுக்குக்கொடு. எனவரும். இடனென்றதனான், இக்குறுக்கம்சிறுபான்மை
யென்றுணர்க [௪]

**குறியதன்முன்னராய்தப்புள்ளியுயிரொடுபுணர்ந்
தவல்லாறன்மிசைத்தே.**

என்னின். ஒருமொழியாய்தம்வருமாறுணரற்று. ஆய்தமாகியபுள்ளி குற்
றெழுத்தின்முன்னருயிரொடுபுணர்ந்தவல்லெழுத்தாறனமேலது. எ - று.
உ-ம. எஃகு. கஃசு. எனவரும். குறியதன்முனனரும், வல்லெழுத்துமிசையு
ம் இடம். இஃது உயிரன்மையின், இதற்குப்பற்றுக்கோடென்பதில்லை. கஃறீது
என்பதனை மெய்பிறிதாகியபுணர்ச்சியென்னுமாகலிற்புள்ளியென்றதனா ன
ய்தத்தைமெய்ப்பாற்படுத்துக்கொள்க. ஈண்டுப்பெரும்பானமையும் உயிரொ
ன்றது மேலாய்தத்தொடர்மொழியென்றோதலிற் குற்றியலுகரத்தினை - வெ
ஃகாமைமுதலிய பிறவுயிர்வரவு சிறுபான்மையெனக்கொள்க. [௫]

**ஈறியன்மருங்கினுமிசைமைதோன்றும்.**

என்னின். அவ்வாய்தம் புணர்மொழியுள்ளும் வருமென்பதுணாற்று.
நிலைமொழியீறு வருமொழிமுதலொடுபுணர்ந்துநடக்குமிடத்தினும், ஆய்த
வொலிதோன்றும். எ - று. உ-ம். கஃறீது. முஃடீது. எனவரும் ஈண்டும்
இடங்கள் அவை. [௬]

**உருவினுமிசையினுமருகித்தோன்று
மொழிக்குறிப்பெல்லாமெழுத்தினியலா
வாய்தமஃகாக்காலையான.**

என்னின். இதுவுமது, அவ்வொருமொழியாய்தத்திற்கோரிலக்கணமுணர
று. ஒருபொருளினதுருவத்தின்கண்ணும், ஓசையின்கண்ணும், சிறுபான்
மையாய்த்தோன்றும். குறிப்புமொழிகளெல்லாம் ஆய்தவெழுத்தானிட்டு, எ
ழுதப்பட்டு நடவா. அஃதெக்காலத்துமோவெனின் ;— அன்று. அவ்வாய்தம்
தன்னளைமாத்திரையளபாய்ச் சுருங்கிநில்லாது, அவ்வுருவதுமிசையது மிகுதி
யுணர்த்துதற்கு நீண்டகாலத் தந்நீட்சிக்கு. எ - று. உ - ம். கஃறென்றது என
பது உருவு. சுஃறென்றது என்பது இசை. [௭]

**குன்றிசைமொழிவயினின்றிசைநிறைக்கு
நெட்டெழுத்திம்பரொத்தகுற்றெழுத்தே.**

என்னின். "நீட்டம்வேண்டின்" என்பதற்கோர்புறனடையுணரற்று. அள

பெடையோசையாகச்சொல்லாதொழியில். குன்றுவதானவோசையையுடைய வவ்வளபெடை எழுத்தானாய மொழிக்கண்ணே நின்று, அவ்வோசையை நிறைக்கும். அவையாவையெனனின்;—நெட்டெழுத்துக்களின்பின்னாக, அவற்றிற்குப்பிறப்பானும் புணர்ச்சியானு மோசையானு மினமொத்த குற்றெழுத்துக்கள் எ-று. உ-ம். ஆஅ - ஈஇ - ஊஉ - ஏஎ - ஓஒ - எனவரும். ஈண்டு மொழியென்றது அவ்வளபெடையெழுத்தொரு பொருளுணர்த்தி, ஓரெழுத்தொருமொழியாய் நிற்குநிலைமையினை. இவைபுமொழிமேற் காணபபடுதலிற் சார்பிற்றோற்றத் தெழுத்தெனப்படுமாலெனின்;—பெரும்பான்மையும் அம்மொழிதானேயவ்வெழுத்தாய்வருதலானும், அம்மொழி நிலைமையொழியவே றெழுத்தாகவுஞ்சொல்லப்படுதலானும்,அவ்வாறாகாதென்பது.எருதுகாலுறாஅ தென்றாற்போல்வன சிறுபான்மையும் அம்மொழிதானே யெழுத்தாய்வாரா தெனக்கொள்க; [அ]

ஐ ஔ வென்னுமாயிரெழுத்திற்
கிகரவுகரமிசைநிறைவாகும்.

என்னின். மேலதற்கோர்புறனடையுணரற்று. ஒத்தகுற்றெழுத்தில்லா ஐ-ஔ - என்றுசொல்லபபடு மவ்விரண்டெழுத்திற்குமுன், ஈகாரம் ஊகாரங்கட்கொத்த குற்றெழுத்தாகிய விகரவுகரங்கள் அககுன்றிசை மொழிக்கணின்று ஓசையைநிறைப்பனவாகும். எ-று. உ-ம். ஐ இ - ஔ உ - எனவரும். ஐகாரத்திற்கிகரமு மௌகாரத்திற்கு கரமுமென நிரனிறையாகக்கொள்க. இத்துணையுமநூன்மரபினொழிபு. [கூ]

நெட்டெழுத்தேழே யோரெழுத்தொருமொழி.

என்னின். எழுத்தினான்மொழியாமாறுணரற்று. நெடடெழுத்தாகிய வேழும் ஓரெழுத்தானாகுமொருமொழியாம். எ-று. உ-ம். ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ ஔ எனவரும். இதுவும் உயிர்க்குமுயிர்மெய்க்கும்பொது. ஔகாரத்தில் உயிர்மெய்யினையேகொள்க. ஏழுமென்னும் * உம்மைவிகாரத்தாற்றொக்கது. [ய]

குற்றெழுத்தைந்துமொழிநிறையிலவே.

என்னின். குற்றெழுத்துக்கள் ஓரெழுத்தொருமொழியாகா வென்பதும் அவற்றுள், ஒருமொழியாவன வுளவென்பது முணரற்று. குற்றெழுத்தாகிய வைந்தும். ஓரெழுத்தாய்நின்றொரு மொழியாய்நிறைதலில. அவற்றுட்சில நிறைக்கும் எ-று. ஒகரமொழிந்தநான்கும் சுட்டாயும் வினாவாயுமொழிநிறைக்குமன்றோவெனின்;—அவை இடைச்சொல்லாதலின், அவற்றிற்குக் கருவி செய்யானென்க. இதுவும் உயிர்க்குமுயிர்மெய்க்கும்பொது. ஐந்துமென்னும் † உம்மை ஈண்டெச் சப்பட்டுநின்றது. உ-ம். து-நொ-எனவரும். [கக]

ஓரெழுத்தொருமொழி யீரெழுத்தொருமொழி-
யிரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியுளப்பட,
மூன்றேமொழிநிலை தோன்றியநெறியே.

என்னின். எழுத்தினானாகுமொழிகளைப் பெயருமுறையுந் தொகையுமுணரற்று. ஓரெழுத்தானாகுமொருமொழி இரண்டெழுத்தானாகுமொருமொழி இரண்டிறந்து பலவற்றானிசைக்குந் தொடர்மொழியுட்பட்ட மொழிகளினிலைமை மூன்றாம். அவை தோன்றியவழக்குநெறிக்கண் எ-று. உ-ம். ஆ-மணி-வரகு-கொற்றன்-எனவரும். [கஉ]

---

* உம்மை முற்றுப்பொருள்பட நின்றது.
† முற்றுப்பொருள்படநின்ற உம்மை எச்சப்பொருள்படநின்றது.

**மெய்யினியக்கமகரமொடுசிவணும்.**

என்னின். தனிமெய்களைச் சொல்லுமுறை நிலை இதுவென்பதுணரற்று. தனிமெய்களினதியங்கம் அகரத்தோடுபொருந்தும் எ - று. உ - ம். "டறல ளவென்னும்புள்ளி" எனவரும். இது மொழியிடையெழுத்துக்களன்மையின், நூன்மரபின்வைக்கவெனில் ; தன்னையுணர்த்தாது வேறுபொருளுணர்த்துஞ் சொன்னிலைபோல, டறலளவென்றது உயிர்மெய்யையுணர்த்தாது தனிமெய்யை யுணர்த்தலானும், ஒற்றினையுயிர்மெய்போலச் சொல்லுகின்றவழுவமை தியிலக்கணத்தானும், மொழிமரபின் கண்ணதாயிற்றெனவுணர்க. [கரு]

**தம்மியல்கிளப்பினெல்லாவெழுத்து-**
**மெய்ந்நிலைமயக்கமானமில்லை,**

என்னின். மெய்ம்மயங்கத்திற் கோர்புறனடையுணரற்று. எல்லாமெய் யெழுத்தும் மொழியிடையின்றித் தம்வடிவினியல்பைச் சொல்லுமிடத்து, மெய்ம்மயக்கநிலையின்மயங்கிவருதல் குற்றமில்லை எ - று. உ - ம. "வல்லெ ழுத்தியையின டகாரமாகும" எனவரும், இதனை அம்மெய்ம்மயக்கத்துவை க்கவெனின் ; இது வழுவமைதிநோக்கி மொழிமரபின்கண்ணதாயிற்று. கச

**யரழவென்னுமூன்றுமுன்னொற்றக் - க ச த ப ஙஞ**
**நமவீரொற்றாகும்.**

என்னின். ஈரொற்றுடனிலையாமாறுணரற்று. ய ர ழ வென்று சொ ல்லப்படுகின்றமூன்றனுளொன்று, குறிற்கீழுநெடிற்கீழுமுன்னே யொற்றாய் நிற்ப, அவற்றின்பின்னே கசதபக்களிலொன்றுதல், ஙஞநமக்களிலொன்றுத ல். ஒற்றாய்வர, அவையீரொற்றுடனிலையாம். எ - று. உ-ம். வேய்க்குறை வேய் ங்குறை - வேர்க்குறை - வேர்ங்குறை வீழ்க்குறை வீழ்ங்குறை-சிறை-தலை-புறம். எனவொட்டுக. இவ்விதி, மேல் ஈற்றகத்துணர்ந்து கொள்ளப்படுமாலெனின் இது ஈர்க்கு - பீர்க்கு - எனவொருமொழியுள்ளும் வருதலானும், இரண்டுமெய் க்கண்ணும் வருதல்விகாரமாதலானும், கூறப்பட்டது. அஃதேல், இதனைநூ ன்மரபினகத்து மெய்ம்மயக்கத்துக்கட் கூறுகவெனின் ;—ஆண்டு வேற்றுமை நயங்கொண்டதாகலின் மூவொற்றுடனிலையாதனோக்கி, ஒற்றுமை நயம்பற் ஈண்டுக் கூறப்பட்டது. [கரு]

**அவற்றுள்- ரகாரழகாரங்குற்றொற்றாகா,**

என்னின். ரகாரழகாரங்கட் கெய்தியதொருமருங்குமறுத்தனுதலிற்று. மேற்கூறப்பட்ட மூன்றனுள்ளும் ரகாரமும் ழகாரமும் குறிற்கீழொற்றாகா. நெடிற்கீழொற்றாம். அவை குறிற்கீழுயிர்மெய்யாம். எ - று. உ - ம். தார் - தாழ் - எனநெடிற்கீழொற்றாய் நின்றன. கரு - மழு - எனக்குறிற்கீழுயிர்மெ ய்யாய்நின்றன. இவ்வாறு விலக்கினமையின், யகரம் பொய் எனவும், நோ ய் எனவுமிரண்டிடத்துமொற்றாயிற்று. குற்றொற்றென்பது குறிதாகியவொ ற்றெனப்பண்புத்தொகை. குறிற்கீழ்நிற்றலாற்குறிய தெனப்பட்டது. ஈண் டுக் குறினெடிலென்கின்றது மொழிமுதலெழுத்தினையெனவுணர்க. இதுமே ல்வரை யறையிலவெணப்பட்ட வுயிருமெய்யுமயங்கு மயக்கத்திற்கோர்வரைய றைகண்டு கூறினவாறு. [கசு]

**குறுமையுநெடுமையுமளவிற்கோடலிற்**
**றொடர்மொழியெல்லாநெட்டெழுத்தியல.**

என்னின். உயிரொழுத்திற்குக் குறுமையுநெடுமையுமளவிற்கொள்ளப்படு தலில், தொடர்மொழிக்கீழ்நின்ற ரகாரழகாரங்களெல்லாம் நெடிற்கீழ்நின்ற ரகாரழகாரங்களி னியல்பையுடைய வென்றுகொள்ளப்படும் எ - று. உ - ம்.

அகர் - புகர் - அகழ் - புகழ் - எனக்கொள்க. புலவரொன்றுற்போல, இரண்டு மாத்திரையை யிறந்ததன்பின்னும் வருமாலெனின் ;—அவையுந் தன்னினமு டித்தலென்பதனால் நெடிற்கீழொற்றென்னப்படும். எல்லா மென்றதனான், ரகார ழகாரங்களேயன்றி, பிறவொற்றுக்களும் நெடிற்கீழொற்றெனப்படும். இதனானே, விரவீதென்புழி, லகரம் நெடிற்கீழொற்றென்று கெடுக்கப்படும். [கஎ]

## செய்யுளிறுதிப்போலிமொழிவயின் னகாரமகாரமீரொற்றுரும்.

என்னின். செய்யுட்கண், ஈரொற்றிலக்கணமாமாறுணர்ற்று. செய்யுட் கட்போலுமென்னுமொழியிறுதிக்கண், னகாரமுமகாரமும்வந்து, ஈரொற்றுடனிலையாய்நிற்கும் எ - று. உ - ம். எம்மொடுதம்மைப் பொருஉங்காற் - பொன்னொடு கூவிளம்பூத்தது போன்ம் - எனவரும். [கஅ]

## னகாரைமுன்னர்மகாரங்குறுகும்.

என்னின். "அரையளபு குறுகன்மகரமுடைத்து" என்பதற்கோர் புறனடையுணரற்று. மேற்கூறப்பட்ட னகாரத்துமுன்வந்த மகாரம், மாத்திரைகுறுகி நிற்கும் எ - று. [கக]

## மொழிப்படுத்திசைப்பினுந்தெரிந்துவேறிசைப்பினு மெழுத்தியற்றிரியாவென்மனார்புலவர்.

என்னின். எழுத்துக்கட்கு மொழிக்கண்மாத்திரை காரணமாகப் பிறப்பதோரையந்தீர்த்தனுதலிற்று. மொழிக்கட்படுத்துச்சொல்லினும், தெரிந்துகொண்டு வேறேசொல்லினும், உயிருமெய்யுமாகிய வெழுத்துக்கள் பெருக்கஞ்சுருக்கமுடையனபோன்றிசைப்பினும், தத்தமாத்திரையியல்பிற்றிரியாவென்று சொல்லுவர்புலவர். எ - று. உ - ம். அஃகல் - அ - எனவும். ஆல் - ஆ - எனவும். கடல் - க - எனவும். கால் - கா - எனவுங்கண்டுகொள்க. வேறென்றதனான், எடுத்தல்படுத்தல்முதலியவோசை வேற்றுமைக்கண்ணுமெழுத்தியல் திரியாவென்பதுகொள்க. [உ0]

## அகரஇகரமைகாரமாகும்.

என்னின். போலியெழுத்தாமாறுணரற்று. அகரமுமிகரமுங்கூடச்சொல்ல, ஐ காரம் போலவாகும். அது கொள்ளற்க எ - று. உ - ம். ஐயர் - அஇயர் - எனவரும். [உக]

## அகரஉகரமௌகாரமாகும்.

என்னின். இதுவுமது. அகரமுமுகரமுங்கூடச்சொல்ல, ஔகாரம்போலவாகும். எ.- று. உ - ம். ஔவை - அஉவை - எனக்கண்டுகொள்க. உஉ

## *அகரத்திம்பர்யகரப்புள்ளியு, மையெனெ டுஞ்சினைமெய்பெறத்தோன்றும்.

என்னின். இதுவுமது. அகரத்தின்பின்னர், இகரமேயன்றி, யகரமாகிய புள்ளியும் ஐ யெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவுபெறத்தோன்றும். எ-று. உ - ம். ஐவனம் - அய்வனம் - எனவரும். மெய்பெறத்தோன்றுமென்றதனான், அகரத்தின்பின்னருகரமேயன்றியும், வகரப்புள்ளியும் ஔகாரம்போலவருமெனக்கொள்க. ஔவை - அவ்வை - எனக்கண்டுகொள்க. [உங]

---

* அகரமுதலிய மூன்றுசூத்திரங்களும் சந்தியக்கரம் விதிப்பனவாகக் கொண்டு "ஆகுமென்றதனை யாகாதென்னவிலக்கப்படுமென்யானை. "பன்னீருயிருமொழிமுதலாகும்" என்புழியும் - ஆகுமென்பதனாற் பன்னீருயிரு மொழி முதலாகாவென விலக்கப்படும்போலுமெனக்கூறிமறுக்க என்பது தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

ஓரளபாகுமிடனுமாருண்டே
தேருங்காலைமொழிவயினான.

என்னின். உயிர்களு ளொன்றற்குமாத்திரைச் சுருக்கங்கூறுதனுதலிற்று. ஐகாரம ஆராயுங்காலத்துமொழிக்கணோரளபாய்நிற்குமிடமுமுண்டு. எ - று. உ - ம். இடையன் - மடையன் - எனவரும். தேருங்காலையெனறதனான், முதற்கட்சுருங்காதென்பதுகொள்க. இடனென்றதனானிக்குறுக்கம் சிறுபான்மையென்பதுகொள்க. [உச]

* இகரயகரமிறுதிவிரவும்.

என்னின். இதுவுமோர்போலியெழுத்துணரற்று. இகரவீற்றுமொழிக்கண் யகரமும், அதுபோல விகரமும் விரவிவரும். எ - று. உ - ம். நாய்- நாஇ - எனக்கண்டுகொள்க [உரு]

பன்னீருயிருமொழிமுதலாகும்.

என்னின். உயிரொழுத்து மொழிக்குமுதலா மாறுணரற்று. பன்னிரண்டுயிரொழுத்தும் மொழிக்குமுதலாம். எ - று. உ - ம. அடை-ஆடை-இடை ஈயம் - உரல் - ஊர்தி - எழு - ஏணி - ஐவனம் - ஒளி - ஓளி - ஔவியம் - என வரும். [உசு]

உயிர்மெய்யல்லனமொழிமுதலாகா.

என்னின். மெய்யெழுத்து மொழிக்குமுதலா மாறுணரற்று. உயிரொடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்குமுதலாகா. உயிரொடுகூடிய மெய்கள் மொழிக்குமுதலாம். எ - று. ஈண்டுயிர்மெய்யென்பது வேற்றுமைநயங்கருதி யெனவுணர்க. ஈண்டொற்றுமைகருதில், "கதநபம வெனுமாவைந்தெழுத்து - மெல்லாவுயிரொடுஞ் செல்லுமார்முதலே" என, சூத்திரம் சுருங்கவோதுமன்றி, இதனாற்சொல்லப்பட்ட வறுபதுயிர் மெய்யினையெடுத்தோதவேண்டில், சூத்திரம் பரக்கவருமென்பது. [உஎ]

கதநபமவெனுமாவைந்தெழுத்து
மெல்லாவுயிரொடுஞ்செல்லுமார்முதலே.

என்னின். மேன்முதலாமென்னப்பட்ட உயிர்மெய்கட்கு வரையறைகூறுதனுதலிற்று. கதநபம - என்று சொல்லப்பட்ட வைந்துதனிமெய்யெழுத்தும் பன்னிரண்டு யிரோடு மொழிக்குமுதலாதற்குச்செல்லும். எ - று. உ - ம். கலை - காளி - கிளி - கீரி - குடி - கூடு - கெண்டை - கேழல் - கைதல் - கொண்டல் - கோடை - கௌவை - எனவும். தந்தை - தாடி - திற்றி - தீமை - துணி - தூணி - தெற்றி - தேவர் - தையல் - தொண்டை - தோடு - தௌவை- எனவும். நடம் - நாரை - நிலம் - நீர் - நுழை - நூல் - நெய்தல் - நேயம் - நைகை - நொய்யன - நோக்கம் - நௌவி - எனவும். படை - பாடி - பிடி - பீடம் - புகழ் - பூழி - பெடை - பேடி - பைதல் - பொன் - போதகம் - பௌவம் - எனவும். மடம் - மாலை - மிடறு - மீனம் - முகம் - மூதூர் - மெலிந்தது- மேனி - மையல் - மொழி - மோதகம் - மௌவல் - எனவும்வரும். முதற்கு என்னும் நான்காமுருபு விகாரத்தாற்றொக்கது. [உஅ]

---

* "இம்பர் உம்பரென்றாற்போல்வன காலவகை யிடவகைகளானமயங்கு மாதலின் இவற்றின் முதற்கணிற்பதியாதோ இறுதிக்கணிற்பதியாதோ என்னுமைய நீக்குதற்கு மாட்டேற்றாக இச்சூத்திரங்கூறினர் என்பது தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

**சகரக்கிளவியும்மவற்றோரற்றே**
**அஐஔவெனுமூன்றலங்கடையே.**

என்னின். இதுவுமது. சகரமாகியவெழுத்து மேற்சொல்லப்பட்டவை போல எல்லா உயிரோடு மொழிக்குமுதலாம். அ.ஐ ஔ வென்னும் மூன்று மல்லாவிடத்து எ - று. உ - ம். சாலை - சிலை - சீறுக - சுரும்பு - சூழ்க - செய்கை - சேவடி - சொறிக - சோறு - எனவரும். சகடமெனவும், சையமெனவும், விலக்கினவும் வருமாலெனின் ;— அவற்றுளாரியச் சிதைவல்லாதன "கடிசொல்லில்லை" என்பதனாற்கொள்க. [௨௯]

**உ ஊ ஒ ஓ வென்னுநான்குயிர்**
**வ வென்னெழுத்தொடுவருதலில்லை.**

என்னின். இதுவுமது. உ ஊ ஒ ஓ வென்றுசொல்லப்படுகின்ற நான்குயிரும் வ என்னுமெய்யெழுத்தோடு மொழிமுதல்வருதலில்லை. பிறவுயிர்கள் வரும். எ - று. உ - ம். வளை - வாளி - விளரி - வீடு - வெள்ளி - வேர் - வையம் - வௌவு - எனவரும். [௩௰]

**ஆ எ ஒ எனுமூவுயிர்ஞகாரத்துரிய.**

என்னின். இதுவுமது. ஆ எ ஒ என்றுசொல்லப்படு மூவுயிர்கள் ஞகாரவொற்றோடு முதலாதற்குரிய. பிறவுயிர் உரியவல்ல. எ - று. உ - ம். ஞாலம் - ஞெகிழி - ஞொள்கிற்று - எனவரும். ஞமியிற்றென்றபோல்வன விலக்கினவும் வருமாலெனின் ;—அவை அழிவழக்கென்றுமறுக்க. [௩௧]

**ஆவோடல்லதுயகரமுதலாது.**

என்னின். இதுவுமது. ஆகாரத்தோடல்லது, யகரமுதலாகாது. எ-று. உ - ம். யான் - எனவரும், யவனரென்றாற்போல்வன விலக்கினவும வருமாலெனின்;—அவையாரியச்சிதை வென்றுமறுக்க. [௩௨]

**முதலாவேனதம்பெயர்முதலும்.**

என்னின் மொழிக்கு முதலாகாதனவு மொரோவழியாமாறுணர்த்து. மொழிக்குமுதலாகாத வொழிந்தமெய்களும் அவ்வெழுத்துக்கடம்பெயர் கூறுதற்கு முதலாம். எ - று. முதலாயினமெய் கதநபமக்களும், வகரமும், சகரமும், ஞகரமும், யகரமுமெனவிவை. முதலாகாதமெய்-ஙகரமும், டகரமும், ணகரமும், ரகரமும், லகரமும், ழகரமும், ளகரமும், றகரமும், னகரமுமெனவிவை. அவைதம் பெயர்க்குமுதலாமாறு. ஙக்களைந்தார்; டப்பெரிது; ணந்நன்று; என்றாற்போல வொட்டிக்கொள்க. இனி ஏனவென்றதனன், முதலாமென்னப்பட்ட வொன்பதுமெய்யும் பன்னிரண்டுயிரும் தம்பெயர்கூறும் வழியும், மொழிக்குமுதலாமெனக்கொள்க. தக்களைந்தார்; தப்பெரிது; அக்குறிது; ஆவலிது என்றாற்போல வொட்டிக்கொள்க. [௩௩]

**குற்றியலுகரமுறைப்பெயர்மருங்கி**
**னொற்றியநகரமிசைநகரமொடுமுதலும்.**

என்னின். குற்றியலுகரமொழிக்கு முதலாமாறுணர்த்து. குற்றியலுகரம் முறைப் பெயரிடத்து ஒற்றாய்நின்றநகரத்தின் மேலாயநகரத்தோடு, மொழிக்குமுதலாம். எ - று. நுந்தை எனவரும். இவ்வாறுமுதலாக்கங்கூறவே, மொழிமுதற்குற்றியலுகரத்திற்கிடம்பற்றுக்கோடுங்கூறியவாறாயிற்று. இடம் நுந்தையென்னுமுறைப்பெயர் பற்றுக்கோடு நகரமிசை நகரம். [௩௪]

முற்றியலுகரமொடுபொருள்வேறுபடா அ
தப்பெயர்மருங்கினிலையியலான.

என்னின். மேலதற்கோர்புறனடை. அம்முதற்கட் குற்றியலுகரம் ஆ ண்டிதழ்குவித்துக்கூறுமவழி, முற்றுகரத்தோடு பிறவுகரம்போலப்பொருள் வேறுபடாது : யாண்டெனின், — அம்முறைப்பெயரிடத்துத் தானிற்றற்கண் எ - று. நகுவெனவும், நாகுவெனவும், குறுகியுங் குறுகாதும்நின்றவுகரங் கள்போல, நுந்தையென்று குறுக்கமாயவழியும இதழ்குவித்துக்கூறக்குறுகாத வழியும், பொருள்வேறுபடாதவாறறிக. இனி இரட்டுற மொழிதலெனபதனு ல், பொருளொனறதனைபிடனுமபற்றுச்கோடமாக்கி, பிறவுசரங்கள்போல வீ ண்டையுகரங்கள் இடனுமபற்றுக்கோடும, வேறுபடாவெனபதுகொள்க. ௬௫

உயிர்ஔளெஞ்சியவிறுதியாகும்.

என்னின். உயிர் மொழிக்கிறுமாறுணாற்று. உயிரொழுந்துக்களுள், ஔ காரமொழிந்தவை மொழிக்கிறும். ஔகாரந்தான ஈறுகாது. எ - று. இது உயிர்க்கும உயிர்மெய்க்குமபொது. ஆ அ -ஆ - ா இ - ஈ - ஊ உ - ஊ - ஏ எ- ஏ - ஐ இ - ஐ - ஓ ஒ - ஓ - ஔ உ - ஔ - எனவுயிரீறுயின. இவற்றுட் குற் றெழுத்தைந்தும அளபெடைவகையானீறுயின. உயிர்மெய்களும் • மேல்வ ரையறைகூறுதனவாகியஅகர ஆகார இகர ஈகார ஐகாரங்களோடு, இயைந்த னவீண்டேகொள்க. உ - ம். விள, பலா, கிளி, குரீ, பனை, எனவரும. [௬௬]

கவவோடியையினௌவுமாகும்.

என்னின். ஈறுகாதென்ற ஔகாரமின்னுழியாமென்கினறது. ககர வக ரமாகிய மெய்களோடுபொருந்தின், முனனீறுகாதெனறஔகாரமுமீறும். எ - று. உ - ம. கௌ, வௌ, எனவரும். [௬௭]

எ எனவருமுயிர்மெய்யீறுகாது.

என்னின். எகரம்தானே நின்றவழியன்றி மெய்யோடுகூடி யீறுகாதென வரையறைகூறுதனுதலிற்று. எ எனறுசொல்லவருமுயிர் தானேயீறுவதனறி மெய்யோடியைந்தீறுகாது. எ - று. [௬௮]

ஒவ்வுமற்றே நவ்வலங்கடையே

என்னின். இதுவுமவரையறை. ஒகரமும் தானேநின்றீறுவதன்றி, மெய் யோடியைந்தீறுகாது. நகரமெய்யோடல்லாதவிடத்து எ - று. [௬௯]

ஏ ஓ எனுமுயிர்ஞகாரத்தில்லை.

என்னின். இதுவும்வரையறை. ஏ - ஓ - என்று சொல்லப்படுமுயிர் தா மேநின்றும், பிறமெய்களோடுநின்று மீறுவதனறி, ஞகாரத்தோடு மீறுவதில் லை. எ - று. தாமேயாதன்முன்னே காட்டப்பட்டன. பிறமெய்களோ டீறுவ னவற்றுள், வழக்கிறந்தனவொழியவிறவாதனவந்தவழிக்கண்டுகொள்க. [௭௰]

உ ஊகாரநவவொடுநவிலா.

என்னின. இதுவும்வரையறை. உ-ஊகாரங்கள் தாமேநினறும் பிறமெய் களோடுநின்றும் பயில்வதனறி, நகரவகரங்களோடுபயிலா. எ - று. தாமேயீ றுதன் மேலேகாட்டப்பட்டன. பிறமெய்களோ டீறுமவற்றுள், வழக்கிறந்த னவல்லாதனவந்தவழிக்கண்டுகொள்க. நவிலாவென்றதனுற் சிறுபான்மை நொவ்வுங் கவ்வுமென வகாரத்தோடீறுதல்கொள்க. இன்னுமதனுனே சி றுபான்மை நகரத்தோடு வரவுண்டேனுங்கொள்க. [௭௧]

### உச்சகாரமிருமொழிக்குரித்தே.

என்னின். இதுவுமோரோ வழிவரையறை. உகரத்தோடு கூடியசகரம் இருமொழிக்கல்லாது, பலமொழிக்கீறாகாது. எ - று. உ - ம். உசு, முசு, எனவரும். பசுவெனபது ஆரியச்சிதைவென்பது. [௪௨]

### உப்பகாரமொன்றெனமொழிப-
### விருவயினிலையும்பொருட்டாகும்மே.

என்னின். இதுவும் மொழிவரையறைபுமொழியது பொருள்பாடு முணரற்று. உகரத்தோடுகூடியபகரம ஒருமொழிக்கீறுமென்று சொல்லுவர். அதுதான் றன்வினை பிறவினையெனனும இரண்டிடத்துநிலைபெறும் பொருண்மைத்தாம். எ - று. உ - ம். தபு - எனவரும். இது படுத்துச்சொல்ல, நீசாவெனத்தன்வினையாம். எடுத்துச்சொல்ல, நீயொன்றனைச்சாவியெனப் பிறவினையாம். [௪௩]

### எஞ்சியவெல்லாமெஞ்சுதலிலவே.

என்னின். மொழிக்கீறுகாவுயிர்மெய்யு மோரோவழியாமாறுணரற்று. மொக்கீறுகாதுநின்றவுயிர்மெய்களெல்லாம் தமபெயர்கூறுமவழியீறுதற்கொழிபில. எ - று. எஞ்சிய வுயிர்மெய்யாவன. ஔகாரம ககாரவகாரங்களை ஒழிந்த மெய்யோடியைந்தவுயிர்மெய்யும, எகரம் எல்லாமெய்யோடியைந்தவுயிர்மெய்யும், ஒகரம நகரமொழிந்தமெய்யோடியைந்த உயிர்மெய்யும, ஏகார ஓகாரம்ஞகாரத்தோடியைந்த உயிர்மெய்யும், உஊகாரம ஙகரவகரங்களோடியைந்த உயிர்மெய்யுமென விவை. தம்பெயர்க்காமாறு, கௌக்களைந்தாரெனவும்; கெக்களைந்தாரெனவும்; கொக்களைந்தாரெனவும்; ஞேக்களைந்தாரெனவும்; ஞோக்களைந்தாரெனவும்; ஙுக்களைந்தாரெனவும், ஙூக்களைந்தாரெனவும்; வுக்களைந்தாரெனவும்; வூக்களைந்தாரெனவும் வரும். எல்லாமென்றதனை, மொழிக்கீறுப்நின்ற வுயிர்மெய்களும் தமபெயர்கூறும் வழியுமீறுமென்றுகொள்க. கக்களைந்தார்; காவலிது எம். அக்களைந்தார், ஆவலிது எனவுமிவ்வாறே யொட்டிக்கொள்க. முன்னையுணரநின்றவழி, மொழிகட்கிது கருவியாகவீற்றகத்துமுடிபு ஒன்றினமுடித்தலாற்கொள்க. [௪௪]

### ஞணநமனயரலவழளவென்னு-
### மப்பதினொன்றேபுள்ளியிறுதி.

என்னின். தனிமெய்களுண்மொழிக்கீறுவன கூறுதனுதலிற்று. ஞணநமனயரலவழள வெனறு கூறப்பட்ட அப்பதினொன்றுமே புள்ளிகளில், மொழிக்கீறுவன. எ - று. உ - ம. உரிஞ் - மண் - பொருந் - திரும - பொன் - வேய் - வேர் - வேல் - தெவ் - வீழ் - வேள் - எனவரும். னகாரமீற்றுவையாது, மகரத்தோடுவைத்தது அதன்மயக்கவியைபுநோக்கி யென்றுணர்க. [௪௫]

### உசசகாரமொடுநகாரஞ்சிவணும்.

என்னின். இதுவுமொழிவரையறை. உகரத்தோடுகூடிய சகரத்தோடே நகாரம்பொருந்தி, அஃதிருமொழிக்கீறுயவாறுபோல, தானுமிருமொழிக்கீறும். எ - று. உ - ம். பொருந் - வெரிந் - எனவரும். [௪௬]

### உப்பகாரமொடுஞகாரையுமற்றே-
### யப்பொருளிரட்டாதிவணையான.

என்னின். இதுவுமொழிவரையறை. உகரத்தோடுகூடிய பகரத்தோடு, ஞகாரமும் அத்தன்மைத்தா யொருமொழிக்கீறும். இவ்விடத்ததன்பொருள் அவ்வுப்பகரம்போல விருபொருள்படாது. எ - று. உ - ம். உரிஞ் - எனவரும். ஞகாரம் ஒருமொழிக்கீறுதலின் பகரத்தின்பின்கூறப்பட்டது. [௪௭]

**வகரக்கிளவி நான்மொழியீற்றது.**

என்னின். இதுவுமொழிவரையறை. வகரமாகியவெழுத்து நான்குமொழியீற்றதாம். எ - று. உ - ம். அவ் - இவ் - உவ் - தெவ் - எனவரும். [௮௧]

**மகரத்தொடர்மொழிமயங்குதல்வரைந்த - னகரத்தொடர்மொழியொன்பஃதென்ப - புகரறக்கிளந்தவஃறிணைமேன.**

என்னின். இதுவுமோரோவழி மொழிவரையறை. குற்றமறச்சொல்லப்பட்ட வஃறிணையிடத்து மகரவீற்றுத்தொடர்மொழியோடு, மயங்காதென்று வரையறுக்கப்பட்ட னகரவீற்றுத்தொடர்மொழி ஒன்பதென்றுசொல்லுவர். எ - று. உ - ம். நிலன் - நிலம் - பிலம் - பிலன் - என்றாற்போல்வன. மயங்குவன, இனிமயங்காதன. எகின் - செகின் - விழன் - பயின் - அழன் - புழன் - குயின் - கடான் - வயான் - எனவரும். இவற்றுட்டிரிபுடையனகளைக. ஒன்பஃதென்னுமாய்தம் செய்யுள்விகாரம். அஃறிணையென்றது ஈண்டஃறிணைப்பெயரினை. [௮௨]

இரண்டாவது மொழிமரபு முற்றிற்று.

---

## மூன்றாவது பிறப்பியல்.

**உந்திமுதலாமுந்துவளிதோன்றித் - தலையினுமிடற்றினுநெஞ்சினுநிலைஇப் - பல்லுமிதழுநாவுமூக்கு - மண்ணமுமுளப்படவெண்முறைநிலையா - னுறுப்புற்றமையநெறிப்படநாடி - யெல்லாவெழுத்துஞ்சொல்லுங்காலைப் - பிறப்பினாக்கம்வேறுவேறியலத் - திறப்படத்தெரியுங்காட்சியான.**

என்னின். இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின்;—எழுத்துக்களது பிறப்புணர்த்தினமையிற் பிறப்பியலென்னும்பெயர்த்து. இதனை நான்மரபின்பின்னேவைக்கவெனின்;—சார்பிற்றோற்றத்தெழுத்தும் தனிமெய்யும் மொழிமரபிடையுணர்த்தி, உணர்த்தவேண்டுதலின மொழிமரபின் பின்னதாயிற்று. இத்தலைச்சூத்திரமென்னுதலிற்றோவெனின்;—எழுத்துக்களது பொதுப்பிறப்புணரற்று, தமிழெழுத்துக்களெல்லாம் ஒருவன்முறைப்படவாராய்ந்து நம்மைச்சொல்லுங்காலத்துக் கொப்பூழடியாகமேலெகிளர்கின்ற வுதானனென்னும் பெயரையுடைய வாயுத்தோன்றி, தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்று, தலையுமிடறுநெஞ்சுமென்னும் மூன்றனோடும் பல்லும் மிதழும் நாவும் மூக்கும் அண்ணமுமுளப்பட வெட்டாகிய முறைமையையுடைய விடங்களனவோருறுப்போடோருறுப்புந்தமமிற்பொருந்தியமைதிபெற, பிறப்பினதாக்கம் வேறுவேறு புலப்பட்டு வழங்குதலுடைய. கூறுபாடுளதாக ஆராயுமிடத்து எ - று. இதற்போறலான் வாயிதழெனப்பட்டது. எல்லாவெழுத்துமென்னும் எழுவாய்க்குப் பிறப்பினாக்கம் வேறுவேறியலவென்பதனை, ஒருசொன்னீர்மைப்படுத்திப் பயனிலையாக்குக. [௧]

**அவ்வழிப்-பன்னீருயிருந்தந்நிலைதிரியா-மிடற்றுப்பிறந்தவளியினிசைக்கும்,**

என்னின். உயிரொழுத்திற்குப் பொதுப்பிறப்புணரற்று. அவ்விடத்துப் பன்னிரண்டுயிரொழுத்தும் தத்தநிலையிற்றிரியாவாய், மிடற்றின்கட்பிறந்தவளியானொலிக்கும். எ - று. தந்நிலைதிரியாவென்றதனால், குற்றியலிகரம் குற்றியலுகரம் தந்நிலைதிரியுமென்பது பெறப்பட்டது. [௨]

**அவற்றுள் - அ ஆ வாயிரண்டங்காந்தியலும்.**

என்னின். உயிரெழுத்துக்களுட்சிலவற்றிற்குச் சிறப்புப்பிறவியுணரற்று. மேற்சொல்லப்பட்ட உயிர்பன்னிரண்டினுள், அகர ஆகாரங்களாகிய அவ்விரண்டும் அங்காந்துசொல்ல, அஃதிடமாகப்பிறக்கும். எ - று. [௩]

**இ ஈ எ ஏ ஐ யெனவிசைக்கு- மப்பாலைந்துமவற்றோரன்ன-வவைதா- மண்பன்முதனாவிளிம்புறலுடைய.**

என்னின். இதுவுமது. இ - ஈ - எ - ஏ - ஐ - என்றுசொல்லப்படு மக்கூற்றைந்தும் மேற்கூறிய அகர ஆகாரங்கள்போல, அங்காந்துசொல்லப்பிறக்கும். அவைதாம் அவ்வாறுசொல்லப் பிறக்குமிடத்துப் பல்லினதணியவிடத்தினை, நாவினதடியின் விளிம்புசென்றுறுதலையுடைய. எ - று. [௪]

**உ ஊ ஒ ஓ ஔ வெனவிசைக்கு- மைந்துமிதழ்குவிந்தியலும்.**

என்னின் இது உ ஊ ஒ ஓ ஔ வெனச்சொல்லவிசைக்கு மக்கூற்றைந்தும் இதழ்குவிந்துச்சொல்ல நடக்கும். எ - று. [௫]

**தத்தந்திரிபேசிறியவென்ப.**

என்னின். முன்கூறிய உயிர்க்கும் மேற்கூறியமெய்க்கு மோர்புறனடை கூறுதனுதலிற்று. எழுத்துக்களொருதானத்துக்கூடிப் பிறக்குமெனப்பட்டன. அவ்வாறுகூடிப்பிறப்பினும், தத்தம்வேறுபாடுகளைச் சிறியவேறுபாடுண்டென்றுசொல்லுவர். அவ்வேறுபாடறிந்துகொள்க. எ - று. [௬]

**ககாரஙகாரமுதனாவண்ணம்.**

என்னின். மெய்களுட்சிலவற்றிற்குப் பிறவியாமாறுணரற்று. ககாரமும் ஙகாரமும் நாமுதலுமண்ணமுதலு முறப்பிறக்கும். எ - று. [௭]

**சகாரஞகாரமிடைநாவண்ணம்.**

என்னின். இதுவுமது. சகாரமும் ஞகாரமும் நாவதிடையுமண்ணத்திடையுமுறப்பிறக்கும். எ - று. [௮]

**டகாரணகாரநுனிநாவண்ணம்.**

என்னின். இதுவுமது. டகாரமும் ணகாரமும் நாவதுநுனியுமண்ணத்ததுநுனியுமுறப்பிறக்கும். எ - று. [௯]

**அவ்வாறெழுத்துமூவகைப்பிறப்பின.**

என்னின். மேலனவற்றிற்கோர்புறனடையுணரற்று. மேற்கூறப்பட்டவாறெழுத்தும் நிரனிறைவகையானறுவகைப் பிறப்பினவல்ல மூவகைப்பிறப்பின. எ - று. [௰]

**அண்ணநண்ணியபன்முதன்மருங்கி - னாநுனிபரந்துமெய்யுறவொற்றத், தாமினிதுபிறக்குந்தகாரநகாரம்**

என்னின். இதுவுமெய்களிற் சிலவற்றிற்குப் பிறப்புணரற்று. அண்ணத்தைப் பொருந்திய பல்லினதணியவிடத்தின்கண்ணே நாவினது நுனி பரந்த வடிவையுறும்படி யொற்ற; தாம் இனிதாகப்பிறக்கும். தகாரமும் நகாரமும் எ - று. முன்னேயுறுப்புற்றமையவென்றுவைத்துப்பின்னு மெய்யுறவென்று கூறினான், எல்லாவெழுத்துக்களுக்கும் மெய்யுற்றபோதேயினிதுபிறப்பதென்பதுகொள்க. [௧௧]

**அணரிநுனிநாவண்ணமொற்ற**
**றஃகானஃகானுயிரண்டும்பிறக்கும்.**

என்னின். இதுவுமது. அணர்ந்தநுனிநா வண்ணத்தைச்சென்றொற்ற; றகாரனகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும் எ - று. இங்குநின்றும் நெடுங்கணக்குமுறைமைவிட்டும் நாவதிகாரம்பட்டதுகண்டுகூறுகின்றதெனவுணர்க. ௧௨

**நுனிநாவணரியண்ணம்வருட - ரகாரழகாரமாயிரண்டும்பிறக்கும்**

என்னின். நுனிநா வணர்ந்து அண்ணத்தைத்தடவ; ரகாரழகாரமாகிய அவ்விரண்டும்பிறக்கும். எ - று. [௧௩]

**நாவிளிம்புவீங்கியண்பன்முதலுற, வாவயினண்ணமொற்றவும்வருடவும் - லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும்.**

என்னின். இதுவுமது. நாவினது விளிம்பு தடித்துப் பல்லினதணியவிடத்துபபொருந்த அவ்விடத்து அவ்வண்ணத்தையொற்ற; லகாரமும், அதனைத்தடவ; ளகாரமுமாக அவ்விரண்டும் பிறக்கும். எ - று. [௧௪]

**இதழியைந்துபிறக்கும்பகாரமகாரம்.**

என்னின். இதுவுமது. கீழிதழுமேலிதழும் தம்மிலியையப்பிறக்கும். பகாரமும் மகாரமும் எ - று. [௧௫]

**பல்லிதழியையவகாரம்பிறக்கும்.**

என்னின். இதுவுமது. மேற்பல்லும இதழும் தம்மிலியைய, வகாரம் பிறக்கும். எ - று. [௧௬]

**அண்ணஞ்சேர்ந்தமிடற்றெழுவளியிசை-**
**கண்ணுற்றடையயகாரம்பிறக்கும்.**

என்னின். இதுவுமது. அண்ணத்தைச்சேர்ந்தவ்விடத்துமிடற்றினின்றுமெழும்வளியானுயவிசை அவ்வண்ணத்தையணைந்துசெறிய, யகாரம்பிறக்கும். எ - று. [௧௭]

**மெல்லெழுத்தாறும்பிறப்பினுக்கஞ் - சொல்லியபள்ளிநிலையினவாயினு - மூக்கின்வளியிசையாப்புறத்தோன்றும்.**

என்னின். மெல்லெழுத்திற்கோர்புறனடைகூறுதனுதலிற்று. மெல்லெழுத்துக்களாறும் தத்தம்பிறப்பினதாக்கம் மேற்சொல்லப்பட்டவிடத்தே நிலைபெற்றவாயினும், அவைமூக்கின்கண்ணுளதாகிய வளியசையான் யாப்புறத்தோன்றும். எ - று. யாப்புறவென்றதனான் இடையெழுத்திற்கு மிடற்றுவளியும், வல்லெழுத்திற்குத் தலைவளியுங்கொளக. [௧௮]

**சார்ந்துவரினல்லது தமக்கியல்பிலவெனத் - தேர்ந்துவெளிப்படுத்த வேனைமூன்றுந் - தத்தஞ்சார்பிற்பிறப்பொடுசிவணி - யொத்தகாட்சியிற்றம்மியல்பியலும்.**

என்னின். சார்பிற்றோற்றத்தெழுத்திற்குப் பிறப்புணரற்று. சிலவற்றைச்சார்ந்து வருதலல்லது, தமக்குத்தாமேவருமியல் பிலவென்றோராய்ந்து வெளிப்படுக்கப்பட்ட வொழிந்தமூன்றும் தத்தமக்குச் சார்பாகிய வெழுத்துக்களது பிறப்பிடத்தே பிறத்தலோடுபொருந்தி, அவ்விடத்தே தமக்குரிய வியல்புநடக்கும். எ - று. ஒத்தகாட்சியென்றதனால், ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச்சார்பேயெனினும், தலைவளியாற்பிறத்தலின், உயிரோடுபுணர்ந்த வல்லெழுத்துச்சார்பாகவே பிறக்குமென்பதுகொள்க. தம்மியல்பியலுமென்றதனான், அளபெடையும் உயிர்மெய்யும் தமக்கடியாகியவெழுத்துக்களது பிறப்பிடமே யிடமாகவருமென்பதுகொள்க. [௧௯]

*** எல்லாவெழுத்தும்வெளிப்படக்கிளந்து-சொல்லியபள்ளியெழுதரு வளியிற் - பிறப்பொடுவிடுவழியுறழ்ச்சிவாரத்- தகத்தெழுவளியிசைய ரிறபநாடி - யளபிற்கோடலந்தணர்மறைத்தே.**

என்னின். எல்லாவெழுத்திற்குமாவதோர் புறனடையுணர்த்துற்று. எல்லாவெழுத்துக்களும் வெளிப்படவிதந்துசொல்லப்பட்ட விடத்தின்கண்ணேயெழுகின்றவளியானே, தாம்பிறக்குந் தொழிலுடைய வாதலோடு தம்மைச்சொல்லுமிடத்து, திரிதருங்கூறறையுடைய வுண்ணின்றெழும் வளியாகிய விசையைப் பிணக்கமறவாராய்ந்து, மாத்திரைவரையறையாற்கோடல் பார்ப்பார்வேதத்துக்கண்ண ... று. உறழ்ச்சிவாரத்தென்றது உந்திமுதலாவெழும்வளி தலைகாறுஞ்சென்று மீண்டு, நெஞ்சின்கண்ணிலை பெறுதலையெனக்கொள்க. வளியென்னாது வளியிசையென்றது அவ்வாறுநெஞ்சினகணிலைபெறுமளவும். வளியெனப்படுவது பின்னை நெஞ்சினின்று மெழுவுழியெல்லாம் வளித்தன்மைசார்ந்தெழுத்தாந்தன்மையதாமென்பது விளங்கிநின்றது. [உ௰]

**அஃதிவணுவலாதெழுந்துபுறத்திசைக்கும் - மெய்தெரிவளியிசையள புநுவன்றிசினே.**

என்னின். மேலைச்சூத்திரத்திற் கோர்புறனடையுணர்த்துற்று. "அகத்தெழுவளியிசை" "அளபிற்கோடலாகியவதனை இந்நூலிடத்துச்சொல்லாது, அகத்தினின்றெழுந்து புறத்துப்போந்திசைக்கும் பொருண்மைதெரிகின்றவளியாகிய விசையதுமாத்திரையினை, யான் ஈண்டுக்கூறினேன். எ - று .மற்று, "அளபிற்கோடலந்தணர்மறைத்தெனவே பெறப்பட்டதன்றோவெனின;— அந்தணர்மறைத்தென்பது பிறனகோட்கூறுதற்கும், பிறன்கோட்கூற்று நேர்ந்துடம்படுதற்கு மொப்பக்கிடந்தமையின் அவ்வையந்தீர்தற்குக் கூறினானென்பது. புறத்திசைப்பதன்முனனர், அகத்திசைக்கும் வளியிசையை யம்மறைக்கணேயெழுத்திற்கு மூன்றுநிலையுளதாகக்கூறும. அஃதாமாறறிந்துகொள்க. மெய்தெரியென்றதனான், முற்குமுதலியன முயற்சியாற்பிறக்குமெனினும், பொருடெரியாமுறைமையவாகலின், அவற்றிற்களபுகூறுராயினானெனபது பெறப்பட்டது. நுவனறென்பது ஈண்டிறந்தகாலத்தன்மையினை. [உக]

மூன்றுவது பிறப்பியல் முற்றிற்று.

---

## நான்காவது புணரியல்.

**மூன்றுதலையிட்டமுப்பதிற்றெழுத்தி - னிரண்டுதலையிட்டமுதலாகிரு பஃ - தறுநான்கீறொடுநெறிநின்றியலு - மெல்லாமொழிக்குமிறுதியு முதலு - மெய்யேயுயிரொன்றுயீரியல.**

என்பதுசூத்திரம். இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின்;—மொழிகள் மேற்செய்கையோத்துக்களுட் புணர்தற்குரிய கருவியினியல்புகூறினமையிற் புணரியலென்னப்பட்டது. மேன்மொழிமரபிற்கூறியமொழிகள் புணருமாறுணர்த்தினமையின் மொழிமரபினோடியை புடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின்;— மொழிமரபினுண்முதலுமீறுங்கூறியவழி உயிரும் மெய்யும் உயிர்மெய்யுமென மூன்றாய்விரிந்து நின்றதனை உயிருமெய்யுமென விரண்டாகத்தொகுத்தலானும், அவ்வழி இருபத்திரண்டெழுத்து மொழிக்குமுதல், இருபத்துநான்கெழுத்து மொழிக்கிறெனக்கூறலின், முப்பத்

---

* எல்லாவெழுத்துமுதலிய இரண்டுசூத்திரமும் எழுத்துக்கட்பிறப்பிற்குப்புறநடையுணர்த்திற்றென்று ஒருசூத்திரமாகக்கொண்டார், நச்சினார்க்கினியர்

துமூன்றெனப்பட்டவெழுத்து நாற்பத்தாருவனபோல விரிந்ததனை, அவையெல்லா முப்பத்துமூன்றினுள்ளனவே யெனத்தொகுத்தலானும், விரிந்ததுதொகுத்தனுதலிற்று. மூன்றனைமுடிவிலேயிடப்பட்ட முப்பதாகிய வெழுத்தினுள், அவ்விரண்டினை முடிவிலேயிடப்பட்டமொழிக்கு முதலாயவிருபதும, இருபத்துநான்கிற்றெடு வழக்குநெறிக்கணின்று நடக்குமூவகை மொழிக்குமீறுமுதலுமாவன மெய்யும் உயிருமாகிய அவ்விரண்டியல்பினையுடைய. எ - று. உ - ம். மரம், இலை, ஆல், விள, எனமெய்யும் உயிரும் முதலுமீறுமாயின. இருபத்திரண்டெழுத்து முதலாயின பன்னிரணடுயிரும் ஒன்பதுயிர்மெய்யும் மொழிமுதற் குற்றியலுகரமுமெனவிவை. இருபத்துநான்கீருவன பன்னிரண்டுயிரும் பதினொருபுள்ளியும் ஈற்றுக்குற்றியலுகரமுமெனவிவை. ஈற்றெடென்பது விகாரத்தாற்றொக்கது. மெய்முதற்கூறியவதனல், நால்வகைப்புணர்ச்சியும் மெய்க்கணிகழுமாறுயிர்க்கணிகழாதென்பதுகொள்க. [க]

அவற்றுண் - மெய்யீறெல்லாம்புள்ளியொடுநிலையல்.

என்னின். மேற்கூறியவாற்றுற்றனி மெய்யும் முதலாவான் சென்றதனை விலக்கவி னெய்தியது விலக்கலாயிற்று. மேன் மெய்யுமுயிருமென்று கூறியவிரண்டினுள், மெய்மொழிக் கீறுயவையெல்லாம் புள்ளிபெறுத லோடுநிற்கும். முதலா யவையெல்லாம் புள்ளியிழந்துநிற்கும். எ - று. மாம், எனவரும. மொழிமுதன்மெய் புள்ளியொடுநில்லாதெனனுது, ஈறெல்லாம்புள்ளியொடு நிலயலெனவீற்றின்மேல் வைத்துக்கூறியவதனுன், அவ்வீற்றின்மெய் உயிர்முதன்மொழிவந்த விடத்தஃ தேறவிடங்கொடுக்கு மென்பது பெறப்பட்டது. [உ]

குற்றியலுகரமுமற்றெனமொழிப.

என்னின். ஈற்றிற் குற்றியலுகரத்திற் கோர்கருவிகூறுதனுதலிற்று. ஈற்றிற் குற்றியலுகரமும், புள்ளியீறுபோலவுயிரேற விடங்கொடுகுகு மதன்மைத்தென்று சொல்லுவர். எ - று. இம்மாட்டேறெருருபுடைச்சேற லெனவுணர்க. [ஙு]

உயிர்மெய்யீறு முயிரீற்றியற்றே.

என்னின். மேல் "மெய்யேயுயிரொன்ற யீரியல" என்றதற் கோர்புறனடை கூறுதனுதலிற்று. உயிர்மெய்மொழியீற்றினியன்றதுவும் உயிரீற்றினியல்பையுடைத்து, இடையினியன்றனவும் உயிரினியல்பையுடைத்து எ - று. ஈறுமிடையு முயிருளடங்குமெனவே, முதல் மெய்யுளடங்குமென்பதாயிற்று. இதனல், விள முதலியவுயிர்மெய்யீறெல்லாம் அகரவீறுமுதலிய வுயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சிபெறுவனவாயிற்று. வரகு என்புழியிடை நினறரகரவுயிர்மெய் அகரமாயுயிர்த் தொடர்மொழியெனப்பட்டது. ஈண்டுயிர்மெய் ஒற்றுமைநயத்தானுயிர்மெய்யெனவே ரோரொழுத்தாவதனறி, ஈறுமிடையுமுயிரென வோரொழுத்தாயும் முதல் மெய்யெனவோரொழுத்தாயும் நின்றதாயிற்று. இத்துணையுமொருமொழியிலக்கணங் கூறலின்மொழிமரபி னொழிபாயிற்று. [ச]

**உயிரிறுசொன்முனுயிர்வருவழியு - முயிரிறுசொன்முன்மெய்வருவழியு- மெய்யிறுசொன்முனுயிர்வருவழியு - மெய்யிறுசொன்முன்மெய்வருவழியுமென் - றிவ்வெனவறியக்கிளக்குங்காலை - நிறுத்தசொல்லேகுறித்துவருகிளவியென் - றாயீரியலபுணர்நிலைச்சுட்டே.**

என்னின். மேற்கூறும்புணர்ச்சி மும்மொழிப்புணர்ச்சியாகா, இருமொழிப் புணர்ச்சியாமென்பதும், அவையெழுத்து வகைதான்காமென்பதூஉமுணர்ற்று. உயிரீற்றுச்சொன்முன் உயிர்முதன்மொழிவருமிடமும், உயிரீற்றுச்சொன்முன் மெய்முதன்மொழிவருமிடமும், மெய்யீற்றுச்சொன்முன் உயிர்முதன் மொழிவருமிடமும், மெய்யீற்றுச்சொன்முன் மெய்முதன் மொழிவருமிடமு

மென் றப்புணர்ச்சிவகை யிவையெனவறிய, ஆசிரியன் சொல்லுங்காலத்தும், அவை நிறுத்தசொல்லும். அதன்பொருண்மையைக் குறித்துவருஞ்சொல்லு மாகிய வவ்விரண்டியல்பையுடைய. புணருநிலைமைக்கண். எ - று. ஆஈ. ஆவலிது. ஆவிலை. ஆல்வீழ்ந்தது. எனக்கண்டுகொள்க. விளவினைக்குறைத்தா னென்பது அவ்வுருபுகுறித்து வருகிளவியை நிலைமொழியுளடக்கி, இருமொ ழிப்புணர்ச்சியாய்நின்றவாறறிக. [ரு]

**அவற்றுள் - நிறுத்தசொல்லினீறுகெழுத்தொடு - குறித்துவரு கிளவிமுதலெழுத்தியையப்-பெயரொடுபெயரைப்புணர்க்குங்கா லும் - பெயரொடுதொழிலைப்புணர்க்குங்காலுந் - தொழிலொடு பெயரைப்புணர்க்குங்காலுந் - தொழிலொடுதொழிலைபுணர்க் குங்காலும் - மூனமறதிரிபிடனென்றேயியல்பென - வாங்கந்நா ன்கேமொழிபுணரியல்பே.**

என்னின். மேற்கூறும்புணர்ச்சி புணர்ச்சிவகையானுன்காமென்பதூஉம், அவைசொல்வகையா னுனகாமென்பதூஉம், புணர்வது சொல்லுஞ்சொல்லு மேயன்றி, எழுத்து மெழுத்து மென்பதூஉ முணரற்று. நிலைமொழிவருமொ ழியெனப்பட்டவற்றுள், நிறுத்த சொல்லினதீறுகின்ற வெழுத்தினோடுதனைக் குறித்து வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த, பெயர்ச்சொல் லொடு பெயர்ச்சொல்லைப் புணர்க்குங்காலததும், பெயர்ச்சொல்லொடு வினை ச்சொல்லைப்புணர்க்குங்காலத்தும், வினைச்சொல்லொடு பெயர்ச்சொல்லைப்பு ணர்க்குங்காலத்தும், வினைச்சொல்லொடு வினைச்சொல்லைப் புணர்க்குங்கால த்தும், திரிபுமிடம் மூன்றும் இயல்பு ஒன்றுமாகியநான்கே மொழிகடம்மிற் புணருமியல்பு. எ - று. உ - ம். சாத்தன்கை - சாத்தனுண்டான் - வந்தான சாத்தன் - வந்தான் போயினுன் - எனக்கண்டுகொள்க. இடைபுமுரியும் பெ யர்வினைகளையடைந்தல்லது தாமாகநில்லாமையின், பெயர்வினைகட்கேபுணர் ச்சியுரிமை கூறப்பட்டது. [சு]

**அவைதாம்-மெய்பிறிதாதன் மிகுதல்குன்றலென்- றிவ்வெனமொழிபதிரியுமாறே.**

என்னின். மேற்கூறியதிரிபுமூன்றுமாமாறுணரற்று. அத்திரிபுதான் மெய்பிறிதாதன் மிகுதல்குன்ற லெனறிவையெனச் சொல்லுவர். திரியுநெறியி னை எ - று. இம்மூன்றும் அல்லாததியல்பென்றுகொள்க. உ - ம. பொற்கு டம்-யானைக்கோடு-மரவேர் எனவரும். குவளைமலர் என்பதியல்பு-இப்புணர்ச் சிநான்கும் ஒருபுணர்ச்சிக்கண்ணே நிகழ்வுபெறுமென்பது உரையிற்கொள்க. மேலிடமெனறதனுல், திரிபுமூன்றனுள் யாதாயினுமொன்றுயினும், ஒருபுணர் ச்சிக்கு, இரண்டும மூன்று மொருங்குவரப் பெறுமெனக்கொள்க. மகத்தாற் கொண்டானென்பது- அம்மிகுதியிரண்டுவந்தது. நீயிர்குறியியொன்பது அம்மிகு திமூன்றுவந்தது, பிறவுமன்ன. [எ]

**நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியு - மடையொடுதோன்றினும்புணர்நிலைக்குரிய.**

என்னின். "நிறுத்தசொல்லொடு குறித்துவருகிளவியும்" என்பதற்கோர் புறனடையுணரற்று. நிலைமொழியாக நிறுத்தினசொல்லும் அதனைக்குறித்து வருசொல்லும் தாமேவந்து புணர்வதன்றி, அவையிரண்டினுமோரோர்சொல் இடைவந்தொன்றினும்; அவையும் புணர்நிலைக்குரிய எ - று. உ - ம். பதி னுயிரத்தொன்று, ஆயிரத்தொருபது, பதினுயிரத்தொருபஃது எனவரும். ஈண் ண்டடையென்றது உம்மைத்தொகையினையும், இருபெயரொட்டுப் பண்புத்தொ கையினையுமெனவுணர்க. அவையல்லாததொகைகளுள் வினைத்தொகையும்,

பண்புத்தொகையும், பிளந்துமுடியாமையினொருசொல்லெனப்படும். அன்மொழித்தொகையும் தனக்குவேறோர்முடிபின்மையி னொருசொல்லெனப்படும். இனியொழிந்த வேற்றுமைத்தொகையும், உவமைத்தொகையும் தன்னின முடித்த லென்றதனானீண்டொருசொல்லெனப்படும். உண்டசாத்தன்வந்தான். உண்டுவந்தான்சாத்தன், என்பனவும் அவ்வாறே ஒருசொல்லெனப்படும். பிறவுமன்ன. [௮]

**மருவின்றொகுதிமயங்கியன்மொழியு -**
**முரியவையுளவேபுணர்நிலைச்சுட்டே,**

என்னின். இலக்கணவழக்கேயன்றி மரூஉக்களும் புணர்க்கப்படுமென்பதுணரற்று. இலக்கணவழக்கேயன்றி, மரூஉத்திரளாகிய தலைதடுமாறுகமயங்கின வியல்பையுடைய விலக்கணத்தோடு பொருந்தின மரூஉவழக்கும் உரியனவுள. புணருநிலைமைக்கண் எ - று. உ - ம். மீகண், முன்றில், எனவரும். நிலையென்றதனால் இலக்கணத்தோடுபொருந்திய மரூஉவழக்கல்லா மரூஉவழக்கும் புணர்க்கப்படுமெனக்கொள்க. [௯]

**வேற்றுமைகுறித்தபுணர்மொழிநிலையும் - வேற்றுமையல்வழிப்புணர்மொழிநிலையு - மெழுத்தேசாரியையாயிருபண்பி - னொழுக்கல்வலிய புணருங்காலை.**

என்னின். நால்வகைப்புணர்ச்சி யுண்மிக்கபுணர்ச்சி யித்தன்மைத்தென்பதூஉம், நால்வகைப்புணர்ச்சியும் வேறோராற்றா னிருவகையாமென்பது முணரற்று. வேற்றுமையது பொருண்மையினைகுறித்த புணர்மொழியது நிலைமையும் வேற்றுமையல்லாத வல்வழியிடத்துப் புணர்மொழியது நிலைமையும் மிக்கபுணர்ச்சிக்கண், எழுத்துமிகுதலுஞ் சாரியைமிகுதலுமாகிய அவ்விரண்டிலக்கணத்தானும் நடாத்துதலைத் தமக்குவலியதாகவுடைய. அவைபுணருங்காலத்து எ - று. விளங்கோடு, மகவின்கை, விளக்குறிது, பனையின்குறை, எனக்கண்டுகொள்க. ஒழுக்கல்வலியவென்றதனான், எழுத்துஞ்சாரியையு முடன்பெறுதல்கொள்க. அவற்றுக்கோடு, கலத்துக்குறை, எனவரும். அல்வழிமுற்கூறுதது வேற்றுமையல்லாதது, அல்வழியெனவேண்டவினென்பது. முன்னே புணர்மொழியென்றுவைத்து, புணருங்காலையென்றதனாற் புணர்ச்சிக்கண்ணே வேற்றுமையல்வழியென விரண்டாவதல்லாக்கால், வேற்றுமையெனப்படுமென்பதுகொள்க. ஈண்டல்வழியென்றது பெரும்பான்மையும் எழுவாயினை. [௰]

**ஐ ஒடுகுஇன் அது கண்ணென்னும் -**
**அவ்வாறென்பவேற்றுமையுருபே,**

என்னின். மேல்வேற்றுமையென்னப்பட்ட அவற்றதுபெயரும், முறையும், தொகையுமுணரற்று. ஐ, ஒடு, கு, இன், அது, கண், என்றுசொல்லப்படுமவ்வாறுமென்றுசொல்லுவர். வேற்றுமையுருபுகளை எ - று. இவையாறுமல்லனவெல்லாம் அல்வழியெனப்படும். அவை எழுவாயும், உவமத்தொகையும், உம்மைத்தொகையும், பண்புத்தொகையும், விளியும், முற்றும், இருவகையெச்சமும், இடையும் உரியுமெனவிவை. [௧௧]

**வல்லெழுத்துமுதலியவேற்றுமையுருபிற் -**
**கொல்வழியொற்றிடைமிகுதல்வேண்டும.**

என்னின். நான்காவதற்கு மேழாவதற்கு முருபியலைநோக்கிற்றோர்கருவியுணரற்று. வல்லெழுத்துமுதலாகவுடைய வேற்றுமையுருபிற்கு, பொருந்தினவிடத்து வல்லொற்றாயினும், மெல்லொற்றாயினும், இடைக்கண்மிகுதல்வேண்டும். எ - று. ஊர்க்கு, நீர்க்கு, ஊர்க்கண், நீர்க்கண், என வல்லெழுத்துமிக்கன, நங்கண், எங்கண், எனவிவை மெல்லெழுத்துமிக்கன. ஓல்வழியெ

ன்றதனால், அரசர்கண், பார்ப்பார்கண், எனவேற்றுமை மிகாதனவுங்கொள்க. மெய்பிறிதாதன்முதலாய நான்குபுணர்ச்சியும் உருபுபுணர்ச்சிக்கண்ணுமெய்தலின்; மெய்பிறிதாதலை யெடுத்தோதாதுமிக்கதனை யெடுத்தோதியவதனான், மிக்கபுணர்ச்சியல்லனவும் ஈண்டேகொள்க. பொற்கு, பொற்கண், ஆங்கண், ஈங்கண், ஊங்கண், அவற்கு, இவற்கு, நுங்கண், கொற்றற்கு, சாத்தற்கு, எனவரும். அவன்கண், சாத்தன்கண், என்புழியியல்பு மிதனானேகொள்க. கஉ

ஆறனுருபினகரக்கிளவி - யீறாககரமுனைக்கெடுதல்வேண்டும்.

என்னின். ஆறாவதற்குத்தொகைமரபினைநோக்கியதோர் கருவிகூறுதனுதலிற்று. ஆறாம்வேற்றுமையாகிய அதுவென்னுஞ் சொல்லிடத்தகரமாகியவெழுத்து நெடுமுதல் குறுகுமொழி யீற்றுளதாகின்ற அகரத்தின் முன்னர், தான்கெடுதல்வேண்டும். எ - று. நமது, எமது, தனது, எனது, நினது, எனவரும். மேலீறாககரம், இதற்குத்தாராது, இவ்வுருபகரமேறி முடியவுமைதலின், அதுகேடாதல் வேண்டாவெனின் ;—நெடுமுதல்குறுகி விகாரப்பட்டுநின்ற மொழியாகலின் அதன்மேல் உருபகரமேறி முடியல்வேண்டானாயினான் போலுமென்பது. [கங]

வேற்றுமைவழியபெயர்புணர்நிலையே.

என்னின். வேற்றுமையுருபு பெயர்க்கணிற்குமாறுணரற்று. வேற்றுமை பெயரின் பின்னிடத்தன. அவற்றோடு புணருநிலைமைக்கண் எ - று. சாத்தனை, சாத்தனோடு எனவரும். மேல் * "உருபுநிலைதிரியாதீறுபெயர்க்காகும்" என்கின்றானன்றோவெனின் ;—பெயரொடுபெயர்முதலிய நால்வகைப்புணர்ச்சியையும் வேற்றுமையல்வழியென விரண்டாகவடக்கலின், வினைவழியும் உருபு வருமென்பது படநின்றதாகலின் ஈண்டிதுகூறப்பட்டது. [கச]

உயர்திணைப்பெயரேயஃறிணைப்பெயரென்
றாயிரண்டென்பபெயர்நிலைச்சுட்டே.

என்னின். வேற்றுமையோடும் புணரும்பெயர்கட்குப் பெயருமுறையுந் தொகையுமுணரற்று. உயர்திணைப்பெயரும் அஃறிணைப்பெயருமாகிய அவ்விரண்டுமென்று சொல்லுப. பெயராகிய நிலைமையது கருத்தினை எ - று. ஆடூஉ, மகடூஉ, என்பனவுயர்திணைப்பெயர். ஒன்று பலவென்பனவஃறிணைப்பெயர். மற்றுவிரவுப்பெயர் கூறாயது என்னையெனின்;—மற்றது, சாத்தன்வந்தான் ; வந்தது; எனப்புணர்ச்சிக்கட் பெரும்பான்மையும் ஒருதிணைப்பாற்படுதலின், அவ்விரண்டாக வடக்கிக்கூறினானென்பது. [கரு]

---

* "உருபுநிலைதிரியாதீறுபெயர்க்காகும் என்பதை யுள்ளிட்ட சூத்திரத்தையும் அதன் உரையையும் உதாரணத்தையும் இதனடியிற்காண்க

கூறியமுறையினுருபுநிலைதிரியா-தீறு பெயர்க்காகுமியற்கையவென்ப. சொல்லதிகாரம் வேற்றுமையியல் சூ. அ. என்னின். உருபேற்றலும் பெயரதிலக்கணமுமுணரற்று. மேல்அவைதாம்பெயர். ஐ, ஒடு, கு, இன், அது, கண், என்றோதியமுறையாற்கிடந்தவுருபு முறைமையிற்றிரியாதே, பெயரதீற்றுக்கண்வந்துநிற்றல் இயல்பு. எ - று. உ - ம். சாத்தனை-சாத்தனோடு - சாத்தற்கு - சாத்தனின் - சாத்தனது - சாத்தன்கண் - எனவரும். நிலைதிரியாதென்றது இவை இடைச்சொல்லாக லாற்றம் மீறுதிரிதலென்னுமிலக்கணமுடைய கொல்லோவெனின்;—அவையிலவென்றற்குக் கூறினானென்பது. அன்றியும், முன்னர்வேற்றுமை மயங்கியலுள்" கு ஐ ஆ வெனவரூஉ மிறுதி அ ஒடுசிவணும். "என்ற செய்யுட்கட்டிரிபுகூறுபவாகலானும் அதுசொல்லினார்.

அவற்றுள்வழிமருங்கிற்சாரியைவருமே.

என்னின். சாரியைவருமிடங் கூறுதனுதலிற்று. அப்பெயர்களின்பின் ஞகிய விடத்தினகணணே சாரியைவரும். எ - று. ஆடூஉ வின்கை, மகடூஉ வின்கை, பலவற்றுக்கோடு எனவரும். [கரு]

அவைதாம் - இன்னேவற்றேயத்தேயம்மே - யொன்னேயானே யக்கேயிக்கே - யன்னென்கிளவியுளப்படப்பிறவு - மன்னவென் பசாரியைமொழியே.

என்னின். சாரியைகட்குப்பெயருமுறையுந் தொகையுமுணரற்று. மேற் சாரியையென்னப்பட்டவைதாம் இன்னும் - வற்றும், அத்தும், அம்மும், ஒன் னும், ஆனும், அக்கும், இக்கும், அன்னென்னுஞ் சொல்லுமாகிய வவ்வொன் பது முளப்படப்பிறவும் அச்சாரியையாந்தன்மையவென்று சொல்லுவர். சா ரியையாகியமொழிகளே எ - று. பிறவுமென்பதனல், தம், நம், நும், எம், கெழு, ஏ, ஐ, ஞான்று, என்பன கொள்க, எடுத்தநறவின்குலேயலங்காந்தள் என் புழி அலமென்பதோர்சாரியை புமுண்டாலெனின்;— அதனை அலங்குகாந்தளெ ன்பதன்விகாரமென்ப. இன்சாரியை வழக்குப்பயிற்சியானும், நூலுட்பலகாலு மெடுத்தோதப்படலானும், வாளாவோதியவழி, தானேசேறலானுமுன்வைக் கப்பட்டது. அன் சாரியையும் அதுபோலச்சிறப்புண்டமையிற் பின்வைக்கப்பட் டது. இடைநின்றவற்றியல்பு மறிந்துகொள்க. [கஎ]

அவற்றுள் - இன்னினிகரமாவினிறுதி-
முன்னர்கெடுதலுரித்துமாகும்.

என்னின். அவற்றுளின்சாரியை முதறிரியுமாறு கூறுதனுதலிற்று. மே ற்கூறப்பட்ட சாரியைகளுள், இன்சாரியையினதிகாரம் ஆவென்னுஞ்சொல்லீ ற்று முன்னர்க்கெடாமையேயன்றி, கெடுதலுமுரித்தாம். எ - று. ஆனே, ஆவி னே, ஆன்கோடு. ஆவின் கோடு எனவரும். முன்னரென்றதனன், மாவென்னு ஞ்சொல்லின்முன்னு மவ்விருவிதியுமெய்தும். மானே, மாவினே, மான்கோடு, மாவின்கோடு, எனவரும். [க அ]

அளவாகுமொழிமுதனிலேஇயவுயிர்மிசை-
னஃகான்றஃகானுகியநிலேத்தே.

என்னின். இன்னிறுதிதிரியுமாறுணரற்று. அளபுப்பெயராகுமொழி முத ற்கண், நிலேபெற்ற வுயிர்க்குமேலாய் நின்றவின்சாரியைபதனகரம் றகாரமாகி யநிலேமைத்து. எ - று. உ - ம். பதிற்றகல், பதிற்றுழக்கு, என்புழியவவாறுவரு தலறிக, நிலேத்தென்றதனல், பிறவழியும் இன்னினகரம் றகரமாதல்கொள்க பதிற்ரென்று, பதிற்றேழு எனவரும். [கக]

வஃகான்மெய்கெடச்சுட்டுமுதலேமுன்
அஃகானிற்றலாகியபண்பே.

என்னின். வற்றுமுதறிரியுமாறுணரற்று. சுட்டெழுத்திணே முதலாகவு டைய வைகாரவீற்றுச்சொன்முன்னர், வற்றுச்சாரியை தன்வகரமாகியமெய் கெட, அகரநிற்றலாகிய பண்பினையுடைய. எ - று. அவையற்றை, இவ்வயற் றை, உவையற்றை, எனவும், அவையற்றுக்கோடு, எனவும் வரும். ஆகியபண் பென்றதனல், சுட்டுமுதலாகிய வையெனிறுதி ஐகாரத்தோடு நில்லாதவழி, வற்றின்வகரம், அகரம் நிற்கக்; கெடாதுவற்றுயே நிற்றல்கொள்க. மற்றி து, திரிந்ததன்றிரிபு, பிறிதென்னும் நயத்தாற்கெடாதேநிற்கு மாகலின், இ துகூறவேண்டாவெனின் ;— சுட்டுமுதலேயீற்றுச்சொல்லினமுன்னெனவோ தாது, சுட்டுமுதலேம் முன்னெனவச்சொன்முன் எல்லாம்கெடுவதுபோலவோ தினமையின், வேண்டிற்றென்பது. [உ0]

### னஃகான்றஃகானுன்கனுருபிற்கு.

என்னின். னகரவீற்றுச்சாரியை நான்கற்குமீறுதிரிபுகூறுதனுதலிற்று. னகாரவீற்றுச்சாரியை யெல்லாம் நான்காமுருபிற்கு, னகாரம் றகாரமாம். எ - று. விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு, எனவரும் [உக]

### ஆனினகரமுமதனோரற்றே, நாண்முன்வருஉம்வன்முதற்றொழிற்கே.

என்னின். ஆன்சாரியை பொருட்புணர்ச்சிக்கணீறு திரியுமாறுணரற்று. நாட்பெயர்முன்னர்வரும் வல்லெழுத்தை முதலாகவுடைய வினைச்சொற்கண் வரும் ஆன் சாரியையினகரமும் அந்நான்கனுருபின்கண் வருமான்சாரியை யோடொருதன்மைத்தாய், னகாரம்றகாரமாம் எ - று. தொழிற்கென்பதனைத் தொழிற்கண் ஆனினகரமெனமயக்கமாகக்கொள்க. உ - ம். பரணியாற் கொண்டான் - எனவரும். உம்மையை இரட்டுறமொழிதலானே எதிரது தழீஇயதாக்கி, அதனுன் நாளல்லவற்று முன்வரும் வனமுதற்றொழிற்கண் இன்னினகரமும் றகாரமாய்த்திரிதல் கொள்க. ᵒபிற்கொண்டான் எனவரும். தொழிற்கண் இன்னினகரம் திரியுமென, ( ்கணின்னின்கரம் திரிதலும் திரியாமையுமுடையவென்பது ஞாபகந்தா ள்ளப்படும், பறம்பிற்பாரி, வண்டின்கால். எனவரும். [உஉ]

### அத்தினகரமகரமுனையில்லை.

என்னின். இஃது அத்துமுதறிரியுமாறுணரற்று. அத்துச்சாரியையின கரம் அகரவீற்றுச்சொன்முன்னரில்லையாகும். எ - று. மகத்துக்கைஎனவ ரும். [உ௩]

### இக்கினிகரமிகரமுனையற்றே.

என்னின். இஃது இக்குச்சாரியை முதறிரியுமாறுணரற்று. இக்குச்சாரி யையினதிகரம இகரவீற்றுச்சொன்முன்னர், மேற்கூறியவாறுபோலக் கெடும் எ - று. ஆடிக்குக்கொண்டான் எனவரும். [உச]

### ஐயின்முன்னருமவ்வியனிலையும்.

என்னின். இதுவுமது. இக்கினிகரம் இகரவீற்றுச்சொன் முன்னன்றி, ஐகாரவீற்றுச்சொன்முன்னரும், மேற்கூறப்பட்ட கெடுதலியல்பிலேநிற்கும். எ - று. சித்திரைக்குக்கொண்டான் எனவரும். [உரு]

### எப்பெயர்முன்னரும்வல்லெழுத்துவருவழி-யக்கினிறுதிமெய்ம்மி சையொடுங்கெடுமே - குற்றியலுகரமுற்றத்தோன்றாது.

என்னின். அக்கிறுதிரியுமாறுணரற்று. எவ்வகைப்பட்டபெயர்முன்னுந் தாம்வருமிடத்து அக்கினிறுதிக் குற்றியலுகரம் முடியத்தோன்றாது: அதனைற் பற்றப்பட்ட வல்லெழுத்தாகியமெய் தனக்குமேனின்ற மெய்யோடுங்கெடும். எ - று. தமிழக்கூத்து, தமிழநூல், தமிழயாழ், தமிழவெழுத்துஎனவரும். உசு

### அம்மினிறுதிகசதக்காலைத் - தன்மெய்திரிந்துஙஞநவாகும்.

என்னின். அம்மீறுதிரியுமாறுணரற்று. அம்மிறுதியாகிய மகரவொற்று கசதக்கள்வருமொழியாய்வந்தகாலத்துத் தன்வடிவுதிரிந்து, ஙஞநக்களாம். எ - று. புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல், எனவரும். தன்மெய்யென்றதனுல், அம்மினிறுதிமகரமேயன்றி, * தம், நம், நும், உம், என்பனவற்றினிறுதிமகரமும் திரியுமென்பதுகொள்க. எல்லார்தங்கையும் எல்லாநங்கையும், எல்லீர்நுங்கையும், வானவரிவில்லுந் திங்களும் எனவரும். [உஎ]

---

* "முன்னும்பின்னுஞ் சாரியைப் பேறுகூறுவார் சாரியைபெறாது விகாரப்படுமொழிகளை இச்சூத்திரத்தாற்சேன்ற இடையேகூறியது இப்பொதுப் பெயர்களை இங்ஙனம், தம், நம், நும், என்க்கூறியசாரியை இடைச்சொல்லுமாயினவென உய்த்துணர்தற்கென்க. என்பது நன்னூல்விருத்தி. சூ. உசஎ.

**மெல்லெழுத்தியையி னிறுதியொ டுறழும்**

**மென்மையுமிடைமையும்வரூஉங்காலை**
**யின்மைவேண்டுமென்மனார்புலவர்.**

என்னின். இதுவும்மது. அம்மினிறுதி மென்மையுமிடைமையும் வருமொழியாய்வருங்காலத்து, இன்றி முடிதலைவேண்டுமென்று சொல்லுவர் புலவர். எ - று. புளியஞெரி, நுனி, முரி, யாழ், வட்டு, எனவரும். உணாயிற்கோடலென்பதனால், புளியவிலை எனவும் உயிர்வருவழிக்கேடுங்கொள்க. [௨௮]

**இன்னெனவரூஉம்வேற்றுமையுருபிற் -**
**கின்னென்சாரியையின்மைவேண்டும்.**

என்னின். இன்சாரியை முழுவதூஉங் கெடுமிடமுணரற்று. இன்னென்றுசொல்ல வருகின்றவேற்றுமையுருபிற்கு,இன்னென்னுஞ் சாரியைதான் இன்றிமுடிதல்வேண்டும். எ - று. விளவின், பலாவின், எனவரும். "அவற்றுள், இன்னி னிகரம்" என்றதன் பின்வையாததனால், சிறுபான்மை இன்சாரியை கெடாதுநிற்றல்கொள்க. பாம்பினிற்கடிதுதேள் எனவரும். [௨௯]

**பெயருந்தொழிலும்பிரிந்தொருங்கிசைப்ப - வேற்றுமையுருபுநிலைபெறுவழியுந் - தோற்றம்வேண்டாத்தொகுதிக்கண்ணு மொட்டுதற்கொழுகியவழக்கொடுசிவணிச் - சொற்சிதர்மருங்கின்வழிவந்துவிளங்கா - தை யஞ்சாரியையியற்கை - யுடைமையுமின்மையுமொடுவயினொக்கும்.**

என்னின். சாரியைகட்கெல்லாம் பொதுவாய தோரிலக்கணமுணரற்று. பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாய்ப்பிரிந்தும், பெயரும்பெயருமாய்க்கூடியுமிசைப்ப, வேற்றுமையுருபு தொகாதுநிலைபெற்றவிடத்தினும், அவைதோற்றுதல் வேண்டாத்தொகுதிக்கண்ணும், தாம்தாம்பொருந்துதற்கேற்பநடந்தவழக்கோடுபொருந்தி, சாரியைபெறும்புணர்மொழிகளைப் பிரித்துக்காணுமிடத்து, அவற்றின்பின்வந்து விளங்காது, அவற்றிடையே நின்று நடக்கும் சாரியையினியல்பு. அவைதாம் உண்டாதலும் இல்லையாதலுமொடு வுருபினிடத்தொக்கும். எ - று. விளவினைக்குறைத்தான், விளவினைக்குறைத்தவன். எனவரும். நிலாத்துக்கொண்டான், நிலாத்துக்கொண்டவன், எனவரும். ஒட்டுதற்கொழுகியவழக்கன்மையின் நிலாக்கதிர் - நிலாமுற்றம் எனபன சாரியைபெறுவாயின. எல்லாநம்மையும் எனச்சாரியை ஈற்றின் கண்ணும் வருதலின், இடைநின்றியறல் பெரும்பான்மையெனக்கொள்க. பூவினொடுவிரிந்தகூந்தலெனவும். பூவொடுவிரிந்தகூந்தலெனவும். உடைமையும் இன்மையுமொடுவயினொத்தவாறு. இயற்கையென்றதனான் ஒடுவுருபின்கட்சாரியைபெறுதலும் பெறுமையுமொழிய, ஓரோவழிப்பெற்றேவருமென்பது கொள்க. பலவற்றோடு எனவரும். [௩௰]

**அத்தேவற்றேயாயிருமொழிமே - லொற்றுமெய்கெடுத றெற்றென்றற்றே - யவற்றுமுன்வரூஉம்வல்லெழுத்துமிகுமே.**

என்னின். அத்தும்வற்றும் வருமிடத்து நிலைமொழியினும் வருமொழியினும் வருஞ்செய்கை கூறுதனுதலிற்று. அத்தும்வற்றுமாகிய அவ்விருமொழிமேனின்றவெழுத்து தன்வடிவுகெடுதல் தெளியப்பட்டது. அவ்விருசாரியை முன்னும்வரும் வல்லெழுத்துமிகும். எ - று. கலத்துக்குறை, அவற்றுக்கோடு, எனவரும். கலனென னகாரமாக நிறுத்திக்கெடுக்கவே, ஒன்றினமுடித்த லென்பதனால், புள்ளியீறல்வழி விகாரவகையானின்றனவும், அவற்றின்மிசையொற்றென்று கெடுக்கப்படுமெனக்கொள்க. அவற்றுக்கோடு, எனவரும். இஃதைகாரவீறு. ஈண்டுவல்லெழுத்துமிகுமென்றது ஈற்றுவல்லெழுத்தின்றித்

திரிந்துமுடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் எனவிவற்றை நோக்கி யெனவுணர்க. அத்துமுற்கூறிய முறையன்றிய கூற்றினன், அத்தின் மிசை யொற்றுக்கெடாதுநிற்கவும்பெறும். விண்ணத்துக்கொட்கும்; வெயிலத்துச்சென்முன்; இருளத்துக்கொண்டான் எனவரும். மெய்யென்றதனுல், அத்தினகரம் பிறவுயிரின்முன்னுங் கெடுதல்கொள்க. அண்ணுத்தேரி எனவரும். தெற்றென்றதனுல், அத்தினகரம்கெடாது நிற்றலுங்கொள்க. விளவத்துக்கண் எனவரும். [௩௧]

## காரமுங்கரமுங்கானெடுஞ்சிவணி - நேரத்தோன்றுமெழுத்தின்சாரியை.

என்னின். எழுத்துச்சாரியைகட்குப் பெயருமுறையுந்தொகையுமுணரற்று. காரமுங்கரமுங் கானெடுபொருந்தி, எல்லாவாசிரியராலும் உடன்படத்தோன்றும். எழுத்துச்சாரியையாதற்கு எ - று. நேரத்தோன்றுமென்றதனுன், நேரத்தோன்ருதன. ஆனம், ஓனம், எனவிவை. [௩௨]

## அவற்றுட்-கரமுங்கானுநெட்டெழுத்திலவே.

என்னின். அவற்றுட்சாரியை யைச்சிலவெழுத்தோடு வாராவெனவெய்தியதுவிலககுத னுதலிற்று. மேற்சொல்லப்பட்ட வற்றுட்கரமும்கானும் நெட்டெழுத்திற்கில. காரம்நெட்டெழுத்திற்குண்டு எ - று. ஆகாரம், ஈகாரம், எனவரும். [௩௩]

## வரன்முறைமூன்றுங்குற்றெழுத்துடைய.

என்னின. நெட்டெழுத்திற்குச்சிலசாரியை விலக்கினமையிற் குற்றெத்திற்குஞ் சிலவிலக்குவதுண்டு கொலென் னுமையந்தீர்த்தனுதலிற்று. லாற்று முறைமையுடைய மூன்றுசாரியையும குற்றெழுத்துடைய. எ - று. அகாரம், அகரம். அஃகான, எனவரும். வரன்முறையென்றதனுன், அஃகானென்புழியாய்தமிக்கு முடியுமென்பதுகொள்க. [௩௪]

## ஐகாரஔகாரங்கானெடுந்தோன்றும்.

என்னின். அவற்றுட்காரமுங்கானு மென்பதற்கோர்புறனடையுணரற்று. நெட்டெழுத்துக்களில், ஐகாரமும் ஔகாரமும் முன்விலக்கப்பட்ட கானெடுதோன்றும். எ - று. ஐகான், ஔகான். எனவரும். [௩௫]

## புள்ளியீற்றுமுனுயிர்தனித்தியலாது - மெய்யொடுஞ்சிவணுமவ்வியல்கெடுத்தே.

என்னின். உயிர்முதன்மொழி புள்ளியீற்றுமுன்வருங் காற்பிறப்பதோர் கருவிகூறுதனுதலிற்று. புள்ளியீற்றுச்சொன்முன், உயிர்தனித்து நடவாது. அப்புள்ளியோடு கூடுந்தான தனிநின்றவவ்வியல்பினைக்கெடுத்து எ - று. ஆல், அடை, ஆலடை, எனவரும். ஒன்றினமுடித்தலென்பதனுல், இயல்பலாதபுள்ளி முன்னுயிர்வந்தாலும் இவ்விதிகொள்க. அதனை, நாடுரி எனவரும். புள்ளியீற்றுமுன்னுமென, தொகுத்துநின்ற வும்மையைவிரித்ததனுனே குற்றியலுகரத்தின் முன்னுமிவ்விதிகொள்க. நாகரிது எனவரும். [௩௬]

## மெய்யுயிர்நீங்கிற்றன்னுருவாகும்.

என்னின். புணர்ச்சியிடத்துயிர்மெய் உயிர்நீங்கிய வழிப்படுவதோர் விதி கூறுதனுதலிற்று. மெய் தன்னெடுகூடிய வுயிர்ப்புணர்ச்சியிடத்து நீங்கியவழி, தன்புள்ளி வடிவுபெறும் எ - று. அதன், ஐ, எனவரும். [௩௭]

எல்லாமொழிக்குமுயிர்வருவழியே -

யுடம்படுமெய்யினுருபுகொளல்வரையார்.

என்னின். உயிரீறு உயிர்முதன்மொழியோடு புணரும்வழி நிகழ்வதோர் கருவிகூறுதனுதலிற்று. மூவகைப்பட்டமொழிக்கும், உயிர்முதன்மொழி வருமிடத்திடையுடம்படுமெய்வடிவு கோடலைநீக்கார். எ - று. புளியங்கோடு, எருவங்குழி, விளவத்துக்கொட்கும், எனவரும். உரையிற்கோடலென்பதனால், * உடம்படுமெய்யாவன யகரமும் வகரமுமெனக்கொள்க. இகரவீறும் ஈகாரவீறும் ஐகாரவீறும் யகரவுடம்படுமெய்கொள்வன. அல்லனவெல்லாம வகரமெய்யெனக்கொள்க. ஒன்றினமுடித்தலென்பதனை, விகாரப்பட்டமொழிக்கண்ணுமுடம்படுமெய்கொள்க. மரவடி, ஆயிருதிணை, எனவரும். வரையாரென்றதனால், உடம்படுமெய்கோடல் ஒருதலையன்றென்பது கொள்ளப்படும். கிளி அரிது மூங்கா இல்லை எனவரும. [௩௮]

எழுத்தோரன்னபொருடெரிபுணர்ச்சி-

யிசையிற்றிரிதனிலை இயபண்பே.

என்னின். எழுத்துக்கள் ஒன்றுபலவாதல்கூறுதனுதலிற்று. எழுத்தொருதன்மையானபொருள்விளங்கிநிற்கும்புணர்மொழிகள் ஓசைவேற்றுமையால், புணர்ச்சிவேறுபடுதனிலைபெற்றபண்பு. எ - று. செம்பொனபதினைருடி, குன்றேருமா எனவரும. [௩௯]

அவைதாம் - முன்னப்பொருளபுணர்ச்சிவாயி -

னின்னவென்னுமெழுத்துக்கடனிலவே,

என்னின். மேலதற்கோர்புறனடை கூறுதனுதலிற்று. மேற்சொல்லிய புணர்மொழிகள்தாம் முன்னத்தினுணரும் பொருண்மையையுடைய; அவை புணர்ச்சியிடத்தித்தன்மையவெனனு மெழுத்துமுறைமையுடையவல்ல. எ-று. செம்பொன்பதினைருடி எனறவழி, பொன்னாராய்ச்சியுள்வழிபொன்னெனவும், செமபாராய்ச்சியுள்வழிச் செம்பெனவுங் குறிப்பாலுணரப்பட்டது. மற்றிதன்மேல் "இசையிற் றிரிதனிலைதலெனவறியுமாறு கூறினனன்றேவெனின்;—ஓசையெனறமையான, அஃது † ஒலியெழுத்திற்கெனவும், இன்னவென்னுமெழுத்துக் கடனிலவென்றதனன், இதுவரிவடிவிற்கெனவுங்கொள்க. [௪0]

நான்காவது புணரியல் முற்றிற்று.

---

* உடம்படு மெய் இவையென்பதும் அம்மெய்தோன்றற்கிலக்கணமும் பின்வருஞ் சூத்திரங்களானுணர்க.

(க) "உடம்படுமெய்யே யகாரம் வகாரம், உயிர்முதன்மொழிவருஉங்காலை யான. (உ) இறுதியுமுதலுமுயிர் நிலைபெறினே-யுறுமெனமொழிப வுடம்படுமெய்யே"

† ஒலியெழுத்திற்கும் வரிவடிவெழுத்திற்கும் இலக்கணம் பின்வருஞ்சூத்திரங்களானுணர்க. (க) "இசைப்படுபுள்ளினெழா அல்போலச்-செவிப்புலனுவ தொலியெழுத்தாகும். (உ) கட்புலனில்லாக் கடவுளைக்காட்டுஞ்-சட்டகமபோலச் செவிப்புலவொலியை-யுட்கொளற்கிடுமுருபாம்வடிவெழுத்தே"

# ஐந்தாவது தொகைமரபு.

**கசதபமுதலியமொழிமேற்றோன்று - மெல்லெழுத்தியற்கை சொல்லியமுறையான் - ஞ ஞ ந ம வென்னுமொழறுகும்மே-யன்னமரபின்மொழிவயினான.**

என்பது சூத்திரம். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின்;—மேல் அகத்தோத்தினுள், இருபத்துநான்கீற்றினுந்தொக்கு முடிவனவற்றையெல்லாந் தொக்குமுடித்தலிற் றொகைமரபெனபபட்டது. மேல் புணரியலுட்கூறியகருவிகளாற் செய்கைகூறும்வழி, தொக்குப்புணருஞ் செய்கைகூறலிற் புணரியலோடியை புடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திரம என்னுதலிற்றோவெனின்;—அல்வழியும் வேற்றுமையுமாகிய விருவழிக்கண்ணும, உயிர்மயங்கியலையும், புள்ளிமயங்கியலையும், நோக்கியதோர் வழிமொழிக்கருவி கூறுதனுதலிற்று. உயிரீற்றினும், புள்ளியீற்றினும், இருவழியுங் க ச த பக்களைமுதலாகவுடைய மொழிகளின்மேற்றோன்று மெல்லெழுத்தினது இயல்புகூறி மெல்லெழுத்து மேற்சொல்லுமுறைமையான, க ச த பக்களுக்கு நிரனிறைவகையானே ஞ ஞ ந ம வென்னுமொற்றுகும். அத் ...த்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து எ - று. விளங்கோடு, மசுதிள், தோல், பூ, எனவரும். தோன்றுமென்றதனால், தோன்றிநின்றனவும் அவ்வாறேதிரிந்துமெல்லெழுத்தாமென்பது. மரங்குறிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். அன்னமரபினமொழி, அன்மையின், விளக்குறுமை எனபுழி மெல்லெழுந்துமிகாதாயிற்று. [க]

**ஞ ந ம ய வ வெனுமுதலாகுமொழியு - முயிர்முதலாகியமொழியு முளப்பட - வன்றியனைத்துமெல்லாவழியு - நின்றசொன் முனியல்பாகும்மே.**

என்னின். இருபத்துநான்கீற்றின்முன்னும், வன்கணமொழிந்த கணங்கட்கு இருவழியும் வருமொழிமுடிபு கூறுதனுதலிற்று. ஞ ந ம ய வ வென்று சொல்லப்படு முதலெழுத்துளவாகுமொழியும், உயிர்முதலாகிய மொழியுமாக, அவ்வனைத்துமொழியும் அல்வழியும் வேற்றுமையுமாகிய வெல்லாவிடத்தும், இருபத்துநான்கிற்றுப்பெயராகிய நிலைமொழியின்முன்னர், இயல்பாகிமுடியும். எ - று. ஈண்டு, உளப்படவென்பது ஆகவென்னும பொருண்மைத்து. உ-ம். விள, தாழ், எனநிறுத்தி, ஞான்றது. நீண்டது, மாண்டது, யாது, வலிது, அடைந்தது, ஆடிற்று, இடிந்தது, ஈறிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒடிந்தது, ஓடிற்று, ஔவியத்தது, நுந்தையது, எனவும். ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலுமை, அடைவு, ஆட்டம் இடிபு, ஈட்டம், உடைபு, ஊற்றம், எழு, ஏணி, ஐயம், ஒடுக்கம், ஓக்கம், ஔவியம், நுந்தை, எனவுமொட்டிக்கொள்க. எல்லாமென்றதனான், ஒற்றிரட்டலும், உடம்படுமெய்கோடலும், உயிரோறமுடிதலுமெனவரும். இககருவித்திரிபு திரிபெனப்படா எனக்கொள்க. இஃது இருபத்துநான்கீற்றிற்கும், அல்வழியினும், வேற்றுமையினும், அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை, ஈண்டு ஒரு சூத்திரத்தாற் றொகுத்து முடித்ததாயிற்று. மேலும் இவ்வாறேதொகுத்து முடிக்கின்றவாறறிக. [உ]

**அவற்றுள் - மெல்லெழுத்தியற்கையுறழினும்வரையார் - சொல்லியதொடர்மொழியிறுதியான.**

என்னின். மேற்கூறிய முடிபிற்சிலவற்றிற்கு, அம்முடிபுவிலக்கிப் பிறிதுவிதியெய்துவித்தனுதலிற்று. மேற்சொல்லப்பட்ட மூன்றுகணத்தினும், மெ

ல்லெழுத்தின தியல்பு இயல்பாதலேயன்றி, உறழ்ந்துமுடியினுநீக்கார். சொல்லபபட்ட தொடர்மொழியீற்றினகண் எ - று. உ - ம. கதிர் ஞெரி, கதிர்ஞ் ஞெரி, நுனி, முரி, எனவரும். வருமொழிமுதற்கூறியவதனால், ஓரொழுத்தொருமொழியுள்ளும, ஈரொழுத்தொருமொழியுள்ளுஞ் சிலவற்றிற்கு உறழ்ச்சிமுடிபுகொள்க. பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி, எனவரும். காய்ஞெரி, காய்ஞ் ஞெரி, நுனி, முரி, எனவும்வரும். சொல்லியவென்றதனால், ஓரெழுத்தொருமொழியுள்ளுஞ் சிலவற்றிற்கு மிக்குமுடிதல்கொள்க, கைஞ்ஞெரிந்தார், நீட்டினார், முறித்தார், எனவரும. ,[௩]

ணனவென்புளளிமுன்யாவுஞாவும் -
வினையோரனையவென்மனார்புலவர்.

என்னின். யகர ஞகரங்கள்முதலாம்வழி நிகழ்வதோர்கருவிகூறுதனுதலிற்று. ணனவெனறு சொல்லபபடும் புள்ளிகளினமுன, யாவும் ஞாவும் வினைச்சொற்கண முதலாதற்கொருதனமையவெனறு சொல்லுவர். ஆசிரியர் எ - று. மண்யாத்த எனவும, பொனயாத்த எனவும, மண்ஞாந்த எனவும், பொனஞாத்த எனவும, வரும். ஞாமுற்கூறுது, யாமுற்கூறியவத்னை, யாமுதனமொழிககண், ஞாவருமென்றுகொள்க. [௪]

மொழிமுதலாகுமெல்லாவெழுத்தும் -
வருவழிநின்றவாயிருபுளளியும -
வேற்றுமையல்வழிததிரிபிட்னிலவே.

என்னின். ணகாரவீற்றிற்கும் னகாரவீற்றிற்கும் அல்வழிக்கண் நிலைமொழிமுடிபு கூறுதனுதலிற்று. மொழிக்குமுதலாமெனறு சொல்லப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் வருமிடத்து, மேற்சொல்லினின்ற ணனக்களாகிய அவ்விருபுள்ளியும வேற்றுமையல்லாத வல்வழியிடத்துத் திரியுமிடமில. எ-று. மண், பொன எனநிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது, எனவனகணத்தோடொட்டுக. பிறகணத்துக்கண்ணும் அவ்வாறேயொட்டுக. வருமொழிமுதற்கூறியவதனால், ணகாரத்திற்கு, சிறுபானமை திரிபுண்டென்க்கொள்க. சாட்கோல், எனவரும். [௫]

வேற்றுமைக்கண்ணும்வல்லெழுத்தல்வழி
மேற்கூறியற்கையாவயினை.

எனனின். இஃது அவ்விரண்டீற்றிற்கும் வேற்றுமைக்கண் நிலைமொழிமுடிபுகூறுதனுதலிற்று. வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணும, வல்லெழுத்தல்லாத விடத்து, மேற்கூறிய வியல்புமுடிபாம. அவ்விரண்டுபுள்ளியிடத்தும் எ - று. மண், பொன் எனநிறுத்தி, ஞாற்சி, நீட்சி, என்ன வனகணம் ஒழித்தெல்லாவற்றோடுமொட்டுக. [௬]

ல்னவெனவரூஉம்புள்ளிமுன்னர்த் -
தநவெனவரிற்றனவாகும்மே.

என்னின். புள்ளிமயங்கியலைநோக்கியதோர் வழிமொழிக்கருவிகூறுதனுதலிற்று. லனவென்றுசொல்லவருகின்ற புள்ளிகளினமுன்னர், தநவென வருமொழிவரின், அத்தகரநகரங்கள் நிரனிறையானே றகரனகரங்களாம். எ - று. உ - ம். கஃறீது, கன்னன்று, பொனறீது, பொன்னன்று, எனவரும். .[௭]

**ணளவென்புள்ளிமுன் டணவெனத்தோன்றும்.**

என்னின். இதுவுமது. ணளவென்னும் புள்ளிகளின்முன்னர், அதிகாரத்தினால் தகாரநகாரங்கள்வரின், அவை நிரனிறையால், டகார ணகாரங்களாய்த்தோன்றும். எ - று. மண்டீது, மண்ணன்று, முஃடீது, முண்ணன்று என வரும். [௮]

*** உயிரீறாகியமுன்னிலைக்கிளவியும் - புள்ளியிறுதிமுன்னிலைக்கிளவியு - மியல்பாகுனவுமுறழ்பாகுனவுமென் - றாயீரியலவல்லெழுத்துவரினே.**

என்னின். முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண்முடியுமாறுணர்த்துற்று. உயிரீறாகிய முன்னிலைச்சொற்களும் புள்ளியிறுதியையுடைய முன்னிலைச்சொற்களும் வல்லெழுத்துமுதன்மொழிவரின், இயல்பாவனவும் உறழ்ச்சியாவனவுமென, அவ்விரண்டியல்பினையுடைய. எ - று. உயிரீறு புள்ளியீறு என்றமையான், முன்னிலைவினைச்சொல் எனப்படுகொள்க. உ - ம். எறிகொற்றா, கொணகொற்றா, சாத்தா, தேவா, பூதா, எனவரும். உண்கொற்றா, தின்கொற்றா, எனவும் இவையியல்பு, நடகொற்றா, நடக்கொற்றா, எனவும். ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா, எனவும், இவை உறழ்ச்சி. [௯]

**ஔவெனவரூஉமுயிரிறுசொல்லும் - ஞ ந ம வ வென்னும்புள்ளியிறுதியுங் - குற்றியலுகரத்திறுதியுமுளப்பட - முற்றத்தோன்றா முன்னிலைமொழிக்கே.**

என்னின். மேன்முடிபுகூறியவற்றுட் சிலவற்றிற்கு அம்முடிபுவிலக்குதனுதலிற்று. ஔவென வருகின்ற உயிரீற்றுச்சொல்லும், ஞ ந ம வ வென்று சொல்லப்படும் புள்ளியீற்றுச்சொல்லும், குற்றியலுகரமாகிய விறுதியையுடைய சொல்லுமாகவிவை முன்னிலைமொழிக்குக் கூறியவியல்பும் உறழ்வுமாகிய முடிவிற்குமுற்றத்தோன்றா. எ - று. முற்றவென்றதனால், ஈண்டுவிலக்கப்பட்டவற்றுட் குற்றியலுகரவீறொழித்து, ஒழிந்தனவெல்லாம் நிலைமொழியுகரம்பெற்று, வருமொழி வல்லெழுத்துறழ்ந்துமுடிதலும், குற்றியலுகரவீறு வருமொழிவல்லெழுத்துமிக்குமுடிதலுங்கொள்க. கௌவுகொற்றா, கௌவுக்கொற்றா, உரிஞுகொற்றா, உரிஞுக்கொற்றா, பொருநுகொற்றா, பொருநுக்கொற்றா, திருமுகொற்றா, திருமுக்கொற்றா, தெவ்வுகொற்றா, தெவ்வுக்கொற்றா, எனவும். கூடுகொற்றா, கூடுக்கொற்றா, எனவும்வரும. [௰]

**உயிரீறாகியவுயர்திணைப்பெயரும் - புள்ளியிறுதியுயர்திணைப்பெயரு - மெல்லாவழியுமியல்பெனமொழிப.**

என்னின். உயர்திணைப்பெயர் நான்குகணத்துக்கண்ணும், இருவழியுமுடியுமாறுணர்த்துற்று. உயிரீறாகிய வுயர்திணைப்பெயர்களும் புள்ளியிறுதியையுடைய வுயர்திணைப்பெயர்களும் நான்குகணத்தினும், அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லாவிடத்தும், இயல்பாமென்றுசொல்லுவர். எ - று. உ - ம். நம்பி எனவும், அவன் எனவும் நிறுத்தி, அல்வழிக்கண், குறியன், சிறியன், தீயன், பெரியன், எனவும், ஞான்றான், நீண்டான், மாண்டான், எனவும், யாவன், வலியன் எனவும், அடைந்தான், ஔவியத்தான், எனவும், வேற்றுமைக் கண், கை, செவி, தலை, புறம், ஞாற்சி, நீட்சி, மாட்சி, எனவும், யாப்பு, வலு

---

* "இவை முன்னின்றான்றொழிலுணர்த்துவனவும், அவ்வினைத்தொழிற்படுத்துவனவும் என்விருவகைய. இ ஐ ஆய் முதலியன தொழிலுணர்த்துவன. டவாமுதலிய உயிரீறும் புள்ளியீறும் தொழிற்படுத்துவன" என்பது நச்சினார்க்கினியம். இவற்றான்முன்னிலைவினைக்கும் ஏவல்வினைக்கும் வேறுபாடுணர்க

மை, எனவும், அடைப்பு, ஓவியம், எனவும், ஒட்டுக, ஒருவென், எனநிறுத்தி, குறியென், சிறியென், எனவும், கை, செவி, தலை, புறம், எனவும், தன்மைப்பெயர்க்கண்ணுமொட்டுக, உயிரீறுபுள்ளியிறுதி என்றதனால், உயர்திணைப்பெயருள் இயல்பன்றி முடிவனவெல்லாங்கொள்க. * பல்சான்றார், கபிலபரணர், இறைவநெடுவேட்டுவர், மருத்துவமாணி, பல்லரசர், என இவை ஈறுகெட்டுமுடிந்தன. கோலிகக்கருவி, வண்ணாரப்பெண்டிர், ஆசீவகப்பள்ளி, என இவை ஈறுகெட்டு வல்லெழுத்துமிக்கன. குமரகோட்டம், குமரக்கோட்டம், பிரமகோட்டம், பிரமக்கோட்டம், என இவை ஈறுகெட்டு வல்லெழுத்துறழ்ந்துமுடிந்தன. பிறவுமன்ன, எல்லாமென்றதனால், உயர்திணைச்சொல் இயல்பாயுந்திரிந்தும்முடிவனகொள்க. உண்பசான்றார், உண்டார்சான்றார், உண்பேன்பார்ப்பேன, என இவை இயல்பு. உண்டேஞ்சான்றேம், உண்டேநாம், என இவை திரிந்தன. பிறவுமன்ன. [௧௧]

## அவற்றுள் - இகரவீற்றுப்பெயர்திரிபிடனுடைத்தே.

என்னின். உயர்திணைப்பெயருட் சிலவற்றிற்கெய்தாத தெய்துவித்தனுதலிற்று. மேற்சொல்லப்பட்ட வுயர்திணைப்பெயருள், இகரமாகிய விறுதியையுடையபெயர் திரிந்துமுடியுமிடமுடைத்து. எ - று. உரையிற்கோடலென்பதனான், இதுமிக்கதிரிபென்பதுகொள்ளப்படும். உ - ம். எட்டிப்பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு நம்பிப்பூ, நம்பிப்பேறு, எனவரும். இடனுடைத்து என்பதனான், இகரவீறன்றிப்பிறவீறும் ஈறுதிரியாது, வல்லெழுத்துமிக்குவருவன ஈண்டுக்கொள்க. திணைப்பூ, திணைப்புறவு, எனவரும். [௧௨]

## அஃறிணைவிரவுப்பெயரியல்புமாருளவே:

என்னின். விரவுப்பெயர்முடிபு கூறுதனுதலிற்று. உயர்திணையோடஃறிணைவிரவும் விரவுப்பெயர் இயல்பாய்முடிவனவுமுள. இயல்பின்றிமுடிவனவுமுள. எ - று. இயல்பின்றிமுடிவன இன்னவாறுமுடியுமென, மேலகத்தோத்தினுட்கூறப்படும். உ - ம். சாத்தன்குறியன், சாத்தன்குறிது, எனவும். சாத்தன்கை, எனவும். இவ்வாறு அல்வழியினும் வேற்றுமையினும் நான்குகணத்தோடு மொட்டிக்கொள்க. [௧௩]

## புள்ளியிறுதியுமுயிரிறுகிளவியும் - வல்லெழுத்துமிகுதிசொல்லியமுறையாற் -றம்மினாகியதொழிற்சொன்முன்வரின் - மெய்ம்மையாகலுமுறழத்தோன்றலு - மம்முறையிரண்டுமுரியவையுளவே- வேற்றுமைமருங்கிற்போற்றல்வேண்டும்.

என்னின். மூன்றும்வேற்றுமைத்திரிபுணரற்று. புள்ளியீற்றுச்சொல்லும் உயிரீற்றுச்சொல்லும் வல்லெழுத்தினது மிகுதிமேற்சொல்லுமுறைமையான், அம்மூன்றாவதன் பொருளாகிய வினைமுதற்பொருள்கடம்மானுளவாகிய வினைச்சொற்கள்தாம் அவற்றுமுன்வரின், இயல்பாகலும் உறழத்தோன்றுதலுமாகிய அம்முறைமையினையுடைய விரண்டுசெய்கையுமுரியனவுள. அவற்றை, மேலே வேற்றுமைப்பொருட்புணர்ச்சி முடிபுசொல்லுமிடத்துப் போற்றியறிதல்வேண்டும். எ - று. உ - ம். நாய்கோட்பட்டான், புலிகோட்பட்டான், சாரப்பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான், என இவை இயல்பு, சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான், வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான், என இவை உறழ்ச்சி. புள்ளியீறு உயிரீறு என்றதனால் பேஎய்கோட்பட்டான், பேஎய்க்கோட்பட்டான், என்னும் உறழ்ச்சியுள் எகரப்பேறுகொள்க. உரியவையுளவென்றதனான், பாப்புக்கோட்பட்டான், பாம்புகோட்பட்டான், என்னுமுறழ்ச்சியுள், நிலைமொழியொற்றுத் திரிதலும் திரியாமையுங்கொள்க. [௧௪]

---

* பலர் என்பதன், ரகரமெய்யும் அகரவுயிருங்கெட்டன.

மெல்லெழுத்துமிகுவழிவலிப்பொடுதோன்றலும் - வல்லெழுத்துமிகு
வழிமெலிப்பொடுதோன்றலு - மியற்கைமருங்கின்மிகற்கைதோ
ன்றலு - முயிர்மிகவருவழியுயிர்கெடவருதலுஞ் - சாரியையுள்வ
ழிச்சாரியைகெடுதலுஞ் - சாரியையுள்வழித்தன்னுருபுநிலையலு
ஞ் - சாரியையியற்கையுறழத்தோன்றலு - முயர்திணைமருங்கி
னொழியாதுவருதலு- மஃறிணைவிரவுப்பெயர்க்கவ்வியனிலையலு -
மெய்பிறிதாகிடத்தியற்கையாதலு - மன்னபிறவுந்தன்னியன்மரு
ங்கின் - மெய்பெறக்கிளந்துபொருள்வரைந்திசைக்கு-மைகார
வேற்றுமைத்திரிபெனமொழிப.

என்னின். இரண்டாம்வேற்றுமைத்திரிபு கூறுதனுதலிற்று. மெல்லெழுத்துமிகுமிடத்து வல்லெழுத்த லோடுதோன்றுதலும், வல்லெழுத்துமிகுமிடத்து மெல்லெழுத்தாதலோடு ( ன்றுதலும், இயற்கையிடத்து மிகுதிதோன்றுதலும், உயிர்மிகவருமிடத்து அவ்வுயிர்கெடவருதலும், சாரியையுள்ளவிடத்துச் சாரியைகெடுதலும், சாரியையுள்ளவிடத்துச் சாரியையோடு தனனுருபுநிற்றலும், சாரியைபெறுகவென்ற வழிச்சாரியைபெறுது, இயல்பாகியமொழிகள் வருமொழியினும் நிலைமொழியினும் மிக்குந்திரிந்தும் வருமொழிவல்லெழுத்துக்கள் உறழ்ச்சியாகத்தோன்றுதலும், உயர்திணைப்பெயரிடத்துத் தன்னுருபு தொகாதேவிரிந்துவருதலும், உயர்திணையோடஃறிணைவிரவுப்பெயர்க்கும், அவ்வுருபு அவ்வியல்பிலேநிற்றலும், மெய்பிறிதாய் முடியுமிடத்தியல்பாய்முடிதலும், அத்தன்மையனபிறமுடிபுகளும் தனதியல்பாகியகூற்றால், அகத்தோத்தினுட்பொருள்பெற எடுத்தோதப்பட்ட வேற்றுமைப்பொருட்புணர்ச்சியது பொதுமுடிவினை, தான்வரைந்து வேறுமுடிபிற்றாய்நின்றொலிக்கும். ஐகாரவேற்றுமையினது வேறுபாட்டுப் புணர்ச்சியென்றுசொல்லுவர். புலவர் எ - று. உ-ம். விளக்குறைத்தான்; என்பது மெல்லெழுத்து மிகுவழிவல்லெழுத்துமிக்கது. மரங்குறைததான்; என்பது வல்லெழுத்து மிகுவழி மெல்லெழுத்துமிக்கது. தாய்க்கொலை, என்பது இயல்பாமிடத்துமிக்கது. பலாக்குறைத்தான்; எனபது உயிர்மிகவருவழி உயிர்கெட்டது. வண்டுகொணர்ந்தான; என்பது, சாரியையுள்வழிச்சாரியைகெட்டது. வண்டினைக்கொணர்ந்தான்; எனபது சாரியையுள்வழித் தன்னுருபுநிலையிற்று. புளிகுறைத்தான்; புளிக்குறைத்தான்; பூல்குறைத்தான்; பூற்குறைத்தான்; என இவை சாரியையியற்கை யுறழத்தோன்றின. நம்பியைக்கொணர்ந்தான்; என்பது உயர்திணைமருங்கி னொழியாது வந்தது. கொற்றனைக்கொணர்ந்தான்; என்பது விரவுப்பெயர்க்கவ்வியனிலையது. மண்கொணர்ந்தான்; என்பது மெய்பிறிதாகிடத்தியற்கையாய்வந்தது. அன்னபிறவும் எனறதனாற்கொள்வன கழிகுறைந்தான்; தினைபிளந்தான்; என்பன. பிறவுமன்ன. ஒழியாதென்றதனான், ஓரோவழியொழிந்தும் வரும். அவற்கண்டு, எனவும். ஒன்னார்த்தெறலும், எனவும். இவை உயர்திணையுளொழிந்துவந்தன. மகற்பெற்றான்; மகட்பெற்றான்; என இவை விரவுப்பெயருமொழிந்துவந்தன, இவ்விலேசுதன்னானே, இவற்றின்முடிபின் வேற்றுமையுங்கொள்க. மெய்பெறவென்றதனான், உறழ்ச்சியாய்முடிவனவுங்கொள்க. மைகொணர்ந்தான்; மைக்கொணர்ந்தான்; எனவும், வில்கோள், விற்கோள், எனவும், வரும். இவ்வாறுதிரிந்துமுடியாது, அகத்தோத்திற்பொதுமுடிபே முடிபாம். கடுக்குறைத்தான்; செப்புக்கொணர்ந்தான்; என்றாற்போல்வன முடிவனவறிந்துகொள்க. இவ்வாறுவேறுபடமுடிவது இரண்டாவது பெரும்பான்மையும் வினையொடுமுடியும் வழிப்போலும். அது “தம்மினாகியதொழிற்சொன்முன்வரின்” என நின்றவதிகாரத்தாற் கொள்ளவைத்தான்போலும். தன்னினமுடித்தலென்பதனான், ஏழாம்வேற்றுமை வினையொடுமுடியும் வழி, திரிபுங்கொள்க. வரையாய்வருடை, புலம்புக்கன்னேபுல்லணற்காளை, எனவரும்.

**வேற்றுமையல்வழி இ ஐ யென்னு - மீற்றுப்பெயர்க்கிளவிமூ வகைநிலையிய - வவைதா - மியல்பாகுனவும்வல்லெழுத்துமிகு னவு - முறழாகுனவுமென்மனார்புலவர்.**

என்னின். இகரவீற்றுப்பெயர்க்கும் ஐகாரவீற்றுப்பெயர்க்கும் அலவழி முடிபுகூறுதனுதலிற்று. வேற்றுமையல்லாத வல்வழியிடத்து, இ ஐ என்னு மீற்றையுடைய பெயர்ச்சொற்கள் மூவகைமுடிபு நிலைமையுடைய. அவைதாம் இயல்பாய்முடிவனவும், வல்லெழுத்துமிகுவனவும், உறழ்ச்சியாய்முடிவனவும் இவையெனறுசொல்லுவர்புலவர். எ - று. உ - ம். பருத்திகுறிது, அனைகுறிது, சிறிது, தீது, பெரிது, என இவை யியல்பு. அலிக்கொற்றன், புலைக்கொற்றன், என இவை. மிகுதி, கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக்குறிது என இவை யுறழ்ச்சி. பெயர்க்கிளவிமூவகைநிலையவெனவே, பெயர்க்கிளவியல்லாதகிளவி மிகுதியுமியல்புமென விருவகையவெனக்கொள்க. ஒல்லைக் கொண்டான்; எது ஐகாரவீற்றுவினைச்சொன்மிகுதி. இகரவீற்றுமிகுதிவந்தவழிக்கண்டுகொள்க. தில்லைச்சொல்லே, மன்னைச்சொல்லே என்றது ஐகாரவீற்றிடைச்சொன்மிகுதி, இவற்றியல்புவந்தவழிக்கண்டுகொள்க. கடிகா என்பது இகரவீற்றுரிச்சொல்லியல்பு. இவ்வீற்றுமிகுதிவந்த வழிக்கண்டுகொள்க. பணைத்தோள் என்பது ஐகாரவீற்றுரிச்சொன்மிகுதி. இவற்றியல்புவந்தவழிக் கண்டுகொள்க [கசு]

**சுட்டுமுதலாகியவிகரவிறுதியு - மெகரமுதல்வினாவினிகரவிறுதி யுஞ் - சுட்டுச்சினைநீடியவையெனிறுதியும் - யாவென்வினாவினை யெனிறுதியும் - வல்லெழுத்துமிகுனவுமுறழாகுனவுஞ் - சொல்லியமருங்கினுளவென்மொழிப,**

என்னின். அவ்விகர வைகாரவீற்றுள் ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணரநின்றவிடைச்சொன்முடிபு கூறுதனுதலிற்று. சுட்டெழுத்தினைமுதலாகவுடையவிகரவீற்றிடைச்சொல்லும், எகரமாகியமொழிமுதல் வினாவினையுடைய விகரவீற்றிடைச்சொல்லும், சுட்டாகியவுறுப்பெழுத்துநீண்ட ஐகாரவீற்றிடைச்சொல்லும், யாவெனனும் வினாவினைமுதற்கண்ணுடைய ஐகாரவீற்றிடைச்சொல்லும், வல்லெழுத்துமிக்குமுடினவும், உறழ்ச்சியாட்முடிவனவும், மேற்சொல்லப்பட்ட விடத்தின்கண்ணேயுளவென்று சொல்லுவர்புலவர். எ - று. உ - ம். அதோளிக்கொண்டான்; இதோளிக்கொண்டான்; உதோளிக்கொண்டான்; எதோளிக்கொண்டான்; சென்ருன், தந்தான், போயினுன், என வரும். ஆண்டைக்கொண்டான்; ஈண்டைக்கொண்டான்; ஊண்டைக்கொண்டான்; யாண்டைக்கொண்டான; என இவை மிக்குமுடிந்தன. அவ்வழிகொண்டான்; அவ்வழிக்கொண்டான்; இவ்வழிகொண்டான்; இவ்வழிக்கொண்டான; உவ்வழிகொண்டான்; உவ்வழிக்கொண்டான்; எவ்வழிகொண்டான்; எவ்வழிக்கொண்டான்; எனவும், ஆங்கவைகொண்டான்; ஆங்கவைக்கொண்டான, ஈங்கிவைகொண்டான்; ஈங்கிவைக்கொண்டான்; ஊங்குவைகொண்டான; ஊங்குவைக்கொண்டான்; யாங்கவைகொண்டான; யாங்கவைக்கொண்டான்; எனவும். இவை யுறழ்ந்துமுடிந்தன. இவற்றுள் ஐகாரவீற்றுள் உறழ்ந்துமுடிந்தன திரிபுடையன. திரிபில்லன பெற்றவழிக்கண்டுகொள்க. சொல்லியமருங்கெனறதனுல், பிறவைகாரவீறு மிக்குமுடிவனகொள்க. பண்டைச்சான்ருர், ஒருதிங்களைக்குழவி, எனவரும். [கஎ]

**நெடியதன்முன்னரொற்றுமெய்கெடுதலுங் -**
**குறியதன்முன்னர்த்தன்னுருபிரட்டலு -**
**மறியத்தோன்றியநெறியியலென்ப. -**

என்னின். புள்ளிமயங்கியலைநோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதனுதலிற்று. நெட்டெழுத்தின்முன்னின்றவொற்றுத்தன்வடிவுகெடுதலும், குற்

றெழுத்தின்முன்னர் நின்றவொற்றுத் தன்வடிவிரட்டுதலும் இவையறியும்படி தோன்றியமுறைமையான வியல்பையுடையனவென்று சொல்லுவர். எ-று. கோறீது, கோனன்று, என இவை நெடியதன்முன்னர் ஒற்றுக்கெட்டன, மண்ணகல், பொன்னகல், என இவை குறியதன்முன்னர்த் தன்னுருபிரட்டின, மேலைச்சூத்திரத்து ஆறனுருபிற்கூறியவதனான், ஒற்றிரட்டுதலும் உயிர்முதன்மொழிக்கண்ணதென்றுகொள்க. குறியது பின்கூறிய முறையன்றியகூற்றினால், நெடியனகுறுகிநின்றவழியும், குறியதன்முன்னரொற்றுமிரட்டுதலும், குறியது திரிந்துநெடியதாவழி, அதன்முன்னரொற்றுக்கெடுதலுங்கொள்க. தம்மை, நம்மை, என இவை நெடியனகுறுகிநின்று, ஒற்றிரட்டின, மற்றையது வந்தவழிக்கண்டுகொள்க. அறியவென்றதனான், நெடியதன்முன்னர் ஒற்றுக்கெடுவது தகார நகாரங்கள்வந்து திரிந்தவழியென்பதூஉம், ஆண்டெல்லாங் கெடாதெனதூஉங்கொள்க. தேன்றீது, என்பது ஆண்டுக்கெடாதது, நெறியியலென்றதனாற் குறியதன்முன்னர் நின்றவொற்றின்றிய புணர்ச்சியாற்பெற்றதும் இரட்டுமெனவுணர்க. அவ்வழி எனவரும். [கஅ]

*ஆறனுருபினுநான்கனுருபினுங் - கூறியகுற்றொற்றிரட்டலில்லை-*
*யீறாகுபுள்ளியகரமொடுநிலையு - நெடுமுதல்குறுகுமொழிமுன்னான.*

என்னின். இஃது உருபியலைநோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதனுதலிற்று. ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணு மீறாகுபுள்ளிகள் அகரத்தோடு நிலைபெறும். நெடிதாகிய முதலெழுத்துக்குறுகி முடியுமொழிக்கண்மேற்கூறிய குற்றொற்றிரட்டலில்லை. எ-று. தமது, தமக்கு, நமது, நமக்கு, எனவரும். கூறியவென்றதனானே * நெடுமுதல்குறுகாதமொழியும் இவ்விருவிதியுங்கொள்க. எல்லார் தமதும், எல்லார்தமக்கும் எனவரும். [ககூ]

*நும்மெனிறுதியுமந்நிலைதிரியாது.*

என்னின். நுமமென்னுமகரவிறுதி மேற்கூறிய வீறாகுபுள்ளி அகரமொடுநிலையலும், குற்றொற்றிரட்டாமையுமாகிய வந்நிலைமையிற்றிரியாது. எ-று நுமக்கு, நுமது, எனவரும். [உ௰]

*உகரமொடுபுணரும்புள்ளியிறுதி -*
*யகரமுமுயிரும்வருவழியியற்கை.*

என்னின். புள்ளிமயங்கியலைநோக்கியதோர் நிலைமொழிச்செய்கைகூறுதனுதலிற்று. உகரப்பேற்றோடுபுணரும்புள்ளியிறுதிகள் யகரமும் உயிரும வருமொழியாய் வருமிடத்து, அவ்வுகரம் பெறாதியல்பாய்முடியும். எ-று. உ-ம். உரிஞ்யாது, உரிஞ் அனந்தா, உரிஞ் ஆதா, என வொட்டுக. [உக]

*உயிரும்புள்ளியு மிறுதியாகி - யளவுநிறையுமெண்ணுஞ்சுட்டி-*
*யுளவெனப்பட்டவெல்லாச்சொல்லுந் - தத்தங்கிளவிதம்மகப்ப*
*ட்ட - முத்தைவரூஉங்காலந்தோன்றி - னொத்ததென்பவேயென்*
*சாரியை.*

என்னின். அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயருந் தம்மிற்புணருமாறுணர்த்து. உயிரும்புள்ளியு மீறாயவளவையும், நிறையையும், எண்ணையுங்கருதியுளவென்று சொல்லப்பட்ட வெல்லாச்சொற்களும் தமக்கினமாகிய

---

* நெடுமுதல் குறுகாதமொழிகள் தம், நம், நும், என்னுஞ்சாரியையிடைச் சொற்கள்.

இங்ஙனங்காட்டியநெடுமுதல் குறுகாதமொழிகட்கு, முன்னர் நன்னூல் விருத்தியுட்காட்டினமையுணர்க.

சொற்களாய், தமக்ககப்படுமொழியாயுள்ளன தம்முன்னேவருங்காலந்தோன்றுமாயின், பொருந்திற்றென்ப. ஏ யென்னுஞ்சாரியைபெற்றுமுடிதலை எ - று. உ - ம். உழக்கேயாழாக்கு, கலனேபதக்கு, என இவை அளவுப்பெயர். தொடியேகஃசு, கொள்ளேயையவி, என இவை நிறைப்பெயர், காணியேமுந்திரிகை, காலேகாணி, என இவை எண்ணுப்பெயர். உயிரீறு புள்ளியீறென்றதனானே, ஏயென்சாரியை பெறாதனவும் உளவென்றுகொளக. குறுணி நாழி, எனவரும். [௨௨]

## அரையெனவரூஉம்பால்வரைகிளவிக்குப் -
## புரைவதன்றாற்சாரியையியற்கை.

என்னின். எய்தியதுவிலக்குதனுதலிற்று. அரையென்றுசொல்ல வருகின்றபொருட் கூற்றைப்புணர நின்றசொல்லிற்குப் பொருந்துவதன்று. மேற்கூறிய ஏயென்சாரியை பெறுதியல்பு எ - று. உ - ம். உழக்கரை, தொடியரை, ஒன்றரை, எனவரும். இஃது ஒட்டுதற்கொழுகிய வழக்கன்றென்பதனான், விலக்குண்ணாதோவெனில்; —தமகப்பட்டவென்று வருமொழியையும் வரைந்தோதினமையின், இதற்கவ்விதிசெல்லாதென்பது. [௨௩]

## குறையென்கிளவிமுன்வருகாலை -
## நிறையத்தோன்றும்வேற்றுமையியற்கை.

என்னின். எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியுணர்த்துற்று. குறையென்னுஞ்சொல் அளவுமுதலியவற்றின் முன்வருங்காலத்து, நிறையத்தோன்றும். மேல் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிமுடிபிற்குச் சொல்லுமியல்பு எ - று. உ - ம். உரிக்குறை, கலக்குறை, தொடிக்குறை, கொட்குறை, காணிக்குறை, காற்குறை, எனவரும். முன்னென்றதனால், பொருட்பெயரோடு புணரும்வழியும், வேற்றுமைமுடிபெய்துகவென்பது. கலப்பயறு, எனவரும். நிறையவென்பதனால், கூறும் என்பதன்கண்ணும், வேற்றுமை முடிபெய்துமென்பது. நாழிக்கூறு எனவரும். [௨௪]

## குற்றியலுகரக்கின்னேசாரியை.

என்னின். வேற்றுமைமுடிபுவிலக்கி, இன்வகுத்தமையினெய்தியது விலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. குற்றுகரவீற்றளவுப்பெயர்முதலியவற்றிற்கு, குறையோடுபுணரும்வழி வருஞ்சாரியை இன். எ - று. உ - ம். உழக்கின்குறை, கழஞ்சின்குறை, ஒன்றின்குறை, எனவரும். [௨௫]

## அத்திடைவரூஉங்கலமென்னளவே.

என்னின். இதுவுமது. கலனென்னுமளவுப்பெயர் குறையொடுபுணரும்வழி, அத்துவரூஉம். எ - று. உ - ம். கலத்துக்குறை எனவரும். இது கலனென்னும் னகரவீறேல், நிலைமொழியொற்றுக்கெடும் வருமொழியொற்றுப் பேறும் "அத்தேவற்றே" என்பதனாற்கொள்ளப்படும். கலனெனளவெனவோதாதது செய்யுளின்பநோக்கிப்போலும். சாரியை முற்கூறியவதனான், இன்சாரியைபெற்றவழி, முன்மாட்டேற்றானெய்திய வல்லெழுத்து வீழ்க்க. [௨௬]

## பனையெனளவுங்காவெனிறையு -
## நினையுங்காலையின்னொடுசிவணும்.

என்னின். இதுவுமது. பனையென்னுமளவுப்பெயரும் காவென்னு நிறைப்பெயரும் குறையெனபதனோடு புணருமிடத்து, ஆராயுங்காலத்தின் சாரி

யையோடு பொருந்தும். எ - று. உ - ம். பனையின்குறை, காவின்குறை, என வரும். நினையுங்காலையென்றதனான், வல்லெழுத்துப்பேறும், சிறுபான்மை கொள்க. பனைக்குறை, காக்குறை எனவரும். [உஎ]

**அளவிற்குநிறையிற்குமொழிமுதலாகி - யுளவெனப்பட்டவொன்பதிற்றெழுத்தே - அவைதாம் - க ச த ப வென்று ந ம வ வென்று - அகர உகர மோடவையெனமொழிப.**

என்னின். அளவுப்பெயர்க்கும், நிறைப்பெயர்க்கும், முதலாமெழுத்திற்கு வரையறைகூறுதனுதலிற்று. அளவுப்பெயர்க்கும், நிறைக்கும், மொழிமுதலாயுளவென்று சொல்லப்பட்டன ஒன்பதெழுத்து. அவையாவையெனின்;- க ச த பக்களும், நமவக்களும், அகரமும், உகரமுமாகிய வவையென்றுசொல்லுவர். எ - று. உ - ம். கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு, எனவும், கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, எனவும்வரும். உளவெனப்பட்டவென்றதனான், உளவெனப்படாதனவும் அளவையுளவென்பது. இம்மி, ஓரடை, ஓராடை, எனவரும். மற்றிவ்வரையறைகூறிப் பயந்ததென்னையெனின் ;—மேலகத்தோத்தினுள் அவற்றிற்கு முடிபுகூறும்வழி, அதிகாரந்தான் வன்கணத்தும், மேற்சொல்லாதொழிந்தகணத்தினுஞ் சேறற்கென்பது. [உஅ]

**ஈறியன்மருங்கினிவையிவற்றியல்பெனக் - கூறியகிளவிப்பல்லாறெல்லா - மெய்த்தலைப்பட்டவழக்கொடுசிவணி - யொத்தவையுரியபுணர்மொழிநிலையே.**

என்னின். இஃது இவ்வோத்தற்புறனடை, உயிரும் புள்ளியுமிறுதியானவை வருமொழியோடு கூடிநடக்குமிடத்து, இம்மொழிகளின் முடிபிவையெனக் கூறிமுடிக்கப்பட்டசொற்களின், அவ்வாற்றான் முடியாதுநின்ற பலவகைமுடிபுகளெல்லாம் உண்மையைத் தலைப்பட்டவழக்கொடுகூடிப் பொருந்தினவை யுரியவாம். புணருமொழிகணிலைமைக்கண் எ - று. உ-ம். விளஞான்றது, என்புழிநிலைமொழிப் பெயரதியல்பும், ஞான்றஞாயிறு என, நிலைமொழிவினையாய வழி, இருமொழியியல்புமாகிய "ஞ ந ம ய வ" என்பதனெறிபும், மாண்கடிது, என்புழி, வருமொழிவன்கணத்தியல்பாகிய "மொழிமுதலாகும்" என்பதனெறிபும், நடஞெள்ளா, என்னு மியல்புகணத்திருமொழியியல்பும், நில்கொற்றா, நிற்கொற்றா, என நிலைமொழிதிரிந்த வுறழ்ச்சியும், நுக்கொற்றா, நுஞ்ஞெள்ளா, என்னுமிகுதியும், உரிநுஞெள்ளா, என்னுமியல்புகணத்துகரப்பேறும், உரிஞ்யானா, உரிஞ் அனந்தா, என்னுமிருமொழியியல்பும், மண்ணுகொற்றா, மண்ணுக்கொற்றா; ஞெள்ளா எனவரும் "ஔவெனவருஉம்" என்பதனுள்விலக்கப்படாத ணகர னகர லகரமாகிய புள்ளியிறுதிகளின், நிலைமொழியுகரப்பேறுமாகிய "உயிரீறாகிய முன்னிலைக்கிளவி" என்பதனெழிபும், விரவுப்பெயர்த்திரிபின், மேலெடுத்தோதப்படாதனவாய நின் ஞாண் என்றாற்போல்வரும் "அஃறிணைவிரவுப்பெயர்" என்பதனெழிபும், காவிக்கண், குவளைக்கண், என்றாற்போல, அல்வழிமுடிபாகிய "வேற்றுமையல்வழி" என்பதனெழிபும், பதக்குநாழி, சீர்கனை, ஒருமாவரை, என்னும் "உயிரும் புள்ளியுமிறுதியாகி" என்பதனெழிபும், பிறவற்றினெழிபுமெல்லாம் ஈண்டேகொள்க. [உகூ]

**பலரறிசொன்முன்யாவவொன்னும் - பெயரிடைவகரங்கெடுதலு**
**மேனை - யொன்றறிசொன்முன்யாதென்வினைவிடை - யொன்றிய**
**வகரம்வருதலுமிரண்டு - மருவின்பாத்தியிற்றிரியுமன்பயின்றே.**

என்னின். மருஉமுடிபுகூறுதனுதலிற்று. பலரையறியுஞ் சொன்முன்னர் வருகின்றயாவவென்னும் பெயரிடையில், வகரங்கெடுதலும், ஒழிந்தவொன்றனையறியுஞ் சொன்முன்னர் வரும்யாதென்னும் வினைமொழியிடை, உயிரோடுபொருந்திய வகரம் வருதலும், இரண்டும் மருஉக்களதுமுடிபினிடத்துபயின்றுவழங்கும். எ - று. உ - ம். அவர்யார், எனவும், அதுயாவது, எனவும் வரும். ஒன்றியவென்றதனால், வகரவுயிர்மெய்யென்றுகொள்க. இன்னுமதனானே, யாவென்பதும் யாவதென்பதும் நிலைமொழியாய், பிறவருமொழியோடுபுணரும் வழியும், இம்முடிபுகொள்க. யார்யார்க்கண்டேயுவப்பர். எனவும், யாவதுநன்றெனவுணரார்மாட்டும், எனவும், வரும். பயின்றென்றதனால், பலரறிசொல்லும் ஒன்றறிசொல்லும் வருமொழியாயவழியும், இம்முடிபுகொள்ளப்படும். யாரவர் யாவதது எனவரும். [கூ0]

ஐந்தாவது தொ  பு முற்றிற்று.

# ஆறவது உருபியல்.

**அ ஆ உ ஊ ஏ ஔ வென்னு - மப்பாலாறனிலைமொழிமுன்னர்-**
**வேற்றுமையுருபிற்கின்னேசாரியை.**

என்பது சூத்திரம். இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின் ;— உருபுகளோடு, பெயர்புணருமியல்புணர்த்தினமையின் உருபியலென்னும்பெயர்த்து. மேன்முன்றருகுந்துப் புணர்த்தசெய்கை, ஈண்டுநின்றாம் விரித்துப்புணர்க்கின்ற றன்கை மரபினோடியையுடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திரமென்னுதலிற்றோவெனின் ;—அகர ஆகார உகர ஊகார ஏகார ஔகார வீறுகளும் உருபினொடுபுணருமாறுணரற்று. அ ஆ உ ஊ ஏ ஔ என்றுசொல்லப்படுகின்றவக்கூற்றாறனையுமீறாகவுடைய நிலைமொழிகளின்முன்னர், வேற்றுமையுருபுகள் வருமொழியாய்வந்த நிலைமைக்கிடைவருஞ்சாரியை இன்சாரியை. எ - று. உ - ம். விளவினை, விளவினோடு, விளவிற்கு, விளவினது, விளவின்கண், எனவும். பலாவினை, பலாவினோடு, எனவும். கடுவினை, கடுவினோடு, எனவும். கழூஉவினை, கழூஉவினோடு, எனவும். சேவினை, சேவினோடு எனவும். வெளவினை, வெளவினோடு, எனவும். கருவியறிந்தொட்டுக. [க]

**பல்லவைநுதலியவகரவிறுபெயர்**
**வற்றொடுசிவணலெச்சமின்றே.**

என்னின். மேற்கூறியவீற்றுள் அகரவீற்றுட்சிலவற்றிற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. பன்மைப்பொருளைக்கருதினபெயர்களினிறுதியகரம் வற்றுச்சாரியையோடு பொருந்துதலை யொழிதலில்லை. எ - று. உ - ம். பல்லவற்றை, பல்லவற்றோடு, உள்ளவற்றை, உள்ளவற்றோடு, இல்லவற்றை, இல்லவற்றோடு, சில்லவற்றை, சில்லவற்றோடு, எனவொட்டுக. எச்சமின்றென்றதனான், ஈண்டுமூன்றுமுருபின் கட்சாரியைபெற்றே முடியுமென்றுகொள்க. இன்னுமிதனானே, மேலின்பெற்றன பிறசாரியையும் பெறுமெனக்கொள்க. மகத்தை, நிலாத்தை, எனவரும். [உ]

யாவென்வினவுமாயியறிரியர்து.

என்னின். இஃது ஆகாரவீற்றுள், ஒருமொழிக்கெய்தியதுவிலக்கிப் பிறிது விதிவகுத்தனுதலிற்று. யாவென்றுசொல்லப்படுமாகாரவீற்றுவினைப்பெயரும் மேற்கூறப்பட்டவற்றுப்பெறுமவ்வியல்பிற்றிரியாது. எ-று. உ-ம். யாவற்றை, யாவற்றொடு, எனவொட்டுக. [௯]

சுட்டுமுதலுகரமன்னொடுசிவணி -
யொட்டியமெய்யொழித்துகரங்கெடுமே.

என்னின். உகாரவீற்றுட்சிலமொழிக்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. சுட்டெழுத்தினைமுதலாகவுடைய வுகரவீற்றுச்சொல் அன்சாரியையோடுபொருந்தி, தான்பொருந்திய மெய்யையொழித்து, உகரங்கெடும், எ-று. உ-ம். அதனை, அதனொடு, இதனை, இதனொடு, உதனை, உதனொடு எனவொட்டுக. [௪]

சுட்டுமுதலாகியவையெனிறுதி -
வற்றொடுசிவணிநிற்றலுமுரித்தே.

என்னின். ஐகாரவீற்றுட்சிலமொழிக்கு முடிபுகூறுதனுதலிற்று. சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச்சொல் வற்றுச்சாரியையோடுபொருந்தி, அவ்வீற்றைகாரநிற்றலுமாந்து. நில்லாமையுமுரித்து. எ-று. உ-ம். அவையற்றை, அவையற்றொடு, இவையற்றை, இவையற்றொடு, உவையற்றை, உவையற்றொடு, எனவொட்டுக. ஐகாரங்கெட்டவழி நின்றவகரத்தினை, வற்றின் மிசையொற்றென்றுகெடுத்து, அவற்றை, இவற்றை, உவற்றை, எனவொட்டுக. மற்றிம்முடிபு சுட்டுமுதல் வகாரவீற்றோடொத்தமையின், ஈண்டிதுகூறன் மிகைபடக்கூறலாம்பிறவெனின்;—அஃதொக்கும். இவ்வாறுகூறுவனமேலுமுள, அவற்றிற்கெல்லாம் ஆசிரியன்கருத்தறிந்து கொள்ளப்படுமென்பது. [௫]

யாவென்வினாவினையெனிறுதியு -
மாயியறிரியாதென்மனார்புலவ -
ராவயின்வகரமையொடுங்கெடுமே.

என்னின். இதுவுமது. யாவென்னும் வினாவினையுடைய ஐகாரவீற்றுச் சொல்லும் மேற்கூறிய சுட்டுமுதலைகாரம்போல, வற்றுப்பெறுமியல்பிற் றிரியாதென்றுசொல்லுவர் ஆசிரியர். அவ்விடத்து வகரம் ஐகாரத்தோடுகூடக்கெடும். எ-று. உ-ம். யாவற்றை, யாவற்றொடு, எனவொட்டுக. வகரம் வற்றின்மிசையொற்றென்று கெடுவதனை, ஈண்டுக்கேடோதியவதனால், பிறவைகாரமும் வற்றுப்பெறுதல்கொள்க. கரியவற்றை, செய்யவற்றை, என வரும். [௬]

நீயெனொருபெயர்நெடுமுதல்குறுகு -
மாவயினகரமொற்றாகும்மே.

என்னின். ஈகாரவீற்றுள் ஒருமொழிக்கு முடிபுகூறுதனுதலிற்று. நீயென்னுமொருபெயர் நெடிதாகிய முதல்குறுகும். அவ்விடத்துவரும் னகரம் ஒற்றாகும். எ-று. உ-ம். நின்னை, நின்னொடு, எனவொட்டுக. ஒருபெயரென்றது நின்னென்பதும் வேறொருபெயர்போறலைவிலக்கிற்று. பெயர்குறுகுமென்னாது, முதல்குறுகுமென்றது அப்பெயரினெட்டெழுத்து நிலையது, அக்குறுக்க மென்றற்கென்பது. நெடுமுதலென்றது அம்மொழிமுதலின், நகரங்குறுகுத

லையிலக்கிற்று. ஈண்டு உயிர்மெய்யொற்றுமைபற்றி, நெடியது முதலாயிற்று. சாரியைப்பேற்றிடை, எழுத்துப்பேறுகூறியது மூன்றாமுருபின்கட்சாரியைபெற்றேவந்த வதிகாரமாற்றிநின்றது. [எ]

## ஓகாரவிறுதிக்கொன்னேசாரியை.

என்னின். ஓகாரவீறுமுடிபுமாறுணரற்று. ஓகாரவீற்றுக்கிடை வருஞ் சாரியை ஒன்சாரியை. எ-று. உ-ம். கோஒனை, கோஒனொடு, எனவொட்டுக. [அ]

## அ ஆ வென்னுமரப்பெயர்க்கிளவிக் - கத்தொடுஞ்சிவணுமேழனுருபே.

என்னின். அகர ஆகாரவீற்றுட்சிலமொழிக்கு, உருபின்கணெய்தியதன் மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அ ஆ வென்றுசொல்லப்படுமரத்தை யுணரநின்றபெயராகியசொற்கு, முன்கூறியவின்னோடன்றியத்தோடு பொருந்தும். ஏழாமுருபு எ - று. உ - ம். விளவத்துக்கண், பலாவத்துக்கண், எனவரும். [கூ]

## ஞ ந வென்புள்ளிக்கின்னேசாரியை.

என்னின். புள்ளியீற்றுள் ஞகாரவீறும் நகாரவீறுமுடியுமாறு கூறுதனுதலிற்று. ஞ ந வென்று சொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்குவருஞ்சாரியை இன்சாரியை. எ - று. உ - ம். உரிஞினை, உரிஞினொடு, எனவும். பொருநினை, பொருநினொடு, எனவும் ஒட்டுக. [ய]

## சுட்டுமுதல்வகரமையுமெய்யுங் - கெட்டவிறுதியியற்றிரிபின்றே.

என்னின். வகரவீறுநான்கனுள்ளுஞ் சுட்டுமுதல் வகரவீற்றிற்குமுடிபு கூறுதனுதலிற்று. சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகாரவீற்றுச்சொல் ஐ[illegible]மும், அதனாற்பற்றப்பட்டமெய்யுங்கெட்டு, வற்றுப்பெற்றுமுடிந்த சுட்டு முத[illegible]னகாரவீற்றியல்பிற்றிரிபின்றி, வற்றுப்பெற்றுமுடியும். எ - று. உ - ம் அவ[illegible]றை, அவற்றொடு, இவற்றை, இவற்றொடு, உவற்றை, உவற்றொடு, எனவொ[illegible]ட்டுக. [கக]

## ஏனைவகரமின்னொடுசிவணும்.

என்னின். வகரவீற்றுளொழிந்த வகரவீற்றிற்குமுடிபுகூறுதனுதலிற்று. ஒழிந்தவகரவீறு இன்சாரியையோடு பொருந்திமுடியும். எ - று. உ - ம். தெவ்வினை, தெவ்வினொடு, எனவொட்டுக. மற்றீதுரிச்சொலன்றோவெனின்;—உரிச்சொல்லெனினும், படுத்தலோசையாற் பெயராயிற்றெனக்கொள்க. [கஉ]

## மஃகான்புள்ளிமுனத்தேசாரியை.

என்னின். மகரவீறுமுடியுமாறுணரற்று. மகரமாகிய புள்ளியீற்றுச் சொன்முன் வருஞ்சாரியை அத்துச்சாரியை. எ - று. உ - ம். மரத்தை, மரத்தொடு, எனவரும். [கங]

## இன்னிடைவரூஉமொழியுமாருளவே.

என்னின். மகரவீற்றுட்சில்வற்றிற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. மகரவீறு அத்துச்சாரியையொழிய, இன்சாரியையிடைவந்து முடியுமொழிகளுமுள. எ - று. உ - ம், உருமினை, உருமினொடு, எனவொட்டுக. [கச]

நும்மெனிறுதியியற்கையாகும்.

என்னின். மகரவீற்றுளொன்றற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்த னுதலிற்று. நும்மென்னுமகரவீறு மேற்கூறியவத்துமின்னும்பெறாது, இய ல்பாய்முடியும். எ - று. உ - ம். நும்மை, நும்மொடு, எனவொட்டுக. [கரு]

தாம்நாமென்னுமகரவிறுதியும் - யாமெனிறுதியுமதனோரன்ன - ஆ எ யாகும்யாமெனிறுதி - யாவயின்யகரமெய்கெடுதல்வேண்டு - மேனையிரண்டுநெடுமுதல்குறுகும்.

என்னின். இதுவும மகரவீற்றுள், முன்கூறியமுடிபொவ்வாதனவற்றிற் கு முடிபுகூறிற்று. தாம், நாம், என்றுசொல்லப்படுமகரவீறும், யாமென் னுமகரவீறும், மேற்கூறிய நும்மென்னுமகரவீறுபோல, அத்துமின்னும் பெறாதுமுடிதலையுடையவாம். யாமென்னும் மகரவீற்றுமொழியாகாரம் எகா ரமாம், அவ்விடத்து யகாமாகிய மெய்கெடுதலைவேண்டும். ஒழிந்தவிரண்டும நெடியவாகிய முதல்குறுகிநின்றுமுடியும். எ - று. உ - ம். தம்மை, தம மொடு, நம்மை, நம்மொடு, எம்மை, எம்மொடு, எனவொட்டுக. ஆவயின்மெ ய்யென்றதனாற், பிறவயின்மெய்யுங்கெடுமெனக்கொள்க. தங்கண், நங்கண், எங்கண், எனவரும். [கசு]

எல்லாமென்னுமிறுதிமுன்னர் - வற்றென்சாரியைமுற்றத்தோன்று - மும்மைநிலையுமிறுதியான.

என்னின். மகரவீற்றுள், ஒருமொழிக்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வருத்தனுதலிற்று. எல்லாமென்னும் மகரவீற்றுச்சொல்லின்முன்பு, மேற் கூறியவத்துமின்னுமன்றி, வற்றென்னுஞ்சாரியை முடியத்தோன்றிமுடியும். உம்மென்னுஞ்சாரியைநிலைபெறும். இறுதிக்கண் எ - று. உ - ம். எல்லா வற்றையும, எல்லாவற்றொடும், எனவொட்டுக. முற்றவென்றதனான், மூன்று முருபின்கண்ணும், நான்காமுருபின்கண்ணும், ஆறுமுருபின்கண்ணு மும்மி னுகரக்கேடுகொள்க. [கஎ]

உயர்திணையாயினம்மிடைவருமே.

என்னின். இதுவுமது. எல்லாமென்னும் விரவுப்பெயர் அஃறிணைப் பெயரன்றி, உயர்திணைப்பெயராய்நிற்குமாயின், நம்மென்னுஞ்சாரியை இடை வந்துபுணரும். எ - று. நிலைமொழியொற்றும் மேல்வற்று மிசையொற்றென் றுகெட்டுநின்ற வதிகாரத்தாற்கெடுக்க. இன்னுமதனானே, உம்முப்பெற்றும், அதன்கணுகரம் சிலவுருபின்கட்கெடுதலுங்கொள்க. உ - ம். எல்லாநம்மை யும், எல்லாநம்மொடும, எனவொட்டுக. [கஅ]

எல்லாருமென்னும்படர்க்கையிறுதியு - மெல்லீருமென்னுமுன் னிலையிறுதியு - மொற்றுமுகரமுங்கெடுமெனமொழிப - நிற்றல்வே ண்டும்ரகரப்புள்ளி - யும்மைநிலையுமிறுதியான - தம்மிடைவரூஉம்ப டர்க்கைமேன - நும்மிடைவரூஉ முன்னிலைமொழிக்கே.

என்னின். மகரவீற்றுட்சிலவற்றிற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவரு த்தனுதலிற்று. எல்லாருமென்றுசொல்லப்படும் படர்க்கையிடத்து மகரவீற் றுச்சொல்லும், எல்லீருமென்றுசொல்லப்படு முன்னிலையிடத்து மகரவீற்றுச் சொல்லும், இவற்றின்மகரவொற்றும் அதன்முன்னின்றவுகரமும் கெட்டுமுடி

யுமென்றுசொல்லுவர். அவ்வுகரங்கெடுவழி, அதனானூரப்பட்ட ரகரப்புள்ளி கெடாதுநிற்றல்வேண்டும். அவ்விருமொழிக்கு மிறுதிக்கண், உம்மென்னுஞ் சாரியை நிலைபெறும், படர்க்கையிடத்துத் தம்முச்சாரியை யிடைவரும், முன்னிலைமொழிக்கு நும்முச்சாரியையிடைவரும். எ - று. உ - ம். எல்லார்தம்மையும், எல்லார்தம்மொடும், எல்லீர்நும்மையும், எல்லீர்நும்மொடும், எனவொட்டுக. படர்க்கைமுன்னிலையென்ற மிகுதியான், மகரவீற்றுத்தன்மைப் பெயரிடைக்கண், நம்முச்சாரியையும், ஈற்றுக்கண், உம்முச்சாரியையும்பெற்று முடிவனகொள்க. கரியேநம்மையும், கரியேநம்மொடும, எனவொட்டுக. படர்க்கைப்பெயர்முற்கூறியவதனால், ரகாரவீற்றுப்படர்க்கைப் பெயரும்முன்னிலைப் பெயரும் இறுதிக்கண் தம்மொடு நும்முச்சாரியையும்பெற்று முடிவன கொள்க. கரியார்தம்மையும், சான்றீர் நுமையும், எனவொட்டுக. உகரமுமொற்றுமென்றதமுறையன்றியகூற்றினான், அம்மூன்றுருபின்கண், உம்மினுகரக்கேடு, எடுத்தோதியவற்றிற்கும், இலேசினாற்கொண்டவற்றிற்குங்கொள்க. ககூ

தான்யானென்னுமாயீரிறுதியு -
மேன்முப்பெயரொடும்வேறுபாடிலவே.

என்னின். னகரவீற்றுட் சிலவற்றிற்கு முடிபுகூறுதனுதலிற்று. தான் யானென்றுசொல்லப்படும அவ்விரண்டுனகரவீறும், மேனமகரவீற்றுட்சொல்லப்பட்ட மூன்றுபெயரோடும வேறுபாடின்றி, தானென்பது நெடுமுதல்குறுகியும், யானென்பதன்கணுகாரம் எகாரமாய், யகரங்கெட்டு முடியும். எ - று. உ - ம். தன்னை, தன்னொடு, என்னை, என்னொடு, எனவொட்டுக. [உ௰]

அழனேபுழனேயாயிருமொழிக்கு - மத்துமின்னுமுறழத்தோன்ற-
லொத்ததென்பவுணருமோரே.

என்னின். இதுவுமது. அழன்புழனாகிய அவ்விருமொழிக்கும், அத்துச்சாரியையு மின்சாரியையுமாறிவரத்தோன்றுதலைப் பொருந்திற்றெனப. உணருமோர் எ - று. உ - ம். அழத்தை, அழத்தொடு, அழனினை, அழனினொடு புழத்தை, புழத்தொடு, புழனினை, புழனினொடு, எனவொட்டுக. தோன்றலென்றதனான், எவன், என்றும், என, என்று, நிறுத்தி, வற்றுக்கொடுத்துவேண்டுஞ்செய்கைசெய்து, எவற்றை, எவற்றொடு, எனவும். எற்றை, எற்றொடு, எனவுமுடிக்க. ஒத்ததென்றதனால், எகின, எனநிறுத்தி, அத்துமின்னுங்கொடுத்துச்செய்கைசெய்து, எகினத்தை, எகினத்தொடு, எகினினை, எகினினொடு, எனவுமுடிக்க. அத்துமுற்கூறியவதனான், அத்துப்பெற்ற வழி, இனிதிசைக்குமெனக்கொள்க. [உக]

அன்னென்சாரியையேழனிறுதி -
முன்னர்த்தோன்றுமியற்கைத்தென்ப.

என்னின. ழகாரவீற்றொருமொழிக்கு முடிபுகூறுதனுதலிற்று. அன்னென்னுஞ்சாரியை ஏழென்னுஞ்சொல்லிறுதியின்முன்னே, தோன்றுமியல்பினையுடைத்தென்று சொல்லுவர். எ - று. உ - ம். ஏழனை, ஏழனொடு, எனவொட்டுக. சாரியை முற்கூறியவதனால், பிறவுமன்பெறுவனகொள்க. பூழனை, பூழனொடு, யாழனை, யாழனொடு, எனவொட்டுக. [உஉ]

**குற்றியலுகரத்திறுதிமுன்னர்-**
**முற்றத்தோன்றுமின்னெனன்சாரியை.**

என்னின். குற்றியலுகரவீற்றிற்கு முடிபுகூறுதலுதலிற்று. குற்றியலுகரமாகியவீற்றினமுன்னர், முடியத்தோன்றும். இன்னென்சாரியை எ - று உ - ம். வரகினை, வரகினொடு, நாகினை, நாகினொடு, எனவொட்டுக. முற்றவென்றதனால், பிறசாரியைபெறுவனவுங்கொள்க. வழக்கத்தாற்பாட்டாராய்ந்தான், கரியதனை, கரியதனொடு, எனவரும். [உ௩]

**நெட்டெழுத்திம்பரொற்றுமிகத்தோன்று -**
**மப்பான்மொழிகளல்வழியான.**

என்னின். அவற்றுட்சிலவற்றிற்கெய்தியது விலக்கிற்று. நெட்டெழுத்தின்பின்னாக, இடை, இனவொற்றுமிகத்தோன்றும். அக்கூற்றுமொழிகளல்லாதவிடத்தின்கண்ணே. அவ்வீறு இன்சாரியை பெறுவதாண்டாயிற்பெறாது. எ - று. உ - ம். யாட்டை, யாட்டொடு, எனவரும் அப்பான்மொழிகளாவன க ச த பக்கள். இவை இனவொற்றுமிகாதென்று கொளக. தோன்றுமென்றதனான், உயிர்த்தொடர்மொழியும் இன்பெறாதினவொற்று மிகுதல்கொள்க. முயிற்றை, முயிற்றொடு, எனவரும். [உச]

**அவைதாம் - இயற்கையவாகுஞ்செயற்கையவென்ப.**

என்னின். மேற்சாரியைவிலக்கப்பட்டவற்றிற்கு முடிபுகூறுதலுதலிற்று. மேற்சாரியைபெறாவென விலக்கப்பட்ட வவைதாம் இயல்பாய்முடிதலையுடையவாகுஞ் செய்தியையுடையவென்றுசொல்லுவர். எ - று. உ - ம். யாட்டை, யாட்டொடு, எனவொட்டுக. செயற்கையவென்றதனான, இனவொற்றுமிக்கன சிறுபான்மையின்பெறுதலுங்கொள்க. யாட்டினை, யாட்டினொடு, முயிற்றினை, முயிற்றினொடு, எனவரும். [உரு]

**எண்ணினிறுதியன்னொடுசிவணும.**

எனனின். அவ்வீற்றெண்ணுப்பெயர்முடிபுகூறுதலுதலிற்று. எண்ணுப்பெயர்களினது குற்றுகரவீறு அன்சாரியையோடுபொருந்தும். எ - று. உ-ம். ஒன்றனை, ஒன்றனொடு, இரண்டனை, இரண்டனொடு, எனவொட்டுக. [உசு]

**ஒன்றுமுதலாகப்பத்தூர்ந்துவரூஉ - மெல்லாவெண்ணுஞ்சொல்லுங்காலை - யானிடைவரினுமானமிலலை -யஃதென்கிளவியாவயிற்கெடுமே - யுய்தல்வேண்டும்பஃகான்மெய்யே.**

என்னின். இதுவுமது. ஒன்றென்னுமெண்ணுப்பெயர்முதலாக, பத்தென்னுமெண்ணுப்பெயரானூரப்படடுவருமெல்லாவெண்ணுப்பெயர்களும் முடிபுசொல்லுங்காலத்து, அவ்வீற்றிற்கு மேற்கூறியவன்னேயன்றி, ஆன்சாரியையிடையரினுங்குற்றமில்லை. அவவான்சாரியைபெற்றவழி, அஃதென்னுஞ்சொற்கெடும். அதுகெடுவழி, அவ்வகரத்தானூரப்பட்ட பகரமாகிய மெய் கெடாதுநிற்றலைவேண்டும். எ - று. உ - ம். ஒருபானை, ஒருபானொடு, ஒருபஃதினை, ஒருபஃதினொடு, இருபஃதினை, இருபஃதினொடு, எனவொட்டுக. சொல்லுங்காலையென்றதனான், ஒன்பதென்னுமெண்ணுப்பெயரும் ஆன்பெற்றவ்வீற்றின், அதுவென்னுஞ்சொற்கெட்டு முடிதல்கொள்க. ஒன்பானை, ஒன்பானொடு, எனவொட்டுக. [உஎ]

**யாதெனிறுதியுஞ்சுட்டுமுதலாகிய - வாய்தவிறுதியுமன்னொடு சிவணு - மாய்தங்கெடுதலாவயினான.**

என்னின். இதுவும் அக்குற்றுகரவீற்றுட்சிலவற்றிற்கு முடிபுகூறுதனு தலிற்று. யாதெனவருங் குற்றுகரவீறும் சுட்டெழுத்தினைமுதலாகவுடையவா ய்தத்தொடர்மொழிக் குற்றுகரவீறும் அன்சாரியையோடுபொருந்தும், அவ் விடத்தாய்தங்கெடுக. எ - று. உ - ம். யாதனை, யாதனொடு, அதனை, அதனொ டு, இதனை, இதனொடு, உதனை, உதனொடு, எனவொட்டுக. [உஅ]

**ஏழனுருபிற்குத்திசைப்பெயர்முன்னர்ச் - சாரியைக்கிளவியியற் கையுமாகு - மாவயினிறுதிமெய்யொடுங்கெடுமே.**

என்னின். இதுவுமது. குற்றுகரவீற்றுட் சிலவற்றிற்கேழாமுருபோடு முடிபுகூறுதனுதலிற்று. ஏழாம்வேற்றுமைககு, திசையையுணரநின்றபெய ர்களின்முன்னர், இவ்வீற்றிற்கு முன்கூறியவின்சாரியையாகிய சொன்னின்று முடிதலேயன்றி, நில்லாதியல்பாய்முடியும். இயல்பாயவழிப் பெயரிறுதிக்குற் றுகரம் தன்னானூரப்பட்ட மெய்யோடுங்கெடும். எ - று. உ - ம். வடக்கி ன்கண், கிழக்கின்கண், தெற்கின்கண், மேற்கின்கண், எனவும், வடக்கண், கிழக்கண், தெற்கண், மேற்கண், எனவும்வரும். உருபுமுற்கூறியவதனல், கீழ்சார், கீழ்புடை, மேல்சார், மேல்புடை, தென்சார், தென்புடை, வடசார், வடபுடையென, இவ்வாறுசாரியை பெறுதுதிரிந்து முடிவனவெல்லாங்கொ ள்க. [உகூ]

**புள்ளியிறுதியுமுயிரிறுகிளவியுஞ் - சொல்லியவல்லவேனையவெ ல்லாந் - தேருங்காலையுருபொடுசிவணிச் - சாரியைநிலையுங்கடப்பாடி லவே.**

என்னின. இவ்வோத்திற்கெல்லாம்புறனடை. புள்ளியீற்றுச்சொல்லும், உயிரீற்றுச்சொல்லுமென, முன்புசொல்லியவையல்லாத வொழிந்தவையெல் லாம் ஆராயுங்காலத்து, உருபுகளோடுபொருந்தியின்சாரியைநின்று முடியுமு றைமையயுடையவல்ல. நின்றும் நில்லாதுமுடியும். எ - று. புள்ளியீற்று ளொழிந்தனவைந்து. உயிரீற்றுளொழிந்ததொன்று. இவையும், எடுத்தோதிய வீற்றுளொழிந்தனவும், எல்லாம் ஈண்டுக்கொள்ளப்படும். உ - ம். மண் ணினை, மண்ணை, வேயினை, வேயை, நாரினை, நாரை, கல்லினை, கல்லை, முள் ளினை, முள்ளை, எனவும், கிளியினை, கிளியை, எனவும். பொன்னினை, பொன் னை, தாழினை, தாழை, தீயினை, தீயை, கழையினை, கழையை, என்வுமொட்டுக. புள்ளியீற்றுள் ஒழிந்தனபலவாகலின், அது முற்கூறப்பட்டது. தேருங்காலை யென்றதனன், உருபுகள் நிலைமொழியாகநின்று தம்பொருளோடு புணருமவழி முடியு முடிபுவேற்றுமையெல்லாங்கொள்க. மண்ணினைக்கொணர்ந்தான்; நம்பியைக்கொணர்ந்தான்; கொற்றனைக்கொணர்ந்தான்; மலையொடுபொரு து மரத்தாற்புடைத்தான்; மரத்துக்குப்போனான்; காக்கையிற்கரிது; காக் கையதுபலி; மரத்துக்கட்கட்டினான்; எனவுமொட்டுக. இஃதுருபியலாகலின், உருபொடுசிவணி யெனவேண்டாவன்றே, அதனான், உருபு புணர்ச்சிக்கட்செ ன்றசாரியைகளெல்லாம் ஈற்றுப்பொதுமுடிபுள்வழிப் பொருட்புணர்ச்சிக்கண் ணுஞ்செல்லுமென்பதுகொள்க. இன்னுமதனனே, உயிரீறும் புள்ளியீறு ம் சாரியை பெறுதியல்பாய் முடிவனகொள்க. நம்பியை, கொற்றனை, என வரும். [கூ0]

ஆறுவது உருபியன் முற்றிற்று.

[ எ ]

# ஏழாவது உயிர்மயங்கியல்.

அகரவிறுதிப்பெயர்நிலைமுன்னர் -
வேற்றுமையல்வழிக்கசதபத்தோன்றிற் -
றத்தமொத்தவொற்றிடைமிகுமே.

என்பது சூத்திரம். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின் ;—உயிரீறு வன்கணத்தோடுஞ் சிறுபான்மைபிறகணத்தோடு மயங்கி, புணருமியல் புணர்த்தலின், உயிர்மயங்கிய லென்னும்பெயர்த்து. மேலுருபுபுணர்ச்சிகூறியீண்டுப் பொருட்புணர்ச்சி கூறுகின்றமையின், மேலதனோடியையுடைத்தாயிற்று. இத்தலைச் சூத்திரமெனனுதலிற்றோவெனின்;—அகரவீற்றுப் பெயர்க்கு, வன்கணத்தோடல் வழிமுடிபு கூறுதனுதலிற்று. அகரமாகிய விறுதியையுடைய பெயர்ச் சொன்முன்னர், வேற்றுமை யல்லாதவல்வழிக்கட் க ச த ப முதன்மொழி வருமொழியாய்த் தோன்றில், தத்தமக்குப் பொருந்தினவக் க ச த ப க்களாகிய வொற்று இடைக்கண்மிகும். எ-று. உ-ம். விளக்குறிது, மகக்குறிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். 'ஒத்த வொற்றென்றது, தகத மென்றதனான், அகரவீற்றுரிச்சொல் வல்லெழுத்துமிக்கும், மெல்லெழுத்துமிக்கும், முடியு முடிபும், இடைச்சொற்க ளெடுத்தோதாதவற்றின்முடிபும், அகரம் தன்னை யுணரநின்றவழிமுடியுமுட புங்கொள்க. தடக்கை, தவக்கொண்டான், எனவிவையுரிச்சொல்வல்லெழு, துப்பேறு. தடஞ்செவி, தடந்தோள், என விவைமெல்லெழுத்துப்பேறு. ம ட வ மன்ற தடவுநிலைக்கொன்றை. என்பதிடைச் சொன்முடிபு. அக்குறிது, சிறிது, தீது, பெரிது, என்பது தன்னையுணரநின்றவழி, வல்லெழுத்து மிகுதி. அவ்யாது, என்பதும் இடையெழுத்து மிகுதி. அவ்வழகிது, என்பதற்கு உயிர்க்கணத்து முடிபு. [க]

வினையெஞ்சுகிளவியுமுவமக்கிளவியு - மெனவெனெச்சமுஞ் சுட்டினிறுதியு - மாங்கவென்னுமுரையசைக்கிளவியு - ஞாங்கர்க் கிளந்தவல்லெழுத்துமிகுமே.

என்னின். அகரவீற்று வினைச்சொன்முடிபும், இடைச்சொன்முடிபுங் கூறுதனுதலிற்று. அகரவீற்றுவினையெச்சமாகியசொல்லும் உவமச்சொல்லும் எனவென்றுசொல்லவருகின்ற வெச்சச்சொல்லும் சுட்டாகியவகரவீறும் ஆங்கவென்று சொல்லப்படுமுரையசையாகியசொல்லும் மேலைச்சூத்திரத்துச்சொன்னவல்லெழுத்து மிக்குமுடியும். எ - று. உ - ம். உணக்கொண்டான், தினக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான், என்பனவினையெச்சம். மேலனவெல்லாம் இடைச்சொல், புலிபோலக்கொன்றான், என்பது உவமம். கொள்ளெனக்கொண்டான், என்பது எனவெனெச்சம். அக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன், என்பனசுட்டினிறுதி. ஆங்கக்கொண்டான். என்பது உரையசைக்கிளவி. [உ]

சுட்டின்முன்னர் ஞ ந மத்தோன்றி - னொட்டியவொற்றிடைமிகுதல்வேண்டும்.

என்னின். அகரச்சுட்டு மென்கணத்தோடுமுடியு மாறு கூறுதனுதலிற்று. அகரச்சுட்டின் முன்னர், ஞ ந மக்கண் முதலாகியமொழி வருமொழியாய்த்

தோன்றில், தத்தமக்குப் பொருந்திய வொற்று இடைக்கண்ணே மிகுதலை வேண்டும். எ - று. உ-ம் அஞ்ஞாலம், ஞால், மணி, எனவரும். [௩]

**யவமுன்வரினேவகரமொற்றும்.**

என்னின், சுட்டு இடைக்கணத்தோடு முடியுமாறு கூறுதனுதலிற்று. யகர வகரம் முதன்மொழியாகச் சுட்டின்முன்னேவரின், இடைக்கண் வகர மொற்றும். எ - று. உ - ம். அவ்யாழ், அவ்வளை, எனவரும். [௪]

**உயிர்முன்வரினுமாயியறிரியாது.**

என்னின். அச்சுட்டு உயிர்க் கணத்தோடு முடியுமாறுணரற்று, உயிர்முதன் மொழி அகரச்சுட்டின் முன்னர்வரினும், மேற்கூறியவகரம் மிக்குமுடியு மிவ் வியல்பிற்றிரியாது. எ - று. உ - ம் அவ்வாடை, அவ்வாண்டை, எனவொட்டுக. இடைமிக்க வகரததினை "நெறியியலென்றவிலேசினுன்" இரட்டுதல் கூறினமை யின், அது நிலைமொழித்தொழிலென்பதுவே கூறப்பட்டது. திரியாது என்றதனு னே, மேற்சுட்டு நீண்டவழி யகரந்தோடுகொள்க. [௫]

**நீடவருதல்செய்யுளுளுரித்தே.**

என்னின். அச்சுட்டுச்செய்யுளுண் முடியுமாறு கூறுதனுதலிற்று. அக ரச்சுட்டிற்கு, நீளும்படியாக வருதல் செய்யுளிடத்துரித்து. எ - று. உ-ம். "ஆயிருதிணையினிசைக்கு மன்சொல்லே" எனவரும். வருமொழிவரையாது கூறினமையின், இம்முடிபு வன்கணமொழிந்தகணமெல்லாவற்றோடுஞ் சென்றது. உதாரணம்பெற்றவழிக்கொள்க. [௬]

**சாவவென்னுஞ்செயவெனெச்சத்-திறுதிவகரங்கெடுதலுமுரித்தே.**

என்னின். மேல்வினையெஞ்சு கிளவியுமென்ற முடிபிற் கெய்தாததெய்து வித்தனுதலிற்று. சாவவென்று சொல்லப்படுஞ் செயவெனெச்சத்திறுதிக்கண் அகரமும், அதனுற் பற்றப்பட்ட வகரவொற்றும் கெடாதுநிற்றலேயன்றி, கெட்டுமுடிதலுமுரித்து. எ - று. உ - ம். சாக்குத்தினுன், சீறினுன், தகர்த்தான், புடைத்தான், எனவரும. இதனைவினையெஞ்சுகிளவியுமென்றதன்பின் வையாதமுறையன்றிய கூற்றினுன், இயல்பு கணத்தும், அந்நிலைமொழிக்கேடு கொள்க. சாஞான்ருர், எனவரும. [௭]

**அன்னவென்னுமுவமக்கிளவியு- மண்மைசுட்டியவிளிநிலைக்கிளவியுஞ்-செய்ம்மனவென்னுந்தொழிலிறுசொல்லு- மேவல்கண்ணியவியங்கோட்கிளவியுஞ்- செய்தவென்னும்பெயரொஞ்சுகிளவியுஞ்- செய்யியவென்னும்வினையெஞ்சுகிளவியு -மம்மவென்னுமுரைப்பொருட்கிளவியும்- பலவற்றிறுதிப்பெயர்க்கொடையுளப்பட- வன்றியனைத்துமியல்பெனமொழிப.**

என்னின். இஃது அகரவீற்று ளொருசார்ப்பெயர்க்கும், வினைக்கும், இடைக்கும், முன்னெய்தியது விலக்கியும், எய்தாததெய்துவித்தும், முடிபுகூறுதனுதலிற்று. அன்னவென்பதும்செய்யியவென்பதும்பலவற்றிறுதிப்பெயர்க்கொடையென்பதும் எய்தியது விலக்கின. மற்றையனவெய்தாததெய்துவித்தன. அன்னவென்று சொல்லப்படுமுவம வுருபாகிய விடைச்சொல்லும், அணியாளைக்கருதிய விளியாகிய நிலைமையையுடைய வுயர்திணைப்பெயர்ச்சொல்லும், செய்ம்மனவென்று சொல்லப்படும் வினைச்சொல்லாகிய அகரவீற்றுச்சொல்லும்,

ஏவலைக்கருதிய வியங்கோளாகிய வினைச்சொல்லும், செய்தவென்று சொல்லப்படும் பெயரொச்சமாகிய வினைச்சொல்லும், செய்யியவென்று சொல்லப்படும் வினையெச்சமாகிய வினைச்சொல்லும், அம்மவென்று சொல்லப்படுமுரையசைப்பொருண்மையையுடைய விடைச்சொல்லும், பன்மைப்பொருள்களின் அகரவீற்றுப்பலவென்னும்பெயர்ச்சொல்லுமாகியவவ்வனைத்துச்சொல்லும் இயல்பாய்முடியுமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. உ-ம். பொன்னன்னகுதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும், ஊரகொள், செல், தா, போ, எனவும், உண்மனகுதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும், செல்ககுதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும், உண்டகுதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும், இதனெதிர்மறை உண்ணுதகுதிரை, எனவும், இதன்குறிப்பு நல்லகுதிரை, செந்நாய், எனவும், உண்ணியகொண்டான், சென்றான், தந்தான், போயினான், எனவும், அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா, எனவும, பலகுதிரை, செந்நாய், தகர், பன்றி, எனவும்வரும். ஊரகொள், என்பது உயிரீறாகிய் வுயர்திணைப் பெயரொன்பதனுள் அடங்காதோவெனின்;— ஊரனென்பது உளரவெனவீறுதிரிந்தமையின், ஆண்டடங்காதா யிற்றென்பது. விளிநிலைக்கிளவியாகிய பெயரைமுன்வைத்ததனால், செய்தவென்பதன் மறையன்றிச்செய்யுமென்பதற்கு மறையாகிய செய்யாதவென்பதும் அவ்வியல்புடைத்தெனக்கொள்க. அது வாராதகொற்றன். எனவரும். உரையிற்கோடலென்பதனால், வியங்கோள் முன் வைக்கற்பாலதனைமுன்வையாது, செய்ம்மனவென்பதனை முன்வைத்ததனான், இவ்வியல்புமுடிபின் கட்செய்ம்மனவென்பது சிறப்புடைத்தெனப்பெறப்பட்டது. அதனால், ஏவல்கண்ணுத வியங்கோளும் இவ்வியல்பு முடிபுடைத்தெனக்கொள்க. அது மன்னியபெருமநீ எனவரும். பலவற்றிறுதிப்பெயர்க்கொடையென்பதனை, அம்ம வென்பதற்கு முன்வையாததனால், பலவென்பது மேற்கூறுஞ்செய்யுண்முடிபிற்றிரிந்து முடிதல், ஈண்டையியல்பிற்சிறப்பின்றென்பதூஉம். அகரவீற்றுள் முடிபுகூறுதமுற்று வினையும் வினைக்குறிப்பும் அவ்வியல்பினவென்பதூஉம், பெறப்படும். உண்டனகுதிரை, என்பதுமுற்றுவினை. கரியகுதிரை என்பது முற்றுவினைக்குறிப்பு. தன்னினமுடித்தலென்பதனால், பலவென்பதினினமாகிய சிலவென்பதற்கும், அவ்வியல்புகொள்க. சிலகுதிரை எனவரும். [அ]

வாழியவென்னுஞ்சேயென்கிளவி - யிறுதியகரங்கெடுதலுமுரித்தே.

என்னின். ஏவல்கண்ணுதவியங்கோட்களில், ஒன்றற் கெய்தியவியல்பு விலக்கி விகாரங்கூறுதனுதலிற்று. வாழியவென்று சொல்லப்படுகின்ற வவ்வாழுங்காலமண்மையவன்றி, சேய்மையவென்றுணர்த்துஞ்சொல் தன்னிறுதிக்கண் அகரமும் அதனாற்பற்றப்பட்டயகரவொற்றும் கெடாது முடிதலேயன்றி, கெட்டுமுடிதலுமுரித்து. எ-று. உ-ம். வாழிகொற்றா, எனவரும், சேயென்கிளவியென்றதனான், அம்முடிபு இவ்வாழியவென்பதற்கு, ஏவல் கண்ணுதநிலையதென்பது விளக்கியநின்றது. ஒன்றின முடித்தலென்பதனால், பிறகணைத்துக்கண்ணு மிவ்விதிகொள்க. வாழிஞெள்ளா, எனவரும். [கூ]

உரைப்பொருட்கிளவிநீட்டமும்வரையார்.

என்னின். அம்மவென்பதற்கெய்தாத தெய்துவித்தனுதலிற்று. உரையசைப் பொருண்மையினையுடைய அம்மவென்னுமிடைச்சொல் தன்னீற்றகரம் அகரமாய் நிற்றலேயன்றி. ஆகாரமாய்நீண்டுமுடிதலேயும் வரையார். எ-று.

உ-ம். அம்மாகொற்றூ, எனவரும். ஒன்றினமுடித்தலென்பதனன், அந்நீட்சி இயல்பு கணத்துங்கொள்க. அம்மாஞெள்ளா, எனவரும். [௰]

பலவற்றிறுதிநீடுமொழியுளவே-
செய்யுள்கண்ணியதொடர்மொழியான.

என்னின். மேற்பலவற்றிறுதிப்பெயர்க்கொடையென்றோதியதற்குச் செய்யுண்முடிபு கூறுதனுதலிற்று. பலவென்னுஞ் சொல்லினிறுதியகரம் நீண்டுமுடியுமொழிகளுமுள. யாண்டுளவெனில்;—செய்யுளாதலைக் கருதியவொன்றோடொன்று தொடர்ச்சிப்படுஞ் செய்யுண்முடிபுடைய மொழிகளின்கண்ணே எ - று. செய்புள்கண்ணியமொழியென்னுது, தொடர்மொழியென்றதனுன், இப்பலவென்பது நீளும்வழி, வருமொழியாவது சிலவென்பதேயென்று கொள்ளப்படும். செய்யுளானவென்னுது, செய்யுள்கண்ணியதொடர்மொழியாண என்றதனுல், பலவென்னுமொழியீறு நீண்டவழி, நிலைமொழியகரப்பேறும், வருமொழி ஞகாரமெல்லெழுத்துப்பேறும், வழிமொழியீறுநீண்டவழி, அகரப்பேறும், மகரமாகியமெல்லெழுந்துப்பேறுங் கொள்க. உண்டென்னுது, உளவென்றதனுல், சிலவென்னும்வருமொழி யிறுதி நீடலுங்கொள்க. உ - ம். "பலா அஞ்சிலா அமென்மனுர் புலவர்" எனவரும், இதன்சொன்னிலை பலசிலவென்னுஞ்செவ்வெண். [௧௧]

தொடரலிறுதிதம்முற்றும்வரின் - லகரம்றகரவொற்றுதலுமுரித்தே.

என்னின். பலசிலவென்பதற்கியல்பேயன்றித் திரிபுண்டெனவெய்திய தன்மேற்சிறப்புவிதி கூறுதனுதலிற்று. தொடர்மொழியல்லாத வீரெழுத்தொருமொழியாகிய பலசிலவென்னும் அகரவீற்றுச்சொல் தம்முன்னேதாம்வரில், தம்மீற்றினின்ற லகரவொற்று றகரவொற்றுய்த்திரிந்து முடிதலுமுரித்து. எ - று. உ - ம். பற்பலகொண்டார், சிற்சிலவித்தி, எனவரும். தன்முற்றுனென வொருமையாற்கூறுது, தம்முற்றும்வரினென்றபன்மையான், மேனின்ற பலசிலவெனநின்றவிரண்டும் தழுவப்பட்டன. தொடரலிறுதி தம்முன்வரினென்னுது, தாமென்றதனுன், இம்முடிபின்கட்பலவென்பதன்முன் பல வருக. சிலவென்பதன்முன் சிலவருக. என்பதுகொள்ளப்பட்டது. லகரம் றகரமாமென்னுது, லகரம் றகரவொற்றுமென்ற ஞாபகத்தான், அகரம் கெடுமென்றுணைக்கொள்க. அருத்தாபத்திமுகத்தால், தம்முற்றும்வரின், லகரம் றகரவொற்றுமெனவே, தம்முற்பிறவந்தவிடத்துலகரம் றகரவொற்றுகாது, அகரம் கெடுமென்பதுகொள்ளப்படும். பல்படை, பல்யாணை, சில்படை, சில்வேள்வி, எனவரும். தொடரலிறுதியென்பது சுட்டல்லது, ஓரெழுத்தொருமொழி அகரமின்மையின், ஓரெழுத்தொருமொழிமேற் செல்லாதாயிற்று. உரித்தென்றது அகரவீற்றொருமைபற்றி. [௧௨]

வல்லெழுத்தியற்கையுறழத்தோன்றும்.

என்னின். இதுவும்மேற்கூறியவிரண்டிற்கும், இன்னுமோர்முடிபுவேற்றுமையுணரற்று. மேற்கூறிய பலசிலவென்னுமிரண்டிற்கும், அகரவீற்றுப்பொதுவிதியிற்கூறிய வல்லெழுத்துமிகுத்தியதியல்பு மிகுதலும், மிகாமையுமாகியுறழ்ந்துவரத்தோன்றும். எ - று. உ - ம். பலப்பல, சிலச்சில, பலபல, சிலசில, எனவரும். ஈண்டுந்தம்முற்றும்வருதல் கொள்க. இயற்கையென்றதனுன், முன்கூறியபற்பல, சிற்சில, என்னுமுடிபோடு, பல்பல, சில்சில, என்

னுமுடிபுபெற்றுறழ்ச்சியாதல்கொள்க. தோன்றுமென்றதனன், அகரங்கெட லகரம் ஆய்தமும், மெல்லெழுத்துமாய்த்திரிந்து முடிதல்கொள்க. உ-ம் பஃறுனை, பன்மரம், சிஃறுழிசை, சின்னூல், எனவரும். [௧௩]

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே.

என்னின். அகரவீற்றுப்பெயர்க்கு வன்கணத்தோடு வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. அகரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணும், மேற்கூறிய வல்வழியோடொருதன்மைத்தாய், க ச த ப முதன்மொழி வந்தவழி, தத்தமொற்றிடைமிகுமுடியும். எ - று. உ - ம். * இருவிளக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன், எனவரும். விளக்குறுமை, எனக்குண வேற்றுமைக்கண்ணுங்கொள்க. [௧௪]

மரப்பெயர்க்கிளவிமெல்லெழுத்துமிகுமே.

என்னின். அகரவீற்றுமரப்பெயர்க் கிளவிக்கெய்தியதுவிலக்கிப் பிறிது விதிவகுத்தனுதலிற்று. அகரவீற்று மரப்பெயராகியசொல் மெல்லெழுத்து மிக்குமுடியும். எ - று. உ - ம. விளங்கோடு, விளஞ்செதிள், தோல், பூ, எனவரும். [௧௫]

மகப்பெயர்க்கிளவிக்கின்னேசாரியை.

என்னின். அவ்வீற்றுள் ஒன்றற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. அகரவீற்றுமகவென்னும் பெயர்ச்சொலிற்கு, வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்வருஞ்சாரியை இன். எ - று. உ - ம். மகவின்கை, செவி, தலை, புறம், எனவரும். சாரியைப்பேறுவரையாதுகூறியவழி, நான்குகணத்துக்கண்ணுஞ் செல்லுமென்பதாகலின், மகவின்ஞாண், எனவியல்புகணத்துக்கண்ணுங்கொள்க. [௧௬]

அத்தவண்வரினும்வரைநிலையின்றே.

என்னின். இதுவுமது. மேற்கூறியவின்னேயன்றி, அத்தென்னுஞ்சாரியையியைபு வல்லெழுத்தினோடு, அம்மகவென்னுஞ் சொல்லிடத்து வந்து முடியினுநீக்குநிலைமையின்று. எ-று. உ - ம். மகத்துக்கை, செவி, தலை, புறம், எனச்செய்கை யறிந்துமுடிக்க. அவணென்றதனால், மகப்பால்யாடு என, வல்லெழுத்துப்பேறும, மகவின்கை என, மேலின்சாரியைபெற்ற வழியியைபு வல்லெழுத்து வீழ்வும், உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கண் வந்தவழி, விளவின்கோடு என, இயைபுவல்லெழுத்து வீழ்வுங்கொள்க. நிலையென்றதனால், மகம்பால்யாடு என, மெல்லெழுத்துப் பேறுங்கொள்க. [௧௭]

பலவற்றிறுதியுருபியனிலையும்.

என்னின். இஃது அவ்வீற்று ளொன்றற் கெய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுத்தனுதலிற்று. பலவென்னும் அகரவீற்றுச்சொல் உருபுபுணர்ச்சிக்கண், வற்றுப்பெற்றுப்புணர்ந்த வியல்பின்கண்ணே நிற்கும். எ - று, உ-ம். பலவற்றுக்கோடு, செவி, தலை, புறம், எனவரும். [௧௮]

---

* இருவிளவென்றது ஓலை - வேணாட்டகத்தோரூர்

**ஆகாரவிறுதியகரவியற்றே.**

என்னின். ஆகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண்முடியுமாறுணரற்று. ஆகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண், அகரவீற்றல்வழியதியல்பிற்றாய், வல்லெழுத்துப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். தாராக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். [கக]

**செய்யாவென்னும்வினையெஞ்சுகிளவியு - மவ்வியறிரியாதென்மனார்புலவர்.**

என்னின், இஃது அவ்வீற்றுவினைச்சொன்முடிபுகூறுதனுதலிற்று. பெயரோயன்றி, செய்யாவென்று சொல்லப்படுமாகாரவீற்று வினையெச்சச்சொல்லும் வல்லெழுத்து மிக்குமுடியுமவ்வியல் பிற்றிரியாதென்று சொல்லுவர் புலவர். எ - று. உ-ம். உண்ணாக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினன், எனவரும். திரியாதென்றதனால், செய்யாவென்னும் பெயரெச்சமும் அவ்வாறு முடியுமெனக்கொள்க. உண்ணாக்கொற்றன், எனவரும். [உ0]

**உம்மையெஞ்- யவிருபெயர்த்தொகைமொழி - மெய்ம்மையாகவகரமிகுமே.**

என்னின். அவ்வீற்றல்வழிக்கண், உம்மைத் தொகைமுடிபுகூறுதனுதலிற்று. உம்மைதொக்கவிருபெயராகிய தொகைச்சொல் மெய்யாகநிலைமொழியீற் றகரம் மிக்குமுடியும். எ-று. உ - ம். உவா அப்பதினான்கு. மெய்ம்மையாகவென்றதனால், வல்லெழுத்துக்கொடுக்க. உம்மைதொக்கவென்றது, எஞ்சியவென்ற வாய்பாட்டு வேற்றுமையான், இம்முடிபு இருபெயரொட்டுப்பண்புத்தொகைக்குங்கொள்க, அராஅப்பாம்பு, எனவரும். இன்னுமதனான், எழுவாய்முடிபிற்கும், பெயரொச்சத்திற்கும், அ[illegible] வுகொள்க. இராஅக்கொடிது, இராஅக்காக்கை, எனவரும். நிலைமொ[illegible] ந்துப்பேறு வருமொழிவரையாதுகூறினவழி, நான்குகணத்துக்கண்ணுஞ்செல்லுமாகலின், இயல்புகணத்துக்கண்ணும், அகரப்பேறுகொள்க. இரு அவழுதுணங்காய், எனவரும். [உக]

**ஆவுமாவும்விளிப்பெயர்க்கிளவியும் - யாவென்வினாவும்பலவற்றிறுதியு - மேவல்குறித்தவுரையசைமியாவுந் - தன்றொழிலுரைக்கும்வினாவின்கிளவியோ - டன்றியனைத்துமியல்பெனமொழிப.**

என்னின். அவ்வீற்றிற்சிலவற்றிற் கியல்புகூறியெய்தியதுவிலக்குதலும், எய்தாததெய்துவித்தலுநுதலிற்று. ஆவென்னும்பெயர்ச்சொல்லும், மாவென்னும்பெயர்ச்சொல்லும், விளித்தலையுடைய பெயராகியவுயர்திணைச்சொல்லும், யாவென்னும்வினாப்பெயரும், அஃறிணைப்பன்மைப்பொருளையுணர்த்து மாகாரவீற்று முற்றுவினைச்சொல்லும், முன்னிலையில், ஏவல்வினைச்சொல்லைக்குறித்துவருமுரையசையாகியமியாவென்னுமாகாரவீற்றிடைச் சொல்லும், தன்து தொழிவினைச்சொல்லு மாகாரவினாவினையுடைய வினைச்சொல்லுமாகிய அவ்வனைத்தும் இயல்பாய்முடியுமென்று சொல்லுவர்புலவர். எ - று. உ - ம். ஆகுறிது; சிறிது, தீது. பெரிது, எனவும். மாகுறிது ; சிறிது, தீது, பெரிது. எனவும். ஊராகொள்; செல், தா, போ, எனவும். யாகுறிய; சிறிய, தீய, பெரிய, எனவும். உண்ணுகுதிரை; செந்நாய், தகர், பன்றி, எனவும். கேண்மியாகொற்றா; சாத்தா, தேவா, பூதா, எனவும். உண்காகொற்றா; சாத்தா, தேவா, பூதா, எனவும்வரும். விளிப்பெயர்க்கிளவியும்; பலவற்றிறுதியும், ஏவல்குறித்த வுரையசைமியாவும், தன்றொழிலுரைக்கும் வினாவும்,

எய்தாததெய்துவிக்கப்பட்டன. ஊராகொள் என்பது உயிரீறுகியவுயர்திணைப் பெயரொனபதனுள், அடங்காதோவெனின்;— முன்கூறிற்றேகூறுக. [௨௨]

## வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே.

என்னின். அவ்வீற்று வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. ஆகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண்ணேயனறி, வேற்றுமைக்கண்ணும் அகரவீற்றல்வழியோடொருதன்மைத்தாய், வல்லெழுத்துவந்தவழி, வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். தாராக்கால், சிறகு, தலை, புறம், எனவரும். [௨௩]

## குறியதன்முன்னருமோரெழுத்துமொழிக்கு - மறியத்தோன்றுமகரக்கிளவி.

என்னின். அவ்வீற்றிற்சிலவற்றிற்கெய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. குற்றெழுத்தின்முன்னின்ற ஆகாரவீற்றிற்கும், ஓரெழுத்தொருமொழி யாகாரவீற்றிற்கும, நிலைமொழிக்கண், அகரமாகியவெழுத்து அறியத்தோன்றும். எ - று. உ - ம். பலா அக்கோடு, செதிள், தோல், பூ, எனவும், காஅக்குறை, செய்கை, தலை, புறம், எனவும்வரும். ஓரெழுத்தொருமொழி முற்கூறுதவதனல், அதன்கண், அகரப்பேறு, சிறுபான்மையெனக்கொள்க. அறியவென்றதனல், அவ்விருவழியும், அகரம் பொருந்தியவழியே வருதலும், அவ்வீற்றுவேற்றுமையுள், எடுத்தோதாதவற்றினமுடியும், இவ்வீற்றுள், உருபிற்குச்சென்றசாரியை பொருட்கட்சென்ற வழி, இயைபு வல்லெழுத்துவீழ்வும், இவ்வுபிரீற்றில்வரு முருபீற்றுச்செய்கையுங்கொள்க. உ-ம், அண்ணஅத்துக்குளம், உவா அத்துஞான்றுகொண்டான ; உவாஅத்தாற்கொண்டான; யாவற்றுக்கோடு, எனவிவை பிறமுடிபு. மூங்காவின்றேல் எனபது வல்லெழுத்து வீழ்வு. இடாவினுட்கொண்டான்; எனபது உருபீற்றுச்செய்கை. [௨௪]

## இராவென்கிளவிக்ககரமில்லை.

என்னின். அவ்வகரப்பேற்றிற்கொருவழியெய்தியது விலக்குதனுதலிற்று. இராவென்னு மாகாரவீற்றுச்சொல்லிற்கு, முன்கூறிய அகரபேறில்லை. எ - று. உ - ம். இராக்கொண்டான், எனவரும். [௨௫]

## நிலாவென்கிளவியத்தொடுசிவணும்.

என்னின். அவ்வீற்றுள், ஒருவழியகரம்விலக்கி, அத்துவகுத்தனுதலிற்று. நிலாவென்னுஞ்சொல் அத்துச்சாரியையோடு பொருந்திமுடியும். எ - று. உ - ம். நிலாத்துககொண்டான்; எனவரும். நிலைமொழித்தொழிலை நிலைமொழித்தொழில் விலககுமாகலின், அத்துவகுப்ப, அகரம்வீழ்ந்தது. [௨௬]

## யாமரக்கிளவியும்பிடாவுந்தளாவு. மாமுப்பெயருமெல்லெழுத்துமிகுமே.

என்னின். அவ்வீற்றிற்சிலவற்றிற்கு வல்லெழுத்துவிலக்கிமெல்லெழுத்து விதித்தனுதலிற்று. யாவென்னுமரத்தையுணரநின்ற சொல்லும், பிடாவென்னுஞ்சொல்லும், தளாவென்னுஞ் சொல்லுமாகிய வம்மூன்றுபெயரும், வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். யாஅங்கோடு, பிடா அங்கோடு, தளா அங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். மெல்லெழுத்துப்பேறு வருமொழித்தொழிலாதலின், வருமொழிவல்லெழுத்தை விலக்கிற்று. [௨௭]

### வல்லெழுத்துமிகினுமானமில்லை.

என்னின். மேலனவற்றிற்கு, வல்லெழுத்துஞ் சிறுபான்மைமிக்குமுடியு மெனவிறந்தது காத்தனுதலிற்று. மேற்கூறியமூன்று பெயரும், மெல்லெழு த்தேயன்றி, வல்லெழுத்து மிக்குமுடியினுங் குற்றமில்லை. எ - று. உ - ம். யா அக்கோடு, பிடா அக்கோடு, தளா அக்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். மானமில்லையென்றதனால், யாமுதலியமூன்றற்கும், உருபிற்குச்சென்ற சாரி யை பொருட்கட்சென்றவழி, இயைபுவல்லெழுத்துவீழ்க்க. உ-ம். யாஅவின் கோடு, பிடாஅவின்கோடு, தளாஅவின்கோடு, எனவரும். இன்னுமதனானே, யா அத்துககோடென, சிறுபான்மையத்துப் பேறுண்டேனுங்கொள்க. அவ்வகாப் பேற்றோடுவல்லெழுத்துப்பெறுதலின். "யாமரக்கிளவியென்பதனை" "கூறிய தன்முன்னரும்" என்பதன் பின்வையாதவிதனால், இராவிற்கொண்டான்; நிலா விற்கொண்டான்; என, உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட் சென்றவழி, இயைபு வல்லெழுத்துவீழ்க்க. நிலாவிற்கொண்டானென்பதற்கு, நிலாத்துக் கொண்டான; எனபதீற்றுப்பொதுமுடிபாயின வாறறிக. [௨௮]

### மாமரக்கிளவியுமாவுமாவு - மாமுப்பெயருமவற்றோரன்ன - வகரம்வல்லெழுத்தவையவணிலையா - ணகரமொற்றுமாவுமாவும்.

என்னின். அவ்வீற்றிற் சிலவற்றிற்கெய்தியது விலக்கிப்பிறிதுவிதி கூறுதனுதலிற்று. மாமரமாகியசொல்லும், ஆவென்னுஞ்சொல்லும், மாவெ ன்னுஞ்சொல்லுமாகிய வம்மூன்றுபெயர்ச்சொல்லும் மேற்கூறிய யாமுதலி யமூன்றனோடுமெ, ஒருதன்மையவாய வல்லெழுத்துப்பெறாது, மெல்லெழுத்து ப்பெற்று முடிதலுமுடைய. அவற்றுள், ஆவும், மாவும், முன்பெற்றுநின்ற அக ரமும் வல்லெழுத்துமாகியவவை அவ்விடத்துநிலைபெறுவாய், ணகரமொற்றாக ப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். மா அங்கோடு, செதிள், தோல், பூ, என வரும். ஆனகோடு, மான்கோடு, செவி, தலை, புறம், எனவரும். "அறிய" என்றதனால், சிறுபான்மை, மாங்கோடென, அகரமின்றியும வரும். இனி அ வணென்றதனால், காயாங்கோடு, ஆணங்கோடு, நுணங்கோடு, என்றாற்போல, பிறவும்மெல்லெழுத்துப் பெறுதலும், அங்காக்கொண்டான்; இங்காக்கொண் டான்; உங்காக்கொண்டான் ; எங்காக்கொண்டான்; என, இவ்வீற்றேழாம் வே ற்றுமையிடப்பொருளுணர நின்ற விடைச்சொற்கள் வல்லெழுத்துப்பெறுதலு ம், ஆவின்கோடு, மாவின்கோடு, எனச்சிறுபான்மையின் பெறுதலும், பெற்றவ ழிவல்லெழுத்து வீழ்வுங்கொள்க. அவற்றோரன்னவென்ற மாட்டேற்றால், பெ ற்றுநின்றது மெல்லெழுத்தாகலின், அகரம் வல்லெழுத்தவையவணிலையாவெ ன்றோதற் பாலதன்றெனின்;—மேல் "ஊவென்னொருபெயராவொடு சிவணும்" என்றவழி, அம்மாட்டேற்றானே, அதன்வல்லெழுத்து வீழ்வுங் கொள்வேண் டத்திரிந்ததன்றிரிபதுவென்னு நயத்தானே மெல்லெழுத்தை, வல்லெழுத்தா னவோதினனெனக்கொள்க. [௨௯]

### ஆனொற்றகரமொடுநிலையிடனுடைத்தே.

எனனின். அவ்வீற்றுள், ஆவென்றற்கெய்தியதனைமேற் சிறப்புவிதிகூறுத னுதலிறறு. முன்புபெற்றுநின்ற ஆவென்னுஞ்சொல்லின்கண் ணகரவொற்று அகரத்தோடு நிற்றுமிடனுடைத்து. எ - று. இடனுடைத்தென்றதனான், வன் கணமொழிந்தகணத்தின் முடிபெனக்கொள்க. உ - ம். ஆனநெய்தெளித்தா ானநீவி எனவரும். அகரமொடும் என்றவும்மையான், அகரமின்றிவருதலே பெரும்பான்மையெனக்கொள்க. [௩௰]

**ஆன்முன்வரூஉமீகாரபகரந் - தான்மிகத்தோன்றிக்குறுகலுமுரித்தே.**

என்னின். இன்னும், ஆவென்பதற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. ஆவென்னுஞ்சொன்முன்னர், வருமொழியாய்வருகின்ற வீகாரத்தோடுகூடிய பகரமாகியமொழி அப்பகரமாகிய தான்மிகத்தோன்றி, அவ்வீகாரம் இகரமாகக்குறுகி முடிதலையுமுடைத்து. எ - று. தோன்றியென்றதனான், நிலைமொழிப்பெறுகிய னகரவொற்றின் கேடுகொள்க. உ - ம். ஆப்பி, எனவரும். உம்மையான், ஆனபீ, என்பதேபெரும்பான்மையெனக்கொள்க. [ருக]

**குறியதனிறுதிச்சினைகெடவுகர - மறியவருதல்செய்யுளுளுரித்தே.**

என்னின. அவ்வீற்றிற்சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுதனுதலிற்று. குறியதனிறுதிக்கணின்ற ஆகாரத்தினது சினையாகிய அகாரமாத்திரைகெட, ஆண்டு உகரமறியவருதல் செய்யுளிடத்துரித்து. எ - று. உ-ம். இறவுப்புறத்தன்ன பிணர்படுதடவுமுதல், எனவரும். அறியவென்றதனான், உகரமபெறாது சினைகெடுதலுங்கொள்க. அரவணிகொடி, எனவரும். பிணவுநாய்முடுக்கியவென்றாற்போல வருமல்வழிமுடிபு "கிளந்தவல்ல" என்னும்புறனடையதெனக்கொள்க. [ருஉ]

**இகரவிறுதிப்பெயர்நிலைமுன்னர் -**
**வேற்றுமையாயின்வலலெழுத்துமிகுமே.**

என்னின. இகரவீற்றுப்பெயர்க் கல்வழிமுடிபு தொகைமரபினுட் கூறி நின்றமையின, அதன்வேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. இகரவீற்றுப்பெயர்ச்சொன்முன்னர், அதிகாரத்நாற் க ச த ப முதன்மொழிவந்தவழி, வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயில், தமக்குப்பொருந்தின வல்லெழுந்து மிக்குமுடியும். எ - று. உ - ம். கிளிக்கால், சிறகு, தலை, புறம், எனவரும். [ருங]

**இனியணியென்னுங்காலையுமிடனும் -**
**வினையெஞ்சுகிளவியுஞ்சுட்டுமன்ன.**

என்னின். இவ்வீற்றுள், சிலவிடைச்சொல்லும வினைச்சொல்லு முடியுமாறு கூறுதனுதலிற்று. இனியென்றும, அணியென்றுஞ் சொல்லப்படுகின்றகாலத்தையும இடத்தையும் உணர நின்ற விடைச்சொல்லும் இவ்விகரவீற்று வினையெச்சமாகியசொல்லும் இவ்வீற்றுட்சுட்டாகிய விடைச்சொல்லும் மேற்கூறியவாறே வல்லெழுந்துமிக்கு முடியுந்தன்மைய. எ - று. உ - ம். இனிக்கொண்டான்; அணிக்கொண்டான், சென்றான், தந்தான, போயினான், எனவும், தேடிக்கொண்டான ; சென்றான், தந்தான், போயினான், எனவும், இக்கொற்றன்; சாத்தன், தேவன், பூதன், எனவும்வரும். [ருச]

**இன்றியென்னும்வினையெஞ்சிறுதி - நின்றவிகரமுகரமாத -**
**றென்றியன்மருங்கிற்செய்யுளுளுரித்தே.**

என்னின். இவ்வீற்றுள்வினையெச்சக்குறிப்பினு ளொன்றற்குச் செய்யுண்முடிபுகூறுதனுதலிற்று. இன்றியென்றுசொல்லப்படும் வினையெச்சத்திறுதிக்கணின்ற விகரம் உகரமாய்த்திரிந்துமுடிதல் பழகநடந்தகூற்றையுடைய செய்யுட்களிடத்துரித்து. எ - று. உ - ம். உப்பின்றுபுற்கையுண்கமா கொற்கையோனே, எனவரும். நின்றவென்றதனான், முன்பெற்றுநின்ற வல்லெழுத்து வீழ்க்க. தொன்றியன் மருங்கென்றதனால், அன்றியென்பதும் செய்யுண்முடிபிற்றாதல்கொள்க. நாளன்றுபோகிப் புள்ளிடைதட்ப, எனவரும். ருரு

### சுட்டினியற்கையுறழ்கிளந்தற்றே.

என்னின். இவ்வீற்றுச் சுட்டுப்பெயர் இயல்புகணத்தோடு முடியுமாறுகூறு தனுதலிற்று. இகரவீற்றுச்சுட்டினதியல்பு இயல்புகணம்வரும்வழியும் உயிர்க்கணம்வரும்வழியும், முன் அகரவீற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்டதன்மைத்தாம். எ - று. என்றது மென்கணம் வரும்வழி, அம் மெல்லெழுத்துமிக்கும், இடைக்கணம்வரும்வழியும், உயிர்க்கணம்வரும்வழியும், நிலைமொழி வகரம் பெற்றும், செய்யுட்கண் வகரங்கெட்டுச் சுட்டுநீண்டும் முடியும். எ - று. உ - ம். இஞ்ஞானம், இந்நூல், இம்மணி, எனவும். இவ்யாழ், இவ்வட்டு, எனவும். இவ்வடை, இவ்வாடை இவ்வெளவியம், எனவும். ஈவயினான, எனவும்வரும். [௫௬]

### பதக்குமுன்வரினே தூணிக்கிளவி-
### முதற்கிளந்தெடுத்தவேற்றுமையியற்றே.

என்னின். இவ்வீற்றல்வழிகளில், அளவுப்பெயருளொன்றற்கு, மேற்றொகைமரபினுள், எய்திய ஏ யென்சாரியையிலக்கு, வேறுமுடிபு கூறுதனுதலிற்று. பதக்கென்னுஞ்சொல் தன்முன்வரில், தூணியென்னுஞ் சொல்லளவு முனபு விதந்தெடுத்த வேற்றுமைமுடிபினியல்பிற்றாய், வல்லெழுத்துமிக்கு முடியும். எ - று. தூணிப்பதக்கு, எனவரும். வருமொழிமுற்கூறியவதனால், இருதூணிப்பதக்கு, எனவடையடுத்துவந்தவழியும், இவ்விதிகொள்க. கிளந்தெடுத்தவென்றதனால், தூணிமுன்னர், பிறபொருட்பெயர் வந்தவழியும், ஆண்டு நிலைமொழியடையடுத்துவந்தவழியும், தன்முன்னர்த்தான்வந்தவழியும், இம்முடிபுகொள்க. இன்னுமதனானே, தன்முன்னர்த்தான்வந்தவழி, இக்குச்சாரியைப்பேறுங்கொள்க. உ - ம். தூணிக்கொள், தூணிச்சாமை, எனவும், இருதூணிக்கொள், எனவும். தூணித்தூணி, தூணிக்குத்தூணி, எனவும்வரும். [௫௭]

### உரிவருகாலைநாழிக்கிளவி - யிறுதியிகரமெய்யொடுங்கெடுமே -
### டகாரமொற்றுமாவயினான.

என்னின். இதுவுமது. உரியென்னுஞ்சொல் வருமொழியாய்வந்தகாலத்து, நாழியென்னுஞ் சொற்றன்னீற்றினின்ற விகரந்தானூர்ந்துநின்றமெய்யோடுங்கெடும். அவ்விடத்து டகரம் ஒற்றாய்வரும். எ - று. உ - ம். நாடுரி, எனவரும். வருமொழிமுற்கூறியவதனான், நிலைமொழியடையடுத்து, இருநாடுரி என்றவழியும், இம்முடிபுகொள்க. இகரமென்னாது, இறுதியிகரமென்றதனால், ஈண்டைநிலைமொழியும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று, பிறபொருட்பெயரோடுவல்லெழுத்துமிக்குமுடிதலுங்கொள்க. நாழிக்காயம், உரிக்காயம், எனவரும். [௫௮]

### பனியெனவரூஉங்காலவேற்றுமைக் -
### கத்துமின்னுஞ்சாரியையாகும்.

என்னின். இவ்வீற்றுவேற்றுமையுள், ஒன்றற்குவல்லெழுத்தினோடு சாரியைபெறுமென வெய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. பனியென்றுசொல்லவருகின்ற பனிக்காலத்தைபுணரநின்ற வேற்றுமை முடிபுடையபெயர்க்கு, வருஞ்சாரியை அத்தும், இன்னும் ஆகும். எ - று. உ - ம். பனியத்துக்கொண்டான்; பனியிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். வேற்றுமை யென்றதனான், இன்பெற்றவழியியைபு வல்லெழுத்தை வீழ்க்க.. [௫௯]

வளியெனவருஉம்பூதக்கிளவியும் - அவ்வியனிலையல்செவ்விதென்ப.

என்னின். இதுவுமது. வளியென்றுசொல்லவருகின்ற விடக்கரல்லாத ஐம்பெரும பூதங்களில், ஒன்றையுணர நின்றசொல்லும் முன்னைக்கூறியவத் துமினனும பெறுமவ்வியல்பின்கண், நிற்றல்செவ்விதென்று சொல்லுவர் புலவர். எ - று. உ - ம். வளியத்துக்கொண்டான்; வளியிற்கொண்டான்; சென்றான, தந்தான், போயினான், எனவரும். செவ்விதென்றதனால், இன்பெற் றுழியியையபு வல்லெழுத்து வீழ்க்க. [௬௰]

உதிமரக்கிளவிமெல்லெழுத்துமிகும்மே.

என்னின். இவ்வீற்று மரப்பெயரொன்றற்கு வல்லெழுத்துவிலக்கி மெல் லெழுத்து விதித்தனுதலிற்று. உதியென்னு மரத்தினையுணர நின்றசொல் வ ல்லெழுத்துமிகாது, மெல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். உதிங் கோடு, செதிள், தோல், பூ, எனவரும. [௬க]

புளிமரக்கிளவிக்கம்மேசாரியை.

என்னின். இவ்வீற்றுமரப்பெயரொன்றற்கு, மேலெய்தியவல்லெழுத்து விலக்கிச்சாரியை விதித்தனுதலிற்று. புளியென்னுமரத்தினை யுணரநின்ற சொல்லிற்கு, வருஞ்சாரியை அம்முச்சாரியை. எ - று. உ - ம். புளியங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். சாரியைப்பேற்றிடை, எழுத்துப்பேறுகூறிய வதனால், அமமுப்பெற்றவழியியைபு வல்லெழுத்து வீழ்க்க. [௬உ]

ஏனைப்புளிப்பெயர்மெல்லெழுத்துமிகுமே.

என்னின. அம்மரப்பெயரல்லாத புளிப்பெயர்க்கு வேறுமுடிபுகூறுத னுதலிற்று. அம்மரப்பெயரனறி, ஒழிந்தசுவைப்புளி யுணர நின்றபெயர், வல் லெழுத்துமிகாது, மெல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். புளிங் கூழ், சோறு, தயிர், பாளிதம, எனவரும். [௬௩]

வல்லெழுத்துமிகினுமானமில்லை -
யொல்வழியறிதல்வழக்கத்தான.

என்னின். மேலதற்கு வல்லெழுத்துமிகுமென வெய்தியதன்மேற் சிறப் புவிதிகூறுதனுதலிற்று. ஏனைப்புளிப்பெயர்முன், எய்தியமெல்லெழுத்தேய ன்றி, வல்லெழுத்துமிக்கு முடியினுங்குற்றமில்லை. பொருந்துமிடமறிக. வ ழக்கிடத்து எ - று. உ - ம். புளிக்கூழ், சோறு, பாளிதம், எனவரும். ஒல்வழியறிதலென்றதனால், புளிச்சோறென்றதுபோல, மற்றையவை வழக்கு ப்பயிற்சியிலவெனபதுங்கொள்க. வழக்கத்தானவென்றதனன், இவ்வீற்றுள் *எடுத்தோத்துமிலேசுமில்லாதனவற்றின் முடிபுவேற்றுமை யெல்லாங்கொ ள்க. கூதாளங்கோடு, எனவும், கணவிரங்கோடு, எனவும், துளியத்துக்கொ ண்டான்; எனவும், பருத்திக்குச்சென்றான்; எனவும், கப்பிதந்தை கப்பிந் தை, எனவும், கட்டியகல் கட்டகல், எனவும், குளிகுறுமை குளிக்குறுமை, எனவும், இன்னினிக்கொண்டான்; அண்ணணிக்கொண்டான்; எனவும், புளி யங்காய், எனவும்வரும். இன்னுமதனனே, இவ்வீற்றுள், உருபிற்குச்சென்றசா ரியை பொருட்கட்சென்றவழி, இயைபுவல்லெழுத்து வீழ்தலுங்கொள்க. கி ளியின்கால், எனவரும். [௬௪]

---

* எடுத்தோத்து எடுத்துக்கூறல்.

**நாண்முற்றேன்றுந்தொழினிலைக்கிளவிக்**
**கானிடைவருதலையமின்றே.**

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்குச் சாரியைவிதித்தனுதலிற்று. இக ரவீற்று நாட்பெயர்களின் முன்னர்த்தோனறும் வினைச்சொல்லிற்கு, ஆன்சாரி யையிடைவந்து முடிதலையமில்லை. எ - று. உ - ம். பரணியாற்கொண்டா ன்; சென்றான, தந்தான், போயினான், எனவரும். ஐயமின்றென்றதனான், இ யைபுவல்லெழுத்து வீழ்க்க. [௪௫]

**திங்கண்முன்வரினிகரேசாரியை.**

என்னின். இதுவுமது. திங்களையுணரநின்றவிகரவீற்றுப்பெயர்முன் னர், தொழினிலைக்கிளவிவரின், வருஞ்சாரியை இக்குச்சாரியை. எ - று. உ-ம். ஆடிக்குக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். [௪௬]

**ஈகாரவிறுதியாகாரவியற்றே.**

என்னின். ஈகாரவீற்றுப்பெயர் அல்வழியினகண்முடியுமாறு கூறுதனு தலிற்று. ஈகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண், ஆகாரவீற்றல் வழியினியல்பி ற்றாய், வல்லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று. உ - ம். தீககடிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். [௪௭]

**நீயென்பெயருமிடக்கர்ப்பெயரு**
**மீயெனமரீஇயவிடம்வரைகிளவியு**
**மாவயின்வல்லெழுத்தியற்கையாகும்.**

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்கெய்தியது விலக்கிப்பிறிது முடிபுகூ றுதனுதலிற்று. நீயென்னும் பெயரும் இடக்கர்ப்பெயராகிய வீகாரவீற்று ப்பெயரும் மீயென்றுசொல்லவருஉமருவாய்வழங்கினவோரிடத்தினைவரை ந்துணர்த்துஞ் சொல்லும் மேல் இவ்வீற்றுட்கூறிய வல்லெழுத்துப்பெறாது, இயல்பாய்முடியும். எ - று. உ - ம். நீகுறியை; சிறியை, தீயை, பெரியை, எனவும், பீகுறிது; சிறிது, தீது, பெரிது, எனவும். மீகண், செவி, தலை, பு றம், எனவும்வரும். நீகுறியையென்பது மேல் "அஃறிணை விரவுப்பெயரியல் புமாருளவே" என்றவழியடங்காதோவெனின்; மேல் வேற்றுமைக்கண், நின்கை, எனத்திரிந்து முடிதலி னடங்காதாயிற்றென்க. மீகண்ணென்பது அல்வழிமுடிபன்றெனினு மியல்பாதனோக்கி யுடன்கூறப்பட்டது. [௪௮]

**இடம்வரைகிளவிமுன்வல்லெழுத்துமிகூஉ - முடனிலைமொழியு முளவெனமொழிப.**

என்னின். மேற்கூறியவற்றுண் மீயென்பதற்கு வேறொருமுடிபுகூறுத னுதலிற்று. இடத்தினைவரைந்துணர்த்து மீயென னுஞ்சொன்முன், இயல்பா ய் முடிதலேயன்றி, வல்லெழுத்துமிக்குமுடியுந்தம்மிலியைந்து நிற்றலையு டையமொழிகளுமுளவென்று சொல்லுவர். எ - று. உ - ம். மீக்கோள், மீப்பல், எனவரும். உடனிலையென்றதனால், மீங்குழி, மீந்தோல், என, மெல்லெழுத்துப்பெற்று முடிவனவுங்கொள்க. [௪௯]

**வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே.**

என்னின். அவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறுகூறுதனுதலி ற்று. ஈகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும், ஆகார

வீற்றல் வழியோடொருதன்மைத்தாய், வல்லெழுத்திவந்தவழி வல்லெழுத்துப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். ஈங்கால், சிறகு, தலை, புறம், எனவரும. [ருய]

நீயெனொருபெயருருபியனிலையு-
மாவயின்வல்லெழுத்தியற்கையாகும்.

என்னின். அவ்வீற்றுவேற்றுமைமுடிபினுள், ஒன்றற்குவேறுமுடிபு கூறுதனுதலிற்று. நீயெனநின்றவொருபெயர் உருபுபுணர்ச்சிக்கண், நெடுமுதல்குறுகி, னகரவொற்றுப்பெற்று முடிந்தவியல்பின்கண்ணே நின்றுமுடியும். அவ்வாறுமுடிந்தவிடத்து, இயைபுவல்லெழுத்து மிகாது. எ - று. உ-ம். நின்கை, செவி, தலை, புறம், எனவரும். [ருக]

உகரவிறுதியகரவியற்றே.

என்னின். உகரவீற்றுப்பெயர் அல்வழிக்கண்முடியுமாறுகூறுதனுதலிற்று. உகரவீற்றுப்பெயர் அல்வழிக்கண், அகரவீற்றல் வழியினியல்பிற்றாய், வல்லெழுந்துவந்தவழி, வல்லெழுந்துமிக்குமுடியும். எ - று. உ-ம். கடுக்குறிது; சிறிது, தீது, பெரிது, எனவரும். [ருஉ]

சுட்டின்முன்னருமத்தொழிற்றுகும்.

என்னின். இவ்வீற்றுச்சுட்டு வன்கணத்தோடுகூடி முடியுமாறுகூறுதனுதலிற்று. உகரவீற்றுச்சுட்டின் முன்னரும், வல்லெழுத்துவரும்வழி, அவ்வகரவீற்றல்வழியின்றொழிலிற்றுப், வல்லெழுத்துமிகுதுமுடியும். எ - று. உ-ம். உக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன், எனவரும். [ருங]

ஏனைவவரினேமேனிலையியல்பே.

என்னின். அவற்றுட்சுட்டு ஒழிந்தகணத்தோடு முடியுமாறுகூறுதனுதலிற்று உகரவீற்றுச்சுட்டின்முன், ஒழிந்தகணம வருமொழியாகவரின், மேல் அகரவீற்றுச்சுட்டுமுடிந்து நின்றநிலைமையினியல்பையுடையவாட்முடியும். எ - று. உ - ம். உஞ்ஞாண், உந்நூல், உம்மணி, எனவும், உவ்யாழ், உவ்வட்டு, எனவும், உவ்வடை, உவ்வாடை, உவ்வெளவியம், எனவும், ஊவயினை, எனவுமவரும். [ருச]

சுட்டுமுதலிறுதியியல்பாகும்மே.

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கியியல்புகூறுதனுதலிற்று. சுட்டெழுத்தினைமுதலாக வுடையவுகரவீற்றுப்பெயர் மேற்கூறியவல்லெழுத்து மிகாது இயல்பாய்முடியும். எ - று. உ - ம். அதுகுறிது; இதுகுறிது ; உதுகுறிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். [ருரு]

அன்றுவருகாலையாவாகுதலு - மைவருகாலைமெய்வரைந்துகெடுதலுஞ் - செய்யுண்மருங்கினுரித்தெனமொழிப.

என்னின். இவ்வீற்றுச்சுட்டுமுதற்பெயர்க்கோர் செய்யுண்முடிபுகூறுதனுதலிற்று. அதிகாரத்துநின்ற சுட்டுமுதலுகரவீற்றுப்பெயர் அன்றென்னுஞ்சொல் வருமொழியாய் வருங்காலத்து, அவ்வுகரம் ஆகாரமாகித்திரிந்து முடிதலும், ஐயென்னுஞ்சாரியை இடைவந்து முடியுங்காலத்து, அவ்வுகரம்தானூர்

ந்தமெய்யையொழித்துக்கெட்டு முடிதலும், அவ்விருமுடிபுஞ் செய்யுட்கணுரித்தென்று சொல்லுவர். எ - று. உ - ம். அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன்றம்ம, எனவும், அதைமற்றம்ம, இதைமற்றம்ம, உதைமற்றம்ம, எனவும் வரும், [ருசு]

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே.

என்னின். இவ்வீறறுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதனுதலிற்று. உகரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும், அவ்வுகரவீற்றல் வழியோடொருதன்மைத்தாய், வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்குமுடியும். எ-று. உ-ம். கடுக்காய், செதிள், தோல், பூ, எனவரும். [ருஎ]

எருவுஞ்செருவுமம்மொடுசிவணித் - திரிபிடனுடையதெரியுங்காலை - யமமின்மகரஞ்செருவயிற்கெடுமே - தம்மொற்றுமிகூஉம்வல்லெழுத்தியற்கை.

என்னின். இவ்வீற்றுளொன்றற்கு வல்லெழுத்து விலக்கிச்சாரியை விதியும், ஒன்றற்குவல்லெழுத்திறோடு சாரியை விதியுங்கூறுதனுதலிற்று. எருவென்னுஞ்சொல்லும் செருவென்னுஞ்சொல்லும் அம்முச்சாரியையோடு பொருந்தி, முன்சொன்ன வேற்றுமைப்பொது விதிபின்வேறுபட்டு முடியுமிடனுடைய. ஆராயுங்காலத்து, அவ்வம்முச்சாரியையநீற்றின்மகரம் செருவென்னுஞ்சொல்விடத்துங்கெட்டு முடியும். அவ்வாறுகெட்டவிடத்துச் செருவென்பது வல்லெழுத்தாகிய வியல்பைபுடையதமதொற்றுமிக்குமுடியும்.எ-று. உ-ம். எருவங்குழி, சேறு, தாது. பூழி, எனவும். செருவக்களம, சேனை, தானை, பறை. எனவும்வரும். தெரிபுங்காலையென்றதனால். எருவென்பதற்கு, பெரும்பான்மை மெல்லெழுத்துப்பேறும், சிறுபான்மை வல்லெழுத்துப்பேறும், செருவென்பதற்கு, சிறுபான்மை வல்லெழுத்துப்பேறுங்கொள்க. எருங்குழி, எருக்குழி, செருங்களம், எனவரும், வல்லெழுத்தியற்கை யென்றதனை, உருபிற்குச் சென்றசாரியை பொருட்கட்செல்றவழி, அவ்விருமொழிக்கும, அதிகார வல்லெழுத்து வீழ்வுங்கொள்க. எருவின்கடுமை, செருவினகடுமை, எனவரும். இன்னுமதனானே, அம்மொடுசிவணித்திரிபிடனுடைய என, வல்லெழுத்தின் கண்ணதாகவரைந்து கூறின்மையின், அம்முச்சாரியை இயல்புகணத்துக்கட் பெறுவனகொள்க. எருவஞாற்சி, செருவஞாற்சி, என வரும். [ருஅ]

ழகரவுகரநீடிடனுடைத்தே - யுகரமவருதலாவயினான.

என்னின். இவ்வீற்றிற்சிலவற்றிற்குச் செய்யுளுள், எய்தியதன்மேற்சிறப்புவிதி கூறுதனுதலிற்று. இவ்வீற்றுமொழிகளுள், ழகரத்தோடுகூடிய வுகரவீற்றுமொழி, அவ்வுகரம் ஊகாரமாய் நீண்டு முடியுமிடனுடைத்து. அவ்விடத்துகரம்வந்துமுடிக. எ - று. இடனுடைத்தெனறதனான், இதுசெய்யளிடத்தெனக்கொள்க. உ-ம். பழூஉப்பல்லன்னபருவுகிர்ப்பாவடி, எனவரும். [ருகூ]

ஒடுமரக்கிளவியுகிமரவியற்றே.

என்னின். இவ்வீற்றுமரப்பெயருள், ஒன்றற்குவல்லெழுத்துவிலக்கிப்பிறிதுவிதி கூறுதனுதலிற்று. ஒடுவென்னுமரத்தினை யுணரநின்றசொல் உதியென்னுமரத்தினியல்பிற்றாய், மெல்லெழுத்துப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். ஒடுங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [சுய]

## சுட்டுமுதலிறுதியுருபியனிலையு-
## மொற்றிடைமிகாஅவல்லெழுத்தியற்கை.

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்கு, வல்லெழுத்துவிலக்கிச் சாரியை வகுத்தனுதலிற்று. சுட்டெழுத்தினை முதலாகவுடைய வுகரவீற்றுச்சொற்களுள, உருபுபுணர்ச்சியிற்சொன்ன வியல்பிலேநின்று, அன்சாரியைபெற்று, உகரங்கெட்டுமுடியும். அவ்விடத்து வல்லெழுத்தியற்கையாகியவொற்று இடைக்கண்மிகா. எ - று. உ-ம். அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். ஒற்று இடைமிகாவென்றதனால், சாரியை வகுப்ப வல்லெழுத்து வீழாதென்பது பெற்றாம். வல்லெழுத்தியற்கை யென்றதனால், இவ்வீற்றுள், உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்செனறவழி, இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கடுவின்குறை, ஒடுவின்குறை, எனவரும். [௬௧]

## ஊகாரவிறுதியாகாரவியற்றே.

என்னின். ஊகார ்ற்றுபபெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதனுதலிற்று. ஊகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண், ஆகாரவீற்றல் வழியினியல்பிற்றாய், வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ-ம். கொண்மூக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். [௬௨]

## வினையெஞ்சுகிளவிக்குமுன்னிலைமொழிக்கு
## நினையுங்காலையவ்வகைவரையார.

என்னின். இவ்வீற்றுவினைச்சொற்கு முடிபுகூறுதனுதலிற்று. ஊகாரவீற்றுவினையெச்சமாகிய சொல்லிற்கும், முன்னிலைமொழியாகிய வினைச்சொல்லிற்கும், ஆராயுங்காலத்து, அவ்வல்லெழுத்துமிக்கு முடியுங்கூற்றினை நீக்கார். எ - று. உ - ம். உண்ணூகக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவும், கைதூக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா, எனவும்வரும். நினையுங்காலையென்றதனான், இவ்வீற்றுயர்திணைப்பெயர் அல்வழிக்கண் வல்லெழுத்து மிக்குமுடிவனகொள்க. ஆடூஉக்குறியன், மகடூஉக்குறியள், எனவரும். [௬௩]

## வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே

என்னின். ஊகாரவீறுவேற்றுமைக்கண் முடியுமாறுகூறுதனுதலிற்று. ஊகாரவீறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும், அவ்வாகாரவீற்றல் வழியோடொத்த வியல்பிற்றாய், வல்லெழுத்துவந்தவழி வல்லெழுத்துமிக்கு முடியும். எ - று. உ - ம். கொண்மூக்குழாம், செலவு, தோற்றம, பறைவு, எனவரும். [௬௪]

## குற்றெழுத்திம்பருமோரெழுத்துமொழிக்கு-
## நிற்றல்வேண்டுமுகரக்கிளவி.

என்னின். குற்றெழுத்தின்பின்னின்ற ஊகாரவீற்றுமொழிக்கும், ஓரெழுத்தொருமொழியாகிய ஊகாரவீற்றுமொழிக்கும், உகரமாகியவெழுத்து நிற்றலைவேண்டும. எ று. உ - ம். உடூஉக்குறை, தூஉக்குறை, செய்கை, தலை, புறம், எனவரும். நிற்றலென்றதனால், இவ்வீற்றுயர்திணைப்பெயர் வேற்றுமைக்கண் வல்லெழுத்துமிகுவனவுங்கொள்க. ஆடூஉக்கை, மகடூஉக்கை, எனவரும். [௬௫]

பூவெனொருபெயராயியல்பின்றே-
யாவயின்வலலெழுத்துமிகுதலுமுரித்தே.

என்னின. அவற்றுளொன்றற்கு, உகரமும் வல்லெழுத்தும்விலக்கிப் பெரும்பான்மை மெலலெழுத்துஞ் சிறுபானமைவல்லெழுத்தும் பெறுமென, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. பூவென்னுமூகாரவீற்றையுடைய வொருபெயர் மேற்சொன்ன உகரமும், வல்லெழுத்தும், பெற்றுமுடியுமந்தவியல்பில்லாமையையுடைத்து. எனவே. வேற்றோரியல்பிற்றாய் மெல்லெழுத்துமிக்குமுடியும். அவ்விடத்து, அம்மெல்லெழுத்தேயன்றி, வல்லெழுத்துமிக்குமுடிதலுமுரித்து. எ-று. மெல்லெழுத்துப்பெறுமென்றது, உரையிற்கோடலாற் கொள்ளப்பட்டது. உ-ம். பூங்கொடி, பூக்கொடி, செய்கை, தாமம, பந்து, எனவரும். [சுசு]

ஊ வெனொருபெயராவொடுசிவணும்.

என்னின. இன்னம், அவ்வீற்றுளொன்றற்கு, உகரமும் வல்லெழுத்தும் விலக்கி, நிலைமொழி னகரம்பெறுமென, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. ஊவென்றுசொல்லப்படும் ஊகாரவீற்றையுடைய் வொருபெயர் ஆகாரவீற்றில், ஆவென்னுஞ் சொல்லோடுபொருந்தி வல்லெழுத்துப்பெருது, நிலைமொழி னகரவொற்றுபெற்று முடியும. எ-று. உ-ம். ஊன்குறை, செய்கை, தலை, புறம, எனவரும். [சுஎ]

அக்கென்சாரியைபெறுதலுமுரித்தே-
தககவழியறிதல்வழககத்தான.

என்னின. இனனுமதற்கெய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அதிகாரத்தானின்ற ஊவெனனுமபெயர் மேற்கூறிய னகரத்தோடு, அக்கென்னுஞ்சாரியைபெற்று முடிதலுமுரித்து. வழக்கிடத்து, அமமுடிபுதக்கவிடமறிக. எ-று. தக்கவழியறிதலெனறதனால், சாரியைபெற்றவழி, நிலைமொழி னகரம் விலக்குண்ணுது நிற்றலும், முனமாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக்கெடாது நிற்றலுங்கொளக. உ-ம். ஊனக்குறை, செய்கை, தலை, புறம, எனவரும். வழக்கத்தானவென்றதனை, இவ்வீற்றுருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றவழி, இயைபு வல்லெழுத்துவீழ்க்க. கொண்மூவினகுழாம், எனவரும. [சுஅ]

ஆடூஉமகடூஉவாயிருபெயர்க்கு - மின்னிடைவரினுமானமில்லை.

என்னின். அவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கு முன்னெய்திய வல்லெழுத்தேயன்றி, சாரியையும் பெறுமெனவெய்தியதனமேற் சிறபபுவிதிகூறுதனுதலிற்று. ஆடூஉ, மகடூஉவாகிய அவ்விரண்டுபெயர்க்கும், மேல், "குற்றெழுத்திம்பரும்" என்னுஞ்சூத்திரத்தின், "நிற்றல்" என்பதனால், வந்தவல்லெழுத்தேயன்றி, இன்சாரியை இடைவரினுங் குற்றமில்லை. எ-று. உ-ம். ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, செவி, தலை, புறம், எனவரும். மானமில்லையென்றதனால், இன்பெற்றவழி மேலிலேசினனெய்திய வல்லெழுத்துவீழ்க்க. [சுகூ]

எகரவொகரம்பெயர்க்கிறுகா - முன்னிலைமொழியவென்மனார்புலவர்-
தேற்றமுஞ்சிறப்புமல்வழியான.

என்னின். எகரவீற்றிற்கும், ஒகரவீற்றிற்கும், ஈறுகாதநிலையில், வேறுபாடுணர்த்து. எகரமும் ஒகரமும் பெயர்ச்சொற்கிறுகா. வினைச்சொல்

னுள், முன்னிலைமொழியிடத்தனவென்று சொல்லுவர்புலவர். தேற்றப்பொருண்மையில் வருமிடைச்சொல் எகாரவீறும், சிறப்புப்பொருண்மையின் வருமிடைச்சொல் ஒகாரவீறும், அல்லாதவிடத்து எ - று. உ - ம். ஏ எ, எனவும், ஓ ஒ, எனவும்வரும். இவைமுன்னிலைவினை. ஏ எகொண்டான், ஓ ஒ கொண்டான், எனவிவையிடைச்சொல். [௭௰]

தேற்றவெகரமுஞ்சிறப்பினொவ்வு -
மேற்கூறியற்கைவல்லெழுத்துமிகா.

எனனின். முன்னிரண்டெனப்பட்ட எகர வொகரவீற்றிடைச்சொற்கும், அவ்வீற்றுமுன்னிலை வினைச்சொற்கும், முடிபுகூறுதனுதலிற்று. தேற்றப்பொருண்மையில்வரும் எகரவீற்றிடைச்சொல்லும் சிறப்புப்பொருண்மையில்வரும் ஒகரவீற்றிடைச்சொல்லும் மேலைமுன்னிலை வினைச்சொற்குக்கூறப்படுமியல்புடைய வல்லெழுத்துமிகாவாய், இயல்பாய்முடியும். எ - று. மேற்கூறியற்கை வல்லெழுத்து மிகாவென்றதனால், வந்ததுகண்டு வாராததனைர்கவென்னுந் தந்திரவுத்திவகையான், வல்லெழுத்துமிகுமென்பது கூறபபட்டதாயிற்று. உ - ம். யானேஎகொண்டேனெ; நீயேஎகொண்டாய்; அவனேஎ கொண்டான்; எனவும், ஓ ஒகொண்டான்; எனவும்வரும். இவையிடைச்சொல், ஏ எக்கொற்றா, ஓ ஒக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா, எனவிவைமுனனிலைவினை, இயற்கையென்றதனன், அம்முன்னிலைவினைகளை யளபெடையாகநிறீஇக்கொள்க. [௭௧]

ஏகாரவிறுதியூகாரவியற்றே.

என்னின். ஏகாரவீற்றல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. ஏகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண், ஊகாரவீற்றல்வழி யியல்பிற்றாய், வல்லெழுத்துவந்தவழி வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். சேக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். [௭௨]

மாறுகொளெச்சமும்வினாவுமெண்ணுங் -
கூறியவல்லெழுத்தியற்கையாகும்.

என்னின். அவ்வீற்றிடைச்சொற்கு முடிபுகூறுதனுதலிற்று. மாறுகோடலையுடைய வெச்சப்பொருண்மைக்கண்வரும் ஏகாரவீற்றிடைச்சொல்லும்வினாப்பொருண்மைக்கண்வரும் ஏகாரவீற்றிடைச்சொல்லும் எண்ணுப்பொருண்மைக்கண்வரும் ஏகாரவீற்றிடைச்சொல்லும் மேற்கூறியவல்லெழுத்துபெறுதியல்பாய்முடியும். எ-று. உ-ம். யானேகொண்டேன்; சென்றேன், தந்தேன், போயினேன், எனவும், நீயேகொண்டாய்; சென்றாய், தந்தாய், போயினாய், எனவும், கொற்றனே சாத்தனே தேவனே பூதனே, எனவும்வரும். கூறியவென்றதனால், பிரிநிலைப்பொருண்மைக்கண்ணும், ஈற்றசைக்கண்ணும்வரும் ஏகாரங்களினியல்பு முடிபுகொள்க. உ-ம். அவனேகொண்டான்; என்பதுபிரிநிலை, கடலேபாடெழுந்தொலிக்கும், என்பது ஈற்றசை. [௭௩]

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே.

என்னின். இஃது இவ்வீற்றுவேற்றுமை முடிபுகூறுதனுதலிற்று. ஏகாரவீறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும், அவ்வூகாரவீற்றல் வழியோடொருதன்மைத்தாய், வல்லெழுத்துவந்தவழி, வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். சேக்குடம், சாடி, தூதை, பானை, எனவரும். [௭௪]

## ஏயெனிறுதிக்கெகரம்வருமே.

என்னின். அவ்வீற்றிற்கெய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அவ்வேற்றுமைக்கண், ஏயென்னுமிறுதிக்கு, எகரம்வரும். எ - று. உ - ம். ஏ எக்கொட்டில், சாலே, துளே, புழை, எனவரும். உரையிற்கோடலென்பதனுன், அவ்வெகரப்பேறு பொருந்தினவழிக்கொள்க. [எரு]

## சேவென்மரப்பெயரொடுமெரவியற்றே.

என்னின். அவ்வீற்றுளொன்றற்கு, வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்துவிதி கூறுதனுதலிற்று. சேவெனனுமரத்தினே யுணரநின்றபெயர் ஒடுமரத்தினியல்பிற்ருய், மெல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். சேங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [எசு]

## பெற்றமாயின்முற்றவின்வேண்டும்.

என்னின். அம்மரப்பெயரல்லாத சேவென்பதற்கு வேறுமுடிபு கூறுதனுதலிற்று. மேற்கூறிய சேவென்பது பெற்றத்தினேயுணரநினற பொழுதாயின், முடியவின்சாரியைபெற்று முடியவேண்டும். எ - று. உ - ம். சேவின்கோடு, செவி, தலே, புறம், எனவரும். முற்றவென்றதனுன், இச்சேவென்பது, எடுத்தோத்தான, இன்பெற்றவழியும், அதுவேமரப்பெயராய், உருபிற்கெய்தியசாரியைபெற்றவழியும், பிறசொல் அவ்வாறு,இனபெற்றவழியும், இயைபுவல்லெழுத்துவீழ்க்க. உ - ம். சேவின்கோடு, செவி, தலே, புறம், எனவரும். சேவின்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். ஏவின்கடுமை, சிறுமை, தீமை. பெருமை, எனவரும். [எஎ]

## ஐகாரவிறுதிப்பெயர்நிலேமுன்னர் - வேற்றுமையாயின்வல்லெழுத்துமிகுமே.

என்னின். ஐகாரவீற்றல்வழிமுடிபு தொகைமரபினுட்கூறிநின்றமையின், அதனவேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. ஐகாரவீற்றுப் பெயர்ச்சொன்முன்னர், அதிகாரத்தாற் க சதப முதன்மொழிவந்தவழி, வேற்றுமைப்பொருட்புணர்ச்சியிற்றமக்குப்பொருந்தினவல்லெழுத்து மிக்குமுடியும். எ - று. உ - ம். யானேக்கோடு, செவி, தலே, புறம், எனவரும். [எஅ]

## சுட்டுமுதலிறுதியுருபியனிலேயும்.

என்னின். இவ்வீற்றுட்சுட்டுமுதற்பெயர்க்கு, வல்லெழுத்தோடு வற்றுவகுத்தனுதலிற்று. சுட்டெழுத்தினேமுதலாகவுடையவைகாரவீற்றுப்பெயர் உருபுபுணர்ச்சியிற்கூறிய வியல்பினகண்ணேநின்று, ஐகாரங்கெடாதுங்கெட்டும், வற்றுப்பெற்றுமுடியும். எ - று. உ -ம். அவையற்றுக்கோடு,இவையற்றுக்கோடு,உவையற்றுக்கோடு, செவி, தலே, புறம், எனவும். அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு, எனவும்வரும். [எகூ]

## விசைமரக்கிளவியுஞெமையுநமையு மவைமுப்பெயருஞ்சேமரவியல.

என்னின். இவ்வீற்றுள், மரப்பெயருட்சிலவற்றிகு வேறுமுடியுகூறுதனுதலிற்று. விசையென்னுமரத்தினேயுணரநின்றசொல்லும், ஞெமையென்னு மரத்தினேயுணரநின்றசொல்லும், நமையென்னுமரத்தினேயுணரநின்றசொல்லும், ஆகியவம்மூன்றுபெயரும், மேற்கூறியவல்லெழுத்துமிகாது

வென்னுமரத்தினதியல்பினவாய், மெல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [௮௰]

**பனையுமரையுமாவிரைக்கிளவியு - நினையுங்காலையம்மொடுசிவணு - மையெனிறுதியரைவரைந்துகெடுமே - மெய்யவணொழியவென்மனார்புலவர்.**

என்னின். இதுவுமது. பனையென்னுஞ்சொல்லும், அரையென்னுஞ்சொல்லும், ஆவிரையென்னுஞ்சொல்லும், மேற்கூறியவல்லெழுத்துமிகா. ஆராயுங்காலத்து, அம்மென்னுஞ்சாரியையோடு பொருந்திமுடியும். அவ்விடத்து, ஐயென்னுமீறு அரையென்னுஞ்சொல்லைநீக்கிக் கெடும். தன்னானூரப்பட்ட மெய் அச்சொல்விடத்தையொழியவென்று சொல்லுவர்புலவர். எ - று. உ - ம். பனங்காய், செதிள், தோல், பூ, எனவரும். அரையங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். ஆவிரங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். நினையுங்காலையென்றதனால், பிறவும், நாதுணை, வழுதுணை, தில்லை, ஓலை, எனவருவனவற்றிக்கும், அம்முக்கொடுத்தைகாரங்கெடுத்து, தூதுணங்காய், வழுதுணங்காய், தில்லங்காய், ஓலம்போழ், என்றுமுடிக்க. [௮௧]

பனையின்முன்னரட்டுவருகாலை-
நிலையின்றாகுமையெனுயிரே-யாகாரம்வருதலாவயினான.

என்னின். இதுவுமது. மேற்கூறியவழியேயன்றி, பனையென்னுஞ்சொல்லினமுன்னர், அட்டென்னுஞ்சொல் வருமொழியாய்வருங்காலத்து, நிற்றலின்றாம்ஐயென்னுமுயிர். அவ்விடத்தாகாரமவந்து, அம்மெய்ம்மேலேறிமுடிக. எ - று. உ - ம். பனாஅட்டு, எனவரும். ஆவயினென்றதனால், விச்சாவாதி, எனாற்போல்வனவற்றது வேற்றுமைமுடிபுகொள்க. [௮௨]

**கொடிமுன்வரினேயையவணிற்பக் - கடிநிலையின்றேவல்லெழுத்துமிகுதி.**

என்னின். இதுவுமது. கொடியெனனுஞ்சொல் பனையெனனுஞ் சொனமுன்னர்வரின், மேற்கெடுக்க வெனப்பட்ட ஐகாரம் ஆண்டுக்கெடாதேநிற்ப, வல்லெழுத்து மிகுதிநீக்குநிலைமையின்று. எ - று. உ - ம். பனைக்கொடி, எனவரும். கடிநிலையென்றதனான், இவ்வீற்றுளெடுத்தோத்தானும், இலேசினானும், அம்முச்சாரியையும் பிறசாரியையும்பெற்றவழி, இயைபுவல்லெழுத்துவீழ்க்க. இன்னுமிதனானே, உருபிற்குச் சென்றசாரியை பொருட்குச் சென்றவழியும், இயைபுவல்லெழுத்துவீழ்க்க. பனையின்காய், அரையின்கோடு, ஆவிரையின்கோடு, எனவும். விசையின்கோடு, ஞெமையின்கோடு, நமையின்கோடு, எனவும். தூதுணையின்காய், வழுதுணையின்காய், எனவும். வழையின கோடு, வழையின்பூ, எனவும்வரும. அவணென்றதனால், பனைத்திரள், எனவல்லெழுத்துப் பேறுங்கொள்க. [௮௩]

திங்களுநாளுமுந்துகிளந்தன்ன.

என்னின். இயைபுவல்லெழுத்தினோடு சாரியைப்பேறும், வல்லெழுத்துவிலக்கிச்சாரியைப்பேறுங் கூறுகின்றமையின், எய்தியதன்மேற்சிறப்புவிதியும், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதியும், வகுத்தனுதலிற்று. ஐகாரவீற்றுத் திங்களையுணரநின்றபெயரும், அவ்வீற்றுநாளுணரநின்றபெயரும், முன் இகரவீற்றுத்

திங்களும் நாளுங்கிளந்ததன்மையவாய், இக்கும், ஆனும்பெற்றுமுடியும். எ-று. உ-ம். சித்திரைக்குக் கொண்டான்; கேட்டையாற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். நாள்முன்கூறாது, திங்கள் முன்கூறியவதனால், கரியவற்றுக்கோடு, எனவும், அவையத்துக் கொண்டான்; எனவும். வழைங்கோடு, எனவும். கலைங்கோடு, எனவும், கலைக்கோடு, எனவும், இவ்வீற்றுமுடியாதன வெல்லாங்கொள்க. [௮௪]

### மழையென்கிளவிவளியியனிலையும்,

என்னின். இவையுவல்லெழுந்தினோடு அத்துப்பெறும், வல்லெழுத்து விலக்கி, இன்னும், வகுக்கின்றமையின், எய்தியதன்மேற்சிறப்பும், எய்தியதுவிலக்கிப்பிறிதும், கூறுதனுதலிற்று. மழையென்னுமைகார வீற்றுச்சொல் இகரவீற்றுவளியென்னுஞ்சொல் அத்துமின்னும்பெற்றுமுடிந்த வியல்பின்கணே நின்றுமுடியும். எ-று. உ-ம். மழையத்துக் கொண்டான்; மழையிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். [௮௫]

### செய்யுண்மருங்கின்வேட்கையென்னு - மையெனிறுதியவாமுன் வரினே - மெய்யொடுங்கெடுதலென்மனார்புலவர் - டகாரணகாரமாதல்வேண்டும்,

என்னின். இவ்வீற்றுள், ஒன்றற்கல்வழிக்கட்செய்யுண்முடிபு கூறுதனுதலிற்று. செய்யுளிடத்தல்வழிக்கண், வேட்கையென்னுமைகாரவீற்றுச் சொல் அவாவென்னுஞ்சொல் தனக்குமுன்வரின்; அவ்வைகாரந்தான் ஊர்ந்தமெய்யோடுங்கூடக் கெடுகவென்றுசொல்லுவர்புலவர். அவ்விடத்துநின்ற டகாரவொற்று ணகாரவொற்றாய்த் திரிந்துமுடிதல்வேண்டும். எ-று. உ-ம். * வேணவாநலியவெய்யவுயிரா, எனவரும். இதனை, உம்மைத்தொகையாகக்கொள்க. அவாவென்பது அவ்வேட்கையின்மிகுதி. இவ்வல்வழி [illegible]முடிபிற்குமுன்கூறாததனால், விச்சாவாதி, என்றாற்போலவரும் உம்மைத்தொகையல்வழிமுடிபும், பாறங்கல்லெனவிருபெயரொட்டல்வழி முடிபுங்கொள்க. [௮௬]

### ஓகாரவிறுதியேகாரவியற்றே,

என்னின். ஓகாரவீற்றல்வழிமுடிபு கூறுதனுதலிற்று. ஓகாரவீற்றுப் பெயர்ச்சொல் ஏகாரவீற்றல்வழியியல்பிற்றாய், வல்லெழுத்துவந்தவழி வல்லெழுத்துமிக்குமுடியும். எ-று. உ-ம். ஓக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவரும். [௮௭]

### மாறுகொளெச்சமும்வினாவுமையமுங் கூறியவல்லெழுத்தியற்கையாகும்.

என்னின். இவ்வீற்றிடைச்சொன்முடிபு கூறுதனுதலிற்று. மாறுபாட்டினைக்கொண்ட வெச்சப்பொருண்மையினையுடைய வோகாரமும் வினாப்பொருண்மையையுடைய ஓகாரமும் ஐயப்பொருண்மையினையுடைய ஓகாரமும்முன்

---

* "வேட்கையாவது பொருள்கண் மேற்றோன்றும்பற்றுள்ளமெனவும், அவாவாவது அப்பொருள்களைப்பெற வேண்டுமென்று மேன்மேனிகழுமாசையெனவும்" பொருள்கூறி, வேணவாவென்பதனை வேட்கையாலுண்டாகியவவாவென மூன்றனுருபும்பயனுந் தொக்கதொகையாகக்கொண்டார் நச்சினார்க்கினியர்.

பெயர்க்குக்கூறியவல்லெழுத்தன்றி, இயல்பாய்முடியும். எ-று. உ-ம். யானோகொண்டேன், எனவும், நீயோகொண்டாய், எனவும், பத்தோபதினொன்றோ, எனவும்வரும். கூறியவென்றதனால், பிரிநிலையும், தெரிநிலையும். எண்ணும், ஈற்றசையும், இயல்பாய்முடிதல்கொள்க. அவனோகொண்டான், எனவும், நன்றோதீதோவன்று, எனவும், ருன்றுறழ்ந்தகளிறென்கோ கொய்யுளைமாவென்கோ, எனவும், யானோதேறேன், எனவும்வரும். [அஅ]

ஒழிந்ததனிலையுமொழிந்தவற்றியற்றே.

என்னின். இதுவுமது. ஒழியிசை யோகாரத்தினதுநிலையும் மேற்சொல்லியொழிந்த வோகாரங்களினியல்பிற்றாய், இயல்பாய்முடியும். எ-று. உ-ம். கொளலோகொண்டான்; எனவரும். [அகூ]

வேற்றுமைக்கண்ணுமதனோரற்றே -
யொகரம்வருதலாவயினான.

என்னின். அவ்வீற்று வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. ஓகாரவீற்றுவேற்றுமைக்கண்ணு ், அவ்வோகாரவீற்றல்வழியோடொத்து, வல்லெழுத்துப்பெற்றுப்புணரும். அவ்விடத்தொகரம்வருக. எ.-று. உ-ம். ஓ ஒக்கடுமை, சிறுமை, தீமை, ெ ருமை, எனவரும். [கூ௰]

இல்லொடுகிளப்பினியற்கையாகும்.

என்னின். எய்தியதொருமருங்குமறுத்தனுதலிற்று. ஓகாரவீற்றுக் கோவென்னுமொழியினை, இல்லென்னும் வருமொழியொடுசொல்லின், ஒகாரம் மிகாதியல்பாய் முடியும். எ-று. உ-ம். கோயில், எனவரும். நிலைமொழி ஒகரவெழுத்துப்பேறும் வரையாதுகூறினவழி, நான்குகண்ணத்துக்கண்ணுஞ் செல்லுமென்பதுபெற்றாம். கோவென்பது உயர்திணைப்பெயரன்றோவெனின்;—கோவந்ததென, அஃறிணையாய்முடிதலின், அஃறிணைப்பாற்பட்டது போலும். [கூக]

உருபியனிலையுமொழியுமாருளவே -
யாவயின்வல்லெழுத்தியற்கையாகும்.

என்னின். அவ்வீற்றிற்சிலவற்றிற்கு, வல்லெழுத்துவிலக்கிச்சாரியைவருத்தமையின், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. அவ்வீற்றுச்சில உருபுபுணர்ச்சியதியல்பிலேநின்று, ஒன்சாரியைபெற்று முடியுமொழிகளுமுள. அவ்விடத்து வல்லெழுத்தின்றியியல்பாம். எ-று. உ-ம். கோஒன்கை, செவி, தலை, புறம், எனவரும். இதனானும்பெற்றாம். சாரியைப்பேறுவருமொழி வல்லெழுத்து விலக்காமை. [கூஉ]

ஔகாரவிறுதிப்பெயர்நிலைமுன்ன - ரல்வழியானும்வேற்றுமைக்கண்ணும் - வல்லெழுத்துமிகுதல்வரைநிலையின்றே - யவ்விருவீற்றுமுகரம்வருதல் - செவ்விதென்பசிறந்திசினோரே.

என்னின். ஔகாரவீறு அல்வழிககண்ணும் வேற்றுமைங்கண்ணும் முடியுமாறு கூறுதனுதலிற்று. ஔகாரவீற்றுப்பெயர்ச்சொன்முன்னர், வல்லெழுத்துமுதன்மொழிவரின், அவை அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், வல்லெழுத்துமிக்குமுடிதல் நீக்குநிலையின்றாம். அவ்விருகூற்றுமுடிபின்கண்ணும், உகரம்வந்துமுடிதல் செவ்விதென்றுசொல்லுவர் சிறந்தோர். எ-று. உ-ம். கௌவுக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவும், கௌவுக்கடுமை, சி

றுமை, தீமை, பெருமை, எனவும்வரும். செவ்விதென்றதனான், மென்கணத்துக்கண்ணும், இடைக்கணத்துக்கண்ணும், இருவழியும் உகரப்பேறுகொள்க. கௌவுஞான்றது; கௌவுஞாற்சி; எனவும், கௌவுவலிது; வலிமை, எனவும்வரும். நிலையென்றதனால், கௌவின்கடுமையென, உருபிற்குச்சென்றசாரியை பொருட்கட்சென்றவழி, இயைபுவல்லெழுத்து வீழ்வுகொள்க. [கங]

ஏழாவது உயிர்மயங்கியல் முற்றிற்று.

# எட்டாவது புள்ளிமயங்கியல்.

ஞகாரையொற்றியதொழிற்பெயர்முன்ன - ரல்லதுகிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் - வல்லெழுத்தியையினவ்வெழுத்துமிகுமே. யுகரம்வருதலாவயினான.

என்பதுசூத்திரம். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின்,—புள்ளியீறுவன்கணத்தோடும், சிறுபான்மைபிறகணத்தோடும், மயங்கிப்புணருமியல் புணர்த்தினமையின், புள்ளிமயங்கியலென்னும்பெயர்த்து. இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின்,—ஞகாரவீறு வன்கணத்தோடிருவழியும் புணருமாறுகூறுதனுதலிற்று. ஞகாரம் ஈற்றின்கணொற்றாகநின்ற தொழிற்பெயரின்முன்னர், அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், வல்லெழுத்துமுதன்மொழிவருமொழியாயின், வல்லெழுத்து வருமொழிக்கண் மிக்குமுடியும். ஆண்டுநிலைமொழிக்கண், உகரம்வருக. எ - று. உ - ம். உரிஞுக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவும், உரிஞுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும்வரும். [க]

ஞநமவவியையினுமுகரநிலையும்.

என்னின். அவ்வீறுமென்கணத்தோடும், இடைக்கணத்து வகரத்தோடும், முடியுமாறுகூறுதனுதலிற்று. அந்தஞகரவீறு வன்கணமன்றி, ஞநமவமுதன்மொழி வருமொழியாயியையினும், நிலைமொழிக்கண் உகரநிலைபெற்று முடியும். எ - று. உ - ம். உரிஞுஞான்றது; நீண்டது, மாண்டது, எனவும், உரிஞுஞாற்சி, நீட்சி, மீட்சி, எனவும், உரிஞுவலிது; எனவும், வலிமை எனவும்வரும். இடைக்கணத்து யகரத்தோடும், உயிரோடும், புணருமாறு தொகைமரபினுள், "உகரமொடுபுணரும் புள்ளியிறுதி", என்பதனுட் கூறப்பட்டது. [உ]

நகரவிறுதியுமதனோரற்றே.

என்னின். நகரவீறுமேற்கூறியகணங்களோடொருவழிமுடியுமாறுகூறுதனுதலிற்று. நகரவீற்றுப்பெயரும் மேற்கூறியகணங்களோடு புணரும்வழி, அஞ்ஞகாரவீற்றோடு, ஓரியல்பிற்றாய்முடியும். எ - று. உ - ம். பொருநுக்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும், ஞான்றது, நீண்டது, மாண்டது, எனவும், பொருநுவலிது; எனவும், ஒட்டுக. [ங]

வேற்றுமைக்குக்கெடவகரநிலையும்.

என்னின். அவ்வீற்றுவேற்றுமைக்கண், நிலைமொழிமுடிபுவேறாய் முடியுமாறு கூறுதனுதலிற்று. அந்நகரவீறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்,

எட்டியநிலைமொழி யுகரங்கெட, அகரம்நிலைபெற்று முடியும். எ - று. உ - ம். *பொருநக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவும், பொருநஞாற்சி, நீட்சி, மாட்சி, எனவும், பொருநவலுமை, எனவும்வரும். அகரம்நிலையுமென்றது, உகரங்கெடவென்றதனான், அவ்விருவீற்றினுருபிற்குச் சென்றசாரியைபொருட்கட்சென்றவழி, இயைபுவல்லெழுத்துவீழ்வும், சிறுபான்மை உகரப்பேறுங்கொள்க. பொருநின்குறை, உரிஞின்குறை, எனவும், உய்வல்யானைவெரிநுச்சென்றன்ன, எனவும்வரும். [௪]

## வெரிநெனிறுதிமுழுதுங்கெடுவழி - வருமிடனுடைத்தேமெல்லெழுத்தியற்கை.

என்னின். அந்நகரவீற்றோருமொழிக்கெய்தியது விலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. வெரிநென்றுசொல்லப்பட்ட நகரவீற்றுமொழி தன்னீற்றுநகரம் முன்பெற்ற அகரத்தோடெஞ்சாமற்கெட்டவிடத்து, மெல்லெழுத்துப் பெறுமியல்புவந்து முடியுமிடனுடைத்து. எ - று. உ - ம். வெரிங்குறை, செய்கை, தலை, புறம், எனவரும். [௫]

## ஆவயின்வல்லெழுத்துமிகுதலுமுரித்தே.

என்னின். இன்னுமம்மொழிக்கெய்தியதோர்முடிபுகூறுதனுதலிற்று அவ்வெரிநென்னுஞ்சொல் அவ்வாறீறுகெட்டுநின்றவிடத்து, மெல்லெழுத்தேயன்றி, வல்லெழுந்துமிக்கு முடிதலுமுரித்து. எ - று. உ - ம். வெரிக்குறை, செய்கை, தலை, புறம், எனவரும், ஞகாரவீற்றொடு, நகாரவீறு ஒத்தமுடிபிற்றாதலின், உடன்கூறப்பட்டது. [௬]

## ணகாரவிறுதிவல்லெழுத்தியையின் - டகாரமாகும்வேற்றுமைப்பொருட்கே.

என்னின். ணகாரவீறு வேற்றுமைப்பொருட்கட் புணருமாறுணரற்று. ணகாரவீற்றுப்பெயர் வல்லெழுத்துமுதன்மொழியியையின், டகாரமாய்முடியும். வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண். எ - று. உ - ம். மட்குடம், சாடி, தூதை, பானை, எனவரும். [௭]

## ஆணும்பெண்ணுமஃறிணையியற்கை.

என்னின். அவ்வீற்றுவிரவுப்பெயருட் சிலவற்றிற்கெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. ஆணென்னும்பெயரும் பெண்ணென்னும்பெயரும் மேற்றொகைமரபினுள், "மொழிமுதலாகும்" என்பதன்கண், அஃறிணைப்பெயர் முடிந்தவியல்புபோல, தாம்வேற்றுமைக்கண், இயல்பாய்முடியும். எ - று. உ - ம். ஆண்குக, பெண்கை, செவி, தலை, புறம், எனவரும், மற்றிதுதொகைமரபினுள், "அஃறிணைவிரவுப்பெயர்" என்பதனுள், இயல்பாய்முடிந்ததன்றோவெனின் ;—இவையாண்டு முடிந்தனபோல, தத்தமரபின் வினையாற்புலப்படியப் படுவனவன்றி, இருதிணைக்கண்ணும், அஃறிணையாய்முடிதலின், அவ்வஃறிணைப்பெயரியல்போடு மாட்டெறிந்து முடித்தானெனக்கொள்க. இவ்வாறாதலின், ஆண்கடிது; பெண்கடிது; என்னும், அல்வழியும் "மொழிமுதலாகும்" என்பதனுட்கொள்ளப்படும். [௮]

---

* "பொருந் என்பது ஒருசாதிப்பெயரும், பொருநுதலென்னும வினைப்பெயருமாம்" என்பது நச்சினார்க்கினியம்.

## ஆண்மரக்கிளவியரைமரவியற்றே.

என்னின். திரிபுவிலக்கிச்சாரியைவருத்தமையின், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. ஆணென்னுமரத்தை புணரநின்றபெயர்ச்சொல் அரைமரம் அம்முப்பெறுமியல்பிற்றாய், தானும் அம்முப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். ஆணங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [௯]

## விண்ணெனவருஉங்காயப்பெயர்வயி - னுண்மையுமுரித்தேயத்தென்சாரியை - செய்யுண்மருங்கிற்றொழில்வருகாலை.

என்னின். செய்யுளுட்டிரிபு விலக்கிச்சாரியை வருத்தனுதலிற்று. விண்ணென்றுசொல்லவருகின்ற வாகாயத்தையுணரநின்ற பெயர்க்கண், அத்தென்னுஞ்சாரியையுண்டாதலும் உரித்து. இல்லையாதலும் உரித்து. செய்யுளிடத்து வினைவருங்காலத்து எ - று. உ - ம். விண்ணத்துக்கொட்கும், எனவும், * விண்ணத்துநீள்வரை, எனவும்வரும். [௰]

## தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல.

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்குந்திரிபுவிலக்கி, உகரமும் வல்லெழுத்தும் வகுத்தனுதலிற்று. ணகாரவீற்றுத்தொழிற்பெயரெல்லாம் அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், ஞகாரவீற்றுத்தொழிற்பெயரதியல்பாய், வல்கணம்வந்தவழி, வல்லெழுத்தும், உகரப்பேறும், மென்கணமும் இடைக்கணத்து வகாரமும்வந்தவழி, உகரமும், பெற்றுமுடியும். எ - று. உ-ம். மண்ணுக்கடிது; எனவும், மண்ணுக்கடுமை, எனவும், மண்ணுஞான்றது; ஞாற்சி, எனவும், மண்ணுவலிது; வலிமை, எனவுமிருவழியுமொட்டுக. எல்லாம் என்றதனான், தொழிற்பெயரல்லனவும் உகரமும், வல்லெழுத்தும், பெறுவனகொள்க. வெண்ணுக்கரை, எண்ணுப்பாறு, மண்ணுச்சோறு, எனவரும். [கக]

## கிளைப்பெயரெல்லாங்கொளத்திரிபிலவே.

என்னின். இவ்வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபுவிலக்கி யியல்புகூறுதனுதலிற்று. ணகாரவீற்றுள், ஓரினத்தையுணரநின்றபெயரெல்லாம் திரிபுடையவென்றுகருதும்படியாக, திரிதலுடையவன்றி, இயல்பாய்முடியும். எ - று. உ - ம். உமண்குடி, சேரி, தோட்டம், பாடி, எனவரும். எல்லாமென்றதனான், இவ்வீறு சாரியை பெற்றுமுடிவனவும், இயல்பாய்முடிவனவுங்கொள்க. † மண்ணக்கடி ‡ எண்ணமோலை, எனவும், பரண்கால், கவண்கால், எனவும் வரும். கொளவென்றதனான், இவ்வீற்றேழாம்வேற்றுமைப் பொருண்மையுணரநின்ற விடைச்சொல் திரிந்துமுடிவனகொள்க. அங்கட்கொண்டான்; இங்கட்கொண்டான்; உங்கட்கொண்டான்; எனவும், ஆங்கட்கொண்டான்; ஈங்கட்கொண்டான்; ஊங்கட்கொண்டான்; எனவும், அவட்கொண்டான்; இவட்கொண்டான்; உவட்கொண்டான்; எனவும் ஒட்டுக. [கஉ]

---

* நாலடியார் நட்பிற்பிழைபொறுத்தல் - இன்னாசெயினும்விடுதற்கரியாரைத்-துன்னாத்துறத்தறகுவதோ-துன்னருஞ்சீர்-விண்ணத்து நீள்வரைவெற்ப களைபவோ - கண்குத்திற்றென்றுதங்கை.

† மண்ணக்கடி என்பதில், அக்குச்சாரியைவந்தது.

‡ எண்ணமோலை என்பதில், அம்முச்சாரியைவந்தது.

வேற்றுமையல்வழியெண்ணெனுணவுப்பெயர் -
வேற்றுமையியற்கைநிலையலுமுரித்தே.

என்னின். அவ்வீற்றுளொன்று அல்வழியுள்வேற்றுமைமுடிபுபோலத்தி ரிந்து முடிவதுகூறுதனுதலிற்று. வேற்றுமையல்லாதவிடத்து, எண்ணென்று சொல்லப்படுகின்ற உணவினையுணர்த்தும்பெயர் வேற்றுமையதுதிரிந்துமுடி புமியல்புநிற்றலுமுரித்து. எ-று. உ-ம். எட்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவ ரும். உம்மையால், எண்கடிது, என்று, இயல்பாதலேபெரும்பான்மை. [கங]

முரணென்றொழிற்பெயர்முதலியனிலையும்.

என்னின். இவ்வீற்றுத்தொழிற்பெயருளொன்றற்குத் தொழிற்பெயர்மு டிபுவிலக்கி, இவ்வீற்றல் வழிமுடிபும் வேற்றுமைமுடிபுங்கூறு தனுதலிற்று. முரணென்று கூறப்படுந்தொழிற்பெயர் இவ்வீற்றிற்கிருவழியும், முன்கூறிய வியல்புந்திரிபுமாகிய வியல்பின்கண்ணேநின்றுமுடியும். எ - று. உ - ம். மு ரண்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும், முரட்கடுமை, சேனை, தானை, பறை எனவும்வரும். இதனைத் ". தொழிற்பெயரெல்லாம் " என்பதன் பின்வையா தமுறையன்றியகூற்றினுன், முரண்கடுமை, என்னுமியல்பும், ஆண்கடுமை, அரட்கடுமை, என்னுமுறழ்ச்சியுங்கொள்க. [கச]

மகரவிறுதிவேற்றுமையாயிற் -
றுவரக்கெட்டுவல்லெழுத்துமிகுமே.

என்னின். மகரவீற்றிற்கு, மேற்கூறிய ணகரவீற்று வேற்றுமைமுடிபோ டியைய, வேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. மகரவீற்றுப்பெயர்ச்சொல் வே ற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணுயின், அம்மகரம் முறறக்கெட்டு, வரு மொழிவல்லெழுத்துமிக்குமுடியும். எ-று. உ-ம். மரக்கோடு, செதிள், தோ ல், பூ, எனவரும். துவரவென்றதனுன், இயல்புகணத்துக்கண்ணும், உயர்தி ணைப்பெயர்க்கண்ணும், விரவுப்பெயர்க்கண்ணும், மகரக்கேடுகொள்க. உ - ம். மரஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை, எனவும், நங்கை, எங் கை, செவி, தலை, புறம், எனவும், நுங்கை, தங்கை, எனவும்வரும். [கரு]

அகரஆகாரம்வருஉங்காலை -
யீற்றுமிசையகரநீடலுமுரித்தே.

என்னின். அவ்வீற்றுமுடிபு வேற்றுமையுடையனகூறுதனுதலிற்று. அக ரமுதன்மொழியும் ஆகாரமுதன்மொழியும் வருமொழியாய்வருங்காலை, நிலை மொழிக்கண், ஈற்றின்மேனின்ற அகரம், நீளாதுநிற்பதேயன்றி, நீண்டுமுடித லுமுரித்து. எ - று. உ - ம். மராஅடி, குளாஅம்பல், எனவும், மரவடி, கு ளவாம்பல், எனவும்வரும். வருமொழிமுற்கூறியவதனுன், இவ்வீற்றுட்பிற வும்வேறுபாட்டின்முடிபுகொள்க. * கோணகோணம், கோணவட்டம், எனவ ரும். முன்னர் "செல்வழியறிதல்" எனபதனுல், குளாஅம்பல் என்புழி, வரு மொழி ஆகாரக்குறுக்கமும், கோணகோணம்என்புழி, வருமொழிவல்லெழுத் துக்கேடும், கொள்க. [கசு]

---

* கோணகோணம், கோணவட்டம், என்பனவற்றுள், கோணத்துட்கோ ணம், கோணத்துள்வட்டமென, ஏழனுருபுவிரிக்க.

மெல்லெழுத்துறழுமொழியுமாருளவே
செலவழியறிதல்வழக்கத்தான.

எனனின். இவ்வீற்றுட்சிலவற்றிற்குவேறுமுடிபு கூறுதனுதலிற்று. மெல்லெழுத்தோடுறழ்ந்துமுடியுமொழிகளுமுள. வழக்கின்கண், அவைவழங்குமிடமறிக. எ - று. உ - ம். குளங்கரை, குளக்கரை, சேறு, தாது, பூழி, என வரும. செல்வழியறிதலென்றதனால், குளங்கரை, குளக்கரை, என்றது போல, அல்லன ஒந்தவுறழ்ச்சியல்லவெனபதுகொள்க. வழக்கத்தான வென்றதனுன், இவ்வீற்றுவேற்றுமைக்கண்முடியாதனவெல்லாம் முடித்துக்கொள்க. இலவங்கோடு, எனவும், புலம்புக்கனனே, எனவும். நிலத்துக்கடந்தான எனவும்வரும். [கஎ]

இல்லமரப்பெயர்விசைமரவியற்றே.

எனனின. இவ்வீற்றுளொன்றற்கு, வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்துவிதிந்தனுதலிற்று. இல்லமென்னுமரத்தினையுணரநினறபெயர் விசையெனனுமரத்தினியல்பிற்முய், மெல்லெழுத்துமிக்குமுடியும. எ - று. உ - ம். இல்லங்கோடு, செதுள, தோல், பூ, எனவரும். இதனகண்மகரக்கேடு, முனனோர், "எல்லாம," எனபதனாற்கொள்க. [கஅ]

அல்வழியெல்லாமெல்லெழுத்தாகும்.

என்னின். அவ்வீற்றல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. மகரவீறு அல்வழிக்கணெல்லாம, மெல்லெழுத்தாய்த்திரிந்துமுடியும். எ - று. உ - ம். மரங்குறிது, சிறிது, தீது, பெரிது, என்வரும். எல்லாமென்றதனுன், இவ்வீற்றல்வழிமுடிபின், முடியாதனவெல்லாங்கொள்க. மாஞான்றது, நீண்டது, மாண்டது, எனவும, வட்டத்தழை, வட்டபபலகை, எனவும், கலங்கொள், கலநெல், எனவும், நீலக்கண், பவளவாய், எனவும், நிலநீர், எனவும், கொல்லுங்கொற்றன, பறக்குநாரை, எனவும்வரும். [கக]

அகமென்கிளவிக்குக்கைமுன்வரினே - முதனிலையொழியமுன்னவைகெடுதலும் - வரைநிலையின்றேயாசிரியர்க்க - மெல்லெழுத்துமிகுதலாவயினன.

என்னின். இவ்வீற்றுண் மருஉமுடிபுகூறுதனுதலிற்று. அகமென்னுஞ்சொலிற்கு, கையென்னுஞ்சொல் முன்வரின், முன் "மகரவிறுதி" எனறதனுன், மகரங்கெட்டுநின்றநிலைமொழிமுதனின்ற அகரமொழிய, அதன்முன்னின்றஅகரமும் அகரத்தாற்பற்றப்பட்டககரமெய்யும் கெட்டுமுடிதலும், அவைகெடாதுநினறுமுடிதலும், நீக்குநிலைமையின்று. ஆசிரியர்க்கு, அவ்விரண்டிடத்தும் மெல்லெழுத்துமிக்குமுடிக. எ-று. உ-ம். அங்கை, அகங்கை, எனவரும். [உய]

இலமென்கிளவிக்குப்படுவருகாலை -
நிலையலுமுரித்தேசெய்யுளான.

என்னின். அவ்வீற்றுரிச்சொல்லுளொன்றற்கு, செய்யுண்முடிபுகூறுதனுதலிற்று. இலமென்னுஞ்சொலிற்கு, படுவென்னுஞ்சொல் வருமொழியாய்வருங்காலத்து, முன் "மகரவிறுதி" என்பதனாற்கெட்டவீறு கெடாதுநின்று

முடிதலுமுரித்து. செய்யுட்கண் எ - று. உ - ம். * இலம்படுபுலவரோற்றகை நிறைய எனவரும். உரிச்சொல்லாதலான், உருபுவிரியாதெனினும், இலத்தாற்பற்றப்படும் புலவனென்னும் பொருளுணரநிற்றலின், வேற்றுமைமுடிபாயிற்று. உம்மை மகரவீறென்னுஞ்சாதியொருமைபற்றிவந்தவெதிர்மறை. [உக]

## அத்தொடுசிவணுமாயிரத்திறுதி - யொத்தவெண்ணுமுன்வருகாலே.

என்னின். இவ்வீற்றெண்ணுப்பெயருளொன்றற்கு, 'தொகைமரபினுளெய்திய ஏயென்சாரியையைவிலக்கி, அத்துவகுத்தனுதலிற்று. ஆயிரமென்னுமெண்ணுப்பெயரின்மகரம் தனக்ககப்படுமொழியாய்ப் பொருந்தினவெண்ணுப்பெயர் தன்முன்வருங்காலத்து, தொகைமரபிற்கூறிய ஏயென்சாரியையையொழித்து, அத்துச்சாரியைபொருந்திமுடியும். எ - று. உ-ம். ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு, மூன்று, நான்கு, எனவொட்டுக. நிலைமொழிமுன்கூறுது, சாரியைமுன்கூறியவதனன், இதன்முன்னர், குறை, கூறு, முதல், என்பனவந்தவழியும், இம்முடிபுகொள்க. ஆயிரத்துக்குறை, கூறு, முதல், எனவொட்டுக. [உஉ]

## அடையொடுதோன்றினுமதனோரற்றே.

என்னின். அவ்வெண்ணுப்பெயர் அடையடுத்தவழிமுடியுமாறு கூறுதனுதலிற்று. அவ்வாயிரமென்னுமெண்ணுப்பெயர் அடையடுத்தமொழியோடு தோன்றினும், மேற்சொன்னதனேடொருதன்மைத்தாய், அத்துப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். பதினுயிரத்தொன்று, இரண்டு, எனவொட்டுக. மேலிலேசினுன்வந்தனவும், அடையடுத்தொட்டுக. பதினுயிரத்துக்குறை, கூறு, முதல், எனவரும். [உங]

## அளவுநிறையும்வேற்றுமையியல.

என்னின். அவ்வெண்ணின்முன்னர், அளவுப்பெயர் நிறைப்பெயர் வந்தான்முடியுமாறுகூறுதனுதலிற்று. ஆயிரத்துமுன், அளவும்நிறையும்வந்தால், இவ்வீற்றுவேற்றுமையியல்பாய், மகரங்கெட்டு வல்லெழுத்துமிக்குமுடியும், எ -று. உ - ம். ஆயிரக்கலம், சாடி, தூதை, பானை, எனவும், ஆயிரக்கழஞ்சு, தொடி, பலம், எனவுமொட்டுக. இம்மாட்டேற்றுனே, மேல் "துவர" என்றவிலேசினுன், இயல்புகணத்துக்கட்டு, எய்தியமகரம், ஈண்டுங்கெடுத்துக்கொள்க. ஆயிரநாழி, வட்டி, அகல், எனவரும். பதினுயிரக்கலம் என்றாற்போல, அடையடுத்துவந்த வழியும் ஒட்டுக. [உச]

---

* "இலம்படுபுலவர் என்பதற்கு, "இலத்தாற்பற்றப்பட்டபுலவரென வேற்றுமை யென்றார். உரையாசிரியரெனின், பற்றப்பட்டபுலவர்என்பது பெயரெச்சமாதலின், பற்றவென்னுந்தொழிறோற்றுவிக்கின்ற முதனிலைச்சொல்லை, சூத்திரத்து, ஆசிரியர் எடுத்தோதிற்றிலராகலானும், படுஎன்பதுதானும் புலவனென்னும் பெயரோடுமுடியுங்கால், இரண்டுகாலமுங்காட்டு மீறுகடொக்கமுதனிலைச்சொல், அறியநிற்றலின், அதனை எடுத்தோதினாராகலானும், ஆசிரியர்க்கு, அங்ஙனங்கூறுதல்கருத்தன்மையுணர்கவென்பதும், நெற்பாடு பெரிதுஎன்பதில், பாடு உண்டாதற்பொருளுணர்த்தி, நின்றாற்போல, இதற்கு, இல்லாமையுண்டாகின்றபுலவரெனப்பொருள்கூறுக." என்பதும் நச்சினார்க்கினியம்.

**படர்க்கைப்பெயருமுன்னிலைப்பெயருந் - தொடக்கங்குறுகு ம்பெயர்நிலைக்கிளவியும் - வேற்றுமையாயினுருபியனிலையு - மெல் லெழுத்துமிகுதலாவயினான.**

என்னின். இவ்வீற்றுட்சில உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் உருபி யலுண்முடிந்தவாறே, ஈண்டுப்பொருட்புணர்ச்சிக்கண்ணுமுடியுமெனக்கூறுத னுதலிற்று. எல்லாருமென்னும்படர்க்கைப்பெயரும் எல்லீருமென்னுமுன் னிலைப்பெயரும் கிளைத்தொடர்ச்சிப் பொருளவாய், நெடுமுதல்குறுகிமுடியு ந்தாம் நாம் யாம் என்னும்பெயரும் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணு யின், உருபுபுணர்ச்சிக்கட்சொன்ன வியல்பின்கண்ணேநின்று, சாரியைபெறுவ ன ஈறுகெட்டு, இடையும், ஈறுஞ்சாரியைபெற்றும், நெடுமுதல்குறுகுவன நெடு முதல் குறுகியும்முடியும். நெடுமுதல் குறுகுமொழிக்கண், மெல்லெழுத்துமிகு ம். எ-று. உ-ம். எல்லார்தங்கையும், எல்லீர்நுங்கையும், செவியும், தலையு ம், புறமும், எனவரும். தங்கை, நங்கை, எங்கை, செவி, தலை, புறம், எனவு மொட்டுக. வேற்றுமையாயின் என்றதனால், படர்க்கைப்பெயர்க்கும், முன்னி லைப்பெயர்க்கும், இயல்புகணத்து, ஞகரமும் நகரமும்வந்தவழி, தம்முச்சாரி யையும் நும்முச்சாரியையும் ஈறுகெடுதல்கொள்க. ஆவயினான என்றதனா ல், படர்க்கைப்பெயர்க்கும், முன்னிலைப்பெயர்க்கும், ஞகரமும் நகரமும் வந் துழி, அவைமிகுதலும், தொடக்கங்குறுகும்பெயர்க்கும், அஞ்ஞகரமும் நகர மும்வந்துழி, மகரங்கெட்டு, அவைமிகுதலுங்கொள்க. எல்லார்தஞ்ஞாணும், எல்லீர்நுஞ்ஞாணும், நூலும், எனவும், தஞ்ஞாண், நஞ்ஞாண், எஞ்ஞாண், நூல், எனவும்வரும். இன்னும் ஆவயினான என்றதனால், படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் சாரியைபெறாது, இறுதியும்முப்பெறுதலுங்கொள்க. எல் லார்கையும், எல்லீர்கையும், செவியும், தலையும், புறமும், எனவரும், இன் னுமதனானே, உருபீற்றுச்செய்கையெல்லாங்கொள்க. * தமகாணம், என வரும். [உரு]

**அல்லதுகிளப்பினியற்கையாகும்.**

என்னின். மேலவற்றிற்கு, அல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. மேற்கூறிய படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் தொடக்கங்குறுகும்பெயர்நிலைக்கி ளவியும் அல்வழியைச்சொல்லுமிடத்து, இயல்பாய்முடியும். எ - று. ஈண்டு இயல்பென்பது சாரியைபெறாமைநோக்கி. இவற்றினீறுதிரிதல் "அல்வழியெல் லாம்" என்றதனுள், "எல்லாம்" என்னும் இலேசினாற்கொள்க. எல்லாருங் குறியர்; சிறியர், தீயர், பெரியர், எனவும், எல்லீருங்குறியீர்; சிறியீர், தீயீர், பெரியீர், எனவும், தாங்குறியர் ; சிறியர், தீயர், பெரியர், எனவும், நாங்குறி யம் ; சிறியம், தீயம், பெரியம், எனவும், யாங்குறியேம்; சிறியேம், தீயேம், பெரியேம், எனவும்வரும். இன்னும் "எல்லாம்" என்னுமிலேசினானே, இவ் வீற்றுக்கண், மென்கணத்து மகரமொழிந்தன வந்தவழி, மகரம், அவ்வொற் றுப்த்திரிதலுங்கொள்க. எல்லாருஞ்ஞான்றார்; நீண்டார், எனவும், எல்லீருஞ் ஞான்றீர், நீண்டீர், எனவும், தாஞ்ஞான்றார்; நீண்டார், எனவும், நாஞ்ஞான்றா ம்; நீண்டாம், எனவும், யாஞ்ஞான்றேம்; நீண்டேம், எனவுங்கொள்க. [உசு]

**அல்லதுகிளப்பினும்வேற்றுமைக்கண்ணும் - எல்லாமெனும்பெ யருருபியனிலையும் - வேற்றுமையல்வழிச்சாரியைநிலையாது.**

என்னின். . இதுவுமவ்வீற்றுவிரவுப்பெயருளொன்றற்கு, அல்வழிக்கண் ணும், வேற்றுமைக்கண்ணும், உருபியலோடு மாட்டெறிந்துமுடிபுகூறுதனு

* தமகாணம் அகரவுருபேற்றது.

தலிற்று. அல்வழியைச் சொல்லுமிடத்தும், வேற்றுமைப்பொருட்புணர்ச்சியிடத்தும், எல்லாமென்னும் விரவுப்பெயர் உருபுபுணர்ச்சியினியல்பிலேநின்று, வற்றுச்சாரியையும், இறுதி, உம்முச்சாரியையும், பெற்றுமுடியும். அப்பெயர் வேற்றுமையல்லாதவிடத்து, சாரியைபெறுதல் நிலையாதாயேமுடியும. எ - று. மாட்டேறேலாதவல்வழியினையும், உருபியலோடு மாட்டெறிந்துவிலக்கியமிகுதியான், அல்வழிக்கண், வன்கணத்திறுதி, உம்முப்பேறும், நிலைமொழி மகரக்கேடும், வருமொழி வல்லெழுத்துப்பேறும், மென்கணத்து,மகரக்கேடும், பண்புத்தொகைக்கண், மகரக்கேட்டோடு, இறுதிஉம்முப்பேறுங்கொள்க. உ-ம். எல்லாக்குறியவும், சிறியவும, தீயவும், பெரியவும், எனவும், எல்லாவற்றுக்கோடும், செவியும், தலை , புறமும், எனவும், எல்லாஞான்றன; நீண்டன, மாண்டனஎனவும், எல்லா ாணும், நூலும், மணியும், யாப்பும், வலிமையும், அடைவும், ஆட்டமும், எனவும், எல்லாவற்றுஞாணும், நூலும், மணியும், யாப்பும், வலிமையும், அடைவும், ஆட்டமும், எனவும்வரும். எல்லாக்குறியரும், சிறியரும், தீயரும், பெரியரும் என, உயர்திணைக்கண்ணுமொட்டுக. ஈண்டுச்சாரியைபெற்றவழி, மகரக்கேடு வற்றின்மிசையொற்றுய்க்கெட்டது. இதுவிரவுப்பெயராகலின், ஈற்றுப்பொதுமுடிவிற்கேலாதென்று சாரியை வல்லெழுத்துக்கொள்ளப்பட்டது. [உஎ]

## மெல்லெழுத்துமிகினுமானமில்லை.

என்னின். மேற்கூறியவெல்லாமென்பதற்கு, அல்வழிக்கணெய்தியதன் மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அவ்வெல்லாமென்பது அல்வழிக்கண், மேல் இலேசினாற்கூறியவல்லெழுத்தேயன்றி, மெல்லெழுத்துமிக்குமுடியினுங் குற்றம் இல்லை, எ - று. மேற்கூறியசெய்கைமேலே, இதுகூறினமையின், மகரக்கேடும், இறுதி, உம்முப்பேறுங்கொள்க. உ - ம். எல்லாங்குறியவும், சிறியவும, தியவும், பெரியவும், எனவும், எல்லாங்குறியரும், சிறியரும், தீயரும், பெரியரும், எனவும் ஒட்டுக. இனி உரையிற்கோடலென்பதனல், இறுதி,உம்மின்றி, எல்லாங்குறிய, எல்லாருங்குறியர், எனவும்வரும். மேல் இலேசிற்கூறிநின்றவல்லெழுத்திஞேடு, மெல்லெழுத்துவருத்தமையின், இஃது அல்வழியாயிற்று. [உஅ]

## உயர்திணையாயினுருபியனிலையும்.

என்னின். மேலதற்கு, உயர்திணைமுடிபுகூறுதனுதலிற்று, அவ்வெல்லாமென்பது அஃறிணைப்பெயராயன்றி, உயர்திணைப்பெயராய். நின்றநிலைமையாயின், உருபுபுணர்ச்சியினியல்பிலேநின்று, ஆண்டுக்கூறியநம்முச்சாரியைபெற்றுமுடியும். எ - று. வற்றுவகுத்தசெய்கைமேல்வகுத்தமையின், மகரக்கேடுகொள்க. இறுதிஉம்மையும், அச்செய்கைமேலேவகுத்தமையிற்கொள்க. உ-ம். எல்லாநங்கையும், செவியும், தலையும், புறமும், எனவரும். மேல் "மானமில்லை" என்றதனல், அல்வழிக்கண்வன்கணத்து, மகரங்கெட்டுவல்லெழுத்துமிக்கு, இறுதிஉம்முப்பெற்றுமுடிதலும், இயல்புகணத்துக்கண் மகரங்கெட்டிறுதி, உம்முப்பெற்றுமுடிதலுங்கொள்க. எல்லாக்கொல்லரும், சேவகரும், தச்சரும், புலவரும், எனவும். எல்லாஞாயிறும், நாயகரும், மணியகாரரும், வணிகரும், அரசரும், எனவும்வரும். [உகூ]

## நும்மெனொருபெயர்மெல்லெழுததுமிகுமே.

என்னின். இதுவும், அவ்வீற்றுவிரவுப்பெயருளொன்றற்கு, வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. நும்மென்றுசொல்லப்படுகின்ற வோர்விரவுப்பெயர்,

வேற்றுமைக்கண், மெல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். நுங்கை, செவி, தலை, புறம், எனவரும். மகரம் "துவர" என்றவிலேசினுற்கெட்டது. ஒருபெயரென்றதனுன், ஞகரநகரங்கள்வந்தவிடத்தும், அவ்வொற்றுமிகுதல் கொள்க. நுஞ்ஞாண், நூல், எனவரும். ஒன்றினமுடித்தலென்பதனுல், உங்கை என, உம்மென்பதன்முடிபும், இவ்வீற்றுக்கொள்க. [௩௰]

**அல்லதன்மருங்கிற்சொல்லுங்காலை-யுக்கெடநின்றமெய்வயினீவ ர - இஇடைநிலைஇயீறுகெடரகர-நிற்றல்வேண்டும்புள்ளியொடுபுணர்ந்தே - யப்பான்மொழிவயினியற்கையாகும்.**

என்னின். மேலதற்கு, அல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. அந்நும்மென்னுருபெயர்தன்னை, அல்வழியிடத்துச்சொல்லுங்காலை, நகரத்துகரங்கெட, அந்நின்றமெய்யிடத்து, ஈகாரம்வர, ஓர்இகரம்இடையிலேபெற, மகரம்கெட, அவ்விடத்து, ஒரு ரகரம்புள்ளியோடுபொருந்தி நிற்றல்வேண்டும். வருமொழியிடத்து, அம்மொழிதான் இவ்வாறுதிரியாதியல்பாதல்வேண்டும். எ - று. உ - ம். நீயிர்குறியீர், சிறியீர், தீயீர், பெரியீர், எனவரும். ஞான்றீர், நீண்டீர், மாண்டீர் என, இயல்புகணத்தோடும், ஒட்டுக. [௩௧]

தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல.

என்னின், இவ்வீற்றுத்தொழிற்பெயர்க்கண், அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும், முடிபு வேற்றுமைகூறுதனுதலிற்று. மகரவீற்றுத்தொழிற்பெயரெல்லாம் அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், ஞகாரவீற்றுத்தொழிற்பெயரியல்பினவாய், வன்கணத்து, உகரமும்வல்லெழுத்தும்பெற்றும், இயல்புகணத்து, உகரம்பெற்றும்வரும். எ - று. உ - ம். செம்முக்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும், ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும் செம்முக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவும். ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். எல்லாமென்றதனுன், உடரம்பெறுது, அல்வழிக்கண், நாட்டங்கடிது என, மெல்லெழுத்தாய்த்திரிவனவும், வேற்றுமைக்கண்,நாட்டக்கடுமைஎன, மகரங்கெட்டு வல்லெழுத்துமிக்குவருவனவுங்கொள்க. [௩௨]

**ஈமுங்கம்முமுருமென்கிளவியு - மாமுப்பெயருமவற்றோரன்ன.**

என்னின். பொருட்பெயருட்சில அல்வழிக்கண்ணும். வேற்றுமைக்கண்ணும், தொழிற்பெயரோடொத்துமுடியுமெனக்கூறுதனுதலிற்று. ஈமென்னுஞ்சொல்லும், கம்மென்னுஞ்சொல்லும், உருமென்னுஞ்சொல்லுமாகிய அம்மூன்றுபெயரும் அல்வழிக்கண்ணும்,வேற்றுமைக்கண்ணும், அத்தொழிற்பெயரோடொருதன்மையவாய், வன்கணம்வந்தவழி, உகரமும்வல்லெழுத்தும் பெற்றும், இயல்புகணத்துகரம்பெற்றும், முடியும். எ-று. உ-ம். * ஈமுக்கடிது, † கம்முக்கடிது, ‡ உருமுக்கடிது, சிறிது, தீது, பெரிது, எனவும், ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை; எனவும், ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். [௩௩]

---

* ஈம் - இடுகாடு.
† கம் கம்மியரதுதொழில்.
‡ உரும் இடி.

வேற்றுமையாயினேனையிரண்டுந்-
தோற்றம்வேண்டுமக்கென்சாரியை.

என்னின். மேல்முடிபுகூறியமூன்றனுளிரண்டற்கு, வேற்றுமைக்கண் வேறோர்முடிபுகூறுதனுதலிற்று. வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின், இறுதி,உருமொழிந்தவிரண்டும் அக்கென்னுஞ்சாரியை தோற்றிமுடிதல் வேண்டும். எ-று. தோற்றமென்றதனான், உருமுநீக்குதல்வேண்டுமென்க. உ - ம். ஈமக்குடம், கம்மக்குடம், சாடி, தூதை, பானை, எனவரும். மேல்வேற்றுமைகூறியமுடிபு குணவேற்றுமைக்கண்ணதென்றும், ஈண்டுக்கூறியமுடிபு பொருட்பெயர்க்கண்ணதென்றுங்கொள்க. [௩௪]

வகார மகாரங்குறுகும்,

என்னின். இதுபருந்துவி( டாய். "அரையளபுகுறுகல்" என்பதற்கு, ஓர்புறநடைகூறுகின்றது. மே... மொழிக்கட்கூறிய "னகாரைமுன்னரே" அன்றி, ஈண்டுப்புணர்மொழிக்கண், வகரத்தின்மேலும், மகரம்குறுகும். எ-று, உ-ம். நிலம்வலிது, எனவரும். [௩௫]

நாட்பெயர்க்கிளவிமேற்கிளந்தன்ன - வத்துமான்மிசைவரைநிலையின்றே - யொற்றுமெய்கெடுதலென்மனார்புலவர்.

என்னின். இவ்வீற்றுநாட்பெயர்க்கு, வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. மகாரவீற்றுநாட்பெயர்ச்சொன்மேல், இகரவீற்றுநாட்பெயரிற்கிள...ன்மையவாய், ஆன்பெற்றுமுடியுமுடிபும், அத்துச்சாரியை அவ்வான்சாரியைமேலும் பிறசாரியைமேலும், நீக்குநிலைமையின்றாம். அவ்விடத்துமகரவொற்றுத்தம்வடிவுகெடுகவென்றுசொல்லுவர்புலவர். எ - று. உ - ம். மகத்தாற்கொண்டான்; மகத்துஞான்றுகொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும்.' ஒற்றென்றதுமெய்யென்றதனான், நாட்பெயரல்லாதபொருட்பெயர்க்கண்ணும், அம்முடிபுகொள்க. மரத்தாற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். [௩௬]

னகாரவிறுதிவல்லெழுத்தியையிற்-
றகாரமாகும்வேற்றுமைப்பொருட்கே.

என்னின். னகாரவீற்றுவேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. னகாரவீற்றுப்பெயர் வல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய்வந்தியையில், றகாரமாகும். வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண், எ - று. உ - ம். பொற்குடம், சாடி, தூதை, பானை, எனவரும். [௩௭]

மன்னுஞ்சின்னுமானுமீனும் -
பின்னுமுன்னும்வினையெஞ்சுகிளவியு -
மன்னவியலவென்மனார்புலவர்.

என்னின். அவ்வீற்றசைநிலையிடைச்சொல்லும் ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணரநின்றவிடைச்சொற்களும் வினையெச்சமும் முடியுமாறுகூறுதனுதலிற்று, மன்னென்னுஞ்சொல்லும் சின்னென்னுஞ்சொல்லும் ஆனென்னுஞ்சொல்லும் ஈனென்னுஞ்சொல்லும் பின்னென்னுஞ்சொல்லும் முன்னென்னுஞ்சொல்லும் வினையெச்சமாகியசொல்லும் மேற்கூறியவியல்பினவாய், னகரம்றகரமாய்முடியும். எ-று, உ-ம். அதுமற்கொண்கன்றேரோ, காப்

பும்பூண்டிசிற்கடையும்பேரிகல், எனவும், ஆற்கொண்டான்; ஈற்கொண்டான்; பிற்கொண்டான்; முற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினன், எனவும், வரிற்கொள்ளும், செல்லும், தரும், போம், எனவும்வரும். பெயராந்தன்மையவாகிய, ஆன், ஈன், என்பனவற்றை, முற்கூறுததனன், ஆன்கொண்டான்; ஈன்கொண்டான்; எனத்திரியாதுமுடிதலுங்கொள்க. பின், முன், என்பன பெயர்நிலையும்வினையெச்சமும் உருபுநிலையும்படும். அவற்றுள், வினையெச்சநிலை ஈண்டுவினையெஞ்சுகிளவியும், என்பதனன்முடியும். உருபுநிலை உருபியலுண்முடியும். ஈண்டுப்பெயர்கூறுகின்றது. அதனைமுன்கூறுததனல், பின்கொண்டான்; முன்கொண்டான்; எனத்திரியாமையுங்கொள்க. இயல என்றதனன், ஊனென்னுஞ்சுட்டு ஊன்கொண்டான்என, இயல்பாய்முடிதல் கொள்க. [௩அ]

சுட்டுமுதல்வயினுமெகரமுதல்வயினும் -
அப்பண்புநிலையுமியற்கையவென்ப.

என்னின். இவ்வீறறுள், ஒருசார்ஏழாம் வேற்றுமையிடப்பொருளுணர்த்திநின்றவிடைச்சொல்லிற்குமுடிபுகூறுதனுதலிற்று. சுட்டெழுத்தினைமுதலாகவுடையவயினென்னுஞ்சொல்லும் எகரமாகியமுதலையுடையவயினென்னுஞ்சொல்லும் மேல்றகாரமாய்முடியுமென்ற அப்பண்புநிலைபெற்றுமுடியுமியற்கையையுடைய. எ - று. உ - ம். அவ்வயிற்கொண்டான்; இவ்வயிற்கொண்டான்; உவ்வயிற்கொண்டான்; எவ்வயிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினன், எனவரும். இயற்கையவென்றதனல், திரியாதியல்பாய்முடிவனவுங்கொள்க. கான்கோழிஎனவரும். [௩௯]

குயினென்கிளவியியற்கையாகும்.

என்னின். இவ்வீற்றுளொன்றற்கு, எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுதனுதலிற்று. குயினென்னுஞ்சொல் திரியாதியல்பாய்முடியும். எ - று. உ - ம. குயின்குழாம், செலவு, தோற்றம், பறைவு, எனவரும். குயின், என்பதுமேகம். [௪௰]

எகின்மரமாயினண்மரவியற்றே.

என்னின். திரிபுவிலக்கி, அம்முவகுத்தனுதலிற்று. எகினென்னுஞ்சொல்லும் மரப்பெயராயின், ஆண்மரத்தினதியல்பிற்றய், அம்முப்பெற்றுமுடியும். எ - று. உ - ம். எகினங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [௪௧]

ஏனையெகினேயகரம்வருமே -
வல்லெழுத்தியற்கைமிகுதல்வேண்டும்.

என்னின். இதுவுமது. ஒழிந்தமரமல்லா எகினிலைமொழிக்கண், அகரம் வந்துமுடியும். அவ்விடத்துவருமொழிவல்லெழுத்தியல்பு மிக்குமுடிதலவேண்டும். எ - று. உ - ம். எகினக்கால், செவி, தலை, புறம், எனவரும். மேலைச்சூத்திரத்தோடு, இதனை ஒன்றாகவோதாததனன், இயல்புகணத்துக்கண்ணும், அகரப்பேறுகொள்க. எகின்ஞாற்சி, யாப்பு, அடைவு, எனவரும். இயற்கையென்றதனன், அகரப்பேற்றோடு, மெல்லெழுத்துப்பேறுங்கொள்க. எகினங்கால், செவி, தலை, புறம், எனவரும். [௪௨]

கிளைப்பெயரெல்லாங்கிளைப்பெயரியல.

என்னின். இவ்வீற்றிற்கு, எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. ணகாரவீற்றுக்கிளைப்பெயரெல்லாம் ணகாரவீற்றுக்கிளைப்பெயர்போலத்திரியாதியல்பாய்முடியும். எ - று. உ - ம். எயின்குடி, சேரி, தோட்டம், பாடி, எனவரும். எல்லாமென்றதனன், அக்குச்சாரியையும் வல்லெழுத்தும் பெற்று, எயினக்கன்னியென, முடிதலும், பார்ப்பனக்கன்னியென, நிலைமொழிதிரிந்து, அக்கும்வல்லெழுத்தும்பெறுதலும், இனிச்சாரியைபெருதுதிரிந்து, வேளாண்குமரி, வேளாண்வாழ்க்கையென, முடிதலுங்கொள்க. [சரு]

மீனென்கிளவிவல்லெழுத்துறழ்வே.

என்னின். இதுவுமவற்றுளொன்றற்கு, வேறுமுடிபுகூறுதனுதலிற்று. மீனென்னுஞ்சொல் திரிபுவல்லெழுத்திேைனாடுறழ்ந்துமுடியும். எ - று. உ - ம். மீன்கண், மீற்கண், சினை, தலை, புறம், எனவரும். [சச]

தேனென்கிளவிவல்லெழுத்தியையின் - மேனிலையொத்தலும்வல்லெழுத்துமிகுதலு - மாமுறையிரண்டுமுரிமையுமுடைத்தே - வல்லெழுத்துமிகுவழியிறுதியில்லை.

என்னின். இதுவுமது. தேனென்னுஞ்சொல் வல்லெழுத்து முதன்மொழியாய்வந்துபொருந்தின், மேல் மீனென்னுஞ்சொல்லிற்குச்சொன்னதிரிபுறழ்ச்சியினிலைமையையொத்துமுடிதலும், வருமொழிவல்லெழுத்துமிக்குமுடிதலுமாகியவம்முறையையுடையவிரண்டினையும், உரித்தாதலையுமுடைத்து. வல்லெழுத்துமிகுமிடத்து, நிலைமொழியிறுதினகரவொற்றுநிலையின்றிக்கெடும். எ - று. உரிமையுமென்றவும்மை "மெல்லெழுத்துமிகினும்" என மேல்வருகின்றமுடிவினைநோக்கிநின்றது. உ - ம். தேன்குடம், தேற்குடம், சாடி, தூதை, பானை, எனவும், தேக்குடம், சாடி, தூதை, பானை, எனவும்வரும். [சரு]

மெல்லெழுத்துமிகினுமானமில்லை.

என்னின். மேலதற்கெய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்த்துற்று. மேற்கூறிய தேனென்கிளவி வல்லெழுத்துவந்தால், வல்லெழுத்துமிகுதலேயன்றி, மெல்லெழுத்துமிக்குமுடியினுங்குற்றமில்லை. எ - று. னகரக்கேடுஅதிகாரத்தாற்கொள்க. உ - ம். தேங்குடம், சாடி, தூதை, பானை, எனவரும். [சசா]

மெல்லெழுத்தியையினிறுதியொடுறழும்.

என்னின். மேலதற்கு, மென்கணத்துக்கட்டொகைமரபிற்கூறியமுடிபொழிய, வேறுமுடிபுகூறுதனுதலிற்று. அத்தேனென்கிளவி மெல்லெழுத்து முதன்மொழிவந்தியையின், நிலைமொழியிறுதினகாரவொற்றுக்கெடுதலும், கெடாமையுமாகியவுறழ்ச்சியாய்முடியும். எ-று. உ-ம். தேன்ஞெரி, தேஞெரி, நுனி, முரி, எனக்கொள்க. மேல் "மானமில்லை" என்றதனன், இறுதியோடுறழுமென்ற ஈறுகெட்டு, வருமொழிமெல்லெழுத்துமிக்கும், மிகாதும், உறழ்தற்கும், வருமொழிமிகாது, இறுதிகெட்டுங்கெடாதுமுறழ்தற்கும், அவ்விரண்டற்குமுரித்தாய்ச்சென்றதனைவிலக்கி, வருமொழிமிகாதேநிற்ப, அவ்வீறேகெட்டுங்கெடாதுநின்றுறழுமென்பது கொள்ளப்பட்டது. அதன்மேல் "ஆமுறை," என்றதனன், சிறுபான்மையீறுகெட்டு, தேஞ்ஞெரி, நுனி, முரி என, மெல்லெழுத்து மிகுதலுங்கொள்க. [சஎ]

இருஅற்ருேற்றமியற்கையாகும்.

என்னின். இன்னுமதற்கு, உயிர்க்கணத்தொருமொழிக்கண்முடியும் வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. தேனென்னுஞ்சொல் இருலென்னும்வருமொழியதுதோற்றத்துக்கண், நிலைமொழினகாரங்கெடாதேநின்றியல்பாய்முடியும். எ - று. உ - ம். தேனிருல், எனவரும். [சஅ]

ஒற்றுமிகுதகரமொடுநிற்றலுமுரித்தே.

என்னின். இதுவும் அதற்கெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அத்தேனென்பது இருலென்னும்வருமொழிக்கண், பிறிதுமோர்தகரவொற்றுடன்மிகுதகரத்தோடுநின்றுமுடிதலுமுரித்து. எ - று. மேல் " வல்லெழுத்துமிகுவழியிறுதியில்லை" என்றதனுனிலைமொழியீறுகெடுக்க. தகரமிகுமென்னுது, ஒற்றுமிகுதகரமென்றதனுல், ஈரொற்ருக்குக. தேத்திருல், எனவரும். மேலைச்சூத்திரத்தோடிதனையொன்ருகவோதாததனுல், பிறவருமொழிக்கண்ணும், இம்முடிபுகொளக. தேத்தடை, தேத்தீ, எனவரும். தோற்றமென்றதனுல், தேனடை, தேனீ, என்னுமியல்புங்கொள்க. [சகூ]

மின்னும்பின்னும்பன்னுங்கன்னு -
மந்நாற்சொல்லுந்தொழிற்பெயரியல.

என்னின். இஃதவற்றுட் சிலவற்றிற்கு வேறுமுடிபுகூறுதனுதலிற்று. மின்னென்னுஞ்சொல்லும், பின்னென்னுஞ்சொல்லும், பன்னென்னுஞ்சொலும், கன்னென்னுஞ்சொல்லும், அந்நான்குசொல்லும் வேற்றுமைக்கண்ணும், அல்வழிக்கண்ணும், ஞகரவீற்றுத்தொழிற்பெயர்போல, வன்கணம்வந்தவழி, உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்துக்கண்ணும், இடைக்கணத்துக்கண்ணும், உகரமும்பெற்றுமுடியும். எ - று. உ - ம். மின்னுக்கடிது ; பின்னுக்கடிது; பன்னுக்கடிது; கன்னுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, யாது, எனவும், மின்னுக்கடுமை, பின்னுக்கடுமை, பன்னுக்கடுமை, கன்னுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, யாப்பு எனவும்வரும். "தொழிற்பெயரெல்லாந் தொழிற்பெயரியல" என்ருேதாது இவ்வாறு எடுத்தோதியவதனுல், இம்முடிபினைத்தொழிற்பெயர்க்கும், பொருட்பெயர்க்கும், உடன்கொள்க. மின்னென்பது ஓர்தொழிலுமுண்டு. பொருளுமுண்டு. பிறவுமன்ன. [ரும]

வேற்றுமையாயினேனையெகினெடு -
தோற்றமொக்குங்கன்னென்கிளவி.

என்னின். மேன்முடிபுகூறியவற்று ளொன்றற்கு, வேருேர்முடிபுகூறுதனுதலிற்று. வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின், ஒழிந்தமரமல்லாவெகினெடு தோற்றமொத்து, அகரமும், வல்லெழுத்தும், பெற்றுமுடியும். கன்னென்னுஞ்சொல் எ - று. உ - ம். கன்னக்குடம், சாடி, தூதை, பானை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலுமை, எனவரும். சிறுபான்மை, கன்னக்கடுமை, என, குணவேற்றுமைக்கண்ணும் இம்முடிபுகொள்க. தோற்றமென்றதனுல், அல்வழிக்கண், அகரமும், வன்கணத்துக்கண், மெல்லெழுத்துங்கொள்க. உ - ம். கன்னங்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, எனவரும். இன்னுந்தோற்றமென்றதனுல், சிறுபான்மை கன்னங்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, என்றகுணவேற்றுமைக்கண்ணும்,

அகரமும், மெல்லெழுத்துங்கொள்க. இக்கன்னென்பது வேற்றுமைமுடிபிற்குமேற்கூறியது குணவேற்றுமைக்கெனவும், ஈண்டுக்கூறியது பொருட்பெயர்க்கெனவுங்கொள்க. [ருக]

**இயற்பெயர்முன்னர்த்தந்தைமுறைவரின் -**
**முதற்கண்மெய்கெடவகரநிலையும் -**
**மெய்யொழித்தன்கெடுமவ்வியற்பெயரே.**

என்னின். இவ்வீற்றுவிரவுப்பெயருளியற்பெயர்க்குந்தொகைமரபினுள், எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுதனுதலிற்று. னகாரவீற்றியற்பெயர் முன்னர், தந்தையென்னுமுறைப்பெயர் வருமொழியாய்வரின், முதற்கண்மெய்கெட, அதன்மேலேறிநின்ற அகரங்கெடாது நிலைபெறும். நிலைமொழியாகியவியற்பெயர் அவ்வன்னென்னுஞ்சொல்லில், அகரமேறிநின்ற மெய்யையொழித்து, அவ்வன்ருன்கெட்டுமுடியும். எ - று. உ - ம். சாத்தந்தை, கொற்றந்தை, எனவரும். முதற்கண்மெய்யென்றதனுல், சாத்தன்றந்தை, கொற்றன்றந்தை, என்னுமியல்புமுடிபுங்கொள்க. [ருஉ]

**ஆதனும்பூதனுங்கூறியவியல்பொடு -**
**பெயரொற்றகரந்துவரக்கெடுமே.**

என்னின். மேலதற்கெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. மேற்கூறியவியற்பெயருள், ஆதனும் பூதனும் என்னுமியற்பெயர்கள் மேற்கூறியசெய்கையோடு நிலைமொழிப்பெயருள், அன்கெடநின்றவொற்றும் வருமொழியுள், ஒற்றுக்கெடநின்ற அகரமும் முற்றக்கெட்டுமுடியும். எ - று. உ - ம். ஆந்தை, பூந்தை, எனவரும். இயல்பென்றவதனுல், பெயரொற்றும் அகரமுங்கெடாதேநின்று முடிந்தவாறேமுடிந்தாலுங்கொள்க. ஆதந்தை, பூதந்தை, எனவரும். துவரவென்றதனுல், அழான், புழான், என, நிறுத்திப்பொருந்தின செய்கைசெய்து, அழாந்தை, புழாந்தை, எனமுடிக்க. [ருங]

**சிறப்பொடுவருவழியியற்கையாகும்.**

என்னின். எய்தியதொருவழிவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. அவ்வியற்பெயர் பண்படுத்துவருவழி, முன்கூறியவிருமொழிச்செய்கையுந் தவிர்ந்தியல்பாய்முடியும். எ - று. உ - ம். பெருஞ்சாத்தன்றந்தை, பெருங்கொற்றன்றந்தை, எனவரும். [ருச]

**அப்பெயர்மெய்யொழித்தன்கெடுவழியே-**
**நிற்றலுமுரித்தேயம்மென்சாரியை-**
**மக்கண்முறைதொகூஉமருங்கினுன.**

என்னின். மேலதற்குநீவேருேர்வருமொழிக்கணெய்தாததெய்துவித்தது. அவ்வியற்பெயர் மக்களென்னுமுறைப்பெயர்வந்துகூடுமிடத்தின்கண்ணும், பிறிதிடத்தும், தானேறிய மெய்யையொழித்து, அன்கெடும். அவ்வழி, அம்மென்னுஞ்சாரியை நிற்றலுரித்து. எ-று. உ-ம். சாத்தங்கொற்றன், கொற்றங்கொற்றன், எனவும், சாத்தங்குடி, கொற்றங்குடி, எனவும்வரும். [ருரு]

**தானும்பேனுங்கோனுமென்னு -**
**மாமுறையியற்பெயர்திரிபிடனிலவே.**

என்னின். மேலதற்கொருவழியெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. அவ்வியற்பெயருள், தானும், பேனும், கோனுமென்னுமுறைமை

யினையுடைய வியற்பெயாகள் தந்தைமக்களென்னுமுறைப்பெயரோடுபுணரும் வழி, மேற்றிரிபுகளின்றி, இயல்பாய்முடியும். எ-று. உ-ம். தான்றந்தை, பேன்றந்தை, கோன்றந்தை, எனவும், தான்கொற்றன், பேன்கொற்றன், கோன்கொற்றன், எனவும்வரும. [ருசு]

## தான்யானெனும்பெயருருபியனிலையும்.

என்னின். விரவுப்பெயருள், தானென்பதற்கும், உயர்திணைப்பெயருள், யானென்பதற்கும், வேற்றுமைக்கட்டொகைமரபினுள், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. தானென்னும் விரவுப்பெயரும் யானென்னுமு யர்திணைப்பெயரும் மேற்றொகைமரபினுட்கூறிய வியல்புகளொழித்து, உருபுபுணர்ச்சியிற்கூறிய வியல்பின்கண்ணே நிலைபெற்று, தானென்பது நெடுமுதல்குறுகி, தன்னென்றாயும், யானென்பது யகரங்கெட்டு, ஆகாரம் எகரமாய், என்னென்றாயும்முடியும். எ-று. உ-ம். தன்கை, எனகை, செவி, தலை, புறம், எனவும், தன்ஞாண், என்ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை, எனவும்வரும். [ருஎ]

## வேற்றுமையல்வழிக்குறுகலுந்திரிதலுந் - தோற்றமில்லையென்மனார்புலவர்.

என்னின். மேலவற்றிற்கல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. மேற்கூறிய தான்யானென்னும்பெயர்கள் வேற்றுமைப்புணர்ச்சியல்லாதவிடத்து, தானென்பது நெடுமுதல்குறுகலும் யானென்பது அவ்வாறுதிரிதலும் தோற்றமின்றி யியல்பாய்முடியுமென்று சொல்லுவர்புலவர். எ-று. உ-ம். தான்குறியன்; சிறியன், தீயன், பெரியன், ஞான்றான், நீண்டான், மாண்டான், எனவும், யான்குறியேன்; சிறியேன், தீயேன், பெரியேன், ஞான்றேன், நீண்டேன், மாண்டேன், எனவும்வரும். தோற்றமென்றதனான், வேற்றுமைக்கண், அவ்வாறன்றித்திரிதலுங்கொள்க. உ-ம். தற்புகழ், தற்பகை, எனவும், எற்பகை, எற்பாடி, எனவும்வரும். [ருஅ]

## அழனென்னிறுதிகெடவல்லெழுத்துமிகுமே.

என்னின். இவ்வீற்றுளொன்றற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. அழனென்னுஞ்சொல் அழனென்னும் னகரவீறுகெட, வருமொழிவல்லெழுத்து மிக்குமுடியும். எ-று. உ-ம். அழக்குடம், சாடி, தூதை, பானை, எனவரும், அழனென்பது பிணம். [ருக]

## முன்னென்கிளவிமுன்னர்த்தோன்று - மில்லென்கிளவிமிசைறகரமொற்றல் - தொல்லியன்மருங்கின்மரீஇயமரபே.

என்னின். இவ்வீற்றுள், இலக்கணத்தோடுபொருந்திய மரூஉக்களுளொன்றற்கு வேறுமுடிபு கூறுதனுதலிற்று. முன்னென்னுஞ் சொல்லின்முன்னர்த்தோன்றும் இல்லென்னுஞ்சொல்லின்மேல், றகரவொற்றுவந்துமுடிதல் பழையதாகிய வியல்பினையுடையவிடத்து மருவிவந்த விலக்கணமுடிபு. எ-று. உ-ம். முன்றில், எனவரும். இதுகடைக்கண் என்றாற்போலவரூஉ மரூஉமுடிபுபோலன்றி, முன்னில் என, ஒற்றிரட்டிமுடியற்பாலது இருமொழிக்கு மியல்பிலதோர் ஒற்றுமிக்குமுடிந்த மரூஉமுடிபு. [சுய]

**பொன்னென்கிளவியீறுகெடமுறையின் -
முன்னர்த்தோன்றும்லகாரமகாரஞ் -
செய்யுண்மருங்கிற்றொடரியலான.**

என்னின். இவ்வீற்றுளொன்றற்கு, செய்யுண்முடிபு கூறுதனுதலிற்று. பொனனென்னுஞ்சொல் பகரமுதன்மொழிவந்தவிடத்து, தன்னீற்றினகரங் கெட, முறையானே,அதன்முன்னர், லகரமும் மகரமும் தோன்றிமுடியும். யாண்டெனில்;—செய்யுளிடத்து, சொற்கள் தம்மிற்றொடர்ச்சிப்படு மியல்பின் கண், எ - று. முறையினெனறதனுல், லகரம் உயிர்மெய்யாகவும், மகரந்தனிமெய்யாகவுங்கொள்க. உ - ம். பொலம்படப்பொலிந்தகொய்சுவற்புரவி, எனவரும். தொடரியலானஎன்றதனுன், பகரம் அல்லாதவனகணத்துக்கண்ணுஞ் சிறுபான்மை ஈறுகெட்டு, லகரமும், வல்லெழுத்திற்கேற்ற மெல்லெழுத்தும்மிக்குமுடிதலுங்கொள்க. பொலங்கலம், பொலஞ்சுடர், பொலந்தேர் எனவரும். ஒன்றினமுடித்தலென்பதனுல், பொலநறுந்தெரியல், பொலமலராவிரை, என்றாற்போலவரும் பிறகணத்துமுடிபுங்கொள்க. [கூக]

**யகரவிறுதிவேற்றுமைப்பொருள்வயின் -
வல்லெழுத்தியையினவ்வெழுத்துமிகுமே.**

என்னின். யகாரவீற்றிற்கு வேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. யகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண், வல்லெழுத்துமுதன்மொழி வந்தியையின், அவ்வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று. உ - ம். நாய்க்கால், செவி, தலை, புறம், எனவரும். [கூஉ]

**தாயென்கிளவியியற்கையாகும்.**

எனனின். இவ்வீற்றுவிரவுப்பெயருளொன்றற்கு, வேறுமுடிபுகூறுதனுதலிற்று. தாயென்னுஞ்சொல் வல்லெழுத்துமிகாது, இயல்பாய்முடியும். எ - று. உ - ம். தாய்கை, செவி, தலை, புறம், எனவரும். இவ்வியல்பு மேல் இன்னவழி மிகுமென்கின்றமையின், அஃறிணைவிரவுப்பெயரொன்பதனுளடங்காதாயிற்று. [கூங]

**மகன்வினைகிளப்பின்முதனிலையியற்றே.**

என்னின். மேலதற்கடையடுத்துவந்தவழி, இன்னவாறுமுடியுமென வெய்தாததெய்துவித்தனுதலிற்று. அத்தாயென்னுஞ்சொல் மகனதுவினையைக் கிளந்துசொல்லுமிடத்து, இவ்வீற்றுமுதற்கட்கூறிய நிலைமையினியல்பிற்றாய், வல்லெழுத்து மிக்குமுடியும். எ - று. உ - ம். மகன்றாய்க்கலாம், செரு, தார், படை, எனவரும். மகன்வினையென்றது மகற்குத்தாயாற் பயன்படுநிலைமையின்றி, அவளோடு பகைத்தநிலைமையை. [கூச]

**மெல்லெழுத்துறழுமொழியுமாருளவே.**

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்கெய்தாத தெய்துவித்தனுதலிற்று. மேற்கூறிய வல்லெழுத்திேனுடு மெல்லெழுத்து மிக்கும், உறழ்ந்தும் முடியுமொழிகளுமுள. எ - று. உ - ம். வேய்ங்குறை, வேய்க்குறை, சிறை, தலை, புறம், எனவரும். [கூரு]

அல்வழியெல்லாமியல்பெனமொழிப.

என்னின். இவ்வீற்றல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. அந்தயகரவீற்றல்வழியெல்லாம் இயல்பாய்முடியுமென்று சொல்லுவர்புலவர். எ - று. உ-ம். நாய்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவரும். எல்லாமென்றதனால், இவ்வீற்றுருபுவராது, உருபின்பொருள்படவந்தவிடைச்சொன்முடிபும், வினையெச்சமுடிபும், இருபெயரொட்டுப்பண்புத்தொகைமுடிபும், அல்வழியுறழ்ச்சிமுடிபுங்கொள்க. அவ்வாய்க்கொண்டான்; இவ்வாய்க்கொண்டான்; உவ்வாய்க்கொண்டான்; எவ்வாய்க்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவும், தாய்க்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவும். பொய்ச்சொல், மெய்ச்சொல், எனவும், வேய்கடிது; வேய்க்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும் வரும். [சுசு]

ரகாரவிறுதியகாரவியற்றே.

என்னின். ரகாரவீற்றுவேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. ரகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண், யகரவீற்றியல்பிற்றாய், வல்லெழுத்துவந்தவழிமிக்குமுடியும். எ - று. உ - ம். தேர்க்கால், செய்கை, தலை, புறம், எனவரும். [சுஎ]

ஆரும்வெதிருஞ்சாரும்பீரு -
மெல்லெழுத்துமிகுதன்மெய்பெறத்தோன்றும்.

என்னின். இவ்வீற்றுட்சிலவற்றிற்கெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுதனுதலிற்று. ஆரொன்னுஞ்சொல்லும், வெதிரொன்னுஞ்சொல்லும், சாரொன்னுஞ்சொல்லும், பீரொன்னுஞ்சொல்லும், மெல்லெழுத்துமிக்குமுடிதல் மெய்ம்மைபெறத்தோன்றும். எ - று. உ - ம். ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு, சார்ங்கோடு, பீர்ங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். மெய்பெற என்றதனால், பிறவும் மெல்லெழுத்துமிகுதல்கொள்க. குதிர்ங்கோடு, துவர்ங்கோடு செதிள், தோல், பூ, எனவரும். இன்னுமதனானே, பீரொன்பது மேல் அம்முப்பெற்றவழி, இயைபு வல்லெழுத்துவீழ்வுங்கொள்க. [சுஅ]

சாரென்கிளவிகாழ்வயின்வலிக்கும்.

என்னின். மேலனவற்றுட் சாரொன்பதற்கு, எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதனுதலிற்று. சாரொன்னுஞ்சொல் காழென்னுஞ்சொல்லொடு புணருமிடத்து, வல்லெழுத்துமிக்குப்புணரும். எ - று. உ - ம். சார்க்காழ், எனவரும். [சுகூ]

பீரொன்கிளவியம்மொடுஞ்சிவணும்.

என்னின். அவற்றுட் பீரொன்பதற்கு, எய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. பீரொன்னுஞ்சொல் மெல்லெழுத்தேயன்றி, அம்முச்சாரியை பெற்றுவந்துமுடியும். எ - று. உ - ம். பீரங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [எய]

லகாரவிறுதினகாரவியற்றே.

என்னின். லகாரவீற்றிற்கு, னகாரவீற்றுவேற்றுமையோடியைய வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. லகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண், வல்லெழுத்துமுதன்மொழி வந்தால், னகாரவீற்றினியல்பிற்றாய், லகரம் றகரமாய்த்திரிந்துமுடியும். எ - று. உ - ம். கற்குறை, சிறை, தலை, புறம், எனவரும். [எக]

**மெல்லெழுத்தியையினகாரமாகும்.**

என்னின். அவ்வீறு மென்கணத்தோடு முடியுமாறு கூறுதனுதலிற்று. அவ்வீறு மென்கணம் வந்தியையின், லகாரம் னகாரமாய்த்திரிந்துமுடியும். எ-று. உ-ம். கன்ஞெரி, நுனி, முறி, எனவரும். இச்சூத்திரத்தினை, வேற்றுமைய தீற்றுக்கண், அல்வழியதெடுத்துக் கோடற்கண், சிங்கநோக்காகவைத்தமையான், அல்வழிக்குமிம்முடிபுகொள்க. கன்ஞெரிந்தது, நீண்டது, மாண்டது, எனவரும். [எ௨]

**அல்வழியெல்லாமுறழெனமொழிப.**

என்னின். இஃது அவ்வீற்றிற்கல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. அவ்வீற்றல்வழிக்கண், எல்லாம் தந்திரிபுவல்லெழுத்தினோடுறழ்ந்துமுடியும். எ-று. உ-ம். கல்குறிது; கற்குறிது; சிறிது, தீது, பெரிது, எனவரும், எல்லாமென்றதனால், கல்குறுமை, கற்குறுமை, எனக்குணம்பற்றிவந்தவேற்றுமைக்கு, இவ்வுறழ்ச்சிகொள்க. இன்னுமதனானே, இவ்வீற்றுவினைச்சொல்லீறு திரிந்தனவுங்கொள்க. வந்தானற்கொற்றன், எனவரும். இன்னுமதனானே, அக்காற்கொண்டான்; இக்காற்கொண்டான்; உக்காற்கொண்டான்; எக்காற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என, உருபுவாராது, உருபின்பொருள்படவந்தவற்றின்முடிபும், ஈண்டேகொள்க. இதனால், பிறவும் உள்ளவாறறிந்தொட்டிக்கொள்க. [எ௩]

**தகரம்வரும்வழியாய்தநிலையலும்-**
**புகரின்றென்மனார்புலமையோரே.**

என்னின். மேலதனுள், ஒருகூற்றிற்கெய்தியதன்மேற் சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அவ்வாறு றகாரமாய்த்திரிந்தலகாரம் தகரமுதன்மொழி வருமொழியாய் வந்தவழி, அவ்வாறு றகாரமாய்த்திரிதலேயன்றி, ஆய்தமாய்த்திரிந்துநிற்றலும் குற்றமின்றென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. உ-ம். கஃறீது, கற்றீது எனவரும்.புகரின்றென்றதனால், "நெடியதனிறுதி" என்பதனுள், வேறீது. வேற்றீது, என்னுமுறழ்ச்சி முடிபுகொள்க. [எ௪]

**நெடியதனிறுதியியல்புமாருளவே.**

என்னின். மேலதற்கொருவழியெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறுதனுதலிற்று. நெடியதனிறுதிக்கணின்ற லகாரவீறு குறியதனிறுதிக்கணின்ற லகாரம்போல, திரிந்துறழ்தலேயன்றி, இயல்பாய்முடிவனவுமுள. எ-று. உ-ம். பால்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். இயல்பாகாதுதிரிந்தன வேல்கடிது; வேற்கடிது; என்றாற்போல்வன. [எ௫]

**நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லு -**
**மல்லதுகிளப்பினும்வேற்றுமையியல.**

என்னின். இவ்வீற்றல் வழியுட்சிலவற்றிற்கு வேறுமுடிபுகூறுதனுதலிற்று. நெல்லென்னுஞ்சொல்லும், செல்லென்னுஞ்சொல்லும், கொல்லென்னுஞ்சொல்லும், சொல்லென்னுஞ்சொல்லும், ஆகிய இந்நான்குசொல்லும் அல்வழியைச்சொல்லுமிடத்தும், தாம்வேற்றுமைமுடிபினியல்பிற்றாய், லகாரம் றகாரமாய்த்திரிந்துமுடியும். எ-று. உ-ம். நெற்கடிது; செற்கடிது; கொற்கடிது; சொற்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவரும். [எசு]

**இல்லென்கிளவியின்மைசெப்பின் - வல்லெழுத்துமிகுதலுமையி டைவருதலு - மியற்கையாதலுமாகாரம்வருதலுங் - கொளத்தகுமர பினுகிடனுடைத்தே.**

என்னின். இவ்வீற்றுவினைக்குறிப்புச்சொல்லொன்றற்கு, வேறுமுடிபு கூறுதனுதலிற்று. இல்லென்னுஞ்சொல் புக்குறையுமில்லையுணர்த்தாது ஒருபொருளதில்லாமையையுணர்த்துமிடத்து, அல்வழி, வல்லெழுத்துமிகுத லும், ஐயிடைவருதலும், இயல்பாதலும், ஆகாரம்மிக்குமுடிதலும், ஆகிய இம் முடிபுநான்கும் இச்சொல்லிற்குமுடிபாகக் கொளத்தகுமரபானே, இதன்முடி பாகிடனுடைத்து. எ - று. கொளத்தகுமரபென்றதனுன், வல்லெழுத்து மி க்கவழி, ஐகாரம்வருதலும், ஆகாரமிக்கவழி, வல்லெழுத்துமிகுதலுங்கொ ள்க. இயல்புமுற்கூருதொழிந்ததனுல், வல்லெழுத்துமிகுதி ஆகாரம்வந்த வழிமிக்கேமுடிதலின், சிறப்புடைத்தாதலும், ஐகாரம்வந்தவழி, மிகுதலுமி காமையுமுடைமையிற் சிறப்பின்றுதலுங்கொள்க. உ - ம். இல்லைக்கல், இல்லைகல் இல்கல், இல்லாக்கல், சுனை, துடி, பறை, எனவரும். இல்லைக் கல், இல்லைகல்லென்பன இல்லையென்னும் ஐகாரவீற்றுச்சொன்முடிபன் றேவென்றும், இல்லாக்கல்லென்பது உள்ளவென்னும் பெயரெச்சத்தெதிர்ம றையாகிய ஆகாரவீற்றுச்சொல்லதுமுடிபன்றேவென்றும், இல்கல் என்பது பண்புத்தொகைமுடிபன்றேவென்றுங்கூறின் :—அம்முடிபுகளோடு, இம்முடி புகள் எழுத்தொப்புமையன்றி, இவை ஓசைவேற்றுமையுடையவென்பது போலுங்கருத்து. அவ்வோசைவேற்றுமையாவன ஐகாரவீறுயவழி, அவ்வை காரத்துமேல், ஒலியூன்றியும், லகாரவீறுயவழி, அந்த லகாரவொற்றின்மேல், ஒலியூன்றியும், அந்த லகாரவீறு இயல்புமுடிபாயவழி, பண்புத்தொகைபோல், ஒரு திரண்மையாகாது, இடையற்று, லகரத்தில், ஒலியூன்றியும், ஆகாரவீறுய வழி, ஒருதிரண்மையாய், அவ்வாகாரத்துமேல், ஒலியூன்றியும், ஆண்டு லகரவீ றுயவழி, ஒருதிரண்மையாக வொலியாது, அந்த லகரத்துமேல், ஒலியூன்றி யும் வரும்வேறுபாடுகள்போலும். இல்லென்பது எதிர்மறை வினைக்குறிப்புமு ற்றுவிரவுவினை. [எஎ]

**வல்லென்கிளவிதொழிற்பெயரியற்றே.**

என்னின். இதுவும் இவ்வீற்றுளொன்றற்கு, அல்வழிக்கண்ணும், வேற் றுமைக்கண்ணும், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. வல்லென் னுஞ்சொல் அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், ஞகாரவீற்றுந்தொ ழிற்பெயரியல்பிற்றுய், வன்கணத்து, உகரமும் வல்லெழுத்தும்பெற்றும், மெ ன்கணத்தும், இடைக்கணத்துவகரத்தும், உகரமும்பெற்றும், முடியும். எ - று. உ - ம். வல்லுக்கடிது ; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், வல்லுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞா ற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். [எஅ]

**நாயும்பலகையும்வருஉங்காலை - யாவயினுகரங்கெடுதலுமுரித் தே - யுகரங்கெடுவழியகரநிலையும்.**

**என்னின். மேலதற்கு, எய்தியதொருமருங்குமறுத்துப்பிறிதுவிதி கூறு தனுதலிற்று. மேனின்றவல்லென்பதன்முன், நாயென்னுஞ்சொல்லும் பல கையென்னுஞ்சொல்லும் வருமொழியாய்வருங்காலத்து, அவ்விடத்து, உகர ங்கெடாதேநின்று முடிதலேயன்றி, கெட்டுமுடியவும்பெறும். அவ்வுகரம் கெ டுமிடத்து, அகரம் நிலைபெற்றுமுடியும். எ - று. உ - ம். வல்லநாய், வல்ல**

ப்பலகை, எனவரும். அகரம் நிலையுமென்றது,' உகரங்கெடுமென்றதனுல், பிறவருமொழிக்கண்ணும், அவ்வகரபபேறுகொள்க. உ - ம். வல்லக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவரும். [எகூ]

பூல்வேலென்றுவாலென்கிளவியொ
டாமுப்பெயர்க்குமம்மிடைவருமே.

என்னின். எய்திய நவிலக்கிப் பிறிதுவிதிகூறுதனுதலிற்று. பூல் என்னுஞ்சொல்லும், வேல் என்னுஞ்சொல்லும், ஆல் என்னுஞ் சொல்லும் ஆகிய அம்மூன்று பெயர்க்கும், வேற்றுமைக்கண், திரிபின்றி, அம்முச்சாரியை இடைவந்து முடியும். எ - று. உ - ம். பூலங்கோடு, வேலங்கோடு, ஆலங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். [அய]

தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல.

என்னின். இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு, அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. லகாரவீற்றுத்தொழிற்பெயரெல்லாம் ஞகாரவீற்றுந் தொழிற்பெயரியல்பினவாய், அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், வன்கணத்து, உகரமும், வல்லெழுத்தும்பெற்றும், மென்கணத்தும், இடைக்கணத்து வகரத்தும், உகரம்பெற்றும்முடியும். எ - று. உ - ம். கல்லுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், கல்லுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். எல்லாமென்றதனுல், இவ்வாறுமுடியாது பிறவாற்ருன் முடிவனவுங்கொள்க. பின்னல்கடிது; துன்னல்கடிது; பின்னற்கடுமை, துன்னற்கடுமை, எனவரும். இன்னுமதனுனே, மென்கணம்வந்தவழி, பின்னன்ஞானறது; பின்னன்ஞாற்சி, என, மெல்லெழுத்தாய்த்திரிந்து முடிவனவுங்கொள்க. [அக]

வெயிலென்கிளவிமழையியனிலையும்.

என்னின். இதுவுமெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. வெயிலென்னுங்கிளவி மழையென்னுஞ்சொல்லியல்பின்கண்ணே நிலைபெற்று, அத்தும், இன்னும், பெற்றுமுடியும். எ - று. உ - ம். வெயிலத்துக்கொண்டான்; வெயிலிற்கொண்டான்; சென்ருன், நந்தான், போயினன், எனவரும். [அஉ]

சுட்டுமுதலாகியவகரவிறுதி - முற்படக்கிளந்தவுருபியனிலையும்.

என்னின். வகாரவீற்றுப்பெயர்நான்கினும், சுட்டுமுதல்வகரமூன்றற்கும், வேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. சுட்டெழுத்தைமுதலாகவுடைய வகரவீற்றுச்சொல் வேற்றுமைக்கண், முற்படச்சொன்ன உருபுபுணர்ச்சியினியல்புநிலைபெற்று, வற்றுப்பெற்றுப்புணருமு. எ - று. உ - ம். அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு, செவி, தலை, புறம், எனவரும். முற்படக்கிளந்த என்றதனுன், அவ்வற்றினேடு, இன்னும்பெறுதல்கொள்க. அவற்றின்கோடு, இவற்றினகோடு, உவற்றினகோடு, செவி, தலை, புறம், எனவரும். [அங]

வேற்றுமையல்வழியாய்தமாகும்.

என்னின். மேலவற்றிற்கல்வழிமுடிபு கூறுதனுதலிற்று. அச்சுட்டுமுதலாகிய வகரவீறு வன்கணம்வந்தால், வேற்றுமைப்பொருட்புணர்ச்சியல்லாதவல்வழிக்கண், அவ்வகரம் ஆய்தமாய்த்திரிந்துமுடியும். எ - று. உ - ம். அஃகடிய, இஃகடிய, உஃகடிய, சிறிய, தீய, பெரிய, எனவரும். [அச]

மெல்லெழுத்தியையினவ்வெழுத்தாகும்.

என்னின். மேலனவற்றிற்கு மென்கணத்தின்முடிபுகூறுதனுதலிற்று. அச்சுட்டுமுதலாகிய வகரவீறு மென்கணம்வந்தியைந்தவிடத்து, அவ்வகரம் அவ்வமெல்லெழுத்தாய்த்திரிந்து முடியும். எ - று. உ - ம். அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண், நூல், மணி, எனவரும். [அரு]

ஏனவைபுணரினியல்பெனமொழிப.

என்னின். மேலவற்றிற்கு, இடைக்கணத்தும், உயிர்க்கணத்தும், முடிபு கூறுகின்றது. அச்சுட்டுமுதலாகிய வகரவீறு ஒழிந்த இடைக்கணமும் உயிர்க்கணமும்வந்து புணரின, அவ்வகரம் திரியாதியல்பாய்முடியும். எ - று. உ-ம். அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ், வட்டு, அடை, ஆடை, எனவொட்டுக. [அசு]

ஏனைவகரந்தொழிற்பெயரியற்றே.

என்னின். இவ்வீற்றுளொழிந்தவொன்றற்கும், அல்வழிக்கண்ணும்வேற்றுமைக்கண்ணு முடிபுகூறுகின்றது. ஒழிந்தவகரவீறு ஞகரவீற்றுத்தொழிற்பெயரியல்பிற்றாய், வன்கணத்து, உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், அல்லனவற்றுக்கண், உகரமேபெற்றும், முடியும். எ - று. உ - ம். தெவ்வுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், தெவ்வுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். [அஎ]

ழகாரவிறுதிரகாரவியற்றே.

என்னின். ழகாரவீற்று வேற்றுமைமுடிபு கூறுதனுதலிற்று. ழகாரவீற்றுப்பெயர் வன்கணம்வந்தால், வேற்றுமைக்கண், ரகாரவீற்றியல்பிற்றாய், வல்லெழுத்துமிகுமுடியும். எ - று. உ - ம். பூழ்க்கால், சிறகு, தலை, புறம், எனவரும். [அஅ]

தாழென்கிளவிகோலொடுபுணரின் -
அக்கிடைவருதலுரித்துமாகும்.

என்னின். இவ்வீற்றுளொன்றற்கு, எய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. தாழென்னுஞ்சொல், கோலெனுஞ்சொல்லோடு புணருமிடத்து, வல்லெழுத்து மிகுதலேயன்றி, அக்குச்சாரியை இடைவந்துமுடிதலுமுரித்து. எ - று. உ - ம், தாழக்கோல், எனவரும். [அகூ]

தமிழென்கிளவியுமதனோரற்றே.

என்னின். இதுவுமது. தமிழென்னுஞ்சொல்லும் அதனோடொருதன்மைத்தாய், வல்லெழுத்துமிகுதலேயன்றி, அக்கும்பெற்றுமுடியும். எ - று. உ - ம். தமிழக்கூத்து, சேரி, தோட்டம், பள்ளி, எனவரும். [கூய]

குமிழென்கிளவிமரப்பெயராயிற் -
பீரென்கிளவியோடோரியற்றாகும்.

என்னின். இதுவும் அவ்வீற்றுளொன்றற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. குமிழென்னுஞ்சொல் குமிழ்த்தலென்னுந்தொழிலன்றி, மரப்பெயராயின், பீரென்கிளவியோடு, ஓரியல்பிற்றாய், மெல்லெழுத்தும்,

அம்முச்சாரியையும் பெற்றுமுடியும். எ - று. உ - ம். குமிழங்கோடு, செதிள், தோல், பூ, எனவரும். ஓரியற்றென்றதனால், பிறவற்றிற்கும், இம்முடிபு கொள்க. மகிழங்கோடு, எனவரும். [௯௧]

பாழென்கிளவிமெல்லெழுத்துறழ்வே.

என்னின். இதுவும் அவ்வீற்றுளொன்றற்கு, எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதனுதலிற்று. பாழென்னுஞ்சொல் வல்லெழுத்தோடு மெல்லெழுத்து உறழ்ந்துமுடியும். எ - று. உ - ம். பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு, சேரி, தோட்டம், பாடி, எனவரும். [௯௨]

ஏழென்கிளவியுருபியனிலையும்.

என்னின். இவ்வீற்றெண்ணுப்பெயர்க்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுதனுதலிற்று. ஏழென்னுமெண்ணுப்பெயராதிறுதி உருபுபுணர்ச்சிக்கட் சொன்ன இயல்பின்கண்ணே நிலைபெற்றன, பெற்றுமுடியும். எ - று. உ-ம். ஏழன்காயம், சுக்கு, தோரை, பயறு, எனவரும். இயைபுவல்லெழுத்து இவ்வோத்தின் புறனடையான்வீழ்க்க. [௯௩]

அளவுநிறையுமெண்ணும்வருவழி -
நெடுமுதல்குறுகலுமுகரம்வருதலும் -
கடிநிலையின்றேயாசிரியர்க்க.

என்னின். மேலதற்கு, எய்தாததெய்துவித்தனுதலிற்று. அவ்வேழென்னுமெண்ணுப்பெயர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் வருமொழியாய்வருமிடத்து, நெடுமுதல்குறுகுதலும், ஆண்டு உகரம்வருதலும், ஆசிரியர்க்கு நீக்குநிலைமையின்று. எ - று. உ - ம். எழுகலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, எனவும், எழுகழஞ்சு, தொடி, பலம், எனவும், எழுமூன்று, எழுநான்கு, எனவும்வரும். நிலையின்றென்றதனான், வன்கணத்துப்பொருட்பெயர்க்கும், இம்முடிபுகொள்க. உ - ம். எழுகடல், சிலை, திசை, பிறப்பு, எனவரும். [௯௪]

பத்தென்கிளவியொற்றிடைகெடுவழி -
நிற்றல்வேண்டுமாய்தப்புள்ளி.

என்னின். மேலதற்கு, ஒருவழியெய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அவ்வேழென்பதனோடு, பத்தென்பதுபுணருமிடத்து, அப்பத்தென்கிளவி, இடையொற்றுக்கெடுவழி, ஆய்தமாகியபுள்ளி நிற்றல்வேண்டும். எ-று. உ - ம். எழுபஃது, எனவரும். [௯௫]

ஆயிரம்வருவழியுகரங்கெடுமே.

என்னின். மேலதற்கு, எய்தியதொருமருங்குமறுத்தனுதலிற்று. அவ்வேழென்பது ஆயிரமென்பதுவருமிடத்து, முன்பெற்றவுகரம் பெறாதுமுடியும். எ - று. உ - ம். எழாயிரம், எனவரும். [௯௬]

நூறூர்ந்துவரூஉமாயிரக்கிளவிக்குக்
கூறியநெடுமுதல்குறுக்கமின்றே.

என்னின். இதுவுமேலதற்கு, ஒருவழியெய்தியதுமுழுவதும்விலக்குகின்றது. அவ்வேழென்பது நூறென்னுஞ்சொல்லூர்ந்துவருகின்றவாயிரக்கிளவி

யாகியநூறுயிரமென்பதற்கு, முன்கூறியநெடுமுதல்குறுகி, உகரம்பெறுதலின்று. எ - று. உ - ம். ஏழ்நூறுயிரம், எனவரும். கூறியவென்றதனுன், நெடுமுதல்குறுகி, உகரம்பெற்று, எழுநூறுயிரம், என்றுமாம். இவ்விலேசினுனே, எழாயிரம் என்றுமாம், இன்னுமதனுனே, இயல்புகணத்துமுடிபுகொள்க. எழுஞாயிறு, எழுநாள், எனவரும். [கஎ]

ஐயம்பல்லெனவரூஉமிறுதி -
யல்பெயரெண்ணுமாயியனிலையும்.

என்னின். இதுவும் மேலதற்கொருவழியெய்தியதுமுழுவதும்விலக்குகின்றது, அவ்வேழென்னுமெண்டான் ஐயென்றும், அமமென்றும், பல்லென்றும் வருகின்றவிறுதிகளையுடையபொருட்பெயரல்லாத வெண்ணுப்பெயராகிய தாமரைவெள்ளம் ஆம்பலென்பனவந்தாலும், நெடுமுதல்குறுக்கமின்றி, உகரம்பெருது, அவ்வியல்பின்கண்ணேநின்றுமுடியும். எ - று. உ - ம். ஏழ்தாமரை,ஏழ்வெள்ளம், ஏழாம்பல், எனவரும. [கஅ]

உயிர்முன்வரினுமாயியறிரியாது.

என்னின். இதுவும்மேலதற்கெய்தியது, ஒருவழிவிலக்கி, பிறிதுவிதிவகுக்கின்றது, அவ்வேழென்பது அளவுமுதலிய பெயர்களுள், உயிர்முதன்மொழிவரினும், நெடுமுதல்குறுகியுகரம்வராதுமுடியும் அவ்வியல்பிற்றிரியாதுமுடியும். எ - று. உ - ம். ஏழகல், ஏழுழக்கு, ஏழொன்று, ஏழிரண்டு, எனவரும். [கக]

கீழென்கிளவியுறழத்தோன்றும்.

என்னின். இவ்வீற்று ளொன்றற்கு, வேற்றுமைக்கண்வேறுமுடிபுகூறுதனுதலிற்று. கீழென்னுஞ்சொல் உறழ்ச்சியாகத் தோன்றிமுடியும். எ-று. உ-ம். கீழ்குளம், கீழ்க்குளம், எனவரும். தோன்றுமென்றதனுன, நெடுமுதல்குறுகாது, உகரம்வருதலுங்கொள்க. இயைபுவல்லெழுந்து இவ்வோத்தின்புறனடையான்வீழ்க்க. உ - ம். கீழுகுளம், சேரி, தோட்டம், பாடி, எனவரும். [ா]

ளகாரவிறுதிணகாரவியற்றே.

என்னின. ளகாரவீற்றிற்கு, ணகாரவீற்றுவேற்றுமைமுடிபோடியைய, வேற்றுமைமுடிபுகூறுதனுதலிற்று. ளகாரவீற்றுப்பெயர் வேற்றுமைக்கண், ணகாரவீற்றியல்பிற்றாய், வன்கணம்வந்தால், ளகாரம் டகாரமாய்த் திரிந்து முடியும். எ - று. உ - ம். முட்குறை, சிறை, தலை, புறம், எனவரும். [ாக]

மெல்லெழுத்தியையின்ணகாரமாகும்.

என்னின். மேலதற்கு, மென்கணத்துமுடிபுகூறுகின்றது. ளகாரவீறு மெல்லெழுத்துவருமொழியாய்வந்தியையின், ணகாரமாய்த் திரிந்துமுடியும். எ - று. உ - ம். முண்ஞெரி, நுனி, முறி, எனவரும். இதனை, வேற்றுமையிறுதிக்கண், அல்வழியதெடுத்துக்கோடற்கண், சிங்கநோக்காகவைத்தலின், அல்வழிக்கும், இம்முடிபுகொள்க. முண்ஞெரிந்தது ; நீண்டது, மாண்டது, எனவரும். [ாஉ]

அல்வழியெல்லாமுறழெனமொழிப.

என்னின். மேலதற்கு, அல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. ளகாரவீற்றல்வழிகளெல்லாம் திரிந்தும்திரியாதும் உறழ்ந்தும்முடியுமென்றுசொல்லுவர் புலவர். எ-று. உ-ம். முள்கடிது; முட்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவரும். எல்லா

மென்றதனால்,குணவேற்றுமைக்கண்ணும், இவ்வுறழ்ச்சிகொள்க. முள்குறுமை, முட்குறுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவும், கோள்கடுமை, கோட்கடுமை, எனவும்வரும். இன்னும், அதனானே, உருபுவாராது, உருபின்பொருள்பட வந்தவற்றின்முடிபுங்கொள்க. அதோட்கொண்டான்; இதோட்கொண்டான்; உதோட்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். [௱௩]

ஆய்தநிலையலும்வரைநிலையின்றே -
தகரம்வரூஉங்காலையான.

எனனின். மேலதற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. ளகாரம் டகாரமாயேதிரியாது, ஆய்தமாய்த் திரிந்துநிற்றலும், வரைநிலைமையின்று. தகரமுதன்மொழிவருங்காலத்து, எ - று. உ - ம். முஃடீது; முட்டீது; எனவரும். [௱௪]

நெடியதனிறுதியியல்பாகுநவும் - வேற்றுமையல்வழிவேற்றுமைநிலையலும் - போற்றல்வேண்டுமொழியுமாருளவே.

என்னின். மேலதற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. ளகாரம் நெடியதனிறுதிதிரியாது, இயல்பாய்முடிவனவற்றையும், வேற்றுமையல்லாதவல்வழியிடத்து, வேற்றுமையினியல்பையுடையவாய்த் திரிந்துமுடிதலையும், போற்றுதல்வேண்டுமொழிகளுமுள. எ - று. உ - ம். வாள்கடிது; கோள்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும், தேட்கடிது; நாட்கடிது; பெரிது, எனவும்வரும். போற்றல்வேண்டுமென்றதனான், உதளங்காய், செதிள், (?)ால், பூ, என, அம்முப்பெற்றுமுடிவனகொள்க. [௱௫]

தொழிற்பெயரெல்லாந்தொழிற்பெயரியல.

என்னின். இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு, வேற்றுமைக்கண்ணும், அல்வழிக்கண்ணும், எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. ளகாரவீற்றுத் தொழிற்பெயரெல்லாம் அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், ஞகாரவீற்றுத் தொழிற்பெயரியல்பிற்றாய், வன்கணம்வந்தவழி, வல்லெழுத்தும், உகரமும்பெற்றும், மென்கணமும் இடைக்கணத்து வகரமும்வந்தவழி, உகரம் பெற்றும், முடியும். எ - று. உ - ம். துள்ளுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், துள்ளுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். எல்லாமென்றதனால், தொழிற்பெயர்கள் இருவழியும், இவ்வாறன்றி, பிறவாறுமுடிவனவுங்கொள்க. கோள்கடிது; கோட்கடிது; வாள்கடிது; வாட்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும், கோள்கடுமை, கோட்கடுமை, வாள்கடுமை, வாட்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவும்வரும். ஈண்டுவாளென்றது கொல்லுதலை. [௱௬]

இருளென்கிளவிவெயிலியனிலையும்.

என்னின். இதுவும் அவ்வீற்றுளொன்றற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவருத்தனுதலிற்று. இருளென்னுஞ்சொல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், வெயிலென்னுஞ் சொல்லினியல்பிலேநின்று, அத்தும், இன்னும்பெற்றுமுடியும். எ - று. உ - ம். இருளத்துக் கொண்டான்; இருளிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான், எனவரும். [௱௭]

புள்ளும்வள்ளுந்தொழிற்பெயரியல.

என்னின். இதுவும் அவ்வீற்றுட்சிலவற்றிற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிது விதிவகுத்தனுதலிற்று. புள்ளென்னுஞ்சொல்லும், வள்ளென்னுஞ்சொல்லும், அல்வழிக்கண்ணும், வேற்றுமைக்கண்ணும், ஞகாரவீற்றுத் தொழிற்பெயரியல்பிற்றாய், வன்கணத்து, உகரமும்வல்லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும், இடைக்கணத்து வகரத்தும், உகரம்பெற்றும், முடியும். எ-று. உ-ம். புள்ளுக்கடிது; வள்ளுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். இதனை, தொழிற்பெயரெல்லாம் எனறதன்பின்வையாதமுறையன்றிய கூற்றினன், இருவழியும், வேற்றுமைத்திரிபெய்திமுடிவனவுங்கொள்க. புட்கடிது; வட்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, எனவும், புட்கடுமை, வட்கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, எனவும்வரும். இன்னுமதனனே, பள்ளென்பதன் கண்ணும், கள்ளென்பதன கண்ணும், இருவழியும் இவ்விருமுடிபுபெற்றவழிக்கொள்க. பள்ளுக்கடிது; கள்ளுக்கடிது; பள்ளுக்கடுமை, கள்ளுக்கடுமை, எனவும், பட்கடிது; கட்கடிது; பட்கடுமை, கட்கடுமை, எனவும் ஒட்டுக. [௱அ]

மக்களென்னும்பெயர்நிலைக்கிளவி -
தக்கவழியறிந்துவலித்தலுமுரித்தே.

என்னின். மக்களென்னுமுயர்திணைப்பெயர்க்கு, "உயிரீறாகியவுயர்திணைப் பெயரும்"என்பதனுள். எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. மக்களென்னுமபெயர்ச்சொல்லினிறுதி இயல்பேயன்றி, தக்கவிடமறிந்து, வல்லொற்றாய்த் திரிந்துமுடிதலுமாம். எ - று. தக்கவழியென்றதனல், அம்மக்களுடம்பு உயிர்நீங்கியகாலத்து, இம்முடிபெனக்கொள்க. உ - ம். மக்கட்கை, செவி, தலை, புறம், எனவரும். [௱க]

உணரக்கூறியபுணரியன்மருங்கிற் -
கண்டுசெயற்குரியவைகண்ணினர்கொளலே.

என்னின். இவ்வோத்திற்குப்புறனடையுணர்த்துதனுதலிற்று. உணரக்கூறப்பட்ட புள்ளியீறு வருமொழியோடுபுணருமியல்பிடத்து, மேன்முடித்தமுடிபுகளன்றி, வழக்கினுட்கண்டுமுடித்தற்குரியபிறமுடிபுகளைக் கருதிக்கொண்டுமுடிக்க. எ-று. உ-ம். * விழன்குளம், சேறு, தறை, பழனம், என, இவை னகாரவீற்று வேற்றுமைக்கண், திரியாதியல்பாய்முடிந்தன. பொன்னப்பத்தம், என்பது அவ்வீறு அகருப்பெற்றுமுடிந்தது, நீர்குறிது; சிறிது, தீது, பெரிது, என்பது, ரகாரவீற்றல்வழிமுடிபு. வேர்குறிது; வேர்க்குறிது; என்பது அவ்வீற்றல்வழியுறழ்ச்சி. அம்பர்க்கொண்டான்; இம்பர்க்கொண்டான்; உம்பர்க்கொண்டான்; எம்பர்க்கொண்டான்; சென்றான், தந்தான், போயினன், என்பன அவ்வீற்றுள், உருபுவாராதுருபின்பொருள்பட வந்தவற்றின்முடிபு. தகர்க்குட்டி, என்பது அவ்வீற்றிருபெயரொட்டுப் பண்புத்தொகையாகிய அல்வழிமுடிபு.

---

* "விழலென்னுமுதனிலை லகாரவீறு வேற்றுமைவழியில், வழிநிலையாகிய க ச த ப க்கள்வரின், றகாரமாகத்திரியாது, விழன் என, னகாரமாகத்திரியும் என, நச்சினர்க்கினியர்கொண்டார். இவ்வுரையாசிரியர் னகாரவீறாகக்கொண்டு, றகாரமாகத் திரியாதென்றார்.

வடசார்க்கூரை, தென்சார்க்கூரை, என்பன இவ்வீற்றிலக்கணத் தோடுபொருந்தியமரூஉமுடிபு. உசிலங்கோடு, எலியாலங்கோடீ, என்பன லகாரவீற்றம்முப்பேறு. கல்லம்பாறை, என்பது அவ்வீற்றல்வழி அம்முப்பேறு. அழலத்துக்கொண்டான்; என்பது அவ்வீற்றத்துப்பேறு. அழுக்கற்போர் அவ்வீற்றல்வழித்திரிபு. யாழ்குறிது; சிறிது, தீது, பெரிது, என்பது, ழகாரவீற்றல்வழிமுடிபு. வீழ்குறிது; வீழ்க்குறிது; என்பது அவ்வீற்றல்வழியுறழ்ச்சி. தாழப்பாவை, என்பது அவ்வீற்றல்வழி அக்குப்பேறு. இனி உணரக்கூறியவென்றதனால், குளத்தின்புறம், மரத்தின்புறம், என, உருபிற்கெய்திய அத்தோடு, இன்பெற்றனகொள்க. இனிக்கண்ணினறொன்றதனால், ஒருநாளைக்குழவி என, ளகரவீறு ஐயென்னுஞ்சாரியையும், வல்லெழுத்தும்பெற்று முடிந்தனகொள்க. பிறவும், இவ்வோத்தின் வேறுபடவருவனவெல்லாம் இதனகத்துமுடித்துக் கொள்க. [௱ய]

எட்டாவது புள்ளிமயங்கியன் முற்றிற்று.

# ஒன்பதாவது குற்றியலுகரப்புணரியல்.

ஈரெழுத்தொருமொழியுயிர்த்தொடரிடைத்தொட -
ராய்தத்தொடர்மொழிவன்றொடர்மென்றொட -
ராயிருமூன்றேயுகரங்குறுகிடன்.

என்பதுசூத்திரம். இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின்;—குற்றியலுகரவீறுவருமொழியோடுபுணருமியல்புணர்த்தினமையின், குற்றியலுகரப்புணரியலெனப்பட்டது. இத்தலைச்சூத்திரமென்னுதலிற்றோவெனின் ;— இக்குற்றியலுகரம்வருமிடத்திற்கு, பெயரும் முறையுந்தொகையும் உணர்த்துதனுதலிற்று. இரண்டெழுத்தாலாகிய வொருமொழியும், உயிர்த்தொடர்மொழியும், இடைத்தொடர்மொழியும், ஆய்தத்தொடர்மொழியும், வன்றொடர்மொழியும், மென்றொடர்மொழியுமாகிய அவ்வாறென்று சொல்லப்படும். உகரங்குறுகிவருமிடன். எ - று. உ - ம். நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு, எனவரும். [க]

அவற்றுள் - ஈரொற்றுத்தொடர்மொழியிடைத்தொடராகா.

என்னின். அவ்வாறனுளோரீற்றிற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. அவற்றுளீரொற்றுத்தொடர்மொழி இடைத்தொடராகா. வன்றொடர்மொழியும் மென்றொடர்மொழியுமாம். எ - று. உ - ம். ஈர்க்கு, மொய்ம்பு, எனவரும். [உ]

அல்லதுகிளப்பினும்வேற்றுமைக்கண்ணு -
மெல்லாவிறுதியுமுகரநிறையும்.

என்னின். எய்தியதொருமருங்குமறுத்தனுதலிற்று. அல்வழியைச்சொல்லுமிடத்தும், வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும், ஆறீற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும். எ - று. உ - ம். நாகுகடிது; நாகுகடுமை, வரகுகடிது; வரகுகடுமை, எனவரும். [ந]

**வல்லொற்றுத்தொடர்மொழிவல்லெழுத்துவருவழித் -**
**தொல்லையியற்கைநிலையலுமுரித்தே.**

என்னின். எய்தியதொருமருங்குமறுக்கின்றது. அவ்வாறீற்றுள்ளும் வல்லொற்றுத்தொடர்மொழி வல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய்வரு மிடத்து; முன்கூறுகின்றவியற்கைநிற்றலுமுரித்து. எறு -. உ - ம். கொக் குக்கடிது; கொக்குக்கடுமை, எனவரும், [௪]

**யகரம்வருவழியிகரங்குறுகு -**
**முகரக்கிளவிதுவரத்தோன்றாது.**

என்னின். குற்றியலிகரம் புணர்மொழியுள்வருமாறுணரற்று. யகர முதன்மொழிவருமிடத்து, நிலைமொழியுகரம் முற்றத்தோன்றாது. ஆண்டோ ரிகரம்வந்துகுறுகும். • எ - று. உ - ம். நாகியாது; வரகியாது; தெள்கியாது; எஃகியாது; கொக்கியாது; குரங்கியாது எனவரும. இதனானே, ஆகாரவீறு அக ரம்பெற்றாற்போல, ஆறீற்றுக் குற்றியலுகரமும், இகரம்பெற்று, யகரமுதன் மொழியோடுபுணருமாறு கூறிற்றாயிற்று. [௫]

**ஈரெழுத்துமொழியுமுயிர்த்தொடர்மொழியும் -**
**வேற்றுமையாயினொற்றிடையினமிகத் -**
**தோற்றம்வேண்டும்வல்லெழுத்துமிகுதி.**

என்னின். மேற்கூறியவாறினுள்ளும். முன்னின்றவிரண்டிற்கும், வேற் றுமைப் பொருட்புணர்ச்சிமுடிபு கூறுகின்றது. ஈரெழுத்தொருமொழிக் குற் றியலுகரவீறும் உயிர்த்தொடர்மொழிக்குற்றியலுகரவீறும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின், இனமாகிய வொற்றிடையிலேமிக, வல்லெழுத்துமி குதி தோற்றிமுடிதல்வேண்டும். எ - று. உ - ம். யாட்டுக்கால், செவி, தலை, புறம், எனவும், முயிற்றுக்கால், சினை, தலை, புறம், எனவும்வரும். தோற்றமென்றதனான், இவ்விரண்டிற்கும், இயல்புகணத்துமுடிபுகொள்க. யாட்டு ஞாற்சி, முயிற்றுஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆ ட்டம், எனவரும். [௬]

**ஒற்றிடையினமிகாமொழியுமாருளவே -**
**அத்திறத்தில்லைவல்லெழுத்துமிகலே.**

என்னின். எய்தியதொருமருங்குமறுத்தனுதலிற்று. இனவொற்று இ டைமிக்குமுடியாதமொழிகளுமுள. வல்லெழுத்து மிக்குமுடிதல் அக்கூற்று ளில்லை. எ - று. உ - ம். நாகுகால், சினை, தலை, புறம், எனவும், வரகுகதிர், சினை, தலை, புறம், எனவும்வரும். அத்திறமென்றதனுல், உருபிற்கெய்திய சாரியை பொருட்கெய்தியவழி, இயைபுவல்லெழுத்துவீழ்க்க. யாட்டின்கால், முயிற்றின்கால், நாகினகால், வரகின்கால், எனவரும். [௭]

**இடையொற்றுத்தொடருமாய்தத்தொடரு -**
**நடையாயியலவென்மனார்புலவர்.**

என்னின். இடைநின்றவிரண்டிற்கும்முடிபுகூறுகின்றது. இடையொற் றுத்தொடர்மொழிக் குற்றியலுகரவீறும் ஆய்தத்தொடர்மொழிக்குற்றியலுக ரவீறும் நடக்குமிடத்து, மேற்கூறியவியல்புமுடிபினையுடைய. எ - று. உ - ம். தெள்குகால், சிறை, தலை, புறம், எனவும், எஃகுகால், சிறை, தலை, புறம், எனவும்வரும். [௮]

**வன்றொடர்மொழியுமென்றொடர்மொழியும் - வந்தவல்லெழுத் தொற்றிடைமிகுமே - மெல்லொற்றுத்தொடர்மொழிமெல்லொற்றெ ல்லாம் - வல்லொற்றிறுதிகிளையொற்றாகும்.**

என்னின். இதுபின்னின்ற விரண்டிற்கும், முடிபுகூறுதனுதலிற்று. வன்றொடர்மொழிக் குற்றியலுகரவீறும் மென்றொடர்மொழிக் குற்றியலுகரவீறும வருமொழியாய்வந்த வல்லொற்று இடையிலேமிக்குமுடியுமு. அவவிரண்டனுள், மெல்லொற்றுத்தொடர்மொழிக்கணின்ற மெல்லொற்றெல்லாம் இறுதிவல்லொற்றும கிளைவல்லொற்றுமாய், முடியும். எ-று. உ-ம். கொக்குக்கால், சிறகு, தலை, புறம், எனவும், குரக்குக்கால், செவி, தலை, புறம், எனவும, எட்குக்குட்டி, செவி, தலை, புறம், எனவும்வரும. வந்தவென்றதனால், இவ்விரண்டிற்கும், உருபிற்குச்சென்றசாரியை பொருட்கெய்தியவழி, இயைபுவல்லெழுத்துவீழ்க்க. கொக்கின்கால், குரங்கின்கால், எனவரும், எல்லாமெனறதனால், பறம்பிற்பாரி என்றாற்போல்வன மெல்லொற்றுத திரியாமையுங்கொள்க. ஒற்றென்றமிகுதியான, இயல்புகணத்துக்கண்ணும், குரக்குஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம். என, மெல்லொற்றுத்திரிதலுங் கொள்க. [கூ]

**மரப்பெயர்க்கிளவிக்கம்மேசாரியை.**

என்னின். இஃது அவ்வீற்றிரண்டிற்கும் எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுதனுதலிற்று. வன்றொடரின்கண்ணும், மெனறொடரினகண்ணும், மரப பெயராகிய சொல்லிற்கு, வருஞ்சாரியை அம்முச்சாரியை. எ - று. உ - ம். தேக்கங்கோடு, செதிள், தோல், பூ, எனவும்,வேபபங்கோடு, செதிள், தோல், பூ, எனவும்வரும். [ய]

**மெல்லொற்றுவலியாமரப்பெயருமுளவே.**

என்னின். மென்றொடர்மொழிக்கு, எய்தியதொருமருங்குமறுக்கின்றது. மெல்லொற்று வல்லொற்றாய்த் திரியாதுமுடியுமரப் பெயருமுள. எ-று. உ-ம். குருந்தங்கோடு, செதிள், தோல், பூ, எனவும்,புன்கங்கோடு, செதிள், தோல், பூ, எனவும்வரும். மற்றிது நிலைமொழித்தொழிலை, நிலைமொழிவிலக்குமாதலின, சாரியைவகுப்பவேமுடியும் பிறவெனின்;—இது, நிலைமொழியின், உட்டொழிலாகலின, அவ்வாறுவிலக்குண்ணுதென்பதுகருத்து. [கக]

**ஈரெழுத்துமொழியும்வல்லொற்றுத்தொடரு -**
**மம்மிடைவரற்குமுரியவையுளவே -**
**யம்மரபொழுகுமொழிவயினான**

எனனின். ஈரெழுத்தொருமொழிக்கும், வன்றொடர்மொழிக்கும், எய்தாததெய்துவித்த னுதலிற்று. ஈரெழுத்தொருமொழிக்குற்றியலுகரமும் வனறொடர்மொழிக் குற்றியலுகரமும் முன்முடித்துப்போந்த முடிபுகளன்றி, அம்முச்சாரியை இடைவந்து முடிதற்குரியனவுமுள. யாண்டெனின்;—அவ்விலக்கணம் நடக்குமொழியிடத்து, எ - று. உ - ம். ஏறங்கோள், வட்டம்போர், என வரும். உளவென்றதனால், தெங்கங்காய், பயற்றங்காய், என, வன்றொடரல்லனவற்றிற்கு, அம்முப்பேறுகொள்க. அம்மரபொழுகுமென்றதனால், அரசக்கன்னி, முரசக்கடிப்பு என, அக்குப்பேறுங்கொள்க. இன்னுமதனானே, இருட்டத்துக்கொண்டான்; என்னும் அத்துப்பேறுங்கொள்க. இன்னுமதனானே, மயிலாப்பிற்கொற்றன், பறம்பிற்பாரி, என, இன்பேறுங்கொள்க. இன்னுமதனானே, கரியதன்கோடு, என, அன்பேறுங்கொள்க. [கஉ]

**ஒற்றுநிலைதிரியாதக்கொடுவருஉ -**
**மக்கிளைமொழியுமுளவெனமொழிப.**

என்னின். மென்றொடர்மொழியுட் சிலவற்றிற்கு, எய்தியதுவிலக்குதலும், எய்தியதன்மேற்சிறப்பும, கூறுகின்றது. ஒற்று முன்னின்றநிலைதிரியாது அக்குச்சாரியையோடும் பிறசாரியையோடும்வரும் அக்கிளையெழுத்துமொழியுமுளவென்றுசொல்லுவர் ஆசிரியர். எ - று. உ - ம். குன்றக்கூகை, மன்றப்பெண்ணை, எனவரும். உம்மையால், கொங்கத்துழவு, வங்கத்துவாணிகம், என அத்துப்பெற்றன. நிலையென்றதனான், ஒற்றுநிலைதிரியாவதிகாரத்துக்கண், இயைபுவல்லெழுத்து விலக்குக. அக்கிளைமொழியென்றதனால், பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி, என, அன்னும் அக்கும்வந்தனகொள்க. [௧௩]

**எண்ணுப்பெயர்க்கிளவியுருபியனிலையும்.**

என்னின். குற்றுகரவீற்றெண்ணுப்பெயரொடுபொருட்பெயர்முடிக்கின்றது. எண்ணுப்பெயராகியசொற்கள் உருபுபுணர்ச்சியினியல்பின்கண்ணேநின்று, அன்பெற்றுமுடியும். எ - று. உ - ம். ஒனறன்காயம், இரண்டன்காயம், சுக்கு, தோரை, பயறு, எனவரும். [௧௪]

**வண்டுமபெண்டுமின்னொடுசிவணும்.**

என்னின். மென்றொடர்மொழியுட் சிலவற்றிற்குப் பிறமுடிபுகூறுகின்றது. வண்டென்னுஞ்சொல்லும், பெண்டென்னுஞ்சொல்லும், இன்சாரியையோடு பொருந்திமுடியும். எ - று. உ - ம். வண்டின்கால், பெண்டின்கால், எனவரும். [௧௫]

**பெண்டென்கிளவிக்கன்னும்வரையார்.**

என்னின். மேற்கூறியவற்றுள், ஒன்றற்கெய்தியதன் மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. பெண்டென்னுஞ்சொல்விற்கு, இன்னேயனறி, அனசாரியையும்வரையார். எ - று. உ - ம். பெண்டனகை எனவரும். [௧௬]

**யாதெனிறுதியுஞ்சுட்டுமுதலாகிய -**
**வாய்தவிறுதியுமுருபியனிலையும்.**

என்னின். ஈரொழுத்தொருமொழியுளொன்றற்கும், சுட்டுமுதலாய்தத்தொடர்மொழிக்கும், வேறுமுடிபுகூறுதனுதலிற்று. யாதென்னுமீறும சுட்டுமுதலாகியவாய்தத்தொடர்மொழிக் குற்றியலுகரவீறும் உருபுபுணர்ச்சியினியல்பின்கண்ணேநின்று, அன்பெற்று, சுட்டுமுதன்மொழிகள் ஆய்தங்கெட்டும்முடியும். எ - று. உ - ம். யாதன்கோடு, அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு, எனவரும். [௧௭]

**முன்னுயிர்வருமிடத்தாய்தப்புள்ளி -**
**மன்னல்வேண்டுமல்வழியான.**

என்னின். மேற்கூறியவீற்றுட் சுட்டுமுதலீற்றுகரத்திற்கு, ஒருவழியல்வழிமுடிபுகூறுகின்றது. அவற்றுட் சுட்டுமுதலாய்தத் தொடர்மொழியுகரவீறு தன்முன்னே, உயிர்வருமிடத்து, ஆய்தப்புள்ளி முன்புபோலக் கெடாதுநிலைபெற்றுமுடிதல்வேண்டும். அல்வழிக்கண். எ - று. உ - ம். அஃதடை, இஃதடை, உஃதடை, ஆடை, இலை, எனவொட்டுக. முன்னென்றதனான், வேற்றுமைக்கண்ணும், உயிர்முதன்மொழிவந்தவிடத்து, அஃதடைப்பு, அஃதாட்டம், என, ஆய்தம்கெடாமைகொள்க. [௧௮]

ஏனைமுன்வரினே தானிலையின்றே.

என்னின். மேலனவற்றிற்கு, பிறகணத் தோடுமுடிபுகூறுதனுதலிற்று. அச்சுட்டுமுதலுகரவீறு உயிர்க்கணமொழிந்தபிறகணங்கண்முன்வரின்; அவ்வாய்தம் நிலையின்றிமுடியும். எ - று. உ-ம். அதுகடிது; இதுகடிது; உதுகடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, என வரும். [கக]

அல்லதுகிளப்பினெல்லாமொழியுஞ் -
சொல்லியபண்பினியற்கையாகும்.

என்னின். ஆறீற்றுக்குற்றியலுகரத்திற்கு, அல்வழிமுடிபுகூறுதனுதலிற்று. அல்வழியைச் சொல்லுமிடத்து, ஆறீற்றுக்குற்றியலுகரமும் மேற்சொல்லிய பணபினையுடையவியல்பாய்முடியும். எ - று. உ - ம். நாகுகடிது; வரகுகடிது; தெள்குகடிது; எஃகுகடிது; குரங்குகடிது; சிறிது, தீது, பெரிது, என வரும். எல்லாமொழியென்றதனுல், வினைச்சொல்லும் வினைக்குறிப்புச்சொல்லும் இயல்பாய்முடிந்தனகொள்க. கிடந்ததுகுதிரை, கரிதுகுதிரை, எனவரும். சொல்லியவென்றதனுன், இருபெயரொட்டுப் பண்புத்தொகைமுடிபுகொள்க. காட்டுக்கானம், குருட்டெருது, எனவரும். பண்பினென்றதனுல், ஐயென்னுஞ்சாரியைபெற்றுவருமல்வழிமுடிபுங்கொள்க. அன்றைக்கூத்தன், பண்டைச்சான்ருர், ஓர்யாட்டையானை, மற்றையானை, எனவரும். [உ0]

வல்லொற்றுத்தொடர்மொழிவல்லெழுத்துமிகுமே.

என்னின். அவ்வீற்றுள்ளுமொன்றற்கு, எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. வல்லொற்றுத்தொடர்மொழிக் குற்றியலுகரம் வல்லெழுத்துவருவழி, வல்லெழுத்துமிக்குமுடியும். எ - று. உ - ம். கொக்குக்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவரும். [உக]

சுட்டுச்சினைநீடியமென்றொடர்மொழியும் - யாவினுமுதலியமென்றொடர்மொழியு - மாயியறிரியாவல்லெழுத்தியற்கை.

என்னின். இதுவும் அவ்வாறீற்றினென்றன்கண், ஏழாம் வேற்றுமையிடப் பொருளுணர நின்றவிடைச்சொற்குமுடிபுகூறுகின்றது. சுட்டாகியசினையெழுத்து நீண்டமென்றொடர்மொழிக் குற்றியலுகரவீறும் யாவென்னும் வினுமுதலாகியமென்றொடர்மொழிக் குற்றியலுகரவீறும் மேற்கூறியவல்லெழுத்தியற்கையாகிய வவ்வியல்பிற்றிரியாதுமுடியும். எ - று. உ - ம். ஆங்குக்கொண்டான்; ஈங்குக்கொண்டான்; ஊங்குக்கொண்டான்; யாங்குக்கொண்டான், சென்ருன், தந்தான், போயினுன், எனவரும். இயற்கையென்றதனுன், அக்குற்றுகரவீற்றுவினையெச்சமுடிபுகொள்க. செத்துக்கிடந்தான், இருந்துகொண்டான், எனவரும். [உஉ]

யாவினுமொழியேயியல்புமாகும்.

என்னின். மேலவற்றுளொன்றன்மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அவற்றுள், யாவினுமொழி மேற்கூறியவிகாரமேயன்றி, இயல்பாயுமுடியும். எ - று. உ - ம். யாங்குகொண்டான்; சென்ருன், தந்தான், போயினுன், என வரும். [உங]

அந்நானமொழியுந்தந்நிலைதிரியா.

என்னின். மேலவற்றிற்குநிலைமொழிச் செய்கைகூறுகின்றது. சுட்டுமு தன்மூன்றும், யாமுதன்மொழியுமாகியவந்நான்குமொழியும் தம்மெல்லொற் றுநிலைதிரிந்துவல்லொற்ருகாதுமுடியும். எ - று, தந்நிலையென்றதனுல், மெ ல்லொற்றுத்திரியாதுமிக்குமுடிவனபிறவுங்கொள்க. உ - ம். அங்குக்கொ ண்டான்; இங்குக்கொண்டான்; உங்குக்கொண்டான்; எங்குக்கொண்டான்; சென்றுன், தந்தான், போயினுன், எனவரும். யாமொழியெனஞதுவினுவென் றதனுல், பிற இயல்பாய்முடிவனவுங்கொள்க. முந்துகொண்டான் ; பண்டு கொண்டான் ; இன்றுகொண்டான் ; அன்றுகொண்டான் ; எனவரும். [உ௪]

உண்டென்கிளவியுண்மைசெப்பின் - முந்தையிறுதிமெய்யொ டுங்கெடுதலு - மேனிலையொற்றேளகாரமாதலு - மாமுறையிரண்டு முரிமையுமுடைத்தே - வல்லெழுத்துவரூஉங்காலையான,

என்னின். மென்றொடர்மொழியுள், ஒருவினைக்குறிப்புமொழிக்கு வேறு முடிபுகூறுதனுதலிற்று. உண்டென்னுஞ்சொல்உண்டென்னுந்தொழிலொ ழிய, உண்மையென்னும் * பண்புணரநிற்குமிடத்து, முற்பட்டவீற்றுக் குற் றியலுகரம் தானேறிநின்றமெய்யோடுங் கெடுதலும், அதற்குமேனின்றண காரவொற்று ளகாரமாதலுமாகிய அம்முறைமையுடையவிரண்டினையுமுரித் தாதலுமுடைத்து. வல்லெழுத்துமுதன்மொழிவருங்காலத்து, எ - று. வல் லெழுத்ததிகாரம் வாராநிற்ப, வல்லெழுத்து வரூஉங்காலை என்றதனுன், இ வ்விருமுடிபுமுள்ளது பகரமுதன்மொழிவந்தால். மற்றைமூன்றெழுத்தின்க ண்ணு மீறுகெடாதேநின்றுமுடியுமெனறுகொள்க. இன்னுமதனுனே, இயல் புகணத்து, இறுதிகெடாதேமுடிதல்கொள்க. உ - ம. உள்பொருள், உண்டு பொருள், எனவும். உண்டுகாணம், உண்டுசாக்காடு, உண்டுதாமரை, எனவும், உண்டுஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை, எனவும்வரும். உள்பொ ருளென்பதுபண்புத் தொகைமுடிபன்றேவெனின;—அஃது ஓசையொற்றுமை படச்சொல்லும்வழியது. இஃது ஓசையிடையறவுபடச் சொல்லும்வழியது போலும். [உ௫]

இருதிசைபுணரினேயிடைவருமே.

என்னின். குற்றுகரவீற்றுத்திசைப்பெயர்க்கு, அல்வழிக்கண்வேறுமு டிபுகூறுகின்றது. இரண்டுபெருந்திசைகள் தம்மிற்புணரின், ஏயென்னுஞ் சாரியை இடைவந்துபுணர்க. எ-று. உ - ம். வடக்கேதெற்கு, கிழக்கேமே ற்கு, எனவரும். [உ௬]

திரிபுவேறுகிளப்பினெற்றுமிறுதியுங் - கெடுதல்வேண்டுமென்ம ஞர்புலவ - ரொற்றுமெய்திரிந்துனகாரமாகுந் - தெற்கொடுபுணருங் காலையான.

என்னின். அப்பெருந்திசையோடு கோணத்திசைபுணருமாறுணர்த்திற் று. அப்பெருந்திசையோடு கோணத்திசைகள்வேறு புணர்க்குமிடத்து, அவ்வு கரமேறிநின்றவொற்றும் அவ்வீற்றுகரமும்கெட்டுமுடிதல்வேண்டுமென்று சொல்வர். தெற்கென்னுந்திசையோடுபுணருங்காலத்து, இதன்கணின்ற றகா ரவொற்றுத்தன்வடிவுதிரிந்து, னகாரமாய்முடியும். எ - று. திரிந்தென்றத

* பண்பு. ஒருபொருடோன்றுங்காற்றேன்றி, அதுகெடுந்துணையுமுண் டாய் நின்கின்றதன்மை.

ளான், வடக்கென்பதன்கண், இடைநின்றககரவொற்றுக்கெடுக்க. உ-ம் வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, எனவரும். வேறென்ற தனால், திசைப்பெயரோடு பொருட்பெயர்க்கும், இவ்விதிகொள்க. வடகடல், வடவரை, எனவரும். மெய்யென்றதனான், அத்திசைப்பெயரோடுபொருட் பெயர்புணருமிடத்து, இறுதியும்முதலுந்திரிந்துமுடிவனவெல்லாங்கொள்க. கீழ்கூரை, மேல்கூரை, எனவரும். [௨எ]

ஒன்றுமுதலாகவெட்டனிறுதி-யெல்லாவெண்ணும்பத்தன்முன் வரிற் - குற்றியலுகரமெய்யொடுங்கெடுமே - முற்றவின்வரூஉமிரண் டலங்கடையே.

என்னின். இவ்வீற்றெண்ணுப்பெயரோடு, எண்ணுப்பெயர்க்கு முடிபுகூ றுகின்றது. ஒன்றென்னுஞ்சொன்முதலாக வெட்டென்னுஞ்சொல்லிறுதியா கவுள்ளவெல்லாவெண்ணுப்பெயரும் பத்தென்னுமெண்ணுப் பெயர்முன்வரி ன், அப்பத்தென்னுஞ் சொல்லிற்குற்றியலுகரம் தானேறிநின்ற மெய்யோடுங் கெட்டுமுடியும். இரண்டாமெண்ணுப் பெயரல்லாதவெண்ணுப் பெயரிடத்து, முடிய இன்வந்துபுணரும். எ-று. உ-ம். பதினொன்று, பதின்மூன்று, பதி னான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, எனவரும். நிலைமொ ழிமுற் கூறாததனால், பிறமொழியும் அவ்வின்பேறுகொள்க. ஒன்பதின்பால், ஒன்பதின்கூறு, எனவரும். முற்றவென்றதனான், மேல் எடுத்தோத்தானும், இலேசானும், இனபெற்றவழி, பின், பதிற்றொன்று, பதிற்றிரண்டு, என்றாற் போல, முடிபுகள் வேறுபடவருவனவெல்லாங்கொள்க. [௨அ]

பத்தனொற்றுக்கெடனகாரமிரட்ட -
லொத்ததென்பவிரண்டுவருகாலை.

என்னின். மேலின்பெறுதென்றுவிலக்கியவதற்குப் பிறிதுவிதிவகுத்த னுதலிற்று. பத்தென்னுஞ்சொல்லினின்றதகரவொற்றுக்கெட, னகரவொ ற்றுவந்திரட்டுதல், பொருந்திற்றென்றுசொல்லுப. இரண்டென்னுமெண் வருங்காலத்து. எ-று. உ-ம். பன்னிரண்டு, எனவரும். [௨௯]

ஆயிரம்வரினுமாயியறிரியாது.

என்னின். இதுவும் எண்ணுப்பெயர்க்குமுடிபுகூறுதனுதலிற்று. மேற் கூறிய பத்தென்னுமெண்ணுப் பெயர்முன்னர், ஒன்றுமுதலாகியவெண்ணு ப்பெயரேயன்றி, ஆயிரமென்னுமெண்ணுப் பெயர்வந்தாலும, மேல் ஈறுகெட் டு, இன்பெற்றவியல்பிற் றிரியாதேமுடியும். எ-று. உ-ம். பதினாயிரம் எனவரும். [௩௰]

நிறையுமளவும்வரூஉங்காலையும் - குறையாதாகுமின்னென்சாரியை.

என்னின். இஃது எண்ணுப்பெயரோடு, நிறைப்பெயரும் அளவுப்பெய ரும் புணர்க்கின்றது. மேனின்றபத்தென்பதன்முன், நிறைப்பெயரும் அளவு ப்பெயரும் வருங்காலத்தும், அவ்வின்னென்னுஞ்சாரியை குறையாதுவந்துமு டியும். எ-று. உ-ம். பதின்கழஞ்சு, தொடி, பலம், எனவும், கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, எனவும்வரும். குறை யா தாகுமென்றதனால், பத்தென்பதன்முன்னர்ப் பொருட்பெயர்க்கு வருமுடி புங்கொள்க. பதின்றிங்கள், பதிற்றுமுழம், பதிற்றுவேலி, பதிற்றிதழ், என வரும். [௩௧]

ஒன்றுமுதலொன்பானிறுதிமுன்னர்- நின்றபத்தனொற்றுக்கெட- வாய்தம் - வந்திடைநிலையுமியற்கைத்தென்ப - கூறியவியற்கைக்குற்றியலுகர - மாறனிறுதியல்வழியான.

என்னின். இஃது எண்ணுப்பெயரோடு, எண்ணுப்பெயர்க்கு முடிபுகூறுகின்றது. ஒன்றுமுதலாகவொன்பதீருகச்சொல்லப்படுகின்றவெண்ணுப்பெயர்களின்முன்னர், வருமொழியாய்வந்துநின்றபத்தென்னுஞ்சொல்லினது தகரவொற்றுக்கெட், ஆய்தமானதுவந்து, இடை, நிலைபெறுமியல்பையுடைத்தென்றுசொல்லுவர். அவற்றுள், ஆறென்னுமீறல்லாதவிடத்து, குற்றியலுகரம் மேற்கூறியவியற்கையாய்ப்பெயரோடுங்கெட்டுமுடியும். எ - று. உ - ம். ஒருபஃது, இருபஃது, எனவொட்டுக. வந்தெனறதனுல், ஆய்தமாய்த்திரியாதுகெட்டு, ஒருபது, என்றுமாம். [௩௨]

முதலீரெண்ணினொற்றுரகரமாகும் -
உகரம்வருதலாவயினை.

என்னின். மேற்கூறிய முடிபிற்குரியதோன்றுணரற்று. அவற்றுண்முதற்கணின்ற விரண்டெண்ணினொற்று ரகாரவொற்றாய், அவ்விடத்து, உகரம் வருக. எ - று. உ - ம். ஒருபஃது, எனவரும். [௩௩]

இடைநிலைரகரமிரண்டனெண்ணிற்கும்-
நடைமருங்கின்றேபொருள்வயினை.

என்னின். இதுவுமது. அவ்விரண்டென்னுமெண்ணிற்கும், இடைநின்ற ரகாரம் அம்மொழி பொருளாமிடத்து, நடக்குமிடமின்றிக்கெடும. எ - று. உ - ம். இருபஃது, எனவரும். [௩௪]

மூன்றுமாறுநெடுமுதல்குறுகு-
மூன்றனொற்றேபகாரமாகும்.

என்னின். இதுவுமது. மூன்றென்னுமெண்ணும் ஆறென்னுமெண்ணும் நெடுமுதல்குறுகிமுடியும். மூன்றென்னுமெண்ணின்கணின்ற னகாரவொற்று பகரவொற்றாய்முடியும். எ-று. உ-ம். முப்பஃது, எனவரும். [௩௫]

நான்கனொற்றேறகாரமாகும்.

என்னின். இதுவுமது. நான்கென்னுமெண்ணின்கணின்ற னகாரவொற்று றகரவொற்றாய்முடியும். எ-று. உ - ம். நாற்பஃது, எனவரும். [௩௬]

ஐந்தனொற்றேமகாரமாகும்.

என்னின். இதுவுமது. ஐந்தென்னுமெண்ணின்கணின்ற நகாரவொற்று மகாரவொற்றாய்முடியும். எ - று. உ - ம். ஐம்பஃது, எனவரும். ஆறனெடுமுதல் குறுகியவாறேநின்று, அறுபஃது, எனவரும். ஏழு குற்றுகரவீறன்ரும். [௩௭]

எட்டனொற்றேணகாரமாகும்.

என்னின். இதுவுமது. எட்டென்னுமெண்ணின்கணின்ற டகாரவொற்று ணகாரவொற்றாய்முடியும். எ - று. உ - ம். எண்பஃது, எனவரும். [௩௮]

**ஒன்பானொகரமிசைத்தகரமொற்று - முந்தையொற்றேணகார மிரட்டும் - பஃதென்கிளவியாய்தபகரங்கெட - நிற்றல்வேண்டுமூகா ரக்கிளவி - யொற்றியதகரம்றகாரமாகும்.**

என்னின். இதுவுமது. நிலைமொழியாகிய வொன்பதென்னுஞ்சொல்லி னொகரத்திற்குமேலாக, தகரம் ஒற்றாய்மிக்குவரும். முன்சொன்னவொகரத்தின்முன்னர், ணகரவொற்று இரண்டு ணகாரவொற்றாய் மிக்குவரும். வருமொழியாகிய பஃதென்னுஞ்சொற்றன்கட்பகரமும் ஆய்தமுங்கெட, நிலைமொழியிலிரட்டிய ணகரத்தின்பின்னர், ஊகாரமாகியவெழுத்தினை நிற்றல்வேண்டும். வருமொழியாகிய பஃதென்பதனீற்றின்மேலேறிய உகரங்கெடாது பிரிந்துநிற்ப, ஒற்றாய்நின்ற தகரம் றகாரவொற்றாகும். எ-று. இஃது ஒன்பதும் பஃதுமென நின்றான்முடியற் பாலவென்பது. பகர ஆய்தம் என்றதுமுறையன்றியகூற்றினான், நிலைமொழிக்கட் பகரக்கேடுங்கொள்க. குற்றியலுகரமும் அஃதேறியமெய்யும் முன்னர்மாட்டேற்றாற்கெட்டன. உ-ம். தொண்ணூறு, எனவரும். [௩௧]

**அளந்தறிகிளவியுநிறையென்கிளவியுங் -**
**கிளந்தவியலதோன்றுங்காலை.**

என்னின். மேற்கூறிய வொன்றுமுதலொன்பான்களோடு, அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறுகூறுகின்றது. மேற்கூறிய வொன்றுமுதலொன்பான்களின் முன்னர், அளந்தறியப்படுமளவுப்பெயர்ச்சொல்லும் நிறையென்னும்பெயர்ச்சொல்லும் தோன்றுங்காலத்து, அவ்வொன்றுமுதலொன்பான்கண்மேற் பஃதென்பதனோடு புணரும்வழி, கிளந்தவியல்பினவாய் முடியும். எ-று. உ-ம். ஒருகலம், இருகலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, எனவும், கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும், தோன்றுங்காலையென்றதனான், அவ்வெண்களின்முன், எடுத்தோத்தானும், இலேசானும், முடியாதுநின்றவெண்ணுப்பெயரையெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்துமுடித்துக்கொள்க. ஓரொன்று, ஓரிரண்டு, ஈரொன்று, ஈரிரண்டு, ஒருமுந்திரிகை, இருமுந்திரிகை, ஓரரைக்கால், ஈரரைக்கால், ஒருகால், இருகால், ஓரரை, ஈரரை, ஒருமுக்கால், இருமுக்கால், எனவொட்டிக்கொள்க. [௪0]

**மூன்றனொற்றேவந்ததொக்கும்.**

என்னின். இதுமாட்டேறெய்தாததற்கு, வேறுமுடிபுகூறுதனுதலிற்று. மூன்றுமெண்ணின்கணின்ற ணகாரவொற்று வருமொழியாய்வந்த அளவுப்பெயர் நிறைப்பெயரின்முதல்வந்தவொற்றோடு, ஒத்தவொற்றாய்முடியும். எ-று. உ-ம். முக்கலம், சாடி, தூதை, பானை, எனவும், கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும். மாட்டேற்றானே, நாற்கலம், சாடி, தூதை, பானை, எனவும், கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும். [௪௧]

**ஐந்தனொற்றேமெல்லெழுத்தாகும்.**

என்னின். இதுவுமது. ஐந்தாவதன்கணின்றநகரவொற்று மேல்வருகின்ற வருமொழிமுதல் வல்லெழுத்திற்கேற்றமெல்லெழுத்தாய்முடியும். எ-று. உ-ம். ஐங்கலம், சாடி, தூதை, பானை, எனவும். ஐங்கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும். [௪௨]

**கசதபமுதன்மொழிவரூஉங்காலை.**

என்னின். மேற்கூறிய மூன்றற்கும், ஐந்தற்கும், வருமொழிவரையறுக்கின்றது. மூன்றனொற்று வந்ததொப்பதூஉம். ஐந்தனொற்று மெல்லெழுத்தாவதூஉம். அவ்வளவுபபெயர் நிறைப்பெயரொன்பதினும, வன்கணமாகிய கசதபமுதன்மொழிகள்வந்தவிடத்து, எ - று. மேன்மாட்டேற்றானே, அறுகலம், சாடி, தூதை, பானை, எனவும், அறுகழஞ்சு, தொடி, பலம்,எனவும்வரும். ஏழு குற்றுகரவீறன்மையின், மாட்டேறேலாதாயிற்று. [௪௩]

**நமவவென்னுமூன்றொடுசிவணி -**
**அகரம்வரினுமெட்டன்முனியல்பே.**

என்னின். இஃது வேண்டாகூறி, வேண்டியதுமுடித்தனுதலிற்று. அளவுப்பெயர் நிறைபபெயர்களில், மெனகணத்திரண்டும், இடைக்கணத்தொன்றுமாகிய நமவவென்னுமூன்றனோடும்பொருந்தி, உயிர்க்கணத்து, அகரமுதன்மொழிவரினும், உம்மையால், அவ்வுயிர்க்கணத் தொழிந்தவுகரமும், கூறுதவல்லெழுந்துக்களும் வரினும், எட்டெனபதன்முன், மேற்கூறிநின்றவிகாரமே விகாரமாக, வேறோர்விகாரமினறி யியல்பாய்முடியும். எ - று. உ - ம். எண்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, எனவும், எண்கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும். இவ்வேண்டாகூறலான், எண்ணகல் என, தொடர்மொழிக்கண், ஒற்றிரட்டுதல்கொள்ளப் பட்டது. [௪௪]

**ஐந்துமூன்றுநமவருங்காலை -**
**வந்ததொக்குமொற்றியனிலையே.**

என்னின். இதுவும் மேனமாட்டேற்றோடு, ஒவ்வாவேறுமுடிபுகூறுதனுதலிற்று. ஐந்தெனனுமெண்ணும் மூன்றெனனுமெண்ணும் நகரமுதன்மொழியும், மகரமுதன்மொழியும், வருங்காலந்து, தங்கணின்றவொற்றுநடக்குநிலைமைசொல்லின், அவ்வருமொழிமுதல் வந்தவொற்றோடு, ஒத்தவொற்றாய்முடியும். எ - று. உ - ம். முந்நாழி, மும்மண்டை, ஐந்நாழி, ஐம்மண்டை, எனவரும். மூன்றுமைந்து மெனனுமுறையனறியகூற்றினான், நானாழியென்னுமுடிபின்கண், விகாரமாகிய னகரத்தின்முன்னர், வருமொழி நகரத்திரியும், அதுகாரணமாக, நிலைமொழி னகரக்கேடும், கொள்ளப்பட்டது. [௪௫]

**மூன்றனொற்றேவகாரம்வரும்வழித் -**
**தோன்றியவகாரத்துருவாகும்மே.**

என்னின். இதுவுமது. மூன்றுமெண்ணின்கணின்றனகரவொற்று வகரவருமொழிவருமிடத்து, வருமொழியாய வகரத்துருவாய்முடியும். எ-று. உ-ம். முவ்வட்டி, எனவரும. தோன்றியவென்றதனான், முதனீண்டுவகரவொற்றின்றி, மூவட்டி, என்றுமாம். இன்னுமதனானே, முதனீளாதொற்றின்றி, முவட்டியென்றுமாம். [௪௬]

**நான்கனொற்றேலகாரமாகும்.**

என்னின். இதுவுமது. நான்காமெண்ணின்கணின்ற னகாரவொற்று வகரம்வந்தால், லகரவொற்றாய்த் திரிந்துமுடியும். எ - று. உ - ம். நால்வட்டி, எனவரும். [௪௭

**ஐந்தனொற்றேமுந்தைபதுகெடுமே.**

என்னின். இதுவுமது. ஐந்தாமெண்ணின்கணின்ற நகரவொற்று வகரம்வந்தால், முன்னின்றவடிவுகெட்டுமுடியும். எ - று. உ - ம். ஐவட்டி, எ
[ ௧௪ ]

னவரும். முந்தையென்றதனால், நகரவொற்றுக்கெடாது, அவ்வகரமாய்த்திரிந்து, ஐவ்வட்டி, என்றுமாம். [௪௮]

முதலீரெண்ணின்முன்னுயிர்வருகாலைத் - தவலெனமொழிப வுகரக்கிளவி - முதனிலைநீடலாவயினான.

என்னின். இதுவுமது. முற்பட்டவிரண்டெண்ணின்முன், உயிர்முதன்மொழிவருங்காலத்து, உகரமாகியவெழுத்துக் கெடுமென்றுசொல்லுவர். அவ்வெண்ணின்முதற்கணின்றவெழுத்துக்கள் அவ்விடத்துநீண்டுமுடியும். எ - று. உ - ம். ஓரகல், ஈரகல், ஓருழக்கு, ஈருழக்கு, எனவரும். [௪௯]

மூன்றுநான்குமைந்தென்கிளவியுந்-
தோன்றியவகரத்தியற்கையாகும்.

என்னின். இதுவுமது. மூன்றென்னுமெண்ணும் நான்கென்னுமெண்ணும். ஐந்தென்னுமெண்ணுச்சொல்லும் மேற்றோன்றிமுடிந்தவகரத் தியற்கையாய், மூன்றன்கண், வகரவொற்றுயும், நான்கின்கண், லகரவொற்றுயும், ஐந்தன்கண், ஒற்றுக்கெட்டும்முடியும். எ-று. உ-ம். முவ்வகல், முவ்வுழக்கு, எனவும், நாலகல், நாலுழக்கு, எனவும், ஐயகல், ஐயுழக்கு, எனவும்வரும். தோன்றியவென்றதனான், மேல்மூன்றென்பது முதனீண்டவிடத்து, நிலைமொழினகரவொற்றுக் கெடுத்துக்கொள்க. [௫௰]

மூன்றன்முதனிலைநீடலுமுரித்தே -
யுழக்கென்கிளவிவழக்கத்தான.

என்னின். இதுவுமது. மூன்றென்னுமெண்ணின்கண், முதனின்றவெழுத்து உழக்கென்னுங்கிளவியதுவழக்கிடத்து, குறுகாதுநீண்டுமுடிதலுமுரித்து. எ - று. உ - ம். மூவுழக்கு, எனவரும். வழக்கத்தானவென்றதனான், அகலென்பதன்கண்ணும், இச்செய்கைகொள்க. மூவகல், எனவரும். [௫௧]

ஆறென்கிளவிமுதனீடும்மே.

என்னின். இதுவுமது. ஆறென்னுஞ்சொல் உயிர்முதன்மொழிவந்தால், முன்குறுகிநின்றமுதலெழுத்து நீண்டுமுடியும். எ - று. உ - ம். ஆறகல், ஆறுழக்கு, எனவரும். [௫௨]

ஒன்பானிறுதியுருபுநிலைதிரியா -
தின்பெறல்வேண்டுஞ்சாரியைமொழியே.

என்னின். இதுவுமது. ஒன்பதென்னுமெண்ணினிறுதி தன்வடிவுநிலைதிரியாது, சாரியைமொழியாகிய இன்பெற்றுமுடிதல்வேண்டும். எ - று. உ - ம். ஒன்பதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, எனவும், கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும். உருபென்றதனான், ஒன்பதிற்றகல், என்புழி, இரட்டியறகரமாகக்கொள்க. [௫௩]

நூறுமுன்வரினுங்கூறியவியல்பே.

என்னின். ஒன்றுமுதலொன்பான்களோடு நூறென்பதன்முடிபுகூறுகின்றது. நூறென்பது ஒன்றுமுதலொன்பான்கண்முன்வரினும், மேல்பத்தென்பனோடுபுணரும்வழி, கூறியவியல்பெய்திமுடியும். எ - று. உ - ம். ஒருநூறு, இருநூறு, அறுநூறு, எண்ணூறு, எனவிவை மாட்டேற்றானேமுடிந்தன. [௫௪]

மூன்றனொற்றேநகாரமாகும்.

என்னின். மாட்டேற்றேடொவ்வாததற்கு வேறுமுடிபுகூறுதனுதலிற்று மூன்றுமெண்ணின்கணின்றனகரவொற்று நகரவொற்றுகும். எ - று. உ - ம். முந்நூறு, எனவரும். [௫௫]

நான்குமைந்துமொற்றுமெய்திரியா.

என்னின். இதுவுமது. நான்கென்னுமெண்ணும் ஐந்தென்னுமெண்ணும் தம்மொற்றுக்கள் நிலைதிரியாதுமுடியும், எ - று. உ - ம். நானூறு, ஐந்நூறு, எனவரும். மெய்யென்றதனல், நானூறென்புழி, வருமொழியொற்றுகிய நகரக்கேடுகொள்க. இன்னுமதனனே, ஒற்றின்றி, ஐநூறெனவருமுடிபுங்கொள்க. [௫௬]

ஒன்பான்முதனிலைமுந்துகிளந்தற்றே - முந்தையொற்றேளகாரமிரட்டும்-நூறென்கிளவிநகாரமெய்கெட - ஊஆவாகுமியற்கைத்தென்ப - வாயிடைவருதலிகாரரகார - மீறுமெய்கெடுத்துமகாரமொற்றும்.

என்னின். இதுவுமது. ஒன்பதென்னுஞ்சொல்லின்முதனின்ற வொகரம் மேற்பத்தென்பனேடுபுணரும்வழிக் கூறியவாறுபோல, ஒகரமிசைத்தகரவொற்றுமிகும். அவ்வொகரத்தின்முன்னின்ற னகரவொற்று இரண்டுளகரவொற்றும். வருமொழியாகிய நூறென்னுஞ்சொல்லும் நகாரமாகிய மெய்கெட, அதன்மேலேறிய ஊகாரம் ஆகாரமாமியல்பையுடைத்தென்பர். அம்மொழியிடை, ஓரிகரமும்ரகாரமும்வரும். இதற்கீருகியகுற்றியலுகரத்தினையும், அஃதேறிநின்ற றகாரவொற்றினையுங்கெடுத்து, ஓர்மகரம் ஒற்றுய்வந்துமுடியும். எ-று. மெய்யென்றதனன், நிலைமொழிக்கணின்றபகரம் கெடுக்க. உ-ம். தொள்ளாயிரம், எனவரும். [௫௭]

ஆயிரக்கிளவிவரூஉங்காலை -
முதலீரெண்ணினுகரங்கெடுமே.

என்னின். அவ்வொன்றுமுதலொன்பான்கள் ஆயிரமென்பதன்முன்வரின், முடிபுகூறுகின்றது. ஆயிரமென்னுஞ்சொல் ஒன்றுமுதலொன்பானகண் முன் வருங்காலத்து, முதலீரெண்ணின்கட்பெற்றுநின்ற உகரம்கெட்டுமுடியும். எ - று. உ - ம். ஓராயிரம், இராயிரம், எனவரும். [௫௮]

முதனிலைநீடினுமானமில்லை.

என்னின். எய்தியதன்மேற்சிறப்புவிதிகூறுதனுதலிற்று. அம்முதலீரெண்ணினும், முதற்கணின்ற ஒகர இகரங்கள் நீண்டுமுடியினுங்குற்றமில்லை: எ - று. உ - ம். ஓராயிரம், ஈராயிரம், எனவரும். [௫௯]

மூன்றனொற்றேவகாரமாகும்.

என்னின். இதுவும்மாட்டேற்றேடொவ்வாமுடிபுகூறுதனுதலிற்று. மூன்றுமெண்ணின்கணின்ற னகாரவொற்று வகரவொற்றுய்முடியும். எ - று. உ - ம். முவ்வாயிரம், எனவரும். "முதனிலை" என்றதனன், முதனீண்டுவகரவொற்றுக்கெட்டு மூவாயிரம் என்னும்வரும். [௬0]

நான்கனொற்றேலகாரமாகும்.

என்னின். இதுவுமது. நான்காமெண்ணின்கணின்றனகரவொற்று லகரவொற்றுய்முடியும். எ - று. உ - ம். நாலாயிரம், எனவரும். [௬௧]

ஐந்தனொற்றேயகாரமாகும்.

என்னின். இதுவுமது. ஐந்தாமெண்ணின்கணின்றநகரவொற்று யகர வொற்ருய்முடியும். எ - று. உ - ம். ஐயாயிரம், எனவரும். முன்னர், இவ்வாறேதாமையான், ஐயகல், ஐயுழக்கு, உடம்படுமெய்பெற்றது. [௬௨]

ஆறன்மருங்கிற் குற்றியலுகர
மீறுமெய்யொழியக்கெடுதல்வேண்டும்.

என்னின். இதுவுமது. ஆறுமெண்ணின்கணின்றகுற்றியலுகரம் தானேறியமெய்யாகியறகரவொற்றுக்கெடாதுநிற்ப, உகரமாகியஅவ்வீறுதானே கெட்டுமுடிதல்வேண்டும். எ - று. உ - ம். அறுயிரம், எனவரும். திரிந்ததன்றிரிபதுவென்னுநயத்தான், ஆறன்மருங்கினென்றேதப்பட்டது. ஆறென்பது அறுவென, குற்றியலுகரம் முற்றியலுகரமாகவோதப்பட்டுநின்றமையின், அவ்வுகரக்கேடோதப்பட்டது. ஈறெனவும், மெய்யெனவும், அவ்வுயிர்மெய்யைப்பிரித்துச் செய்கையோதினமையான், அவ்வுயிர்மெய்யினை, ஒற்றுமை நயத்தாற்குற்றியலுகரமென்றேதிஞகக்கொள்க. ஆறன்மருங்கின், ஈறுமெய்யொழியக்கெடுமென்றது, குற்றியலுகாமென்றேதினமையான, நெடுமுதல்குறுகாதேநின்று ஆருயிரம், என்றுமாம். இன்னுமதனனே, "ஆறுகுல தே" னெறுற்போலப்பொருட்பெயர்க்கண்வருமுடிபுங்கொள்க. மேல்மாட்டேற்றுனே, எண்ணுயிரம், னைமுடிந்தது. [௬௩]

ஒன்பானிறுதியுருபுநிலைதிரியா -
தின்பெறல்வேண்டுஞ்சாரியைமரபே.

என்னின். இதுவுமது. ஒன்பதெனனுமெண்ணினிறுதிக் குற்றியலுகரம் தன்வடிவுநிலைதிரிந்துகெடாது, சாரியையாகிய மரபினையுடையவின்பெற்று முடிதல்வேண்டும். எ - று. உ - ம. ஒன்பதிஞயிரம், எனவரும். உருபென்றும், நிலையென்றும், சாரியைமரபென்றும், கூறியமிகுதியான், ஆயிரமல்லாதபிறவெண்ணின்கண்ணும், பொருட்பெயரிடத்தும், இனனும் உகரமும் வல்லெழுத்தும், பெற்றுமுடியுமுடிபுங்கொள்க. ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றுத்தடக்கை, ஒன்பதிற்றெழுத்து, எனவரும். இன்னும், அவ்விலேசானே, மேல்எண்ணுயிரம் என்றவழி ஒற்றிரட்டிகெகொள்க. [௬௪]

நூருயிரமுன்வருஉங்காலை -
நூறெனியற்கைமுதனிலைக்கிளவி.

என்னின். ஒன்றுமுதலொன்பான்களோடு, நூறென்னும்அடையடுத்து ஆயிரமென்பதுமுடியுமாறுகூறுகின்றது. நூருயிரமென்னுமடையடுத்தமொழி ஒன்றுமுதலொன்பான்கண்முன்வருங்காலத்து, முதனிலைக்கிளவியாகிய ஒன்றென்னுமெண்மேல், ஒன்றுமுதலொன்பான்களோடுமுடிந்த நூறென்னும் சொல் அவ்வொன்றனேடுமுடிந்தவிகாரவியற்கையெய்திமுடியும். வழிநிலைக்கிளவியாகிய இரண்டுமுதலெண்கள் விகாரமெய்தியும், எய்தாதியல்பாயும்முடியும். எ- று. உ - ம். ஒருநூருயிரம், எனவரும். இருநூருயிரம், இரண்டுநூருயிரம், முந்நூருயிரம், மூன்றுநூருயிரம், நானூருயிரம், நான்குநூருயிரம், ஐந்நூருயிரம், ஐந்துநூருயிரம், அறுநூருயிரம், ஆறுநூருயிரம், எண்ணூருயிரம், எட்டுநூருயிரம், ஒன்பதுநூருயிரம், எனவரும். உளாயிற்கோடலென்பதனல், தொள்ளாயிரமென்றமுடிபினேடுமாட்டேறுசென்றதேனும், அவ்வாறுமுடியாதென்றுகொள்க. முன் என்பதனன், இன்சாரியை பெற்று, ஒன்பதிஞருயிரம், என்றுமாம். நிலையென்றதனன், மூன்றும் ஆறும்

இயல்பாய்முடியு முடியின்கண், நெடுமுதல்குறுகாமைகண்டுகொள்க. இன் னு ம அதனுனே, நா னூறாயிரம், என்புழிவருமொழி நகரம்கேடுகொள்க. [௬௫]

நூறென்கிளவியொன்றுமுதலொன்பாற் -
கீறுசினையொழியவினவொற்றுமிகுமே.

என்னின். நூறென்பதனேடு ஒன்றுமுதலொன்பான்களைப் புணர்க்கின் றது. நூறென்னுஞ்சொல் ஒன்றுமுதலொன்பான்களோடுபுணருமிடத்து, ஈ றாகியகுற்றியலுகரமும் அவ்வுகரமேறியமெய்யாகியசினையுங்கெடாதுநிற்ப, சினைக்கினமாகியவினவொற்றுமிக்குமுடியும். எ - று. உ - ம். நூற்றொ ன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, எனவரும். ஈறுசினை என்றோதியமிகையானே, நூறென்பதனேடு, பிறவெண்ணும் பிற பொருட்பெயரும் இவ்விதியும் பிறவிதியுமுடியுமாறுகொள்க. நூற்றுக்கோடி, நூற்றுப்பத்து, நூற்றுத்தொண்ணூறு, எனவும். நூற்றுக்குறை, நூற்றடிக்கு, எனவும்வரும். [௬௬]

அவையூர்பத்தினுமத்தொழிற்றாகும்.

என்னின். அந்நூறென்பதனேடு, ஒன்றுமுதலொன்பான்கள்அடையடுத்த வழிப்புணருமாறுகூறுகின்றது. அந்நூறென்பது ஒன்றுமுதலொன்பான்களா ன், ஊரப்பட்டபத்தினேடுபுணருமிடத்தும், அத்தொழிற்றாய், இனவொற்றுமிக் குமுடியும். எ - று. உ - ம். நூற்றொருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்ப ஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது, எனவரும். ஆகுமென்ற தனன், நிலைமொழியடையடுத்துவருமுடிபுங்கொள்க. ஒருநூற்றொருபஃது, எனவொட்டுக. [௬௭]

அளவுநிறையுமாயியறிரியா - குற்றியலுகரமும்வல்லெழுத்தியற் கையு - முறகிளந்தன்னவென்மனார்புலவர்.

என்னின். அந்நூறென்பதனேடு, அளவுப்பெயரும் நிறைப்பெயரும் மு டியுமாறுகூறுகின்றது. அந்நூறென்பதனேடுபுணருமிடத்து, அளவுப்பெயரு ம் நிறைப்பெயரும், மேற்கூறிய வியல்பிற்றிரியாதேநின்று, இனவொற்றுமிக் குமுடியும். அவ்விடத்துங் குற்றியலுகரம்கெடாமையும் இனவொற்றுமிக்கு வன்றொடர்மொழியாய் நின்றமையான், வருமொழி வல்லெழுத்துமிகுமிய ல்பும்மேல்வன்றொடர்மொழிக்குக் கூறியதன்மையவென்றுசொல்லுவர்புலவர். எ - று. உ - ம். நூற்றுக்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, எனவும். கழஞ்சு, தொடி, பலம், எனவும்வரும். திரியா எ ன்றதனன், நூறென்பது அடையடுத்தவழியுமிவ்விதிகொள்க. உ - ம். ஒரு நூற்றுக்கலம், இருநூற்றுக்கலம், எனவொட்டுக. [௬௮]

ஒன்றுமுதலாகியபத்தூர்கிளவி - யொன்றுமுதலொன்பாற்கொ ற்றிடைமிகுமே - நின்றவாய்தங்கெடுதல்வேண்டும்.

என்னின். ஒன்றுமுதலெட்டீறாகியவெண்களடையடுத்தபத்தி னேடு ஒன்றுமுதலொன்பான்களைப்புணர்க்கின்றது. ஒன்றுமுதலெட்டீறாகப் பத்தெ ன்னுமெண்ணூரப்பட்டசொற்கள் அவ்வொன்றுமுதலொன்பான்கள் வரு மொழியாய்வந்துபுணருமிடத்து, ஆண்டுநின்ற ஆய்தம்கெட்டுமுடிதல்வேண்டு ம். கெட்டவழி, இனவொற்றாய், ஓர்தகரவொற்று இடைமிக்குமுடியும். எ - று. உ - ம். ஒருபத்தொன்று, இருபத்தொன்று, ஒருபத்திரண்டு, இருபத்திரண்டு, ஒருபத்துமூன்று, இருபத்துமூன்று, எனவொட்டிக்கொள்க. நின்றவென்றத னன், மேல், ஒருபதிற்றுக்கலம், என்னுமுடிபிற்கு, இன்பேறுங்கொள்க. [௬௯]

ஆயிரம்வரினேயின்னென்சாரியை - யாவயினுற்றிடைமிகுதலில்லை.

என்னின். அவ்வடையடுத்தபத்தினேடு, ஆயிரத்தினைப் புணர்க்கின்றது. அவ்வொன்றுமுதலாகிய பத்தூர்கிளவிமுன், ஆயிரமென்பதுவரின் இடைவந்து புணருஞ்சாரியை இன்னும். அவ்விடத்துமுன்கூறியவொற்று இடைமிகுதலின்றிமுடியும். எ - று. உ - ம். ஒருபதினுயிரம், இருபதினுயிரம், எனவொட்டுக. ஆயினென்றதனுன், ஒருபதிற்றுக்கலம், என்னுமுடிபிற்கு, உகரமும்வல்லெழுத்துப்பேறுங்கொள்க. [௭௰]

அளவுநிறையுமாயியறிரியா.

என்னின். அவ்வொன்றுமுதலாகியபத்தூர்கிளவி முன், அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறுகூறுகின்றது. அவ்வொன்றுமுதலாகிய பத்தூர்கிளவிமுன், அளவுப்பெயரும் நிறைப்பெயரும் மேல் ஆயிரத்தோடுபுணரும் வழிமுடிந்தவியல்பிற்றிரியாதேநின்று, இன்பெற்றுமுடியும். எ - று. உ - ம். ஒருபதின்கலம், இருபதின்கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு, எனவும், ஒருபதின்கழஞ்சு, தொடி, பலம், எனவுங்கொள்க. திரியா என்றதனுன், ஒருபதிற்றுக்கலம், என்னுமுடிபிற்கு, இன்னினகரம் இரட்டியறகரமாகலும், ஒருபதினுழி என்னுமுடிபின்கண், வருமொழிநகரந்திரிந்தவழி, நிலைமொழியினகரக்கேடுங்கொள்க. [௭௧]

முதனிலையெண்ணின்முன்வல்லெழுத்துவரினு - ஞநமத்தோன்றினும்யவவந்தியையினு - முதனிலையியற்கையென்மனார்புலவர்.

என்னின். ஒன்றுமுதலொன்பான்களோடு, பொருட்பெயரைப் புணர்க்கின்றது. முதனிலையெண்ணுகிய ஒன்றென்னுமெண்ணின்முன், வல்லெழுத்துமுதன்மொழிவரினும், ஞநமக்களாகிய மெல்லெழுத்துமுதன்மொழிவரினும், யவக்களாகிய விடையெழுத்து முதன்மொழிவரினும், அவ்வொன்றுமுதலொன்பான்கள் முன் எய்தியமுடிபு நிலையெய்திமுடியுமென்று சொல்லுவர்புலவர். எ - று. எனவே வழிநிலையெண்ணுகியவிரண்டுமுதலாகியவெண்கள் அம்முதனிலை முடிபாகிய விகாரமெய்தியும், எய்தாதியல்பாயும்முடியும். உ - ம். ஒருகல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, எனவரும். இருகல், இரண்டுகல், சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, எனவும், ஒன்பதின்காறு மொட்டுக. ஒன்பதின்கல், எனச்சென்றதேனும் வழக்கின்மையினுழிக்க. நிலையென்றதனுன், மாட்டேற்றுக்கேலாதனுகரயகரங்களின்முடிபுகொள்ளப்பட்டது. [௭௨]

அதனிலையுயிர்க்கும்யாவருகாலையு - முதனிலையொகரமோவாகும்மே - ரகரத்துகரந்துவரக்கெடுமே.

என்னின். ஒன்றுமுதலொன்பான்களோடு, பொருட்பெயருள், உயிர்முதன்மொழி முடியுமாறும், மேற்கூறிய யகரம்வேறுபடமுடியுமாறுங் கூறுகின்றது. அவ்வொன்றுமுத லொன்பான்களோடு புணருமிடத்து, உயிர்முதன்மொழிவந்தவிடத்தும், யாமுதன்மொழிவந்தவிடத்தும், முதனிலையெண்ணுகிய ஒன்றென்பதன்கண், ஒகரம் ஓகாரமாம். அவ்விடத்து, ரகரத்துகரம் முற்றக்கெட்டுமுடியும். எ - று. எனவே, வழிநிலையெண்களுள், உயிர்நிலைமுதன்மொழிவந்தவிடத்து, முன்கூறியவாறே, இருவாற்றானுமுடியும். உ - ம். ஓரடை, ஓராடை, எனவும் இருவடை, இரண்டடை, இருவாடை, இரண்டாடை, எனவும், உயிர்முதன்மொழிகளை யொட்டிக்கொள்க. யாமுதன்மொழி, ஓர்யாழ், எனவரும். துவரவென்றதனுன், இரண்டென்னுமெண்ணும், மூன்றென்னு

மென்னும் செய்யுளகத்து, ஈரசை, எனவும், மூவசை எனவும், முதனீண்டு
வேறுபடமுடியுமாறுகொள்க. அதனிலையென்றதனுன், முதனிலை நீளாதேநி
ன்று, உகரங்கெட்டு, ஓரடை, ஓராடை, ஓர்யாழ், எனவருமுடிபுங்கொள்க [எ௩]

**இரண்டுமுதலொன்பானிறுதிமுன்னர் - வழங்கியன்மாவென்கிள
விதோன்றின் - மகரவளபொடுநிகரலுமுரித்தே.**

என்னின். இரண்டுமுதலொன்பான்கண்முன்னர், அளவுமுதலிய மூன்றற்
கு முரியமாவென்பது புணருமாறு கூறுகின்றது. இரண்டுமுதலாக ஒன்பதீருக
ச்சொல்லப்படுகின்ற வெண்களின்முனனர் வழக்கின்கண்ணேகிடக்கின்ற வி
லங்குமரமுதலிய வல்லாதவுளவுமுதலியவற்றிற்குரிய மாவென்னுஞ்சொல்
தோன்றின், இயல்பாய்முடிதலேயன்றி, மேற்கூறிய மண்டையென்னுமளவுப்
பெயரோடொத்து, வேறுபடமுடிவனவும்பெறும். எ - று. உ - ம். இரண்
டுமா, இருமா, மூன்றுமா, மும்மா, என, ஒன்பதின்காறுமிவ்வாறொட்டுக. இர
ண்டுமுதலொனபானென் றெடுத்தமையின், ஒன்றற்கு, ஒருமாவென்னுமுடிபே
யன்றி, ஒன்றுமாவென்னு முடிபில்லையாயிற்று. இவற்றுள், மிக்க எண்ணோடு
குறைந்த எண்வருங்கால், உம்மைத்தொகையாகவும், குறைந்த எண்ணோடுமிக்
கதுவரிற் பண்புத்தொகையாகவும், முடித்தாரென்க. [எ௪]

**லனவெனவரூஉமபுள்ளியிறுதிமுன் - றும்முங்கெழுவுமுளப்ப
டப்பிறவு - மன்னமரபின்மொழியிடைத்தோன்றிச் - செய்யுட்டொட
ர்வயின்மெய்பெறநிலையும் - வேற்றுமைகுறித்தபொருள்வயினுன.**

என்னின். லகார னகாரவீற்றுச்செய்யுண்முடிபுகூறுகின்றது. லன
வென்றுசொல்லவருகின்ற புள்ளியீற்றுச்சொன்முன், உம்மென்னுஞ்சாரியை
யும் கெழுவென்னுஞ்சாரியையுமுளப்படப் பிறசாரியையும் அப்பெற்றிப்பட்ட
மரபினையுடையமொழியிடைத்தோன்றி, செய்யுண்மொழிகளைத்தொடர்ந்து
சொல்லுமிடத்து, மெய்ம்மைபெறநிலைபெற்றுமுடியும். வேற்றுமைகுறித்த
பொருட்புணர்ச்சிக்கண். எ - று. உ - ம். வானவரிவில்லுந் திங்களும, கல்
கெழுகானவர்நல்குறுமகளே, எனவும், மாநிதிக்கிழவனும்போன்ம். என
வும், கான்கெழுநாடு, எனவும்வரும். மொழியிடைத்தோன்றி, என்றமிகை
யால், பிறவீற்றுள்ளும், இச்சாரியைபெற்றுமுடிவனகொள்க. துறைகெழு
மாந்தை, வளங்கெழுதிருநகர், எனவரும. அன்னமரபின், என்றதனுல், சாரி
யை காரணமாக வல்லெழுத்துப்பெறுதலும், அதுகாரணமாகநிலைமொழியீ
றுதிரிதலும், சாரியையது உகரக்கேடும், எகரநீட்சியும்கொள்க. பூக்கேழூரன்,
வளங்கேழ்திருநகர், என்று அவ்வாறுவந்தமையறிக. மெய்பெறவென்றதனு
ன், இச்சாரியைப்பேற்றின்கண், ஈற்றுவல்லெழுத்துவீழ்க்க. [எ௫]

**உயிரும்புள்ளியுமிறுதியாகிக் - குறிப்பினும்பண்பினுமிசையினு
ந்தோன்றி - நெறிப்படவாராகுறைசசொற்கிளவியு - முயர்திணைய
ஃறிணையாயிருமருங்கி - னைம்பாலறியும்பண்புதொகுமொழியுஞ் -
செய்யுஞ்செய்தவென்னுங்கிளவியின் - மெய்யொருங்கியலுந்தொழி
றொகுமொழியுந் - தம்மியல்கிளப்பிற்றம்முற்றம்வரூஉ - மெண்ணின்
றொகுதியுளப்படப்பிறவு - மன்னவையெல்லாமருவின்பாத்திய - பு
ணரியனிலையிடையுணரத்தோன்று.**

என்னின். இவ்வதிகாரத்துப்புணர்க்கப்படாமொழிகள் இவையெனவவற்
றையெடுத்துணர்த்துகின்றது. உயிரெழுத்தும் புள்ளியெழுத்துமீறாகி, குறிப்
பின்கண்ணும், பண்பின்கண்ணும், இசையின்கண்ணுந்தோன்றி, ஒருநெறிப
பட வாராக்குறைச்சொற்களாகிய வுரிச்சொற்களும் உயர்திணையஃறிணையாகி
யஅவ்விரண்டு திணையிடத்தும், உளவாயவைந்து பாலினையுமறியவரும் பண்பு
த்தொகைமொழிகளும் செய்யும் செய்தவென்னும் பெயரொச்சச்சொற்களி

ன்படியொருங்கு நடக்கும்வினைச்சொற்றொக்கவினைத்தொகையும் எண்கடம்மியல்புகிளக்குமிடத்து, நிறுத்தசொல்லும் குறித்து வருகிளவியுமாய்வாராது, தம்முற்றும்வருமெண்ணின்றொகுதியும் உட்பட்டபிறவும் அத்தன்மையவெலலாம் வழக்கிடத்துமருவி நடந்தவிடத்துள்ளனவாகலான், அவ்வாறேகொள்ளப்படும். புணர்ச்சியியன்ற நிலைமைக்கண், அவற்றின்முடிபுவிளங்கத்தோன்று. எ - று. உ - ம். வின்வினைத்தது, கார்கறுத்தது, ஒல்லொலித்தது, இவைகுறைச்சொற்கிளவியாயினமைன்முடிக்கப்படாவாயின. விண்ணென விசைத்ததென விடைச்சொல்லோடு கூடியவழிப்புணர்க்கப்படும். கருஞ்சான்றான், என்றது பண்புத்தொகை. இவை கருமென, பண்புணாநின்றது. கருஞ்சான்றானென த்தொகையாயவழி, கருமென்பதுகரியானெனப்பால்காட்டி நிற்றலில், புணர்க்கப்படாதாயிற்று. கொல்யானையென்றது வினைத்தொகை. அதுவும கொல்லெனத்தொழின்மை புணாநின்றது. கொல்யானை என, தொகையாய வழி, கொன்றவெனக்காலங்காட்டி நின்றமையில், புணர்க்கப்படாதாயிற்று. ஓரொன்று என, இதுதம்முற்றும்வந்தவெண். இது நிறுத்தசொல்லும் குறித்துவருகிளவியும், அன்மையிற்புணர்க்கப்படாதாயிற்று. இதுதானே, ஓரொன்றுகச்கொடு, என்புழி, புணர்க்கப்படும். பிறவும், என்றதனுன் முடியாதன உண்டான். கரியன என்பன, இவை உண் எனவும், கருமை எனவும்பிரித்து, நிறுத்தியவழி, ஆனும், அன்னுங்குறித்து வருகிளவியன்மையான்வந்து புணராமையில், புணர்க்கப்படாவாயின. தோன்றி. என்றதனுல், கொள்ளெனக்கொண்டான, என்புழி, கொள்ளென்பதனை, எனவென்பதனேடு புணர்க்கப்படாமைகொள்க. மெய்யொருங்கியலும் என்றதனுன், உண்டான், என்புழி, செய்கையும் காலமும்பாலும் தோற்றிநிற்குமாறுபிரித்துப்புணர்க்கப்படாமைகொள்க. [எசு]

**கிளந்தவல்லசெய்யுளுட்டிரிநவும் - வழங்கியன்மருங்கின்மருவொடுதிரிநவும் - விளம்பியவியற்கையின்வேறுபடத்தோன்றின் ; வழங்கியன்மருங்கினுணர்ந்தனரொழுக்க - னன்மதிநாட்டத்தென்மனார்புலவர்.**

என்னின். இது இவ்வதிகாரப்புறனடையுணர்த்துதனுதலிற்று. முன்னெடுத்தோதினவல்லாதன செய்யுளிடத்து, வேறுபடவருவனவற்றையும, வழக்குநடக்குமிடத்து, மருவுதலோடுவேறுபடவருவனவற்றையும், முன்சொன்ன முடிபியற்கையின் வேறுபடத்தோன்றின், நல்லறிவினதாராய்ச்சியான் வழங்கியலுமிடத்து, அவற்றின்முடிபுவேறுபாடுகளையறிந்துநடத்துகவென்றுசொல்லுவர் புலவர். எ - று. உ - ம். நறவங்கண்ணி, கள்ளியங்கோடு, புன்னையங்கானல், பொனனந்திகிரி, ஆரங்கண்ணி, காலம்பெருந்துறை, என இவை வேற்றுமைக்கண், அம்முப்பெற்று முடிந்தன. வேர்பிணிவெதிரத்துக்கால்பொருநரலிசை, என்பது ரகரவீறு அத்துப்பெற்றுமுடிந்தது. முளவுமா, பிணவுநாய், என்பன அல்வழிக்கண், மென்கணத்துக்குறியதனிறுதிச்சினைகெட்டு, உகரம்பெற்றுமுடிந்தன. அஞ்செவிநிறையமந்திரங்கூறி, என்பது அகமென்னுநிலைமொழி செவியென்னும்வருமொழியோடு வேறுபடமுடிந்தது. ஆயிடை என்பது அவ்வென்னும் வகரவீறு வேறுபடமுடிந்தது. தடவுத்திரை, தடவுந்தோள், எனபன உரிச்சொனமுடிபு. அருமருந்தன்னுன், எனற்பாலது அருமந்தான், என, மருஉவாய்முடிந்தது. சோணுடு, மலாடு, என்பதுமது. பொதியிலென்பதுமது, பிறவுமன்ன. [எஎ]

ஒன்பதாவது குற்றியலுகரப்புணரியல் முற்றிற்று.

எழுத்ததிகாரம் இளம்பூரணருரை

முற்றுப்பெற்றது.

# தொல்காப்பியவெழுத்ததிகாரச்சூத்திரவகராதி.


| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| அ ஆ உ ஊ ஏ | சங | அவற்றுவழிமருங்கிற் | உக |
| அஆவென்னும் | சரு | அவைதாங் - குற்றிய | சு |
| அஇஉஅம் | கக | அவைதாம் - இயற்கை | சஅ |
| அகமென்கிளவிக்கு | எரு | அவைதாம் - இனனேவ | உக |
| அகரஆகாரம் | எச | அவைதாம் - முன்னப் | ஙங |
| அகரஇகரம் | கசு | அவைதாம் - மெய் | உசு |
| அகரஉகரம் | கசு | அவையூர்பத்தினும் | ாக |
| அகரத்திம்பர் | கசு | அவ்வாறெழுத்து | உஉ |
| அகரவிறுதி | ரு0 | அவ்வியனிலையு | அ |
| அக்கென்சாரியை | சுரு | அழனென்னிறுதி | அரு |
| அடையொடு | எசு | அழனேபுழனே | சஎ |
| அணரிநுனிநா | உங | அளந்தறிகிளவி | ாச |
| அண்ணஞ்சேர்ந்த | உங | அளபிறந்துயிர்த்தலும் | கக |
| அண்ணநண்ணிய | உஉ | அளவாகுமொழிமுத | உக |
| அதனிலையுயிர்க்கும் | ாய | அளவிற்குநிறையிற்கும் | சஉ |
| அத்தவண்வரினும் | ருச | அளவுநிறையுமாயியறிரியா | ாசு |
| அத்திடைவரூஉம | சக | அளவுநிறையுமாயியறி | ாய |
| அத்தினகரம | ங0 | அளவுநிறையுமெண்ணும் | கஉ |
| அத்தேவற்றே | ஙக | அளவுநிறையும்வேற்றுமை | எசு |
| அத்தொடுசிவணும் | எசு | அன்றுவருகாலை | சுஉ |
| அந்நான்மொழியும் | ாக | அன்னவென்னு | ருக |
| அப்பெயர்மெய்யொழித்தன் | அச | அன்னென்சாரியை | சஎ |
| அம்மினிறுதி | ங0 | அஃறிவணுவலாது | உச |
| அம்மூவாறும் | க0 | அஃறிணைவிரவும் | ஙஎ |
| அளபெடை | அ | ஆ ஈ ஊ ஏ ஐ | ஏ |
| அளபெனவரூஉம் | சக | ஆஎ-ஓஎனு | கஅ |
| அல்லதன்மருங்கிற் | எகூ | ஆஏஓஅம் | கக |
| அல்லதுகிளப்பினியற் | எஎ | ஆகாரவிறுதி | ருரு |
| அல்லதுகிளப்பினும்வே | எஎ | ஆடூஉமகடூஉ | சுரு |
| அல்லதுவிறுதி | கசு | ஆணும்பெண்ணும் | எஉ |
| அல்லதுகிளப்பினெல் | ா | ஆண்மரக்கிளவி | எங |
| அல்வழியெல்லாமியல் | அஎ | ஆதனும்பூதனும் | அச |
| அல்வழியெல்லாமுற | அஅ | ஆயிரக்கிளவி | ாஎ |
| அல்வழியெல்லாமுறமெ | கூங | ஆயிரம்வரினும் | ாஉ |
| அல்வழியெல்லாமெல் | எரு | ஆயிரம்வரினே | ாய |
| அவ்வழி - பன்னீருயிரும் | உக | ஆயிரமவருவ | கஉ |
| அவற்றுள் - அ-ஆ-ஆ யிரண் | உக | ஆய்தநிலையலும் | கச |
| அவற்றுள் - அ இ உ எ | எ | ஆரும்வெதிருஞ் | அஎ |
| அவற்றுள் - இகரவீற்று | ஙஎ | ஆவயின்வல் | எஉ |
| அவற்றுள் - இன்னினி | உகூ | ஆவுமாவும் | ருரு |
| அவற்றுள் - ஈரொற்றுத் | கூசு | ஆவோடல்லது | கஅ |
| அவற்றுள் - கரமுங்கானும் | ஙஉ | ஆறன்மருங் | ாஅ |
| அவற்றுள் - ணனஃகான | க0 | ஆறனுருபினகர | உஅ |
| அவற்றுள் - நிறுத்தசொல் | உகூ | ஆறனுருபினும் | ச0 |
| அவற்றுண் - மெய்யி | உரு | ஆறென்கிளவி | ாசு |
| அவற்றுண் - மெல்லெழு | ஙஉ | ஆனினகரமு | ங0 |
| அவற்றுள் - ரகார | கரு | ஆனொற்றகர | ருஎ |
| அவற்றுள் - லளஃகான் | க0 | ஆனமுனவரூஉம் | ருஅ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| இ ஈ எ ஏ ஐ | ௨௨ |
| இக்கினிகர | ௩௦ |
| இகரயகர | ௧௭ |
| இகரவிறுதிப் | ௫௮ |
| இடம்வரை | ௬௧ |
| இடைநிலைரகர | ௱௩ |
| இடைப்படிற் | ௧௩ |
| இடையெழுத்தென்ப | ௯ |
| இடையொற்றுத் | ௯௭ |
| இதழியைந்து | ௨௩ |
| இயற்பெயர் | ௮௪ |
| இரண்டுமுத | ௱௧௧ |
| இராவென் | ௫௬ |
| இருதிசை | ௱௧ |
| இருளென்கி | ௯௪ |
| இலமென்கி | ௭௫ |
| இல்லமரப் | ௭௫ |
| இல்லென்கிளவி | ௮௯ |
| இல்லொடுகிளப் | ௭௦ |
| இறுஅற்றேற்ற | ௮௩ |
| இனியணி | ௫௮ |
| இன்றியென்னு | ௫௮ |
| இன்னிடைவரூஉம் | ௪௫ |
| இன்னெனவ | ௩௧ |
| ஈகாரவிறுதி | ௬௧ |
| ஈமுங்கம்மும் | ௭௯ |
| ஈரெழுத்துமொழியுமு | ௯௭ |
| ஈரெழுத்துமொழியும் | ௬௮ |
| ஈரெழுத்தொரு | ௯௬ |
| ஈறியன்மருங்கினி | ௪௨ |
| ஈறியன்மருங்கினு | ௧௩ |
| உஊஒஓவென்னு | ௧௮ |
| உஊஒஓஔ வென | ௨௨ |
| உஊகாரநவவொடு | ௧௯ |
| உகரமொடுபுணரும் | ௪௦ |
| உகரவிறுதி | ௬௨ |
| உச்சகாரமிரு | ௨௦ |
| உச்சகாரமொடு | ௨௦ |
| உட்பெறுபுள்ளி | ௮ |
| உணரக்கூறிய | ௯௫ |
| உண்டென்கிளவி | ௱௧ |
| உதிமரக்கிளவி | ௬௦ |
| உந்திமுதலா | ௨௧ |
| உப்பகாரமொடு | ௨௦ |
| உப்பகாரமொன்றென | ௨௦ |
| உம்மையெஞ்சிய | ௫௫ |
| உயர்திணைப்பெயரே | ௨௮ |
| உயர்திணையாயின் | ௪௯ |
| உயர்திணையாயினு | ௭௮ |
| உயிரும்புள்ளியுமிறுதி | ௱௧௧ |
| உயிரும்புள்ளியுமிறுதியா | ௪௦ |
| உயிர்முன்வரினுமாயிய | ௯௩ |
| உயிர்முன்வரினு | ௫௧ |
| உயிரிறுசொன்முன் | ௨௫ |
| உயிரீறாகியமுன்னிலை | ௩௬ |
| உயிரீறாகியவுயர்திணைப் | ௩௬ |
| உயிர்மெய்யல்லன | ௧௯ |
| உயிர்மெய்யீறும் | ௨௫ |
| உயிர்ஔவெஞ்சிய | ௧௯ |
| உரிவருகாலை | ௫௯ |
| உருபியனிலையு | ௭௦ |
| உருவினுமிசையினு | ௧௩ |
| உரைப்பெயர்க்கிளவி | ௫௨ |
| ஊகாரவிறுதி | ௬௪ |
| ஊவென்றொருபெய | ௬௫ |
| எ - எனவருமுயிர் | ௧௯ |
| எகரவொகரத் | ௮ |
| எகரவொகரம் | ௬௫ |
| எகின்மரமாயி | ௮௧ |
| எஞ்சியவெல்லா | ௨௦ |
| எட்டனொற்றே | ௱௩ |
| எண்ணினிறுதி | ௪௮ |
| எண்ணுப்பெயர்க் | ௯௯ |
| எப்பெயர்முன்னரும் | ௩௦ |
| எருவுஞ்செருவு | ௬௩ |
| எல்லாமென்னு | ௪௬ |
| எல்லாமொழிக்கு | ௩௩ |
| எல்லாருமென்னு | ௪[illegible] |
| எல்லாவெழுத்தும் | ௨௪ |
| எழுத்தெனப்படுப | ௫ |
| எழுத்தோரன்ன | ௩௩ |
| ஏஔனுமுயிர் | ௧௯ |
| ஏகாரவிறுதி | ௬௬ |
| ஏயெனிறுதி | ௬௭ |
| ஏழனுருபிற்குத் | ௪௯ |
| ஏழென்கிளவி | ௯௨ |
| ஏனைபுணரி | ௯௧ |
| ஏனைவரினே | ௬௨ |
| ஏனைப்புள்ளிப் | ௬௦ |
| ஏனைமுன்வரினே | ௱ |
| ஏனையெகினே | ௮௧ |
| ஏனைவகரந் | ௯௧ |
| ஏனைவகரமின் | ௪௫ |
| ஐஒடுகுஇன் | ௨௭ |
| ஐஔவென்னு | ௧௪ |
| ஐகாரஔகாரங் | ௩௨ |
| ஐகாரவிறுதிப் | ௬௭ |
| ஐந்தனொற்றேம | ௱௩ |
| ஐந்தனொற்றேமு | ௱௫ |
| ஐந்தனொற்றேமெல் | ௱ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| ஐந்தனொற்றேய | ௱அ |
| ஐந்துமூன்றுநம | ௱ரு |
| ஐயம்பல்லென | ௯௩ |
| ஐயின்முன்னரும் | ௩௦ |
| ஒடுமரக்கிளவி | ௬௩ |
| ஒவ்வுமற்றே | க௯ |
| ஒழிந்ததனிலையும் | எ௦ |
| ஒற்றிடையினமிகா | ௯எ |
| ஒற்றுநிலை | ௯௯ |
| ஒற்றுமிகுதகர | அ௩ |
| ஒன்றுமுதலாகப் | ௪அ |
| ஒன்றுமுதலாகவெ | ௱உ |
| ஒன்றுமுதலாகிய | ௱௯ |
| ஒன்றுமுதலொன்பா | ௱௩ |
| ஒன்பானிறுதி | ௱௬ |
| ஒன்பானிறுதியுரு | ௱அ |
| ஒன்பானொகரமிசைத் | ௱௪ |
| ஒன்பான்முதனிலை | ௱எ |
| ஓகாரவிறுதிஏகார | ௬௯ |
| ஓகாரவிறுதிக்கொன் | ௪ரு |
| ஓரளபாகுமிடனு | கஎ |
| ஓொழுத்தொரு | ௯௪ |
| ஔகாரவிறுதிப் | எ௦ |
| ஔகாரவிறுவாய்ப் | எ |
| ஔவெனவருஉ | ௩௬ |
| ககாரஙகார | உஉ |
| கசதபமுதலிய | ௩௪ |
| கசதபமுதனமொழி | ௱ரு |
| கண்ணிமைநொடி | எ |
| கதநபமவெனும் | கஎ |
| கவவோடியையி | க௯ |
| காரமுங்கரமு | ௩உ |
| கிளந்தவல்ல | ௱கஉ |
| கிளைப்பெய -கிளை | அஉ |
| கிளைப்பெய - கொ | எ௩ |
| கீழென்கிளவி | ௯௩ |
| குமிழென்கிளவி | ௯க |
| குயினென்கிளவி | அக |
| குறியதனிறுதிச் | ருஅ |
| குறியதன்முன்ன | க௩ |
| குறியதன்முன்னரு | ரு௬ |
| குறுமையுநெடுமையு | கரு |
| குறையென்கிளவி | ௪க |
| குற்றியலிகர | கஉ |
| குற்றியலுகரக்கின்னே | ௪க |
| குற்றியலுகரத்திறுதி | ௪அ |
| குற்றியலுகரமுறை | ௯அ |
| குற்றியலுகரமும் | உ௯ |
| குற்றெழுத்திம்பரு | ௬௪ |
| குற்றெழுத்தைந்தும் | க௯ |
| குன்றிசைமொழி | க௩ |
| கொடிமுன்வரினே | ௬அ |
| ஙஞணநமன | க௦ |
| சகரக்கிளவியும் | கஅ |
| சகாரஞகாரம் | உஉ |
| சாவெனகிளவி | அஎ |
| சார்ந்துவரினல்லது | உ௩ |
| சாவவென்னுஞ் | ருக |
| சிறப்பொடு | அ௪ |
| சுட்டினியற்கை | ரு௯ |
| சுட்டின்முன்னரும் | ௬உ |
| சுட்டின்முன்னர் | ரு௦ |
| சுட்டுச்சினைநீடிய | ௱ |
| சுட்டுமுதலாகியவகரம் | ௪ரு |
| சுட்டுமுதலாகியவிகர | ௩௯ |
| சுட்டுமுதலாகியவையென் | ௪௪ |
| சுட்டுமுதலிறுதியியல் | ௬உ |
| சுட்டுமுதலிறுதியுருபிய | ௬௪ |
| சுட்டுமுதலிறுதியுருபிய | ௬எ |
| சுட்டுமுதலுகரம | ௪௪ |
| சுட்டுமுதலாகியவகரம் | ௯௦ |
| சுட்டுமுதல்வயினும் | அக |
| செய்யாவென்னும் | ருரு |
| செய்யுண்மருங்கின் | ௬௯ |
| செய்யுளிறுதிப் | க௬ |
| சேவென்மரப் | ௬எ |
| ஞகாரையொற்றிய | எக |
| ஞணநமனயரல | உ௦ |
| ஞநமயவவெனுமுதல் | ௩௪ |
| ஞநமவவியையினும் | எக |
| ஞநமவவென்னும் | க௦ |
| ஞநவென்புள்ளிக் | ௪ரு |
| டகாரணகார | உஉ |
| டறலளவென்னும | க௦ |
| ணகாரவிறுதி | எஉ |
| ணளவெனபுள்ளி | ௩௬ |
| ணனவென்புள்ளிமுன | ௩ரு |
| தகரம்வரும்வழி | அஅ |
| தத்தந்திரிபே | உஉ |
| தம்மியல்கிளப்பின் | கரு |
| தமிழென்கிளவி | ௯க |
| தாநாமென்னு | ௪௬ |
| தாயென்கிளவி | அ௬ |
| தாழென்கிளவி | ௯க |
| தானும்பேனும் | அ௪ |
| தான்யானென்னும் | ௪எ |
| தான்யானெனு | அரு |
| திங்கண்முன்வரின் | ௬க |

| சூத்திரம் | பக்கம். |
|---|---|
| திங்களுநாளும் | ௬௮ |
| திரிபுவேறுகிளப்பி | ௱௧ |
| தேற்றவெகரமுஞ் | ௬௬ |
| தேனென்கிளவி | ௮௨ |
| தொடரலிறுதி | ௫௩ |
| தொழிற்பெய | ௭௩ |
| தொழிற்பெய | ௭௯ |
| தொழிற்பெய | ௯0 |
| தொழிற்பெய | ௯௪ |
| நகரவிறுதியும் | ௭௧ |
| நமவவென்னு | ௱௫ |
| நாட்பெயர்க்கிளவி | ௮0 |
| நாண்முற்றோன்றுந் | ௬௧ |
| நாயும்பலகையும | ௮௯ |
| நாவிளிம்புவீங்கி | ௨௩ |
| நான்கனொற்றேல | ௱௫ |
| நான்கனொற்றேற | ௱௩ |
| நான்குமைந்து | ௱௭ |
| நிலாவெனகிளவி | ௫௯ |
| நிறுத்தசொல்லுங் | ௨௬ |
| நிறையுமளவும் | ௱௨ |
| நீடவருதல் | ௫௧ |
| நீட்டம்வேண்டி | ௭ |
| நீயெனொருபெயருரு | ௬௨ |
| நீயெனொருபெயர் | ௪௪ |
| நீயென்பெயரும் | ௬௧ |
| நும்மெனிறுதியி | ௪௬ |
| நும்மெனிறுதியு | ௪0 |
| நும்மெனொருபெயர் | ௭௮ |
| நுனிநாவணரி | ௨௩ |
| நூறூயிரமுன் | ௱௮ |
| நூறுமுனவரினுங் | ௱௬ |
| நூறூர்ந்துவரூஉம் | ௯௨ |
| நூறென்கிளவி | ௱௯ |
| நெடியத - யியல்பா | ௯௪ |
| நெடியத - யியல்பு | ௮௮ |
| நெடியதன்முன்ன | ௩௯ |
| நெட்டெழுத்திம்பரு | ௧௨ |
| நெட்டெழுத்திம்பரொற்று | ௪௮ |
| நெட்டெழுத்தேழே | ௧௪ |
| நெல்லுஞ்செல்லும | ௮௮ |
| படர்க்கைப்பெயரும் | ௭௭ |
| பதக்குமுன்வரினே | ௫௯ |
| பத்தனொற்றுக்கெட | ௱௨ |
| பத்தென்கிளவி | ௯௨ |
| பலரறிசொன்முன் | ௪௩ |
| பலவற்றிறுதிநீடு | ௫௯ |
| பலவற்றிறுதியுரு | ௫௪ |
| பல்லவையுறுதலிய | ௪௩ |
| பல்லிதழியைய | ௨௩ |
| பனியெனவரூஉம் | ௫௯ |
| பனையின்முன்னர் | ௬௮ |
| பனையுமரையும் | ௬௮ |
| பனையெனளவுங் | ௪௧ |
| பன்னீருயிரும் | ௧௭ |
| பாழென்கிளவி | ௯௨ |
| பீரென்கிளவி | ௮௭ |
| புணரியனிலையிடை | ௧௨ |
| புளிமரக்கிளவிக் | ௬0 |
| புள்ளியில்லா | ௧ |
| புள்ளியிறுதியு-சொல் | ௪௯ |
| புள்ளியிறுதியும - வல் | ௩௭ |
| புள்ளியீற்றுமுன | ௩௨ |
| புள்ளும்வள்ளும் | ௯௫ |
| பூல்வேலெனாு | ௯0 |
| பூவெனொருபெய | ௬௫ |
| பெண்டென்கிளவி | ௯௯ |
| பெயருந்தொழிலும் | ௩௧ |
| பெற்றமாயின | ௬௭ |
| பொன்னென்கிளவி | ௮௬ |
| மகப்பெயர்க்கிளவி | ௫௪ |
| மகரத்தொடர்மொழி | ௨௧ |
| மகரவிறுதிவே | ௭௪ |
| மகன்விளைகிளப்பின | ௮௬ |
| மக்களெனனும் | ௯௫ |
| மரப்பெயர் - கம் | ௯௮ |
| மரப்பெயர்க் - மெல் | ௫௪ |
| மருவின்றொகுதி | ௨௭ |
| மழையெனகிளவி | ௬௯ |
| மன்னுஞ்சின்னும் | ௮0 |
| மஃகான்புள்ளிமுனத்தே | ௪௫ |
| மஃகான்புள்ளிமுன்வா | ௧௧ |
| மாமரக்கிளவியு | ௫௭ |
| மாறுகொளெ - மெண் | ௯௬ |
| மாறுகொளெ - மைய | ௬௯ |
| மின்னும | ௮௩ |
| மீனென்கிளவி | ௮௨ |
| முதலாவேனதம் | ௧௮ |
| முதலீரெண்ணினொ | ௱௩ |
| முதலீரெண்ணின் | ௱௬ |
| முதனிலைநீடினு | ௱௭ |
| முதனிலையெண் | ௱௧0 |
| முரணென்றொ | ௭௪ |
| முற்றியலுகர | ௬௯ |
| முன்னுயிர் | ௯௯ |
| முன்னென்கிளவி | ௮௫ |
| மூவளபிசைத்தல் | ௭ |
| மூன்றனொற்றேந | ௱௭ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| மூன்றனொற்றேவகர | ௱எ |
| மூன்றனொற்றேவகா | ௱ரு |
| மூன்றனொற்றேவந் | ௱ச |
| மூன்றன்முதனிலை | ௱சு |
| மூன்றுதலையிட் | உசு |
| மூன்றுநான்கு | ௱சு |
| மூன்றுமாறு | ௱ங |
| மெய்ந்நிலைசுட்டி | கக |
| மெய்யினளபே | அ |
| மெய்யினியககம் | கரு |
| மெய்யினியற்கை | அ |
| மெய்யின்வழிய | கூ |
| மெய்யுயிர் | ஙஉ |
| மெய்யோடியை | அ |
| மெல்லெழுத்தென்ப | கூ |
| மெல்லெழுத்தாறும் | உங |
| மெல்லெழுத்தி-ணகார | கூங |
| மெல்லெழுத்தி-னகார | அஅ |
| மெல்லெழுத்தி-னவ் | கூக |
| மெல்லெழுத்தி-னிறு | அஉ |
| மெல்லெழுத்துமிகி | எஅ |
| மெல்லெழுத்துமிகி | அஉ |
| மெல்லெழுத்துமிகு | ஙஅ |
| மெல்லெழுத்துற-செல் | எரு |
| மெல்லெழுத்துறழும | அசு |
| மெல்லொற்று | கூஅ |
| மென்மையுமிடை | ஙக |
| மொழிப்படுத் | கசு |
| மொழிமுதல் | ஙரு |
| யகரம்வருவழி | கூஎ |
| யகரவிறுதி | அசு |
| யரழவென்னும்புள்ளிமுன்னர் | கக |
| யரழவென்னுமூன்று | கரு |
| யவமுன் | ருக |
| யாதெனிறுதி-மன் | சகூ |
| யாதெனிறுதி-முரு | கூகூ |
| யாமரக்கிளவியும | ருசு |
| யாவினமொழியே | ௱ |
| யாவென்வினவின் | சச |
| யாவென்வினவும் | சச |
| ரகாரவிறுதி | அஎ |
| லகாரவிறுதி | அஎ |
| லனவெனவரூஉ-முன் | ஙரு |
| லனவெனவரூஉ-யிறு | ௱கக |
| வகரக்கிளவி | உக |
| வகரமிசையும் | அ0 |
| வடவேங்கடந்தென் | க |
| வண்டும்பெண்டும் | கூகூ |
| வரன்முறைமூன் | ஙஉ |
| வல்லெழுத்தென்ப | கூ |
| வல்லெழுத்துமுதலிய | உஎ |
| வல்லெழுத்தியற்கை | ருங |
| வல்லெழுத்துமிகினு | ருஎ |
| வல்லெழுத்து-யொல் | சு0 |
| வல்லெனகிளவி | அகூ |
| வல்லொற்று-வரு | கூஎ |
| வல்லொற்று-மிகு | ௱ |
| வளியெனவரூஉம் | சு0 |
| வன்றொடர்மொழியும் | கூஅ |
| வஃகான் | உக |
| வாழியவென்னு | ருக |
| விசைமரக்கிளவியும் | சுஎ |
| விண்ணென | எங |
| வினையெஞ்சுகிளவிக் | சுச |
| வினையெஞ்சுகிளவியு | ரு0 |
| வெயிலெனகிளவி | கூ0 |
| வெரிநெனிறுதி | எஉ |
| வேற்றுமை-குறித்த | உஎ |
| வேற்றுமை-வழிய | உஅ |
| வேற்றுமை-வல் | ஙரு |
| வேற்றுமை-யல்வழி | ஙக |
| வேற்றுமை | ருச |
| வேற்றுமை | ருசு |
| வேற்றுமை | சுக |
| வேற்றுமை | சுங |
| வேற்றுமை | சுங |
| வேற்றுமை | சுசு |
| வேற்றுமைக்குக்கெட | எக |
| வேற்றுமை-குறு | அரு |
| வேற்றுமை-யாப் | கூ0 |
| வேற்றுமை-யிரண் | அ0 |
| வேற்றுமை-யெகி | அங |
| வேற்றுமை-யெண் | எச |
| வேற்றுமை-யொகர | ச0 |
| ழகரவுகரம் | சுங |
| ழகாரவிறுதி | கூக |
| ளகாரவிறுதி | கூங |
| ணகாரவிறுதி | அ0 |
| னகாரவிறுதிவாய்ப் | அ |
| னகாரைமுன்னர் | கசு |
| னஃகான் | ங0 |

| பக்கம். | இயலகராதி. | சூத்திரத்தொகை. |
|---|---|---|
| ௫0 | உயிர்மயங்கியல் | ௯௩ |
| ௪௩ | உருபியல் | ௩0 |
| ௯௬ | குற்றியலுகரப்புணரியல் | ௭௭ |
| ௩௪ | தொகைமரபு | ௩0 |
| ௫ | நூன்மரபு | ௩௩ |
| ௨௧ | பிறப்பியல் | ௨௧ |
| ௨௪ | புணரியல் | ௪0 |
| ௭௧ | புள்ளிமயங்கியல் | ௧௧0 |
| ௧௨ | மொழிமரபு | ௪௯ |

ஆ இயல் ௯ இ சூத்திரம்—௪௮௩.

பாயிரம்— சூத்திரம்.—

ஆ சூத்திரம் - ௪௮௪.

# பிழைதிருத்தல்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| ௪ | ௩௫ | பிறதூல் | பிறநூல் |
| ௧௭ | ௪ | ஆரராயும் | ஆராயும் |
| ௨0 | ௧௫ | மொக்கீருகாது | மொழிக்கிருகாது |
| ௨௧ | ௧௭ | வேறுவேறியலந் | வேறுவேறியல |
| ௨௩ | ௨௯ | வளியிசை | வளியினசை |
| ௪௬ | ௬ | ஆஏயாகும் | ஆஎயாகும் |
| ௬௮ | ௧௫ | வருவனவற்றிக்கும் | வருவனவற்றிற்கும் |
| ௭0 | ௩௧ | ல்வலெழுத்து | வல்லெழுத்து |
| ௯௫ | ௩௯ | முதனிலை | நிலைமொழி |
| ஷெ | ஷெ | வழிநிலை | வருமொழி |
| ௯௮ | ௪ | வரொடர்மொழி | வன்றொடர்மொழி |
| ௱௭ | ௩௧ | அம்முதலீகெண் | அம்முதலீறெண் |

சிவமயம்.

# பிரசித்தபத்திரிகை.

## இதுவரையில் அச்சிற்பதிப்பித்தபுத்தகங்கள்.

| | ரூபா. | அணா. |
|---|---|---|
| கல்லாடம் மூலம். | ,, | ௪ |
| தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணருரை. | க | ,, |
| தனியூர்ப்புராணம். | ,, | ௬ |
| மாயூரப்புராணம். | க | ௮ |
| கம்பரந்தாதிஉரையோடு. | ,, | ௬ |

## இப்போது அச்சிற்பதிப்பிக்கிற புத்தகங்கள்.

திருத்துருத்திபுராணம்.
ஆற்றூர்புராணம்.
சீவகசிந்தாமணிபதவுரையோடு
நச்சினார்க்கினியருரை.
திருமுல்லையந்தாதிஉரையோடு.
நாற்கவிராசநம்பியார்
அகப்பொருள்விளக்கவுரை.
ஐயனாரிதனார்புறப்பொருள்
வெண்பாமாலையுரை.

## இனி அச்சிற்பதிப்பிக்கப்படும்புத்தகங்கள்.

பிள்ளையார்புராணம்.
தணிகைப்புராணம்.
திரிசிராமலைப்புராணம்.
திருவுறந்தைப்புராணம்.
தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணருரை.
தொல்காப்பியம்நச்சினார்க்கினியருரை
தஞ்சைவாணன்கோவைஉரையோடு.
வெங்கைக்கோவைஉரையோடு.
நான்மணிக்கடிகையுரை.
சிதம்பரச் செய்யுட்கோவைஉரையோடு.
நால்வர்நான்மணிமாலைஉரையோடு.
தில்லையமகவந்தாதிஉரையோடு.
பழமலையந்தாதிஉரையோடு.
புகலூரந்தாதிஉரையோடு.
மதுரைக்கலம்பகம்.
வாட்போக்கிக்கலம்பகம்.
முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்.
திருவிடைக்கழிப்பிள்ளைத்தமிழ்,
மதுரைமும்மணிக்கோவை.

இவை வேண்டியவர்கள் சென்னை எழுமூர்ச்சீதாப்பேட்டை வெங்குப்பிள்ளை வீதியில் ௫ - ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில், திரிசிரபுரம் சுப்பராயசெட்டியாரிடத்திலும், திருவல்லிக்கேணிபைகிராபட்சாலையில், ௨ - ஆவது கதவிலக்கமுள்ள கடையில், பாகைகட்டும் நாராயணசாமிமுதலியார்குமாரர் இராமசாமிமுதலியாரிடத்திலும், விலைக்குவாங்கிக்கொள்ளலாம்.

வெளித்தேசத்தார்கள் தபாற்செலவுடன் அனுப்பவேண்டும்.